# நெருப்புத் தடயங்கள்



சு.சமுத்திரம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# நெருப்புத் தடயங்கள்

சு. சமுத்திரம்

மணிவாசகர் பதிப்பகம்
சிதம்பரம்

முதற்பதிப்பு : டிசம்பர், 1983

உரிமை : ஆசிரியருக்கு

பதிப்பாசிரியர் : ச. மெய்யப்பன், எம்.ஏ.,

---

விலை ரூ. 18-00

கிடைக்குமிடம்

12-பி, மேலசன்னதி, சிதம்பரம்-608 001.
14, சுங்குராம் தெரு, சென்னை-600 001.
89, லிங்கிச்செட்டித் தெரு, சென்னை-600 001.
28-A, வடக்கு ஆவணி மூலவீதி, மதுரை- 625 001
93, பெரியகடை வீதி, கோவை-641 001.

---

அச்சிட்டோர் : கற்பகம் அச்சகம், சென்னை-600 002.

# அணிந்துரை

டாக்டர் மா. இராமலிங்கம், எம். ஏ., பி எச். டி.,
"எழில் முதல்வன்"
தமிழ்த் துறைத் தலைவர்,
அரசு ஆடவர் கல்லூரி, கும்பகோணம்

## I

சிக்கலும் குழப்பமும் நிறைந்த இன்றைய வாழ்க்கையில் ஏற்படும் எந்தப் பிரச்சினையையும் விவாதிக்க இடம் தரும் பொதுமேடையாக நாவல் ஒன்றே பயன்பட்டு வருகிறது. இலக்கிய வடிவங்கள் பலவற்றுள் எல்லார்க்கும் உரிய மக்கள் இலக்கிய வடிவமாக இதுவே விளங்கி வருகிறது. எனவே, பெரும்பாலான மக்களோடு உறவாட நினைக்கும் இலக்கியக் கலைஞன் இதனையே தம் வெளியீட்டு ஊடகமாக மேற்கொள்கிறான்.

தோழர் சமுத்திரம் சமூக நனவுடைய ஓர் எழுத்தாளர். தாம் அடைய வேண்டிய இலக்கையும் செல்ல வேண்டிய நெறியையும் அவர் தெளிவாகவே உணர்ந்திருக்கிறார். வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கி, மனித உறவுகளையும், அவற்றிடையே விளையும் போராட்டங்களையும் உள்ளது உள்ளவாறே வெளிக் கொணருகிற அவரது கூரிய ஆற்றல் அவரை மிகச் சிறந்த மனித நேயராக நமக்கு இனம் காட்டுகிறது. பல ஆண்டுகளுக்கு முன் அவர் எழுதிய "காகித உறவு" என்னும் சிறு கதையைப் படிக்க நேர்ந்தபோதே அவரது படைப்புகளோடு எனக்கு இலக்கிய உறவு ஏற்பட்டு விட்டது.

## II

"நெருப்புத் தடயங்கள்" மூன்று குடும்பங்கள் சம்பந்தப்பட்ட கதை. காதலர் இருவர் உடன்போக்காகச் சென்று விட்டதையும், அதனால் விளைந்த சிக்கல்களையும் கதை சித்திரிக்கிறது. இந்தச் சிக்கலையும் குடும்ப வட்ட அளவினதாக அதன் பரிமாணத்தைக் குறுக்கிவிடாமல், சமுதாயம் தழுவிய மாபெரும் போராட்டமாக சமுத்திரம் உருப்பெருக்கிக் காட்டுகிறார். அதிகார வர்க்கத்திற்கும் அப்பாவியான பொதுமக்களுக்கும் இடையே நடக்கும் 'பாரதப் போர்' என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

மனித வாழ்க்கை இடையறாத போராட்டங்களின் சங்கிலிப் பிணைப்பாகவே விளங்குகிறது. இப் போராட்டக் களத்தில் சாதாரண மனிதனே கூட வெறும் பார்வையாளனாக நிற்க முடியவில்லை; பங்கு பெறுவோனாக மாற வேண்டியுள்ளது. இந்த நிலையில் இலக்கியக் கலைஞன் வாளா இருக்க முடியுமா? ஏதோ ஒரு பக்கத்திற்காகக் களத்தில் இறங்கியே ஆதல் வேண்டும். தோழர் சமுத்திரம் இந்த நவீன பாரதப் போரில் யார் பக்கம் நிற்கிறார் என்பதை நான் சொல்லியா நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்? அவர் மக்கள் பக்கமே. போராட்டத்தின் இறுதியில் மக்கள் சக்தியே வெற்றி பெறும் என்னும் நம்பிக்கையை ஊட்டும் வகையில் நாவலின் முடிவு அமைந்துள்ளது.

உணர்ச்சி மயமான நாடகக் காட்சிகளைப் படைத்துக் காட்டி, அக் காட்சிகளின் வாயிலாகவே கதையை நகர்த்திச் செல்வது சமுத்திரத்தின் பாணியாக உள்ளது. மனத் தடத்தில் அழுத்தமாகப் பதியும் கதை மாந்தர்கள், அவர்தம் இயல்பான பேச்சு வழக்குகள்—இவை இரண்டும் சமுத்திரத்திற்கு இலக்கிய வெற்றியை ஈட்டித் தரும் கூறுகளாக விளங்குகின்றன. கதையின் மையப் பாத்திர மாகிய தமிழரசி சமூகக் கொடுமைகளோடு போராடும்

போராட்டச் சக்தியின் குறியீடாகப் படைக்கப் பட்டுள்ளாள். அப்பாத்திரத்தின் மனவளர்ச்சியையும் மாற்றத்தையும் ஆசிரியர் படிப்படியே நுணுக்கமாகக் காட்டிச் செல்கிறார். பட்டிமன்றத்து வாய்ச்சொல் வீராங்கனையாக இருந்த அவள்—மகிஷாசுரர்களை வதைக்க வல்ல பராசக்தியாக எப்படி மாறினாள் என்பதைச் சமுத்திரம் காட்டும் திறம் போற்றத்தக்கது. 'பைத்தியக் கார தர்மரு' என்று கூறப்படும் மாடக்கண்ணு கதையில் அதிகம் பேசவே இல்லை. அதிகம் பேசாத அப்பாத்திரமே கதையின் வலிவிற்கு அழுத்தம் கொடுக்கிறது. இதுவும் சமுத்திரத்தின் வெற்றியே!

## III

நாவலாசிரியர் கதையைத் தாமே 'சொல்ல'வும் வேண்டும்; படிப்போர் உணருமாறு உணர்ச்சி மயமான நாடகக் காட்சிகளைக் 'காட்ட'வும் வேண்டும். சொல்லுதல் காட்டுதல் என்னும் இருவகை வினைத் திறப்பாடே ஊடும் பாவுமாய் மிடைந்து நாவலுக்கு இழைவமைதி ஊட்டு கின்றன. 'காட்டுதல்' என்னும் வினையில் வெற்றி பெறும் ஆசிரியர் தாமாக நின்று கதையைச் 'சொல்லும்' போது இடர்ப்படுகிறார். பாத்திரங்களாக மாறி மாறி அவரால் மிக எளிதாகப் பேசப்படுகிறது; தாமே தனி நின்று பேசும் போது திணறுகிறார். அவர் சில சொற்களுக்கு வலிந்து ஊட்டும் தொனிச் சாயலும், அர்த்த கனமும் பல இடங் களில் முட்டுக் கட்டையாய் அமைந்து கலையனுபவத் திற்குத் தடையாக நிற்கின்றன. மொழிப் பிரயோகத்தில் கவனக் குறைவாலோ அளவுக்கு அதிகமான கவனத் தாலோ—தடுமாற்றம் விளைகிறது. இது குறையே! குறையே இல்லாத கலை உலகில் ஏது?

## IV

ஆசிரியர் கதை மாந்தர் கூற்றாக ஆங்காங்கே சுட்டிச் செல்லும் சில நடைமுறை இலக்கிய விவகாரங்கள் தேவை யற்றவை; சிலவற்றில் எனக்கு உடன்பாடும் இல்லை. "தக்காரும் மிக்காரும் இல்லாத தனிப்பொருள் [தனிப் பெரும்] படைப்பாளியான விந்தன் திறனாய்வாளர் களாலும் முட்டாள் வாசகப் பரப்பாலும் அமுக்கப்பட்டு விட்டதாக" (பக்., 117) சமுத்திரம் குற்றம் சாட்டுகிறார். யாரும் யாரையும் 'அமுக்கிவிட' முடியாது. திறமான புலமையெனில் எத்தனை பேர் சேர்ந்து அமுக்கினாலும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு விடும் ஆற்றல் அதற்கு உண்டு.

## V

இறுதியாக ஒரு குறிப்பு—

நம் நாட்டுப் புராணங்கள் சிலவற்றில் வடமுகாக்கினி என்பது பற்றிச் சில குறிப்புகள் வருகின்றன.

வடமுகாக்கினி என்பது குதிரையின் முகம் போன்ற வடிவுடைய தீ! அது சமுத்திரத்தின் உள்ளே இருந்து புறப்பட்டு மெல்ல மெல்ல வந்து கொண்டிருக்கிறதாம். அது முழுமையாக வெளிப்பட்டு விட்டால் மகா பிரளயம் நிகழ்ந்து புதிய உலகு தோன்றுமாம்.

'சமுத்திரத்'தின் 'நெருப்புத் தடயங்க'ளை நான் ஒரு வடமுகாக்கினியாக உருவகம் செய்து பார்க்கிறேன்.

ஒரு மகத்தான சமுதாயப் புரட்சியையும், அதன் விளைவான புதிய உலகத்தையும் நமக்கு நினைவூட்டி நம்பிக்கை கொள்ளச் செய்கிறார் சமுத்திரம்!

தோழர் சமுத்திரம் வாழ்க! அவரது இலக்கியப் படைப்புகள் வெல்க!

# எழுத்தாளரும் பதிப்பாளரும்

பேராசிரியர்
ச. மெய்யப்பன், எம். ஏ.
அண்ணமலைப் பல்கலைக்கழகம்

சு. சமுத்திரம் அவர்கள் சமீப காலத்தில் புகழ் பெற்றுவரும் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர். இவரது மூன்று சிறுகதைத் தொகுதிகளை ஒருசேர ஒரே நேரத்தில் மணிவாசகர் பதிப்பகம் வெளியிட்டது. சிறந்த திறனாய்வாளர்களாகிய டாக்டர் கைலாசபதி, டாக்டர் சிவத்தம்பி, டாக்டர் நா. வானமாமலை ஆகிய அறிஞர் பெருமக்கள் மிகச்சிறந்த மதிப்பீடுகளை சிறுகதைகளுக்கு அளித்துள்ளனர். அவை இவர்தம் படைப்பாற்றலுக்குக் கட்டியம் கூறுகின்றன. ஆசிரியர் சமுத்திரத்தின் பத்து நூல்களைத் தொடர்ந்து மணிவாசகர் பதிப்பகம் மிகுந்த பெருமையுடன் வெளியிட்டுள்ளது.

எழுத்தாளருடைய எழுத்தும் கருத்தும் பரவுவதற்குப் பதிப்பகங்கள் பல்வகையில் துணை செய்கின்றன. இந்த ஆசிரியரின் நூலை இந்தப் பதிப்பகம்தான் வெளியிடும் என்ற நம்பிக்கையினை உண்டாக்கி, அவ்வாசிரியரின் புதிய படைப்புக்களை வரவேற்பதற்கான சூழ்நிலையை உண்டாக்கு வன பதிப்பகங்கள். ஆசிரியரது நூல்களைத் தொடர்ந்து வெளியிடுவதன் மூலம் ஆசிரியரின் வளர்ச்சிக்கு உதவு கின்றன. சிறந்த ஒரு பதிப்பகம் ஒரு ஆசிரியரின் நூலைத்

தொடர்ந்து வெளியிடுவதால், மிகப் பெரிய வாசகர் குழுவினையும் எழுத்தாளருக்கு மதிப்பினையும் பெருகச் செய்வதுடன் படைப்பதற்கு ஊக்கத்தையும் அளிக்கிறது. நல்ல பதிப்பகங்களே நல்லாசிரியரை இனங்கண்டு நாட்டிற்கு அறிமுகப்படுத்த முடியும். ஆசிரியரின் தொண்டு தொடர்வதற்குத் துணையாக நிற்கும்.

சுத்தானந்த பாரதியாருக்கு ஓர் அன்பு நிலையமும், வெ.சாமிநாத சர்மாவுக்கு பிரபஞ்சஜோதி பிரசுராலயமும், பாவேந்தர் பாரதிதாசனுக்கு செந்தமிழ் நிலையமும்' பேரறிஞர் அண்ணாவுக்குத் திராவிடப் பண்ணையும், ம. பொ. சி அவர்களுக்கு பூங்கொடிப் பதிப்பகமும், தமிழ் வாணனுக்கு மணிமேகலைப் பிரசுரமும், வாரியாருக்கு வானதி பதிப்பகமும், அறிஞர் மு. வ. வுக்குப் பாரி நிலையமும், சிந்தனையாளர் ஜெயகாந்தனுக்கு மீனாட்சி புத்தக நிலையமும் களமாய் தளமாய் அமைந்தது போல, சமுத்திரம் அவர்களுக்கு மணிவாசகர் பதிப்பகம் இலக்கிய மேடையாக அமைந்துள்ளது.

'நான் வரவேற்கும் இலக்கியப் போக்குகள் கொண்ட படைப்புக்களை விரிவாக விமரிசனம் செய்வது என் வழக்கம். உணர்ச்சிக்கு ஆரோக்கியமான உணவாகவும் அறி வெல்லையை விஸ்தரிக்கிற சமூக ஆய்வாகவும் ஒரளவேனும் விளங்கினால் அக் கலைப் படைப்பை நான் வரவேற்பேன். சமுத்திரத்தின் கதைகள் பொதுவாக தற்காலச் சமுதாய அமைப்பின் முரண்பாடுகளையும் அவற்றின் நியாய அநியாயங்களையும் அலசிப் பார்க்கிற சமுதாய ஆய்வு நிரம்பியதாக உள்ளது. இவ்வாய்வின் விளைவுகள் கற்பனை, கலையுணர்வு, கலைத்திறன் ஆகிய ஊடகங்களின் வழியே கலைப்படைப்பாகின்றன. ஒரு தத்துவார்த்தக் கண்ணோட்டம் இருப்பதால் இப்படைப்புக்கள் வக்கரித்து நிற்பதில்லை. புற உண்மைகளை கலை உண்மைகளாக மாற்றுவதில் வெற்றி பெறுகின்றன' என டாக்டர் நா. வானமாமலை

அவர்கள் சமுத்திரத்தின் கதைகளைத் திறனாய்வு செய்கிறார்.

சமுத்திரத்தின் படைப்புக்களைப் பல்கலைக் கழகங்கள் பாடநூலாக ஏற்றுக்கொண்டுள்ளன. பத்திரிகைகள் இவரது படைப்புக்களை விரும்பி வெளியிடுகின்றன. இவர் சிறந்த வாசகர் அணியினை உருவாக்கி வருகிறார். இவரது படைப்புக்கள் பல்கலைக்கழக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படுகின்றன. சமூகப் பொறுப்புடன் எழுதும் சமுத்திரம் படைப்புக்களில் சமூகப் பார்வை மிகத்துல்லியமாக உள்ளது. பிரச்னைகளை அணுகும் முறையில் தனித்தன்மை காணப்படுகின்றது. ஆசிரியரின் கருத்து வெளிப்பாடு குழப்பமின்றி தெளிவான நடையில் உள்ளது. ஆழங்காண முடியாத மக்கள் சமுதாயத்தின் உணர்வு அலைகளை ஓவியமாக்குவதில் சமுத்திரத்தின் படைப்புக்கள் சமுத்திரம் போன்று அகன்று பரந்து விரிந்து உள்ளது.

மேல் மட்டத்தில் வாழ்பவரது ஆதிக்க எண்ணங்கள், சர்வாதிகாரப் போக்குகள், எண்ணத் தடிப்புகள், ஏழை எளிய மக்களை எவ்வாறு சுட்டெரிக்கின்றன, வாட்டி வதைக்கின்றன என்பதனை 'நெருப்புத் தடயங்கள்' ஓவியமாக்குகின்றது. மனிதனின் வாழ்வு தாழ்வு மட்டுமல்ல; எண்ணக் குமுறல்கள் எழுத்தோவியம் ஆக்கப்பட்டுள்ளது. படு பாதாளத்தில் பரிதவிக்கும் மக்கள் கூட்டத்தின் மன நோவுகள் படம் பிடிக்கப்பட்டுள்ளன.

நவநவமான சிந்தனைகளைத் தமிழுக்கு வழங்கி வரும் சமுத்திரம், தமிழ் இலக்கியத்திற்கு கிடைத்த சமுத்திரம் ஆவார்.

# ஒரு சொல்

வாசக நண்பர்கள், நான் வழிமறிப்பதற்காக மன்னிக்கவேண்டும். பொதுவாக என் படைப்புக்களுக்கு நான் முன்னுரைப் பீடிகை எதையும் போடுவதில்லை. என்றாலும், இந்த நாவலுக்கு, ஒரு சொல், சொல்லாமல் இருக்க முடியவில்லை.

இந்த நாவல், பிரபல வாரப்பத்திரிகையான 'தேவி'யில், தொடர்கதையாய் வெளிவந்தது. தொடர் கதை வேறு, நாவல் வேறு என்று மாறுபட்ட இந்தக் கால கட்டத்தில் இதை நாவல் வடிவாகவோ தொடர்கதை வடிவாகவோ, இன்றைய இலக்கியத் தமிழ்ப் பண்டிதர்கள் போல் 'டெக்னிக்கலாகப்' பார்க்காமல், உள்ளதை உள்ள படி சித்தரிக்கவே முயற்சி செய்திருக்கிறேன்.

நாட்டில் குறிப்பாக கிராமங்களில் நடைபெறும் அன்றாட அவல நிகழ்ச்சிகளில், நான் கேள்விப்பட்ட ஓசைப் படாத ஒரு நிகழ்ச்சிக்கு, யதார்த்தக் குறைவு ஏற்படாமல், கலைவடிவம் கொடுத்திருக்கிறேன். இந்தச் சமயத்திலும், 'அந்த' நிகழ்ச்சியை நினைக்கும்போது, அதை எதிர்க்காமல், குற்றவுணர்வில், 'பேனு வீரத்தைக்' காட்டி யிருக்கிறேனே என்றுகூட எனக்குத் தோன்றுகிறது. ஆனாலும் அந்த நிகழ்ச்சி, சமூகத்தைப் பிடித்துள்ள ஒரு நோயின் அறிகுறி தானே அல்லாது, நோயல்ல என்று கருதியும், நோயை விரட்டினால், அறிகுறிகள் அடையாள மற்றுப் போய்விடும் என்ற நம்பிக்கையோடும் உங்க ளிடையே, சோகத்தை சுவையாக்காமல், அதில் ஒரு தார் மீகக் கோபத்தையும், யதார்த்த சித்தரிப்பில், தோல்வி மனப்பான்மையை ஏற்படுத்தாமல், எதிர்ப்புணர்வையும், எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த சமூக அமைப்பின் போலித்தனம் புரியவைக்கப் பட்டிருந்தால், அப்போது

தான், நான், இந்த படைப்புபற்றி பெருமிதப்படலாம். இந்த நாவலில் வரும் கலாவதி போன்ருேர் காலாவதி யாகிருர்களே தவிர, இவர்கள் மீது எய்யப்படும் கொடுமைகள் காலாவதியாகவில்லை. இன்றைய வர்த்தகக் கலாச்சார சமூகம் பாழ்பட்டுப்போய், வர்க்க பேதமற்ற புதிய சமூகம் உருவாகும்போது, இன்றைய கொடுமைகள், அன்றைய தடயங்களாகத்தான் இருக்குமே தவிர, தடமாக இருக்காது என்று நம்புவதும், நான் இந்த நாவலுக்கு 'நெருப்புத் தடயங்கள்' என்று பெயரிட்டதற்கு ஒரு காரணம்.

'தேவி'யில் தொடர்கதைக்கு, கதைச் சுருக்கம் கொடுத்தபோது இந்த நாவலில் நடமாடும் தாமோதரனை, போலீஸ்காரர்களுக்கே இயல்பாகவுள்ள முரட்டுத்தனத் தோடுதான் படைத்திருந்தேன். 'தேவி' ஆசிரியர் திரு. ராமச்சந்திர ஆதித்தன், அந்த கேரெக்டருக்கு மனிதாபிமானம் கொடுக்கலாம் என்று பரிந்துரைத்தார். நானும் யோசித்துப் பார்த்தேன். 'எரிகிற வீட்டில், பிடுங்குவது ஆதாயம்' என்று ஆகிவிட்ட இந்தக் காலத்தில் எல்லாத் துறைகளும், 'துரைத்தனமாகத்தான்' நடை பெற்று வருகின்றன. பொதுமக்கள், இதர துறைகளை மோதினுல், பணத்திற்குத்தான் 'ரிஸ்க்'. அதே சமயம் காவல் துறையென்ருல், உயிருக்கே ரிஸ்க் என்பதால் அது, அரசின் வெளிப்பாட்டு சக்தியாக (Visible power) இயங்கு கிறது. இங்கேயும், தனிப்பட்ட முறையில், எத்தனையோ நல்லவர்கள் உள்ளார்கள். அதோடு, மூடத்தனத்தை தன்மானமாகவும், போக்கிரித்தனத்தை வீரமாகவும் கொண்டுள்ள நிலப்பிரபுத்துவக் குடும்பத்தில், அரசுப் பணிக்கு முதன்முதலாகச் செல்லும் இளைஞன், அந்தக் குடும்பத்தின் வறட்டுக் கௌரவத்திற்கு பகடைக்காயா வதுண்டு. இதில் அவனுக்கு உடன்பாடு உண்டா, இல்லையா என்பதுதான் பிரச்னை. உடன்பாடு காண முடியாதவன், சிந்தனை சித்ரவதைக்குள் அகப்படுவதைத் தவிர, வேறு வதைகளுக்கும் உட்படுவான். இப்படிப்பட்ட இளைஞர்களில் ஒருவனுக, தாமோதரனை சித்தரிக்கலாம் என்றும், நான் 'பின்யோசனை' செய்தபோது தோன்றியது.

இப்போது நினைத்துப் பார்த்தால், தாமோதரனை, மனிதாபிமான விரோதியாகக் காட்டியிருந்தால் சரியாய் இருக்காது என்றே கருதுகிறேன். பாவப்பட்ட இந்தக் காலத்தில், பத்திரிகை ஆசிரியர்களின் பார்வை விரிசலாகிக்

கொண்டிருக்கும்போது, விரிவான பார்வையோடு, முழுச் சுதந்திரமாய், என்னை எழுதவைத்த, 'தேவி' ஆசிரியர், திரு. இராமச்சந்திர ஆதித்தன் அவர்களுக்கு, மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். முன்பும், 'ஊருக்குள் ஒரு புரட்சி' அவரது முன்னோடிப் பார்வையால்தான் உதயமானது. இதேபோல், தேவியின் உதவியாசிரியர் திரு ஜேம்ஸ், அத்தியாயம் அத்தியாயமாய் விமர்சித்து, எனக்கு அதிக யோசனைகள் வழங்கினார். 'தேவி'யில் வந்த இரண்டு தொடர்கதைகளின் வெற்றிக்கான காரணங்களில், 'ஜேம்ஸ்' என்ற உச்சரிப்பும் ஒன்று. 'தேவி'யில் படித்து முடித்ததும் அந்த பத்திரிகைக்கும் எனக்கும் கடிதங்கள் எழுதிய ஆயிரக்கணக்கான வாசகர்களுக்கு, என் நன்றி.

வழக்கம்போல், என் ஆஸ்தான பதிப்பகம் மணிவாசகர் பதிப்பகமே, இந்த நாவலையும் வெளியிடுகிறது. எழுத்தாளன் படைப்புகள், நூலகங்களுக்கு 'ஆர்டரானல்'தான் அரங்கேறும் என்ற நிலை எனக்கு எப்போதும் வந்ததில்லை என்றால், அதற்கு ஒரு காரணம் ஒரே காரணம் திரு. ச. மெய்யப்பன் அவர்கள்தான். நான் பெறும் வெற்றியை தான் பெற்றதாக நினைக்கும் இனிய நண்பர். பதிப்பகத்துறையின் ஒரு சில அத்திப் பூக்களில் ஒரு பூ.

இதேபோல், திரு. ச. மெய்யப்பனின் உதவியாளர்களான பிரபல நாவலாசிரியரும், பத்திரிகையாளருமான, திரு. க. நாராயணன் அவர்களும், திரு. குருமூர்த்தி அவர்களும் பல படைப்புக்கள், அச்சேறுவதற்கு முன்பே, அரும் பெரும் யோசனைகளைச் சொன்னவர்கள். ஒவ்வொரு கட்டத்திலும், என்னைக் கலந்தாலோசிக்கும் இலக்கிய சகாக்கள். இவர்களுக்கும் கடப்பாடு பட்டுள்ளேன். படைப்பு என்பது ஒரு கூட்டு முயற்சி என்பதாலேயே மேலே சில விவரங்களையும், நண்பர்களையும் கோடிகாட்டி இருக்கிறேன்.

நல்லது; படித்துப் பாருங்கள்; பிறகு, நல்லது, கெட்டதை, எழுதிப் போடுங்கள்.

அன்பன்,

சு. சமுத்திரம்.

# நெருப்புத் தடயங்கள்

## 1

பழசாய் போன குட்டாம்பட்டிக்கு, புதுமை சேர்ப்பதுபோல், 'பிளான்' போட்டு கட்டப்பட்ட வீடு. கிணறு என்ற பழமையுடனும், சமையலறைக்குள் சூழாய் கிணறு எடுத்து, 'அடிபைப்' என்ற புதுமை மூலம் அமர்க்களப்படும் இல்லம். வயல் மாடுகளையும், வண்டி மாடுகளையும் கட்டுவதற்காக தனியாய் கட்டப்பட்ட தொழுவத்தில் 'சாணத்தை' எடுத்து, சாண எரிவாயு அமைக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் கிடைக்கும் மின்சாரம், சமையலறையில், எவர்சில்வர் அடுப்பிற்கு, சூட்டையும் சொரணையையும் கொடுத்துக் கொண்டிருந்தது. கம்பீரமும், எழிலும், கருங்கற்களோடும், சிமெண்ட் சிலாப்களோடும் கலந்து கட்டப்பட்டதுபோன்ற, இன்னும் 'பால்' காய்க்கப்படாத அந்த புத்தம் புதுவீட்டின் முகப்பறையில், 'மொஸாய்க்' தரையின் தொடர்ச்சி போல் பகட்டில்லாத பளபளப்புடன், திகட்டில்லாத ஒய்யாரத்துடன் காணப்பட்ட தமிழரசியை, கண்டுபிடிக்க முடியவில்லை. அவள் 'தலையெடுக்க' முடியாத அளவிற்கு, பலதர வயதுப்பட்ட பெண்கள் சுற்றி நின்றார்கள். சூழக் குவிந்தார்கள். 'தமிழு...தமிளு...' என்று பல வகையான சத்தங்கள்

கேட்டதே தவிர, தமிழின் சாரம் கேட்கவில்லை. வெளித் தளத்தில் — 'முற்றம்' என்று சர்வ சாதாரணமாய் சொல்ல முடியாத, மண்தளம் போடாமல் சிமெண்டால் தளமான திறந்த வெளிக்கூடத்தில், ஊர்ப்பெரியவர்கள் பெஞ்சுகளிலும், நாற்காலிகளிலும் உட்கார்ந்தபடி, வெற்றிலையை சுண்ணும்பால் வெள்ளையடித்து, வாயில் ரத்தச் சிவப்பு நீரைச் சுவைத்துக் கொண்டிருந்தபோது—

பாட்டி முத்துமாரி, படபட உடம்போடு, தடதட சத்தத்தோடு, தமிழரசி இருந்த இடத்தை நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தாள். பலாப்பழம் போல் தோல் சுருக்கங்கள் உடம்பெங்கும் தோன்ற, எழுபது வயதிலும் பல் போகாமலும், சொல் போகாமலும் கூன்படா முது கோடு, குறுகாத தலையோடு அவள் ஓடிக் கொண்டிருந் தாள். நரைபட்ட தலைமுடிக்கும், தோள் வரை வியா பித்த வெள்ளைப் புடவைக்கும் இடையே, வெடித்த பருத்திச் செடிகளுக்கு இடையே உள்ள ஆமணக்குத் தண்டு போல் தோன்றிய கழுத்தை முன்நோக்கி நீட்டியபடி கத்தினாள்.

''எனக்குக் கொஞ்சம் வழிவிடுங்க அம்மாளு...என் தங்கத்த பார்க்க எனக்கும் ஆச இருக்காதா?...''

பெண்கள் எல்லோரும் புயல்பட்ட மரக்கிளைகள் போல் விலகிக் கொண்டார்கள். இந்த முத்துமாரிப் பாட்டி, நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, தன் ஒரே ஒரு மகளை, எட்டு வயதில் சாகக் கொடுத்தாளாம். அதனால், மூன்றாண்டு காலம் மூளை பிசகி, அவள் கைக்கும், காலுக்கும் விலங்கு போட்டிருந்தார்களாம். பிறகு, பைத்தியம் போய்விட்டதென்றாலும், இப்பவும் ஆண்டுக்கு மூன்று தடவையாவது அது, அவளை எட்டிப் பார்க்குமாம். எங்கேயாவது செத்த வீட்டில், 'துஷ்டி' கேட்பதற்காகப் போகும் போது புத்திசாலியாகப் போகும் பாட்டி, திரும்பும்போது, பைத்தியமாகத் திரும்புவாளாம்.

அவளுக்குப் பைத்தியம் வந்து விட்டால், ஊராருக்கும் பைத்தியம் வந்ததுபோல் ஆகிவிடுமாம். புதுப் பணக்காரர்களின் பழைய குப்பைகளைக் கிளறுவதோடு, பட்டுப் புடவைக்காரிகளின் பழைய வரலாற்றை நிர்வாணப் படுத்தி விடுவாளாம். ஆகையால் முத்துமாரிப் பாட்டிக்கு, வழி, வழிக்கு வந்தது. பெண்கள், அவளைப் பார்த்ததும் தாதிகளானார்கள்.

சுவரை ஒட்டிப் போடப்பட்ட நாற்காலியில், பிரயாண அலுப்பைத் தீர்ப்பதுபோல் தலைசாய்த்து அமர்ந்திருந்த தமிழரசியின் தலையை, குனிய விரும்பாத—அல்லது முடியாத பாட்டி, தன் முகத்திற்கு நேராக இழுத்து, அவள் கன்னத்தில் வைத்த வாயை, ஒரு நிமிடம் வரை எடுக்காமல் இருந்தாள். அண்ணி தமிழரசியைப் பார்க்க வந்த 'பத்தொன்பது' பொன்மணி, சும்மா இருந்திருக்கலாம். இருக்கவில்லை. "பார்த்து பாட்டி... அண்ணிக்கு கன்னம் இருக்கட்டும்..." என்றாள். பொன்மணியின் போறாத காலம், உடனே எல்லாப் பெண்களும் சிரித்து விட்டார்கள். தமிழரசியின் கன்னத்தைச் சுவைத்த பாட்டி, வாயை விலக்கி, அவளைச் சுவைப்பவள்போல் நாக்கை அசைபோட்டுப் பேசினாள்.

"நான் என்ன... வயலுல தண்ணி பாய்க்கிறவன் சாப்பிடுறதுக்காவ மம்பெட்டிய மாத்தும்போது உதடுவள மாத்துறேனா... சோளத்தட்டை மறைப்புல அவன கன்னத்துல 'கன்னம்' போடுறேனா... அவனுக்கு ஊட்டி விடுறேனா...நான் என்ன ஆம்புளக்கா முத்தம் கொடுத்தேன்?..."

பொன்மணி வெறும் மணியானபோது, ஒருத்தி, "பாட்டிக்கு இன்னும் ஆச போகல பாரு"... என்று சொல்லிவிட்டு, தன்னைக் கூட்டத்துள் மறைத்துக் கொண்டாள். பாம்புக் காதுப் பாட்டி, நீர்ப்பாம்பு போல் நெளிந்தபடி கேட்டாள்:

"யாரு... ராஜகிளியா? கல்யாணமான மூணு வருஷத்துல நாலு பிள்ள பெத்த நீயா சொல்லுதே? எங்கே, இன்னொரு தடவ என்கிட்ட சொல்லு... நீராத்திரில... ஒன் புருஷனை படுத்துற பாட்டை ரேடியோ மாதிரி ஒப்பிக்கேன். ஏகேன்னும்!"

தமிழரசி புரிந்துகொண்டாள். பாட்டியை அங்கே நிற்கவைத்தால், பல பெண்கள் அங்கே மட்டுமல்ல, வேறு எங்கேயும் நிற்கமுடியாது. நாற்காலியை விட்டு எழுந்து அதன் சட்டத்தைப் பற்றியபடியே, "இந்த தள்ளாத வயசுல நீ ஏன் பாட்டி வந்தே? மெட்ராஸ்ல இருந்து ஊருக்கு வந்துட்டு, எப்போவாவது ஒன்னைப் பார்க்காமல் போயிருக்கேனு? சாயங்காலமாய் ஒன் வீட்டுக்கு வாரேன்" என்றாள். முத்துமாரிப்பாட்டி, ஆனந்தவாசியானாள்.

"பாத்தியளா அம்மாளுவளா. என் ராசாத்தி சொல்லுததை கேட்டியளா. நீங்க ஆயிரந்தான் குலுக்குனாலும், சிலுக்குனாலும், என் தங்கத்தோட குணம் வருமாடி? நிறம் வருமாடி? நெட்டையாய் போவாமலும், குட்டையாய் இல்லாமலும், கள்ளக்கண்ணு போடாமலும், நொள்ளக்கண்ணு இல்லாமலும், நேருக்கு நேராய் பாக்குற இந்த லட்சணம் எவளுக்குடி வரும்? ஆனாலும், தமிழரசி, என் தங்கம், நீ கொண்டய இப்படி தூக்கி வைக்கப்படாது...லேசா சரிச்சி போடணும்."

தமிழரசி உட்கார்ந்திருந்த நாற்காலியில் சாய்ந்தபடி தரையில் உட்கார்ந்திருந்த கலாவதி, கிழவி, தன் பெரியப்பா மகள் தமிழரசிக்கு—அதுவும் காலேஜ்ல—அதுவும் மெட்ராஸ் காலேஜ்ல பி. ஏ. படிக்கிற பொண்ணுவளுக்கே வாத்தியாரம்மாவாய் இருக்கிறவளோட கொண்டையை விமர்சனம் செய்தது பிடிக்கவில்லே. கோபத்துக்கும், சாந்தத்திற்கும் இடைப்பட்ட குரலில் "ஒன் வேலய பார்த்துக்கிட்டு இரேன் பாட்டி.

கொண்டை சரியில்லம்ப, அப்புறம் மூக்கு சரியில்லம்ப, வந்தோமா பார்த்தோமான்னு உட்காரேன்!'' என்றாள்.

'பாட்டி பேசுனால் பேசட்டுமே...' என்று தன் கொண்டையை இறக்குவதற்காக தமிழரசி கைகளை தலைக்கு மேல் குவித்தபோது, முத்துமாரிப் பாட்டி எகிறினாள்.

''ஏண்டி கலா, ஒன்கிட்ட எந்த விவகாரமும் இல்லங்ற தைரியத்துலயா பேசுறே? வரட்டும், வரட்டும், நீயும் 'ஆம்புள' விஷயத்துல சிக்காமலா இருக்கப்போற? வயசு இருக்கத்தானே செய்யுது? பேய்ப்பய மவளே...நான் எதுக்குச் சொன்னேன்னு கொஞ்சமாவது யோசிச்சு பார்த்தியா? முகம், குடுவை மாதிரி கூம்பாமலும், பனங் காய் மாதிரி படராமலும், மூக்கு சப்பாமலும், முன்னால நீளாமலும், கழுத்து கொக்கு மாதிரி வளையாமலும், குடமிளகாய் மாதிரி குறுகாமலும், இந்த நாடு ராச்சியத்தில... என் ராசாத்தி 'தமிழு' மாதிரி யாரு பிள்ள இருக்காவ? ஊருக்கு... எத்தனயோ பேரு... ஆபீஸரா இருக்கவமுல்லாம் வாரான்... இவள பார்க்க வாரது மாதிரி ஊர்க் கூட்டம் எங்கேயாவது உண்டா? அவள் கொண்ட அழகாத்தான் இருக்கு. திருஷ்டிப் பரிகாரமாய் சாய்க்கச் சொன்னேன். நீ என்னடான்னால்...''

கூட்டத்துப் பெண்களில் ஒருத்திக்கு மாமியார் உயிரோடு இருப்பது நினைவுக்கு வந்தது. அதே சமயம், தமிழரசியிடம் நேருக்கு நேர் இரண்டு வார்த்தை பேசாமல் போக மனம் வரவில்லை.

''பாட்டி, நாங்களும் எங்க பங்குக்கு கொஞ்சம் பேசாண்டாமா? நீயே பேசிக்கிட்டே இருந்தால் எப்டி? நகரு.''

''எப்டிளா நகர முடியும்? அஞ்சு வருஷத்துக்கு முன்னாலயே என்னவெல்லாமோ எழுதி, எனக்கு மாசா

மாசம் 'பென்ஷேன்' வாங்கித் தந்த என் ராசாத்திய விட்டுட்டுப் போவ மனம் வர மாட்டக்கே...''

பெண்கள் கைகளைப் பிசைந்தார்கள். வெளியே, பெஞ்சில் ஊர்ப் பெரியவர்களோடு உட்கார்ந்திருந்த கல்யாண மாப்பிள்ளையான தமிழரசியின் அண்ணன் ராஜதுரை, மிடுக்காக அங்கே வந்தான். முத்துமாரிப் பாட்டியின் கையை பலமாகப் பிடித்தபடி ''சரி, போதும் பாட்டி, புறப்படு...'' என்றான். பாட்டி படபடப்பாளுள்.

''கையை விடுடா பேய்ப் பவ மவனே! என்னம்மா வலிக்கு! கல்யாண பந்தலுல, மணவறையில, பொண்ணு கையயும் இப்டி பிடிச்சுடாதல... அப்புறம் பொண்ணு ராத்திரி வரப்படாதுன்னு பகலையே நெனைப்பாள். ஒப்பனும் இப்பிடித்தான். கல்யாணத்துல, ஒம்மா கையை அவன் பிடிச்ச பிடியில, பாவம் அவள் கை வளையலு நொறுங்கி— நொறுங்குனது அவள் கையக் குத்தி, கண்ணாடி சதைக்குள்ள போயி, அப்புறம் நாட்டு வைத் தியர் வந்து, பச்சில கட்டுனரு, இல்லியா பகவதி?''

மகளை, கதவிடுக்கில் நின்று பெருமிதமாகப் பார்த்துக் கொண்டிருந்த தமிழரசியின் தாய் பகவதியம்மாள், அப்போதுதான் அது நடந்தது போல் வெட்கப்பட்டாள். பிறகு, கிழவியின் வாயில் மேலும் விழாமல் இருக்கக் கருதி, ''தமிழரசி, வெளில பெரியவங்க ஒனக்காவ காத்திருக்கது தெரியல? அவங்கள போய் விசாரி'' என்றாள்.

முத்துமாரிப் பாட்டி, குறுக்கு விசாரணையைத் துவக் கினாள்.

''பகவதி... ஒன்னத்தான்! நம்ம ராஜதுரைக்கு வடக்குத் தெரு ராமையா மகள நிச்சய தாம்பூலம் செய்யப்போறது சரிதான். அதோட அவரு மகன் இனுசு

பெக்டருக்கு நம்ம தமிழரசியை கொடுத்துட்டா என்ன? ஒரே பந்தலுல ரெண்டு கல்யாணம் நடத்திட்டால் செலவு மிச்சம்பாரு.''

பகவதியம்மா விளக்கினாள்:

''நாங்களும் அப்படித்தான் நெனச்சோம். ஆனால் ஒரே பந்தலுல வீடு பால் காய்க்கிறதும், ரெண்டு கல்யாணமும் நடக்கப் படாதாம்...''

''அதுவும் சரிதான். ஆனால், இப்பவே பேசி முடிச் சிடுங்க. கல்யாணத்த அடுத்த வருஷம் வச்சுக்கலாம்.''

அன்னக்காவடி-அனைதைக் கிழவி, அப்படிப் பேசுவது, இன்னும் நிச்சயிக்கப்படாத கல்யாணத்தின் மாப்பிள்ளை யான ராஜதுரைக்கு, அதிகப்பிரசங்கித் தனமாகத் தெரிந்தது. ''சரி ... எல்லாம் ஒன்கிட்டேயே கேட்டு முடிக்கோம்'' என்று சொல்லியபடியே, அவளை இழுத்துக் கொண்டு போகப்போனான்.

''தொடாதடா, எனக்கு நடக்கத் தெரியும். போகும் போது ஒண்ணே ஒண்ணை சொல்லிட்டுப் போனால்தான் என் மனசு ஆறும். அதாவது, வடக்குத்தெரு ராமையா, ஒன் முஞ்சிக்காவ அவரு மவள தரல. என் தங்கம் தமிழரசியின் முகத்தைப் பார்த்துட்டு ஒனக்கு தர்ரார். மறந்துடாதடா மங்குளிப் பய மவனே.''

ராஜதுரை, பாட்டியை விரைவு படுத்துவதுபோல், அவள் முதுகை லேசாகத் தள்ளியபடியே ''நீ வேற... நானும் என் தங்கச்சி தமிழரசி சொன்னதாலதான் ராமையா மாமா மவள கட்டப்போறேன். என் தங்கச் சிக்கு எழுதிக் கேட்டேன். அவள் சம்மதமுன்னு சொன்ன பிறகுதான் நான் சம்மதிச்சேன். சரி, சரி, எட்டி நட'' என்றான்.

தமிழரசியின் அருகே இருந்த கல்யாணப் பெண்ணின் தங்கை-முன்பு பாட்டியிடம் எடுத்த எடுப்பிலேயே வாங்கிக்

கட்டிக்கொண்ட அதே அந்த பொன்மணி "எங்க அக்காவுக்கு என்ன குறை? ஏதோ தயவுபண்ணி காட்டுறது மாதுரி பேசுறீரு? நாங்களும் தமிழரசி அண்ணியை எங்க இன்ஸ்பெக்டர் அண்ணன் தாமோதரனுக்கு எடுக்கணு மேன்னுதான் எங்க அக்காவை கொடுக்கோம். ஞாபகம் இருக்கட்டுமிய்யா" என்ருள்.

தமிழரசிக்கு, யார் சொன்னதும் காதில் விழவில்லே. காதில் விழுந்தாலும் கருத்தில் விழவில்லே. தாமோதரன் வந்திருக்காராமே... அவருக்கே என்னைக் கொடுக்கிறதா தீர்மானமாயிட்டா, குட்! இந்த தடவையாவது அவர் கிட்ட பேசணும். அவரைப் பேச வச்சுடணும். என்னடி இது... லீவுல அவரைப் பார்த்தால் பேசுறீயே... பேசுராரே... அப்டில்ல! வேறமாதிரி பேசணும்... 'என்ன சுகமா'ன்னு முன்னுல பேசுறது மாதிரிப் பேசப் படாது... 'சுகமாய்' பேசணும்...

கனவுலகில் இருந்து நழுவி, மெள்ள மெள்ள நனவுல கிற்கு வந்த தமிழரசி, பாட்டியை அண்ணன் பலவந்தமாக இழுத்துக்கொண்டு போவதைப் பார்த்தாள். மனசு கேட்க வில்லே. "பாட்டிக்கு நடக்கத் தெரியும் அண்ணு" என்ருள் பலமாக. பிறகு, அண்ணனின் வன்மம் இல்லாத வன் முறைக்கு பரிகாரம் செய்பவள் போல், "பாட்டி, எங்கேயும் போயிடாதே. சாயங்காலமாய் வாரேன்" என்ருள். திரும்பி ஏதோ பேசப்போன பாட்டியை, ராஜ துரை பலவந்தப்படுத்திக் கொண்டிருந்தான். இதற்குள், பாட்டிமேல் பார்வை படாதபடி, அவளேப் பெண்கள் கூட்டம் மறைத்தது. ஒவ்வொருவரையும் தனித்தனி யாகப் பார்த்தாள். ஒட்டுமொத்தமாகப் புன்னகைத்தாள். ஏதேதோ பேச்சுக்கள்; தத்தம் வீட்டுக்கு வரவேண்டும் என்று அழைப்புக்கள். தன் மகளிடம் இன்னும் பேச முடிய வில்லேயே என்று தாய் பகவதியம்மாவின் தவிப்புக்கள். வெளியே கூட்டத்தோடு கூட்டமாக உட்கார்ந்திருந்த

தந்தைக்காரரர் அருணுசலம் "தமிழு, ஒனக்காகத்தான் காத்து இருக்காங்க; இன்னும் அங்கே என்ன பேச்சு?" என்ருர் செல்லமான அதட்டலோடு.

தமிழரசி வெளியே வந்தாள். காதுகளில் 'ரிங்' ஊஞ்சலாட, கன்னக் கதுப்பில் முடிமோத, எல்லோ ரையும் பார்த்துக் கும்பிட்டபடி வந்தாள். ஊரார் பேசும் முன்னுலயே பேசினுள் :

"என்ன மாமா... அத்தைக்கு உடம்புக்கு இப்போ எப்படி இருக்கு? தாத்தா, ஒங்க பேரன் இப்போ எப்படி படிக்கான்?"

"ஏதோ படிக்கான்... கழுதப் பயலுக்கு நீதான் ஒரு வேல வாங்கிக் கொடுக்கணும்."

"என்னுல எப்டி முடியும்?"

"ஏம்மா முடியாது? மந்திரியோடவும், அதிகாரி களோடயும் நீ இருக்கிற போட்டோவ பார்க்கத்தானே செய்யுறேம்."

"அதுவா? சில இலக்கியக் கூட்டத்துல பேசச் சொல்லு வாங்க. அங்க மந்திரியும் அவர் பாட்டுக்கு வந்திருப்பார். அவ்வளவுதான்."

"அவ்வளவோ... எவ்வளவோ... ஒன்னத்தான் நாங்க நம்பியிருக்கோம். நம்ம ஊர்ல பிறந்து, பெரிய பெரிய வேல பார்க்கிற ஆம்புளப் பயலுவ, சொந்த ஊரை அசலூராய் நினைச்சுட்டானுவ. நீதான் ஊருக்கு நல்லது செய்யணும்."

இடையில் பேசியவரை மறித்து ஒருவர் பேசினுர்.

"என்னவே, இது ஒம்ம பையனுக்கு வேலை, வாங்கிக் கொடுத்தால் ஊருக்கு நல்லது செய்ததாய் ஆயிடுமா? அவனும் அப்புறம் மெட்ராஸ்லயே பழி கிடப்பான்."

"என்னவே நீங்க... வந்ததும் வராததுமாய் சிபாரிசு கேக்கியே? தமிழு, வெள்ளிக் கிழம நிச்சய தாம்பூலத் துக்கு இருந்துட்டு காலேஜ் போறியா? இல்ல, கல்யாணம் வரைக்கும் இருக்கப் போறீயா?"

"காலேஜ்ல மாணவர் தேசிய சேவை திட்டமுன்னு ஒண்ணு இருக்கு. அதுக்கு நான்தான் பொறுப்பு. வேல இருக்கு. நிச்சய தாம்பூலத்துல கலந்துகிட்டு, அப்புறம் மெட்ராஸ் போயிட்டு, கல்யாணத்துக்கு வரணும்."

"ஏதோ ... என் மகன் பரீட்சை பேப்பர் அங்கேதான் வருமாம். நீதான்..."

"நீங்க பேசுறதைப் பார்த்தால், நான் எலெக்ஷன்ல நிற்கலாம் போலுக்கு..."

"எந்தெந்த கழுதையோ நிக்கும்போது, நீ ஏன் நிக்கப்படாது?"

ஊர்ப் பெரியவர்கள், ஒருவழியாகப் போய்விட்டார் கள். தமிழரசி, முந்தானையால் முகத்தில் வீசியபோது, பகவதி அம்மா வீட்டுக்குள் இருந்தே குரல் கொடுத்தாள்:

"வந்தது மத்தியானம் ரெண்டு மணி; இப்போ நாலு மணி. முதல்ல உள்ள வா. குளிச்சுட்டு, சாப்புடப் போறீயா? சாப்பிட்டுட்டு குளிக்கப் போறீயா?"

அம்மா சொல்வது, சென்னையிலும் இதர நகரங் களிலும் இப்போது நடைபெறும் பட்டி மன்றங்களுக்கு, அருமையான தலைப்பு என்பது போல், பல பட்டிமன்றங் களில் கலந்து கொள்ளும் தமிழரசி ரசித்தபடி நின்றாள். பிறகு "குளிச்சுடுறேம்மா..." என்றாள்.

சமையலறைக்குள் இருந்து, சித்தப்பா மகள் கலாவதி யின் குரல் கேட்டது:

"வெந்நி ரெடி..."

"வேண்டாம்... எனக்கு பச்சைத் தண்ணி போதும்...".

தமிழரசி, குளிப்பதற்காக உள்ளே போகப் போனாள். வெளித்தளத்தில் கல்தூணில் சாய்ந்தபடி, தன்னையே பார்த்துக் கொண்டிருந்த கலாவதியின் தந்தை, மாடக் கண்ணுவைப் பார்த்தாள். அப்பா கூடப்பிறந்த சொந்த சித்தப்பா. அண்ணன் மகள் வேறு, தன் மகள் வேறு என்று வித்தியாசம் பாராட்டாமல் சிறு வயசில் இருந்தே, இருவரையும் இருதோளில் போட்டவர். இருவருக்கும் எது வாங்கி வந்தாலும் சமமாக வாங்கி வருபவர். வாய் அதிர்ந்து பேசியோ, கையதிர ஆரவாரமாகவோ பேசாதவர். இதனால் ஊரில் அவருக்கு 'பைத்தியாரத் தர்மரு' என்று பட்டப்பெயர். அதனாலோ என்னவோ, எப்படியோ சொத்தை கோட்டை விட்டார். ஊரார் பாதி பிடுங்கிவிட்டார்கள் என்றால், அப்பா மீதியைப் பிடுங்கி விட்டார். இப்போ அவருக்கு ஒரு ஓலை வீடும், கலாவதியும், மகன் வினைதீர்த்தானுமே சொத்துக்கள்.

அண்ணன் மகளின் பார்வை, தன்மேல் படுவதற்காக தவம் இருப்பவர் போலவும், அதே சமயம் தனது நிலைமையை எண்ணி, பெஞ்சில் உட்கார விரும்பாதவர் போலவும், விக்கித்து, தரையில் இருந்தவரை, தமிழரசி தாளமுடியாமல் பார்த்தாள். பிறகு "பெஞ்சில் உட்கார்ந்தால் என்ன சித்தப்பா?" என்றாள். சித்தப்பாவிற்கு, அன்றைக்கே ஒரு எட்டுமுழம் மல் வேட்டியும், ஜரிகைத் துண்டும் எடுத்துக் கொடுத்துவிட்டால், அவராகவே, தானாக பெஞ்சில் உட்காருவார் என்று நினைத்துக் கொண்டாள். ஊர்ப் பெரியவர்களை அனுப்பி விட்டு உள்ளே வந்த தந்தை அருணாசலம், "முதல்ல குளிம்மா..." என்றார். உள்ளே அவள் வருகையை அம்மாவும், சித்தப்பா மகள் கலாவதியும், மணப் பெண்ணின் தங்கை பொன்மணியும் ஆவலோடு எதிர்பார்ப்பதுபோல், கண்களை அகலப்படுத்தினார்கள்.

தமிழரசி வீட்டுக்குள் போகப் போனபோது—

வெளியே உரக்க சத்தம் கேட்டது. சத்தம் முடியு முன்னுலேயே, தமிழரசியின் சித்தப்பா மகன், ஒரு வாலிபனை கழுத்தோடு சேர்த்துத் தூக்கிப் பிடித்துக் கொண்டு வந்தான். தமிழரசியின் முன்னுல் அவனை நிறுத்திவிட்டு "ம்...என் தங்கச்சி காலுல விழுந்து மன்னிப்பு கேட்கிறியா...மண்டைய ஒரேயடியாய் உடைக்கட்டுமா" என்ருன்.

இதற்குள், வெளியே இருந்து நான்கு பேர் ஓடி வந்தார்கள். ஆயுதம் தனியாகத் தேவையில்லை என்பது போன்ற உடம்புக்காரர்கள்! வந்தவர்களில் ஒருவன் "டேய் வினைதீர்த்தான்... இப்போ கொலை விழணுமுன்னு நினைக்கியா" என்று அதட்டினுன். வினைதீர்த்தான் கீழே கிடந்த மண்வெட்டியைப் பார்த்தான்.

# 2

தமிழரசி, தன் முன்னுல் பூணிக் குருவி மாதிரி, கூனிக் குறுகி நின்ற அந்த வாலிபனைப் பார்த்தாள். அவனுக்கு வக்காலத்து வாங்குவது போல் அரட்டலோடு வந்து நின்று அரட்டிய அந்த நால்வரையும் பார்த்தாள். பிறகு ஒன்றும் புரியாமல், சித்தப்பா மகன் வினைதீர்த்தானைப் பார்த்தாள். இதற்குள் உள்ளே இருந்து பகவதியம்மாளும், பொன்மணியும், கலாவதியும் ஓடி வந்தார்கள்.

வீட்டுக்குள் வந்த நால்வரில் ஒருவர் நடுத்தர வயது மனிதர். எவராக இருந்தாலும் எதிர்க்க வேண்டும் என்பதற்காகவே எதிர்ப்பவர். 'இன்றைக்கு மழை வரும்' என்று யாராவது சொன்னுல் 'எப்படி வரும்' என்பவர். 'வராது' என்ருல் 'ஏன் வராது, வரும்' என்பவர்.

புளிய மரத்தடியில் போய் கள்ளச் சாராயம் குடிக்கும் அவரை, ஊரார் 'கில்லாடியார்' என்பார்கள். வசதியுள்ளவர் என்பதால் 'ஆர்'. மீதி மூன்று பேரும் உதிரிகள். அதே சமயம், உடம்பைப் பொறுத்த அளவில் உறுதியானவர்கள். தமிழரசியின் முன்னால், உடம்பின் ஒவ்வொரு அங்கமும் 'லாக் அவுட்' செய்வது போல் துடிதுடித்து நின்றவனுக்கு, ஊரார் ஊட்டிய பெயர் 'மண்டையன்.' இருபத்து நான்கு வயதுள்ள அந்த உள்ளூர் டெய்லருக்கு, தலையின் பரப்பளவு அதிகம். எப்போதும் தையல் தொழிலை விட்டு விட்டு, 'தையல்களை' பார்ப்பதையே தொழிலாகக் கொண்டவன். வெள்ளை ஜிப்பாவும், கறுப்பு லுங்கியுமாக அலைபவன்.

அனைவரும் அரை நிமிடம் பேச்சற்று நின்றபோது, வினைதீர்த்தான், வக்காலத்துக்களை அலட்சியமாகப் பார்த்தபடியே, "உம்...சீக்கிரம் என் தங்கச்சி கிட்ட மன்னிப்புக் கேளு...நீயாய் கேட்காட்டால், ஒன் தல மட்டும் தனியா அவள் காலுல உருளும்" என்றான் உறுமியபடி.

கில்லாடியார் இரண்டடி முன்னால் நடந்து "டேய் வெனதீர்த்தான், அவனை அடிச்சால், என்னை அடிச்சது மாதிரி" என்றார். வினைதீர்த்தான் அதைக் கண்டு கொள்ளாமல், மண்டையனைப் பார்த்து "ஏல...நீயா அப்படிப் பேசினியா, இல்ல எந்த தேவடியா மவனும் ஒன்னை அப்படிப் பேசச் சொன்னானா? உள்ளதைச் சொல்லு" என்று சொன்னபடியே, மண்டையனின் பிடரியில் அடிக்காமலே தன் கையை வைத்தான்.

கில்லாடியார், மூவர் புடைசூழ மண்டையனை மீட்கப் போனார். இதற்குள் தமிழரசியின் தந்தை அருணாசலம் கர்ஜித்தார்.

"டேய் கில்லாடியான்...யார் வீட்ல வந்து நிக்கோ முன்னு கொஞ்சம் யோசிச்சிட்டு, அப்புறமாய் நீ என்ன செய்யணுமோ அதைச் செய்" என்றார்.

'பைத்தியாரத் தருமரு' மாடக்கண்ணு, அங்கே ஏதுவுமே நடக்காததுபோல் கால்களைச் சேர்த்த கையை விடாமல், உடம்பை ஒரு சின்ன நெளிப்புக்கூட நெளிக்காமல், மகளையும், மண்டையனையும் மாறி மாறிப் பார்த்தார்.

தமிழரசி சற்றுமுன்னால் நடந்து வந்து, வினைதீர்த்தானின் கையை, மண்டையனின் பின் மண்டையில் இருந்து எடுத்து விட்டு, "என்ன இதெல்லாம்? விஷயம் தெரியாமலே சண்டை போடப் போனால் எப்டி?" என்றாள்.

"அதத்தான் நானும் சொல்றேன். அடிச்சாலும் நான் என்ன சொன்னேங்றதை சொல்லிட்டு அடிங்க" என்றான் மண்டையன். கில்லாடியார், எல்லோரையும் கருடபார்வை பார்த்துக் கொண்டிருந்தார். தமிழரசி தவிர, இதர பெண்கள் கைகளைப் பிசைந்தார்கள். வினை தீர்த்தான், தமிழரசிக்குக் கட்டுப்பட்டு, மண்டையனை அடிக்க முடியாமல் போன குறையை பேச்சில் காட்டினான்.

"ஏல...மண்டையா, பேசுனதையும் பேசிப்பிட்டு...நீ பேசுனதை என்னையே திருப்பிச் சொல்லச் சொல்றியா? மூதேவி!"

கில்லாடியார், சாடினார்:

"என்னடா இது...சும்மா நேரப் போக்குக்கு காசு வைக்காம சீட்டு விளையாடிக்கிட்டு இருந்தோம். அசக்குன்னு இவனை தூக்கிக்கிட்டு வந்ததும் இல்லாம, அதட்டவா செய்யுற? இந்தப் புத்தியாலதான் ஒப்பன் சொத்து ஊர்ல போச்சுது. அந்த பைத்தியார தர்மரு வயித்துல நீயா பிறக்கணும்? அதனாலதான் ராமையா

மச்சான் வீட்ல வேலக்காரனாய் நிக்குற. ஒன் எசமான் பிள்ள இன்ஸ்பெக்டரா இருந்தால், சும்மா கிடக்கிறவனை தூக்கிட்டு வரச் சொல்லுதா?''

''சும்மா இருந்தவன தூக்கிட்டு வாரதுக்கு ஒம்மை மாதிரி நான் கள்ளச்சாராயமா குடிக்கேன்? சத்தியமாய் சொல்லு.. அவன் சொல்லுத... ஒம் எருமைக் காதுல விழல?''

''சத்தியமா சொல்றேண்டா...எனக்கு கேட்கல... சீட்டு விளையாட்ல...அதுவும் ரம்மில உட்கார்ந்திட்டால் உலகமே தெரியாது...தூக்குறதே தூக்குறே...அவன் சும்மா இருக்கும்போது தூக்கணும். சீட்டாட்டத்துல ஒரு கை குறையும்படியாய் ஏண்டா தூக்குறே? இதனலை தான் ஒப்பன் பைத்தியாரத் தருமராய் இருக்காரு. நீ வீமன் மாதிரி உடம்பை வச்சுக்கிட்டு, வெங்கனுலயும் வெங்கன் வேலக்கார வெங்கனாய் இருக்கே.''

'கில்லாடி மாமா . நான் இப்பதான் மெட்ராஸ்ல இருந்து வந்திருக்கேன். வயிறு பசிக்குது. அவன் என்ன சொன்னான்னு வினைதீர்த்தானை சொல்லவிடும்.''

வினைதீர்த்தானுக்கும், கில்லாடிக்குப் பதிலுக்குப் பதிலளிக்க வேண்டும் என்று ஆசை.

''ஏய்யா செவிட்டு முண்டம்...இருக்கிற சொத்தை யெல்லாம் புளியம் தோப்புல, கள்ளச்சாராயத்துல கலைக்கிற மூதேவி...இந்த மண்டையன் 'எனக்கு ஒரே ஒரு ஆசை ..இந்த தமிழரசியை...ஒரு நாள்...ஒரு பொழுதாவது'...''

வினைதீர்த்தானல் மேற்கொண்டு பேச முடியவில்லை. இனிமேல் அடி விழாது என்பது போல், முதுகை நெளித்து விட்ட மண்டையன் முதுகில், இரண்டு குத்து குத்தினன். தமிழரசி, சித்தப்பா மகனைப் பிடித்துக் கொண்டாள். தந்தை, மண்டையனை நோக்கி நகர்ந்தார். திடீரென்று,

யாரும் எதிர்பாராத விதமாக, காலைக் கட்டிக்கொண்டிருந்த பைத்தியாரத் தர்மரு எழுந்தார். துணி பரப்பிய கயிற்றைப் பிடித்து இழுத்து, கயிருேடு வந்து "செறுக்கி மவனே தூணுல கட்டி வையுங்கடா" என்று சொன்னபடியே, மண்டையனின் கைகளைப் பிடித்து, அவன் முதுகுக்குப் பின்னுல் கொண்டு போகப் போனுர். அவர் கோபம், கில்லாடியாரையும் தொற்றிக் கொண்டது. மண்டையனின் முதுகில் அடிக்க இடமில்லாமல் மாடக் கண்ணு நின்றதால், கில்லாடி முன்னுல் வந்து, மண்டையனின் முடியைப் பிடித்து இழுத்தபடி "செறுக்கிமவனே... யாரப் பேசுனலும் தமிழரசியையால பேசுறது? மெட்ராஸ்ல...காலேஜ்ல வாத்தியாராய் இருந்ததோட, பல பெரிய பெரிய கூட்டத்துல பேசி, பெயர் வாங்கமுடியாத இந்த குட்டாம்பட்டிக்கே பேர் வாங்கித்தார தமிழரசியைப் பத்தியா இப்படிப் பேசுனே? இதைவிட நீ என்மவள பேசியிருக்கலாம்... ஒன்ன .. ஒன்ன..." என்று சொல்லி அவன் முடியை முன்னும் பின்னுமாய் இழுத்தார்.

தமிழரசி, அடிபடுபவனையே பார்த்தாள். ஒரு கணம் அது சரியென்றுபட்டது. பிறகு காலஞ்சென்ற சோவியத் அதிபர் பிரஸ்நேவ் எழுதிய "கன்னி நிலம்" என்ற புத்தகம் அவளுக்கு நினைவுக்கு வந்தது. சோவியத் கலாச்சாரக் கழகத்தில், இந்த புத்தகத்தை விமர்சித்து, அவள் பேசியிருக்கிருள். அதில் "தோழர் பிரஸ்நேவ் இரண்டாவது உலகப்போரில் கருங்கடல் தீபகற்பம் ஒன்றில், உயிருக்குப் பயப்படும் வீரர்களை வீட்டுக்கு அனுப்பத் தீர்மானித்தார். அவர்களிடம் இதுபற்றி பலர் முன்னிலையில் கேட்காமல், தனித்தனியாக கேட்க விரும்பினுர். அதற்குக் காரணமும் சொல்கிருர். எவரையும் —அவர்கள் எவ்வளவு கோழைகளாக இருந்தாலும், கடமையாற்ற பயந்தவர்களாய் இருந்தாலும், அவர்களை பகிரங்கமாக இழிவு செய்ய, யாருக்கும் உரிமை இல்லை" என்கிருர். இதுதான் மனிதாபிமானம். இந்த மானுடந்

தான் இந்த நூலின் ஜீவன்! என்று பேசி கைதட்டு வாங்கியிருக்கிருள்! இப்போது, அவளே இந்த இழிவை அனுமதிக்கலாமா? ஒரு மனிதனின் இழிவு, மானுடத்தின் இழிவாகலாமா?

எப்போதோ படிக்கும் இலக்கிய வரிகள், சமயத்தில் வந்து கை கொடுக்கும் என்பதைக் காட்டுபவள்போல், மண்டையனைப் பிடித்து,தன் பக்கமாக இழுத்துக்கொண்டு, "என்ன மண்டையா, 'என்ன தமிழு ... எப்போ வந்தே'ன்னு அன்போட கேட்கிற நீயா இப்படிப் பேசினே?" என்ருள்.

மண்டையன் குய்யோ, முறையோ என்று கத்திஞன்.

"அய்யோ... அய்யய்யோ... ஒன்னப்பத்தி பேசினல் என் நாக்கு அழுகிவிடாதா? நான் பேசுனது வாஸ்தவந்தான். ஆனல் ஒன்னையில்ல; இந்த பொன்மணியோட பெரியய்யா மகள் தமிழரசி இருக்காளே, அவளச் சொன்னேன். வினைதீர்த்தான் சொல்லிக் காட்டுனது மாதிரியே தான் சொன்னேன். ஒன்னைச் சொல்லியிருந்தால் என் நாக்கு, வாய்க்குள்ளேயே பாம்பாவி, என்னைக் கொத்தி குடஞ்சிருக்காதா?"

வினைதீர்த்தான், கோபப் பார்வையை, சிநேகிதமாக்கிஞன். 'பைத்தியாரத் தர்மரு' மாடக்கண்ணு, மீண்டும் கல்தூணில் சாய்ந்தார். அருணுசலம், தார் பாய்ந்த வேட்டியை இழுத்து விட்டார். கில்லாடியார், தாம்பாளத்தில் இருந்து வெற்றிலைப் பாக்கை எடுத்தார். திடீரென்று பொன்மணி கத்திஞள்:

"ஏய் மண்டையா, எங்க பெரியப்பா மகளையா அப்டிக் கேட்டே? இரு, இரு, எங்க இன்ஸ்பெக்டர் அண்ணன்கிட்ட சொல்லி ஒன்னை போலீஸ்ல புடம் போடச் சொல்றேன்."

மண்டையன் மீண்டும் நடுங்கப்போனபோது, கில்லாடியார் அவனைப் பிடித்து, தன் வசமாக்கிக் கொண்டு "நீ மனுஷனே இல்லடா. வடக்குத் தெரு தமிழரசியைப் பற்றி எப்போ ஆசைப்பட்டியோ, அப்பவே நீ மனுஷன் இல்ல. வா... வா... தாமோதரன் இந்த பொன்மணி சொன்னபடி ஆடுற ஆள் இல்ல. அப்படியே கோபப் பட்டார்னுல், இந்த வினைதீர்த்தான் பயலை வச்சுச் சரிக் கட்டலாம். நீ இப்போ வா. நான் செட்டு சேத்துட்ட நேரம்; சீட்டுக்கட்டு அப்டியே கிடக்கு. வாடா! வாறேன் தமிழு, வாறேன் மச்சான், வாறேண்டா வென" என்று சொன்னபடியே, மற்றவங்களை நகர்த்தியபடி, நகர்ந்தார்.

பகவதியம்மா, மகள் தலையில் படிந்த வைக்கோல் தும்பை தட்டிவிட்டபடியே, "சரி, மொதல்ல சாப்பிடு. வாம்மா" என்றுள்.

தமிழரசிக்கும் பசியோ பசி.

வினைதீர்த்தான் "இந்தா தமிழு வாழை இலை. ஒனக்காவ கொண்டுவந்தேன்" என்று சொன்னபோது, தமிழரசி, சரியான உயரமும், அரையடி அழுத்தமும் கொண்ட வினைதீர்த்தானையே பார்த்தாள். சித்தப் பாவுக்கும், இவனுக்கும் எவ்வளவு வித்தியாசம்? என் மேலதான் இவனுக்கு எவ்வளவு பிரியம்? இருந்தாலும் அன்பை அடிதடி மூலமாகவா காட்டுறது?

பகவதியம்மாள், சமையலறைக்குள் போய்க் குரலிட்டாள்:

"எத்தன தடவம்மா சாதத்தை சூடாக்குறது? வாம்மா."

தமிழரசி, வினைதீர்த்தான் மீது நாட்டிய கண்களை எடுத்து விட்டு, அம்மாவைப் பார்ப்பதற்காக, அரைவட்ட மாகக் கண்களைச் சுழற்றியபோது—

வெளியே சப்-இன்ஸ்பெக்டர் தாமோதரன் போய்க் கொண்டிருந்தான். வாசலுக்கு முன்னல் சிறிது நின்று

அவளைப் பார்த்ததுபோல் தோன்றியது. பதவிக்கும், தனக்கும் சம்பந்தமில்லை என்பதுபோல், பௌவியமாகப் போய்க்கொண்டிருந்தான். தோளில் ஒரு கலர் துண்டையும், கையில் சோப்பு டப்பாவையும் பார்த்ததாக ஞாபகம். குளிக்கப் போகிறார் போலும்! காசியாபிள்ளை கிணற்றைப் பார்த்துத்தான் போவார்!

தமிழரசிக்கு, உடம்பெல்லாம் கசகசவென்று இருப்பது போல் தோன்றியது. ரயிலில் கூட்டத்தில் இடிபட்டு, கசங்கி, உடம்பெல்லாம் எரிச்சலாய் இருக்கு. குளிக்காமல் இருக்க முடியாது இருக்கவே முடியாது... அப்பப்பா .. உடம்பெல்லாம் புழுக்கம்.

பகவதியம்மாள், வாழை இலையை விரித்தபோது, தமிழரசி ''எம்மா, என்னால குளிக்காமல் சாப்பிட முடியாது. குளிச்சே ஆகணும்'' என்றாள்.

''கலாவதி, ஒக்காவுக்கு வெந்நிய பழையபடி சுடவை. என்ன பொண்ணோ நீ.''

''எனக்கு வெந்நீர் வேண்டாம்மா. காசியாபிள்ளைக் கிணத்துல பம்ப்செட் ஓடுதுல்லா... அங்கே போய் தலையைக் கொடுத்தால்தான் குளிச்சது மாதிரி இருக்கும்.''

''நாளைக்குப் போகலாம். இப்போ வேணுமுன்னால் லேசா குளிச்சிட்டு சாப்புடு. இங்கேயே குளி...''

தமிழரசி, பதில் பேசவில்லை. வீட்டுக்குள் போய் சூட்கேசைத் திறந்து, டர்க்கி டவலையும், சோப்பு டப்பாவையும் எடுத்தாள். பிறகு, பெட்டியைப் பூட்டினாள். வெளியறைக்கு வந்தவளுக்கு, புடவையை எடுக்காதது நினைவுக்கு வந்தது. சூட்கேசைத் திறக்கப் போனாள். அதற்குள் நேரமாகி... அவர் போய்விட்டால்...

கொடியில் கிடந்த அம்மாவின் புடவையை எடுத்துத் தோளில் போட்டபடியே, கலாவதியையும், பொன்

மணியையும் ஓரக்கண்ணுல் பார்த்தபடி, 'கண்டுக்காமல்' வெளியே வந்தாள். பகவதியம்மா, மகளை வற்புறுத்த வில்லை. மகளின் பிடிவாதத்தை, மறுவாதத்தால் மாற்ற முடியாது என்பது, தாய்க்குத் தெரிந்ததுதான்.

தமிழரசி, தெருவழியாக நடந்து கொண்டிருந்தாள். தெருவின் இருபுறமும் திண்ணைகளில் உட்கார்ந்திருந்த ஏழை பாழைகள், அவளைப் பார்த்ததும்,தங்களை நோக்கித் தான் அவள் நடந்தாலும், இவர்களே அவளைப் பார்த்து நடந்தார்கள். தமிழரசி அவசரமாக நடந்து பார்த்தும் அவளால் முடியவில்லை. ஒவ்வொருவரும் அன்புகனியப் பேசும்போது, இன்னும் கனியா-காயா என்று தெரியாத அந்த அன்பிற்காக, இந்த கனிந்த அன்பை அவளால் மீற முடியவில்லை. அப்படியும் "நாளைக்கு சாவகாசமாகப் பேசலாம்" என்று சிலரிடம் சொல்லிப் பார்த்தாள். அந்த சிலரில் ஒரு சிலரோ "நாளைக்கு நாங்க எந்த ஊர்ல, எந்த வயக்காட்டில் நிக்கிருேமோ?" என்று சொன்னபோது, அன்பைத் தவிர, வேறு எதையும் கேளாத அந்த மக்க ளிடம் இருந்து, எடுத்த எடுப்பிலேயே அவளால் விடை பெற முடியவில்லை. காதலை காயப்படுத்தியபடியே, அவள் காது விட்டு கேட்டு, மனம் விட்டுப் பேசினுள்.

எப்படியோ, பேசவேண்டியவர்களிடம் எல்லாம் பேசி, புளியந்தோப்பிற்குள் வந்தபோது, காசியாபிள்ளை கிணற்று மேட்டில், வெள்ளை ஆடையில் ஒரு உருவம் தெரிந்தது. அநேகமாய் தாமோதரனுகத்தான் இருக்கும்!

தமிழரசிக்கு நடக்க நடக்க, கால்கள் வேகமெடுத்தன. அவள் பதினென்ருவது படிக்கும்போது, இந்த தாமோதரன், பி. ஏ. படித்தான். ஒரு தடவை விடுமுறையில் வந்தபோது, இவன் மட்டும் ஏரிப் பக்க மாக வந்தான். தோழிகளோடு, தமிழரசியும் பின்னுல் வந்தாள். மாலை மயங்கிய நேரம். ஏழெட்டுப் பெண்களுக் கிடையில் வந்த தமிழரசி "தாமு...தாமு..." என்ருள்

அவனுக்குக் கேட்கும் குரலில். அவன் திரும்பிப் பார்த்த போது, இவள் 'பால் குடிக்காத' பூனை போல் வேறு எங்கேயோ பார்ப்பாள். அவன் மீண்டும் நடக்கும்போது "தாமு... தாமு " என்பாள். இப்படி அவன் நிற்க நிற்க நிறுத்தி, போகப் போகப் பேசியவளைப் புரிந்து கொண்டவன் போல், அவன், மறுநாள் நண்பர்களோடு போனபோது "இப்போ, பாரதி சொன்னது மாதிரி, தெருவெங்கும் தமிழோசை கேட்குதுடா" என்றான்.

இப்படிப் பல சின்னச்சின்ன நிகழ்ச்சிகள். தமிழரசி கல்லூரிக்குள் நுழைந்தபோது, அவன் சென்னையில் எம். ஏ. வுக்குப் போய்விட்டான். அதிகமாக ஒருவரை ஒருவர் பார்க்க முடியவில்லை. ஆனாலும், அவளால் அவனை மறக்க முடியவில்லை. இன்னும், மனதுள் அந்த 'இன்ஸ்பெக்டர்' தாமோதரனுக்குப் பதிலாக, கல்லூரித் தாமுவே நிற்கிறான். தமிழரசியும், பட்டமேற்படிப்பை முடித்துவிட்டு, ஊரில் சில காலம் வேலையில்லாமல் இருந்தாள். அப்போது ஊருக்கு வந்த அவனை ஓரிரு தடவை பார்த்திருக்கிறாள். ஆனால் பேசியதில்லை. சென்ற ஆண்டு, உதவிப் பேராசிரியையாக, அவள் விடுப்பில் வந்தபோது, சப்-இன்ஸ்பெக்டர் தாமோதரனை ஊரில் பார்த்தாள். ஏரிப்பக்கம் பார்த்துக் கொண்டார்கள்.

அங்கே அப்போது ஆளில்லைதான்! ஆனாலும் இருவரும் 'நீங்க... நாங்க' போட்டுப் பேசினார்கள். அவன் கல்லூரி டிஸ்ஸிபிளின் பற்றிக் கேட்டான். இவள் லா அண்ட் ஆர்டர் பற்றிக் கேட்டாள். இருவருமே தங்களை 'மெச்சூர்' ஆட்களாகக் காட்டிக் கொண்டதில், காதல், 'இம்மெச்சூர்ட்' ஆகியது. ஏதோ ஒரு உதவிப் பேராசிரியை, ஒரு காவல்துறை அதிகாரியிடம் 'ஜெனரல்' சமாச்சாரங்களை பேசிய அதிருப்தியோடு அவள் விடைபெற்றாள். அவன் எப்படி நினைத்தானோ?

காதல் வயப்பட்ட ஒருத்தனோ அல்லது ஒருத்தியோ, அந்த ஒருவனை அல்லது ஒருத்தியைப் பார்க்கும்போது,

தாங்கள் நினைத்த நினைப்பும், தவித்த தவிப்பும் நினைப்பிற்குரிய அடுத்த தரப்பிற்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறார்கள். 'அது' தெரியாமல் விழிக்கும்போது, 'பெரிய மனிதத்தனம்' போர்வையாகி விடுகிறது.

இப்போது, அந்தப் போர்வையை விலக்கியவள்போல் தமிழரசி நடந்தாள். "தாமு... தாமு" என்று மெல்லச் சொல்லியபடியே நடந்தாள். சத்தம் கேட்காமல் திரும்பாதவள், முதுகில் யாரோ குத்துவதைப் பார்த்துத் திரும்பினாள்.

கலாவதி, தன் தோளில் ஒரு துண்டு துலங்க சிரித்தாள். தமிழரசி ஒப்புக்கு "பொன்மணி வரலியா" என்ற போது, கலாவதி, "வர்ல...இப்போ வரவும் மாட்டாள்" என்றாள் திட்டவட்டமாக.

இருவரும் வருவதைப் பார்த்ததும், சட்டையைக் கழற்றிய தாமோதரன், அவசர அவசரமாக அதைப் போட்டான். வேறு கிணற்றைப் பார்த்து நடக்கப் போனவன், பிறகு அங்கேயே செக்குமாடு மாதிரி சுற்றிச் சுற்றி வந்தான்.

'பதினோராவது வகுப்பு' தமிழரசி, உதவிப் பேராசிரியையாகி, அவனைப் பார்த்துக் கும்பிட்டாள். அவனும் பதிலுக்கு சல்யூட் அடிப்பதுபோல், வலது கரத்தைத் தூக்கினான். பேச்சு இப்படிப் போனது:

"எப்டி இருக்கீங்க..."

"எப்டி இருக்கீங்க..."

"மெட்ராஸ் எப்டி இருக்கு?"

"மண்டைக்காடு எப்டி இருக்கு?"

"எப்போ புரமோஷன்?"

"ஒங்களுக்கு எப்போ?"

மேற்கொண்டு எப்படிப் பேசுவது என்று தாமோதரனுக்குத் தெரியவில்லை. அதே சமயம் ஒரு உதவிப்

பேராசிரியையிடம்—அதுவும் பல இலக்கிய மேடைகளில் முழங்கும் ஒருத்தியிடம் பேசாமல் இருக்கக்கூடாது என்று நினைத்துப் பேசினான். தண்ணீர் தட்டுப்பாட்டில் தவிக்கும் தலைநகரின் தலைவிதியை நினைத்தபடி கேட்டான். எப்படி?

''மெட்ராஸ்ல...எவ்வளவு காலமாய் 'குளிக்காமல்' இருக்கீங்க?''

உதவிப் பேராசிரியைக்குப் புரியாதது, கலாவதிக்குப் புரிந்தது. சிரிப்பை முகமெங்கும் சிதற விடாமல் இருக்க, ஒரு தென்னை மரத்திற்குப் பின்னால் போனாள்.

உதவிப் பேராசிரியை, 'டிக்னிபைடாக'க் கேட்டாள்.

''கல்யாணத்துக்கு வந்தீங்களா?''

''ஆமாம். இப்போ இன்னொரு கல்யாணமும் கூடியிருக்கு. நானே ஒங்க வீட்டுக்கு வந்து, நிச்சயதாம்பூலத்திற்குக் கூப்பிட வருவேன். ரெண்டு கல்யாணத்தையும் ஒரே பந்தலுல வைக்கப் போறோம். நான் வேலை பார்க்கிற இடத்துலயே கிடச்சிட்டு. நல்ல இடம். எனக்குத் தெரிஞ்ச இடம். மனசுக்குப் பிடிச்ச இடம். வீட்லயும் ஒனக்கு சரின்னால் எங்களுக்கும் சரின்னுட்டாங்க.''

உதவிப் பேராசிரியை தமிழரசி அதிர்ந்து போனாள்! கடைசியில் இவன்... இவர்... காதலிச்சு கல்யாணம் செய்யுறார். நான்தான் 'பேக்கு' மாதிரி இவரையே நினைச்சேன்.

தமிழரசி, பதினோராவது வகுப்புக்காரியாகி, தாமோதரனுள் 'காலேஜ் தாமுவைப்' பார்த்தாள்—தாபத்தோடு, கோபத்தோடு, வேகத்தோடு, தன்னையே தானே தொலைத்துவிட்ட துயரத்தோடு.

# 3

கிணற்றுமேட்டில் நின்ற கோணத் தென்னையில் இருந்து ஒரு 'குறும்பு' (துளிர்விடும் தேங்காய்), வரப் போரம் சரிந்து நின்ற வாழைக்குலையில் விழுந்தது. பம்ப்செட் அறையை ஒட்டியிருந்த நிலத்தில் பச்சையாய் கோலங்காட்டி, சிவப்பு சிவப்பாய் முடிந்த செம்பருத்திப் பூக்கள், மாலை வெயிலில் மரகதமாய் மின்னின. உலக்கைக்கு வெள்ளை வர்ணம் தீட்டியதுபோல் சிந்தாமல் சிதறாமல் பாய்ந்து, பிறகு தளத்தில் பட்டுத்தெறித்த வெண்மை நீர்த்திவலைகள், செம்பருத்திப் பூக்களில் சிந்தி, வானவில்லாய் ஆகாயத்தில் தோன்றும் அதிசய நட்சத்திரங்களாய் மின்னின.

அப்போதுதான் தமிழரசிக்கு, தாமோதரன்மீது தான் கொண்ட அன்பின் முழுமையும் புரிந்தது. அறியாப் பருவத்தில் இருந்தே பாசமாகி, 'அறியும்' பருவத்தில் காதலாகி, பற்றாகி, பாசமாகி, பழக்கமில்லா நட்பான ஏதோ ஓர் உணர்வு உடலோடு உருக்கொண்டு, உணர்வோடு உயிர் கொண்ட, அந்த இன்பச் சுமை, இப்போது அவளிடமிருந்து பிரிந்து, தன்னந்தனியாய் நின்று, அவளையும் தனியாக்கித் தவிக்க வைத்தது. தாபப் படுத்தியது. கோபப்படுத்தியது. சுமை போனதால், அவளுக்குத் தலை கனத்தது.

தமிழரசி, அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவனோ, குழந்தை பெற்ற தாய்போல பூரிப்போடு நின்றான். தமிழரசி, அந்த இடத்தை விட்டு நகரப் போவதுபோல பாதங்களை நகர்த்திப் பார்த்தாள். அவை முன்னும் பின்னுமாக வம்படித்தன. அவளுக்கும் ஒரு நிறைவு தேடும் தாபம். 'நான் உன்னைத்தான் காதலிச்சேன். ஆனால் வேறு வழியில்லாமல் இன்னொருத்தியை கட்டும்

படியாச்சு' என்று 'அவர்' சொல்லவேண்டும் என்ற எதிர்பார்ப்பு. அந்த இன்னொருத்தியுடன் அவன் அப்படியும் நடந்திருக்கலாமோ என்ற ஒரு பயக் கற்பனை. தெய்வயானையை தேர்ந்தெடுத்த அவனுக்கு, தான் வள்ளியாக இருக்கலாமா என்பது போன்ற இடக்கு மடக்கான சிந்தனை.

சிறிது நேரத்தில், தமிழரசி, தன்னைத்தானே நிமிர்த்திய வேகத்தில், உள்ளமும் கூன் போடாமல் நின்றது. அவர் காதலிக்காதபோது, நான் ஏன் காதலிக்கணும்? இப்போ...இதோ...நெளிகிற உணர்வு, சுய மரியாதையைக் கவ்வும் ஒரு நச்சுப் பாம்பு. அதை அடித்துக் கொல்ல முடியாவிட்டாலும் பிடித்துக் கொள்ள வேண்டும்! நீராக நெளிந்த அவள் மனம் ஒன்று திரண்டு ஐஸ் கட்டியாகியது. ஐஸ் கட்டியை, கல்லென்று நம்பி, கல்லாக நின்றாள்.

தமிழரசியை ரசித்துப் பார்த்தோ அல்லது பார்த்து ரசித்தோ, தனக்குள் தானே மூழ்கியிருந்த தாமோதரனுக்கு, அவள் பார்வையின் நோக்கோ, போக்கோ புரியவில்லை. அவளையும் சுற்றுப்புறத்தையும், தன்னையும், கண்களால் சுத்திச் சுத்தி வட்டமடித்தபடி நின்றான்.

இதற்குள் தென்னைக்குப் பின்னால் சிரிப்பை விட்டுவிட்டு, கலாவதி குறுஞ் சிரிப்போடு வந்தாள். எதுவுமே நடக்கவில்லை என்று அவளுக்கு உணர்த்துவதுபோல், அவள் தப்பாக நினைக்கக்கூடாது என்பதற்காக, அவன் தமிழரசியிடம் 'தப்பாகப்' பேசினான்.

"தமிழ்ல காலேஜ்தான எடுத்திங்க. ஸாரி...பி.ஏ.வுல எக்னமிக்ஸ் எடுத்திங்க...பிறகு ஏன் எம். ஏ.வுல தமிழ் எடுத்தீங்க? கஷ்டமாய் இருந்திருக்குமே?"

மிகப் பெரிய கேள்வி கேட்டவன்போல், அவன் தன் கையை இடுப்பில் வைத்தபோது, தமிழரசி, இடுப்பில் வைத்த கையை எடுத்து வீசியபடியே பதிலளித்தாள்:

"எனக்கு தமிழ் கஷ்டமாய் இல்ல. அது சொல்றபடி எதுவுமே நடக்காததுதான் கஷ்டமாய் இருக்கு."

"நீங்க என்ன சொல்றிங்க?"

"காலேஜில பட்டப்படிப்புப் படிக்கும்போது...தமிழ்ல சிலப்பதிகாரத்துல ஒரு பகுதி வந்துது. அதுல, ஆற்று மணலுல, ஒரு ஆடவன் உருவத்தை உருவாக்கும் ஒரு சிறுமிகிட்ட, அதுதான் ஒன் காதலன்னு பேசிடுறாங்க. உடனே அந்த அறியாச் சிறுமி, அதை நம்பி, காதலனை ஆற்றுவெள்ளம் அடிச்சிட்டுப் போயிடப்படாதுன்னு காவல் காத்தாளாம்."

"ஆமா, நானும் படிச்சேன். இது கண்ணகி, பாண்டிய மன்னன் கிட்ட சொல்றது தானே?"

"ஆமாம், இதை நான் அற்புதமாய் நினைச்சு. எம்.ஏ. வுல தமிழை எடுத்தேன். ஆனல் இப்போதான் புரியுது, அற்புதமுன்னு நினைக்கிறதுக்கு நம்மோட அபத்தமான மனசுதான் காரணம். கலாவதி, இந்தக் கிணறு பிரயோஜனமில்ல. நாம அந்தக் கிணத்துல போய் குளிக்கலாம். உம், சோப்பு டப்பாவை எடு."

எதிர்பாராத பேச்சைக் கேட்டு, சற்றே திகைத்த கலாவதியின் தோளைப் பிடித்துக் கொண்டு, கீழே குனிந்து சோப்பு டப்பாவை எடுத்துக் கொண்டு, தமிழரசி கலாவதியை, ரதத்தை இழுப்பதுபோல் இழுத்தாள். தாமோதரனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவளை நோக்கி, அவனையறியாமலே, அவன் கால்களும் இயங்கத் துவங்கின. உடனே ஒரு காலால், இன்னொரு காலுக்கு அணை போட்டபடியே, அவன் கேட்டான்:

"இங்கேயே நீங்க குளிக்கலாம். நான் கிணத்துக்குள்ளே இறங்கிக் குளிக்கிறேன்."

"கலா, ஒன்னத்தாண்டி! நீ கூட மரக்கட்டையாய் போயிட்டியா? புறப்படு."

கோபப்பட்டு அறியாத பெரியப்பா மகளின் பேச்சால் திக்குமுக்காடிய கலாவதி, அவளை விகற்பத்தோடு பார்த்தாள். தமிழரசியோ, தன்பாட்டுக்குப் போய்க் கொண்டிருந்தாள். தாமோதரனும், தன்பாட்டுக்கு நாலடி நடந்தான். பிறகு "இந்த ரெண்டு கல்யாணத்தையும் ஒரே பந்தலுல நடத்துறதுக்கு ஒங்க வீட்டுக்கு ஆட்சேபம் இருக்காதே" என்றான்.

வேகமாக நடக்கப்போன தமிழரசி நின்றாள். அவனை நோக்கித் திரும்பாமலே, கண்களைத் துடைத்தபடி, சட்டென்று பதிலை ஒரே வெட்டாய் வெட்டி, இரண்டு துண்டுகளாக்கினாள்:

"ஒங்க கல்யாணத்தை முன்னாலயாவது பின்னாலயாவது வச்சுக்கங்க. நான் என்னோட அண்ணன் கல்யாணத்தை மட்டுந்தான் பார்க்க விரும்புறேன்."

தமிழரசி தன்னையறியாமலே, தனக்குள் ஒரு முறை கூட கேட்டுக் கொள்ளாமலே பேசியதற்கு, வருந்தாதவள் போல் அவர்கள் இருவருக்கும் முதுகைக் காட்டியபடியே நின்றாள். கலாவதி, தமிழுக்கு என்ன ஆயிற்று என்பதை அறிய விரும்பியவளாய் அவள் தோளைப் பிடித்து தன் நாக்கைக் கடித்தாள். தாமோதரனுக்கும் லேசாகக் கோபம் வந்தது. சென்னையில் வேலை பார்ப்பதால், மனதளவிலாவது சிதைந்து போயிருப்பாளோ என்ற சந்தேகம். இளக்காரமாகவே கேட்டான்:

"பொன்மணி ஒங்கமேல உயிரையே வச்சுருக்காள். அவள் கல்யாணத்தைப் பார்க்க ஒங்களுக்குப் பிடிக்கலியா? ஒங்களை மெட்ராஸ் ரொம்ப மாத்திட்டுன்னு நினைக்கேன்."

தமிழரசிக்கு அவனைப் பார்த்து, தான் எப்படித் திரும்பினோம் என்பது புரியவில்லை. ஐஸ்கட்டி உருகி, நெஞ்சுள் நீர் பிரவாகமாகியது. அவசர அவசரமாகக் கேட்டாள்:

"அப்படின்னு கல்யாணம் ஒங்களுக்கு இல்லியா?"

"எனக்கா? நான் இந்த ஊர்லேதான் பண்ணிக்கப் போறேன். நான் வேலை பார்க்கற இடத்துல ஒரு பையன் ஹைஸ்கூல் டீச்சராய் இருக்கான். பி. ஏ. பிடி. வசதியான குடும்பம். பேசிப் பார்த்தேன். சரின்னுட்டாங்க. 'ஒங்களைப் பார்த்ததே பொண்ணைப் பார்த்தது மாதிரி. இனிமேல் நிச்சயதாம்பூலத்துக்குத்தான் ஒங்க வீட்டுக்கு வரணும்'னுங்க. ஏன் சிரிக்கிறீங்க?"

"சிரிப்புக்கு எத்தனையோ காரணம். நீங்க 'இங்க' போடுறதுனால, எனக்கு வயசாயிட்டோன்னு சிரிப்பு. 'ஒங்களப் பார்த்தால் பொண்ணைப் பார்த்தது மாதிரின்னு' மாப்பிள்ளை வீட்ல சொன்னதாய் சொன்னீங்க. சிரிக்காமல் எப்படி?"

தாமோதரனும், அவளோடு சேர்ந்து சிரித்தான். மகிழ்ச்சி என்பது காரண காரியமற்ற ஒரு தொற்றுணர்வு என்பதை நிரூபிப்பதுபோல், கலாவதி, அந்தச் சிரிப்பிற்கு அர்த்தம் தெரியாமலே சிரித்தாள். பிறகு, தமிழரசியின் கையைப் பிடித்து, "வா... பம்ப்செட் நின்றுடப்போவுது" என்று சொல்லி செல்லமாக இழுத்தாள்.

தாமோதரன் பல்லைக் கடித்து, அங்கேயே அவளைக் கைது செய்து காவலில் வைக்கப் போவதுபோல் பார்த்த போது, தமிழரசி "ஏய்... கலா... என்னால இப்போ நடக்க முடியாது. இங்கேயே குளிக்கலாம்" என்று சொல்லி விட்டு, தாமோதரனைப் பார்த்து "இவளுக்கும் நாகர் கோவிலுல ஒரு மாப்பிள்ளை பாருங்க" என்றாள்.

கலாவதி, அப்போதே கல்யாணமானதுபோல் நாணி, தமிழரசியை முன்னிலும் பலமாக இழுத்தாள். காரணத் தோடுதான். விஷயம் புரிந்துவிட்டது. நாலுபேர் பார்த்தால் என்ன நினைப்பார்கள்? பெரியப்பாவோட குடும்ப கவுரவம் லேசுப்பட்டதா?

தாமோதரன் எங்கேயோ எட்டிப் பார்த்தான். பிறகு "கலாவதி, மாலைப் பதனி நல்லா இருக்கும். அதோ ராமசுப்பு தாத்தா பனந்தோப்புல, ஒரு மரத்துல தொத்துறுர் பாரு, போய் வாங்கிட்டு வா... அப்படியே நொங்கும் கேளு..." என்ருன்.

"ஆமாம் கலா... பதனிக்கும், நொங்குங்கும் நல்ல பொருத்தம். டேஸ்டாய் இருக்கும்" என்ருள் தமிழரசி.

இருவருக்கும் தற்காலிகமாய் பிடிக்காமல் போன கலாவதி, வேண்டா வெறுப்பாகப் புறப்பட்டாள். திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே நடந்தாள். பாதி தூரத்தை அவள் கடந்தபோது, ஓங்கிய பனை ஒன்றில், மார்பில் தோல் கவசத்துடன் காலில் பனைநார் தளையோடு தவளை மாதிரி கிடந்த ராமசுப்பு தாத்தா, "இரும்பு அடிக்கிற இடத்துல ஈய்க்கு என்ன வேல? சீக்கிரமாய் வாபிள்ள" என்று சொன்னபடியே, "மன்மத லீலையை வென்ருர் உண்டோ?" என்று பாகவதரானுர்.

தனித்து விடப்பட்ட தாமோதரனும், தமிழரசியும், ஒருவரை ஒருவர் உன்னிப்பாய் பார்த்துக் கொண்டார்கள். ஒருவர் பார்வை இன்னொருவர் பார்வையில் முட்டும்போது, அவள் தலையை தாழ்த்திக் கொண்டாள். அவன் முகத்தைக் கோணலாக ஆக்கிக் கொண்டான். பிறகு, இருவருமே சேர்ந்தாற்போல் பேசப் போனுர்கள். அப்புறம் சிரித்துக் கொண்டார்கள். தமிழரசியே பேசட்டும் என்பதுபோல், தாமோதரன், தன் வாயில் ஆள் காட்டி விரலை வைத்துக் கொண்டான். தமிழரசியே முந்தினுள்.

"போலீஸ் வேலையில சேர்ந்த பிறகு, நீங்க ஊரையே மறந்துட்டிங்களாமே. எல்லோரையுமே மறந்துட்டிங்களாம்."

"நான் ஊரையும் மறக்கல, உறவையும் மறக்கல. இதை நிரூபிக்க, ஒரே ஒரு இன்ஸிடெண்ட் சொல்லுறேன்

கேளுங்க. நான் காலேஜை முடிச்சுட்டு, ஊர்ல சுத்துறேன். டிராமா போடுறேன். நீங்க அப்போதான் காலேஜ்ல போய் சேர்ந்துட்டு, விடுமுறையில ஊருக்கு வந்திருக்கீங்க... ஒரு நாள்...''

''நான் ஒண்ணும் ஒங்கள அப்போ தாமுன்னு கூப்பிடல.''

''அந்த சமாச்சாரம் அப்புறம். இப்போ சொல்றது வேற சமாச்சாரம். நான் எங்க வயலுல தமாஷாய் கமலே அடிக்கிறேன். நீங்க ஒங்க வயலுல பருத்திச் செடியோடு பசலிச் செடி மாதிரி நிற்கிறிங்க. நான் மாட்டுக்கு வச்சுருந்த சாட்டைக் கம்பை வச்சு, ஒங்களைப் பார்த்து ஆட்டுறேன். மொதல்ல லேசா, அப்புறம் பலமாய், அதுக்கப்புறம் வேகமாய். நீங்க வயல் கிணத்துல, குத்துக் காலுல சாய்ஞ்சு நிற்கிற ஒங்க அப்பாவைப் பார்த்து போறிங்க. அவருகிட்டே எதையோ பேசுறிங்க. அப்புறமாய் திரும்பி வாறிங்க. எனக்கு பயம் வந்துடுது. சாட்டைக் கம்பை தூர எறிஞ்சுட்டு கமலே அடிக்கிறேன். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு ஒங்களைப் பார்க்கேன். நீங்க கையில அகத்திக் கீரையை வச்சு, என்னைப் பார்த்து வேகமாய் ஆட்டி, பலமாய் ஆட்டி, அப்புறம் மெதுவாய்... ஏன் இப்படி முகம் மாறுது? இதை எதுக்குச் சொல்ல வந்தேன்னுல், ஒரு சின்ன நிகழ்ச்சியைக் கூட நான் மறக்கலன்னு காட்டுறதுக்குத்தான்.''

அவன் சொல்வதை சுவையோடும், நிலம் நோக்கிய நாணச் சுமையோடும் கேட்டுக் கொண்டிருந்த தமிழரசி, அவனை துடிதுடிக்கப் பார்க்கிருள்! அந்த நிகழ்ச்சி சின்ன நிகழ்ச்சியா? போலீஸ்காரருக்கு, அகநானூறும், புற நானூறும் தெரியுமோ? இது இவருக்கு வெறும் அகத்திக் கீரை. ஆனுல் எனக்கோ அகத்தை தீக்கீரையாக்கிய நிகழ்ச்சி. மன்மதன் போல் தீயில் சாம்பலாகி, மறுபிறவி எடுத்த மனவோட்டம். ஆனுல் இவருக்கு சின்ன நிகழ்ச்சியாம். யூனிபாரம் போட்டுட்டால் — அதுவும் காக்கி

யூனிபாரம் போட்டுட்டால் — எல்லாமே யூனிபாமமாய் ஆயிடுமோ? சீ!

அவனை மீண்டும் பார்க்காமல், அங்கிருந்து ஓட வேண்டும் என்று நினைத்தவளுக்கு, கால்கள் சத்யாக்கிரகம் சய்கின்றன. வாய் காட்டிக் கொடுக்கிறது.

"அப்படின்னு ஒங்களுக்கு அது சின்ன நிகழ்ச்சியா?"

"சின்ன நிகழ்ச்சின்னு சொன்னது சரிதான். அதாவது, நான் ஒருத்திமேல வச்சிருக்கிற அன்புக்கு அது சின்னம். தமிழம்மாவுக்கு இதுகூடத் தெரியலியா?"

தமிழரசியால், அவனை நேருக்கு நேராகப் பார்க்க முடியவில்லை. அவன் முன்நோக்கி நடப்பதைப் பார்த்து, அவள் பின்னோக்கி இரண்டடி நடக்கிறாள். மஞ்சள் வெயிலில், தன் நிழலை நெருங்கப் போகும் அந்த நிழலையே பார்க்கிறாள். "தமிழு, ஒன்னத்தான் தமிழு, நீ என்னை மறக்கலியே? சொல்லு தமிழு, ஒரே ஒரு வார்த்தை" என்ற குரல் அவளுக்குக் கேட்கிறது. ஆனாலும் அவளால் பேச முடியவில்லை. வாய்க்கு, உதடுகள் கதவாகின்றன. "எத்தனையோ வருஷத்தை வேஸ்ட் பண்ணுவது மாதிரி இப்பவும் நாம் வேஸ்டாயிடப்படாது. சொல்லு தமிழு. ஒரே ஒரு வார்த்தை; என் மேல் ஒனக்கு... சொல்ல மாட்டியா? அப்படின்னு என் கிட்ட ஒனக்கு 'அது' இல்லியா?" என்று குரல் சன்னமாகிறது.

தமிழரசி, தலையை மேலும் கீழும் ஆட்டுகிறாள். பிறகு 'இல்லியா' என்ற அவன் சந்தேகத்தை உறுதிப் படுத்துவதுபோல் ஆமாம் என்று ஆகிவிடக் கூடாது என்று அஞ்சி, தலையை பக்கவாட்டில் ஆட்டுகிறாள். திடீரென்று அவள் தலையாட்டம் தடைபடுகிறது. உள்ளங்கை ஒன்று, அவள் மோவாயை ஏந்திக் கொள்வதுபோல் தோன்று கிறது. கண்களை மூடிக்கொள்கிறாள். தாமரை மலர், தண்டோடு ஆகாயத்தில் தொங்குவது போன்ற காட்சி. பப்பாளிப்பழம் மேல் நோக்கித் தொங்குவது போன்ற

நேர்த்தி. ஐந்து தலை நாகம், மரகத மணியை சுமந்து நிற்பது போன்ற தோற்றம்.

தாமோதரன், தன் கையை அகற்றவில்லை. அவள், அதில் படர்ந்த முகத்தை எடுக்கவில்லை. கண்களைத் திறக்கவும் முடியவில்லை. தாமோதரன் குரல், அவள் காதில் உஷ்ணக்காற்றின் உராய்வோடு விழுகிறது.

"தமிழு, நான் ஒரு முட்டாள். நீ அஸிஸ்டெண்ட் புரபஸராகி இலக்கியக் கூட்டத்துல பேசி, பிரபல மாயிட்டே. ஒன்னோடே கூட்டத்துக்குக்கூட நான் 'டூட்டில' வரவேண்டியதிருக்கும். ஒன்னோடே வாழ்க்கை வட்டம் அகலமாயிட்டது. இந்த சாதாரண சப்-இன்ஸ்பெக்டரை மறந்திருப்பேன்னு நினெச்சன். ஆனால், நீ பேசு தமிழு .. பேசு."

'தமிழு' இன்னும் தன் முகத்தை மீட்டுக் கொள்ளாமலே பேசியது.

"வாழ்க்கை வட்டம் என்னதான் அகலமாய் போனாலும், அதுக்கு ஒரே ஒரு மையம்தானே உண்டு! நான்தான் முட்டாள். தாமு சப்-இன்ஸ்பெக்டராயிட்டான்... தப்பு, டார்... எவனாவது பெரிய பணக்காரன் என்னோடே தாமுவையும் அவன் வீட்டுக்கு ஒரு லட்சம் ரூபாயும் கொடுத்து, மருமகனாக்கி, தன்னோடே சொத்துக்களை காவல் காக்க வைப்பான்னு நினைச்சேன்."

"இப்போ?"

"இப்போவா? நீங்க என்னை விடுறிங்களாம்."

இருவரும் சிறிது விலகிக் கொண்டார்கள். பிறகு, ஒருவர் கையை ஒருவர் பற்றிக் கொண்டார்கள். முதன் முதலாக தனிமையில் சந்திக்கும் கூச்சம் இருந்தாலும், பயமற்றுப்போனார்கள். காதல் மின்சாரம் மாதிரி. ஒயரிங் முடிந்துதான் கனெக்ஷன் கொடுக்க வேண்டும். இவர்களைப் பொருத்த அளவில் இந்த ஒயரிங் எப்போதோ

முடிந்துவிட்டதால், இப்போ நடந்தது 'டச்சப்' கனெக்ஷன்தான்.

இருவரும் இப்போது சரளமாக, ஒருவரை ஒருவர் செல்லமாகத் தட்டியபடி பேசிக் கொண்டிருந்தார்கள். எப்போதோ நடந்து முடிந்த மின்சாரக்கம்பி இணைப்பில், அந்த இரண்டு 'கலர் பல்புகளும்' பிரகாசித்துப் பேசிக் கொண்டன.

அப்போது—

தாமோதரன் தங்கை பொன்மணி, தலைவிரிகோலமாக வந்துகொண்டிருந்தாள். இடுப்பிற்குள் புடவையோடு ஒளித்து வைத்திருந்த விஷப்பாட்டிலை அவ்வப்போது 'இருக்கிறதா' என்பதுபோல் கையால் தடவியபடியே, தன்னை இல்லாமல் ஆக்கப்போகிறவள்போல், அவர்களை நோக்கி ஓடிவந்தாள்.

# 4

பத்தாண்டு காலமாக, மனதுள் பதியமாலும், தனித்த சந்திப்பு என்ற இருவர் மட்டுமே "கிஸ்தி" கட்டக்கூடிய சொந்த இடத்தில் நடமுடியாமல், இப்போது 'மர'மாகும் நிலைக்குப் போயிருந்த காதல் செடிக்கு, தாமோதரனும், தமிழரசியும், 'முதிர்வு' என்ற களைகளைக் கொய்து, அந்த காதல் மரத்தைச் செடியாகச் செதுக்கிக் கொண்டிருந்தார்கள். அவன் காக்கிச் சட்டையை மறந்தான். அவள், பட்டி மன்றத்தைத் துறந்தாள்.

இந்தத் துறவில் பூத்த உருவத்திற்கு உருவகங்களாகி, எவ்வளவு பெரிய காலத்தை, வெல்லாமல் வெல்லப் பட்டிருக்கிறோம் என்ற உணர்வு உந்த, அவர்கள் ஒருவரை

ஒருவர் கண்முட்டப் பார்த்து, வாய் முட்டப் பேசிக்கொண் டிருந்தார்கள். கடத்திப்போன கடந்த பத்தாண்டு காலத் தையும், அந்த நிகழ்காலத்திலேயே நிகழ்த்திக் காட்டப் போகிறவர்கள்போல், ஒருவர் கண்களில் பிறிதொருவர் மட்டுமே நிறைந்திருந்ததால், இடைச்செருகலாக வந்த பொன்மணியை, அவர்கள் கவனிக்கவில்லை. மூச்சு முட்ட ஓடிவந்து நின்ற அவளோ, அங்கேயே, அந்தக் கணத் திலேயே, தனது எதிர்காலத்தைப் பற்றிய ஒரு முடிவை ஏற்படுத்திவிடத் துடித்து நின்ருள்.

பொன்மணி, தாமோதரனின் கடைசித் தங்கை. அவன் வீட்டில், அவள்தான் ‘கடைக்குட்டி’. கறுப்புக்கும், சிவப்புக்கும் இடைப்பட்ட மாநிறம். அதே சமயம் மங்காத நிறம். குற்ருல நீரை உள்வாங்கி உள்வாங்கி, நீர் பொங்க பளபளத்து நிற்கும் பாறைபோன்ற உறுதியான முகம். வேல்போல் குவிந்த புருவ மத்தி. வெண் பொங்கலும், அரை குறையாய் அதில் கரைந்த கருப்பட்டி யும், பானையில் இருந்து பொங்குவது போன்ற கண்கள். ஈரப்பசையான உதடுகள். ஏதோ ஓட்டப் பந்தயத்தில், ஓடுவதற்குத் தயாராக இருப்பவள் போல் உள்நோக்கி லேசாய் குவிந்த உடம்பு. பத்தொன்பது வயதுக்கேற்ற பார்வை வீச்சு.

‘பிளஸ்டு’வில் மைனஸ்ஸாகப் போனதால், தாளுகவே படிப்பை முடித்துக் கொண்டவள். எவர் சொன்னுலும், முடிவை மாற்றிக் கொள்ளாதவள் என்பதை அறிந்திருந்த குடும்பத்தினர், அவளை ‘பள்ளிக்குப்போ’ என்றும் சொல்ல வில்லை. ‘வயலுக்கு வா’ என்றும் கேட்கவில்லை.

தாமோதரனும், தமிழரசியும் பேச்சுவாக்கில், எதேச்சையாகத் திரும்புவது வரைக்கும் காத்திருக்க விரும்பாத பொன்மணி, அவர்களின் கவனத்தைக் கவரும் வகையில் இருமிஞள். அதனுல் திருப்பப்பட்ட தாமோ தரன், தங்கை மிகப் பெரிய தப்பைச் செய்துவிட்டவள்

போல், அவளைச் சுட்டெரிக்கப் பார்த்தான். பின்னர் தனது 'தப்பை' மறைக்கும் வகையில், சிறிது விலகி உட்கார்ந்தான். பேச்சை நிறுத்தினான்.

அவன் பேசுவதையே கேட்டுக் கொண்டிருந்த தமிழரசி, அவன் பேச்சற்றதும், அற்றவனைப் பார்த்து, அவன் கண்கள் குவிந்த இடத்தில், பொன்மணியைக் கண்டாள். லேசாக நாணப்பட்டாள். பிறகு அதை மறைக்கும் வகையிலோ அல்லது இப்போதுதான் கூடி வரும் காதலை, நாணத்தில் கரைக்க விரும்பாததாலோ, பொன்மணியைத் தைரியமாகப் பார்த்தாள். நன்றியோடு பார்த்தாள். இவள்தானே, 'எங்க தாமோதரன் அண்ணனுக்கு தமிழரசி அண்ணியை வாங்குறதுக்காக ஒங்களுக்கு 'எங்கக்காவை' கொடுக்கோம்' என்று தன் தமையன் ராஜதுரையிடம் சொன்னவள்! இவள் அப்படிச் சொல்லவில்லையானால், ஒருவேளை நானே இங்கு வந்திருக்க மாட்டேன். அதனால், ஒருவேளை இவரை... வேண்டாம்... நினைக்கவே பயமாய் இருக்கு.

ஒட்டியும் ஒட்டாமலும் விலகி நின்ற பொன்மணியின் கையைப் பிடித்திழுத்து, அவளை உட்காரும்படி பலவந்தப் படுத்தியபடியே "வாம்மா கல்யாணப் பொண்ணு, ஏன் இப்படி வெட்கப்படுறே?" என்றாள். பொன் மணியோ, தமிழரசியிடம் இருந்து திமிறி விடுபட்டு, அருகே நின்ற தென்னைமரம் பக்கமாகப் போய் நின்று, முந்தானையை கண்களுக்கு மேல் கொண்டுபோனாள். இடுப்பில் இருந்த விஷப்பாட்டிலை தடவியபடியே, அவர்களுக்குப் புறமுதுகு காட்டி நின்ற பொன்மணி, தனது மனநிலையை எப்படி விளக்குவது என்று புரியாமல் தவித்தாள். அது என்னமோ, அண்ணனிடம் நேருக்கு நேராய் பேசியறியாதவள்; பேசித் தீர்த்து விடவேண்டும் என்று வந்தவளால, பேச முடியவில்லை. எப்படி விஷயத்தை விவகாரமாக்குவது என்று தெரியாமல், தவித்தபடி நின்றாள்.

இதற்குள், தமிழரசியின் சித்தப்பா 'பைத்தியாரத் தர்மரின்' மகள் கலாவதி, இடது கையில் ஒரு கலசத்துடனும், வலது கையில் பனைஓலை குருத்தோடும் வந்து விட்டாள். குருத்து ஓலைகளை பட்டையாக உருவாக்கி, ஒன்றை தமிழரசியிடமும், இன்னொன்றை தாமோதரனிடமும் கொடுத்து விட்டு "பயினிக்குள்ள நொங்க வெட்டிப் போட்டாச்சு" என்று சொன்னபடியே, கலசத்தைத் தூக்கி, லேசாகக் கவிழ்த்து, பட்டையில் பதனீரைக் கொட்டினாள்.

உடனே "பொன்மணிக்கும் ஒரு பட்டை பிடி!" என்று தமிழரசி, கலாவதியிடம் சொல்லி விட்டு, "பொன்மணி! பொன்மணி! ஒன்னைத்தான்" என்று கூப்பிட்டாள். அப்போதுதான் அவளைப் பார்த்த கலாவதி "இன்னைக்கு இவளுக்கு என்ன வந்துட்டுது. புதுப் பொண்ணு மாதிரி ஏன் 'பவுசு' காட்டுறாள். ஏய் பொண்ணு, வந்து பயினிய ஒரு கை பாருடி" என்றாள்.

பொன்மணியையே பார்த்த தமிழரசி, பின்னர் கலாவதியிடம் "ஒனக்கு விஷயம் தெரியாதா? அவளுக்கு நாகர்கோவிலுல இவரு மாப்பிள்ளை பார்த்துட்டாராம். இனிமேல பொன்மணி, அங்கே போகவேண்டியதுதான் பாக்கியாம். அதனால, இப்போ அவள் மாப்பிள்ள ஊர் திசையைப் பார்த்து நிற்கிறாள். அம்மாவுக்கு வெட்கம் வந்துட்டு. ஏய் பொன்மணி, வாடியம்மா. ஒங்க அக்காவுக்குக் கல்யாணம் நடக்குற நாள்லயே, ஒனக்கும் நடக்குமாம். கவலைப்படாதே. காத்திருக்க வேண்டியதில்ல" என்றாள்.

பொன்மணி, அவர்களைப் பார்த்துத் திரும்பப்போனாள். முடியவில்லை. நிச்சயம் கண்கள் நீரில் மிதக்கும். இப்பவே சொல்லிடலாமா? அண்ணனை அவமானப் படுத்துறது மாதிரி...இங்கேயே எப்டி சொல்றது? என்ன செய்யலாம்? தமிழரசி அண்ணிகிட்ட சொல்லி, அவங்கள அண்ணனகிட்ட

சொல்லச் சொல்லலாம். ஒன்னும் முடியாமல் போனல் இருக்கவே இருக்காரு 'அவரு ..'. அவர் இல்லன்னு விஷம். நான் காதலுக்குப் பயப்படுறதுனுல, உயிருக்குப் பயப் படாதவள்.

பொன்மணியின் கலக்கம் புரியாத கலாவதி, தனக் குள்ளேயே அப்போதுதான் ஒரு தாற்காலிகக் கற்பனையை சிருஷ்டித்துக் கொண்டிருந்தாள். எனக்கு எப்போ... யாரு...எங்கே... நமக்குன்னு ஒருவன் இனிமேல் பிறக்கவா போருன்? வரப்போறவன் அப்பாமாதிரி பைத்தியாரத் தர்மராயும் இருக்கப்படாது. வினைதீர்த்தான் அண்ணுச்சிய மாதிரி முரட்டு வீமனுயும் இருக்கப்படாது. அருச்சுனன் மாதிரி... சீ... அவன் மாதிரியும் கூடாது. ஆற்று மணல எண்ணினுலும் எண்ணிடலாமாம். அருச்சுனன் பொண் டாட்டியள எண்ண முடியாதாம். இப்பவே ஏன் நினைக் கணும்? எவனே ஒருவன் வரும்போது பார்த்துக்கிட்டா போச்சு. நல்ல மாப்பிள்ள கிடைக்க நமக்கு என்ன நகைநட்டு இருக்கா? சொத்து சுகம் உண்டா...?

கற்பனையை, நடைமுறை வாழ்க்கை நினைப்பு குலைக்க, கலாவதி எழுந்தாள். பிற பெண்களைப்போல், பொன் மணியைப் பொருமையாய் பார்க்காமல், சினிமா கதா நாயகியிடம் தன்னை ஐக்கியப் படுத்திக் கொள்ளும் ரசிகை போல, அவள், தன்னை பொன்மணியுடன் ஐக்கியப்படுத்திக் கொண்டாள். மெள்ள நடந்தாள். தான் நடப்பது பொன்மணிக்குத் தெரியாமல் இருப்பதற்காக, கைகளைப் பரவலாகத் தூக்கி, குதிகாலில் நடந்து, பொன்மணியைப் பின்புறமாகப் போய் பிடித்தாள். பிடிபட்டுத் திமிறியவளை அலாக்காகத் தூக்கிக் கொண்டுவந்து தமிழரசியின் அருகே போட்டுவிட்டு, "பரவாயில்லியே! அக்காளுக்கும், தங்கைக்கும் ஒரே நாள்ல கல்யாணமா? ஒரு பந்தயம். இரண்டு பேர்ல, யாரு மொதல்ல பிள்ள பெறப்போருங் கன்னு பார்ப்போம்" என்று சொல்லிச் சிரித்தாள்.

உடனே தாமோதரன் "அது... ஒங்க அண்ணன் ராஜ துரையோட சாமர்த்தியத்தையும், நாகர்கோவில்காரர் திறமையையும் பொறுத்திருக்கு..." என்று சொல்லிவிட்டு, பிறகு, தங்கையின் முன்னால் பேசத்தகாத-இதுவரை பேசி யறியாத வார்த்தையைப் பேசிவிட்ட குற்றவுணர்வில், தமிழரசியையும், கலாவதியையும் மாறிமாறிப் பார்த் தான். அவர்களோ, சொல்லிவைத்தாற்போல், கண்களை கைகளால் மூடிக்கொண்டார்கள்.

இந்தச் சாக்கில், பொன்மணி, தானும் நாணப்படுவது போல், முகந்திருப்பி, கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். தமிழரசி, எப்போது தனியாக விடுபடு வாள் என்று அவள் விநாடிகளை நிமிடங்களாக, நிமிடங்களை மணிகளாகப் பாவித்துக் கொண்டிருந்தாள். பிறகு இருக்க முடியாமல் எழுந்தாள். நடக்க முடியாமல் மீண்டும் உட்கார்ந்தாள். கைகளை நொடித்தாள். கால்களை தரையில் தேய்த்தாள்.

இதற்குள், வேறொரு கிணற்றுப் பக்கத்திலிருந்து, அவர்களிடம் வந்துசேர்ந்த வினைதீர்த்தான், அவர்களைக் 'கண்டுக்காமலே' தென்னை மரங்களை அண்ணாந்து பார்த்த படியே நின்றான். தாமோதரன், அவனையே விழுங்கப் போவதுபோல் நோக்கினான். வேலூரில் போலீஸ் பயிற்சி பெற்ற தன்னைவிட, அவன் உடம்பு கனகச்சிதமாய் இருப் பதை ரசித்துப் பார்த்தான். குத்திட்ட மீசை. குதிக்கும் கண்கள். விரிந்த தோள். தூக்கலான பார்வை. 'ப' வடிவத்தில் அமைந்த வயிற்றை, ஆங்கில 'ஒய்' எழுத்தின் வடிவத்தில் சுமக்கும் இடுப்பு. இவன், சாட்டைக்கம்பு வைத்திருக்கும் வேலையில் இருக்கக் கூடாது. கையில் லத்திக்கம்பு இருக்கவேண்டும்.

சிறிதுநேர பார்வைக்குப் பிறகு, தாமோதரன், தமிழரசியைப் பார்த்து "ஒங்க வினைதீர்த்தானை... போலீஸ் கான்ஸ்டபிள் வேலையில் சேர்த்துடலாமுன்னு நினைக்கேன்.

இன்னும் வயசு இருபத்தைந்தை தாண்டியிருக்காது. சரிதானு?'' என்ருன். தான், அவளைப் பார்க்கும் விதத்தை சரிதாஞ என்று வினவுகிருஞ அல்லது பேசியதை சரிபார்க்கிருஞ என்ற இன்பப் புதிர் புரியாமல் தடுமாறிய தமிழரசி, இறுதியில் சிரிப்பு சிந்த பதிலளித்தாள்.

''நீங்கவேற... இவன் முன் கோபத்துக்கு, இவனை போலீஸ்ல சேர்த்திங்கன்னு, அப்புறம் ஒங்களையே அரெஸ்ட் செய்யப் பார்ப்பான்.''

அவர்களின் விமர்சனத்தை காதில் வாங்காமலே, அண்ணுந்த பார்வையை தாழ்த்தாமல், வினைதீர்த்தான், ''ஏ... தேவடியா மவன்.. என்னையே ஏமாத்திட்டான் பாருங்க...'' என்ருன்.

பிறகு அவர்களை ஒட்டு மொத்தமாக நோக்கி ''அந்தத் தென்னையில, நாலு குலை தேங்காய் இருந்துது. முந்தா நாள் தான் முள்ள வச்சுக் கட்டுனேன். எவனே ஒரு பயல் மரத்துல ஏறி, தேங்காய பறிச்சதோட, முள்ளையும் விறகுக்கு எடுத்துக்கிட்டுப் போயிட்டான்...'' என்ருன்.

தாமோதரன், அவனை கிண்டலாகச் சாடினுன்.

''மாப்பிள்ளை வெறும் பிள்ளைதான் போலுக்கு. தேங்காயையே காப்பாத்தத் தெரியாதவரு, பொண்டாட்டியை எப்படிக் காப்பாத்தப்.போருரோ?''

உடனே தமிழரசி இடைமறித்தாள்.

''ஒங்களால முடியுமோ என்னவோ? இவஞல முடியும். அப்புறம் போலீஸ் சார், தேங்காய் பறிக்கிறவனை, எந்த சட்டத்துல சார்ஜ் பண்ணுவீங்க? இருக்கிற தேங்காய்களுக்கு, நீங்க இங்க இருக்கிறவரைக்கும் பாரா போடுங்களேன். கரெக்டா சாயங்காலம் ஆறுமணிக்கு வந்துடுங்க... ஏன்னு, யாரும் பார்க்க மாட்டாங்கன்னு அப்போதான் திருடன் வருவான்'' என்ருள்.

தாமோதரன், அவள் சொல்வதைப் புரிந்து கொண்டான். ஆக நாளைக்கு மாலை ஆறு மணிக்கு இங்கேயே சந்திப்பு. 'ஒங்களாலதான் முடியாதுன்னு' சொல்லும் போது எப்படி கன்னத்தைக் குவித்து, கண் வீசுருள்.

அவளிடம் "திருடனு, திருடியா" என்ருன்

தமிழரசி கலாவதியை கண்களால் சுட்டிக் காட்டி அவனை எச்சரிக்கைப்படுத்திஞள்.

கலாவதி, அவர்கள் 'கண்ணடி' தாங்காமல் தர்ம சங்கடமாகத் தவித்தபோது பொன்மணி, புற முதுகைக் காட்டியபடி, எங்கேயோ நோக்கியபோது 'தொப்பு...தொப்பென்று' சத்தம் கேட்டது. பொன் மணி தவிர, எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். வினை தீர்த்தான், ஒரு தென்னை மரத்தின் உச்சியைப் பிடித்து உசுப்பிக் கொண்டிருக்கிருன். கலாவதி, தேங்காய்களை எடுப்பதற்காக எழப்போனுள். அதற்குள் பொன்மணி அங்கே ஓடினுள்.

தென்னை மரத்திலிருந்து கம்பீரமாக இறங்கிக் கொண்டிருந்த வினைதீர்த்தானைப் பார்த்தபடியே "வினை தீர்த்தான் மாப்பிள்ளை மட்டும் எங்க வீட்ல வேலைக்குச் சேரலன்னு, விவசாயமே பார்க்க முடியாதுன்னு அப்பா அடிச்சுச் சொல்ருர்" என்ருன் தாமோதரன்.

வினைதீர்த்தானும், பொன்மணியும், தேங்காய் களோடு, ஏதோ பேசியபடியே வந்தார்கள். வந்ததும் வராததுமாய், தேங்காய்களை கும்பமாகச் செதுக்கி, ஒன்றை தாமோதரனிடம் நீட்டியபடியே "சாப்பிடுங்க அத்தான்...ஊருக்கு வந்தால்தானே ஒமக்கு இளநீர் கிடைக்கும்" என்ருன். தமிழரசி தலையிட்டாள்.

"இந்த போலீஸ் சாருக்கா கிடைக்காது? நாகர் கோவிலுல தேங்காய்க்குப் பஞ்சமில்ல. எவனுவது கேட்டு கொடுக்காட்டால், அவன்மேல ஒருசெக்ஷனை ஏவி விட்டுட

மாட்டாரா? பணக்காரன் வீட்ல அல்சேஷன் நாய் மாதிரி, போலீஸ் கையில சட்டம்; இல்லியா சப்-இன்ஸ்பெக்டர் சார்?''

சப்-இன்ஸ்பெக்டர் டக்கென்று பதில் சொன்னார்:

''இப்படியும் சொல்லலாம்... வாத்தியாருங்க கையில பரீட்சை பேப்பர் சிக்கிக்கிறது மாதிரி...சட்டம் எங்க கையில். நானே... பரீட்சை மார்க் மோசடி விஷயமாய் ஒரு கேஸ் புக் பண்ணியிருக்கேன்...''

இளநீரை முடித்துவிட்டு, எல்லோரும் எழுந்தார்கள். ஊர் முனைவரைக்கும் ஒன்றாக நடந்தவர்கள் இரண்டாகப் பிரிந்தார்கள். வடக்கு நோக்கி, எள்ளுத் தோட்டத்துக் குள்ளே நெகிடெத்துச் சென்ற ஒற்றையடிப் பாதையில் தாமோதரனும், கையில் ஒரு கட்டு அகத்திக்கீரையுடன் வினைதீர்த்தானும் ஒன்றாக நடந்தார்கள்.

பொன்மணி அவர்களோடு போகாமல், தமிழரசியுடன் நடந்தாள். தமிழ், வீட்டுக்குப் போகாமல் தன்னோடு வரும் அவளை, ஆச்சரியத்தோடு பார்த்தாள். பொன்மணியின் துயரம், மகிழ்ச்சியாக இருந்த தமிழரசிக்குத் தெரியவில்லை. இதற்குள் கலாவதி, இடையில் பிய்த்துக்கொண்டாள். மாட்டுக்குப் புல் வெட்டிக்கொண்டு வரவேண்டுமாம்! போகும்போது தமிழரசியைப் பார்த்து, ''எக்கா, ஆறு மணிக்கு மேல அந்தக் கிணத்துப்பக்கம் பாம்பு நடமாட்டம் அதிகம்...'' என்று சொல்லி, பிறகு அவளே வெட்கப்பட்டு ஓடிவிட்டாள்.

கலாவதி தூண்டிவிட்ட உள்ளத்து சுடர்விளக்கின் ஒளியுள் ஒளிந்து, நடப்பது தெரியாமலே நடந்த தமிழரசியின் முன்னால் நின்று, வழிமறித்து, பொன்மணி தேம்பினாள். பிறகு உடைந்த குரலில் ஒப்பித்தாள்:

''அண்ணி... நீங்கதான் என்னைக் காப்பாத்தணும். எனக்கு...இந்த நாகர்கோவில் கல்யாணத்துல இஷ்ட

மில்ல. அது மட்டும் உறுதியானு, நான் இதோ இந்த விஷத்தைக் குடிச்சுட்டு ஒரேயடியாய் போயிடுவேன்...''

தமிழரசி திடுக்கிட்டு, அந்த விஷப்பாட்டிலே எடுத்து வீசப்போனுள். பிறகு, வேறு யாராவது அல்லது ஆடோ மாடோ பயன்படுத்தப்படாது என்று நினேத்து, காலால் தரையைத் தோண்டி, விஷத்தைக் கொட்டி மண்ணே மூடினுள். பொன்மணியை அதட்டலாகக் கேட்டாள்:

''பைத்தியக்காரி! இதுக்குப் போயா சாகப்போறே? ஒனக்கு அந்தக் கல்யாணம் பிடிக்கலன்னு, யாருக்கும் பிடிக்கப்படாது. நீ பொண்ணு .. ஆடு மாடல்ல ஒன் இஷ்டத்துக்கு விரோதமாய் எதுவும் நடக்காது. நான் பார்த்துக்கிறேன். நான் நிறுத்திக் காட்டுறேன். அதுசரி, ஏன் கல்யாணம் வேண்டாங்கற? யாரையும் காதலிக்கிறியா?''

பொன்மணி தயங்கினுள். 'அதை' தமிழரசியிடம் சொல்லலாமா என்று யோசித்தாள். பிறகு, ஒரு வேளே 'அதை' அண்ணி பைத்தியக்காரத்தனமான காதலாக நினேத்து, அதற்கு மாற்று மருந்தாக, அவளே தனக்கு நல்லது செய்வதாக நினேத்து, இந்த நாகர்கோவில் கல்யாணத்தை அவசரப்படுத்திவிடக் கூடாதே என்று அஞ்சினுள். படபடப்பான குரலில் ''அப்டில்லாம் இல்ல அண்ணி. நம்ம ஊர்ல நான் காதலிக்கிற அளவுக்கு யார் இருக்காங்க?'' என்ருள். அவளின் படபடப்புக் குரலே, தனக்குள் இருந்து இன்னும் முற்றிலும் விடுபடாத தமிழரசி, உறுதிக்குரலாக நினேத்து, அதை உண்மையாக எடுத்துக் கொண்டாள்.

வழிநெடுக குசலம் விசாரித்தவர்களுக்கு பதிலளித்த படியே, தமிழரசி வீட்டுக்குள் வந்தாள். அப்போதுதான். தான் கிணற்றுக்குப் போயும் குளிக்கவில்லே என்பது நினேவுக்கு வந்தது. இதை கலாவதியாவது...அவள் கிடக்

கட்டும், இந்த தாமுவாவது குளிக்கச் சொல்லியிருக்கலாம். போன வேலையை விட்டுட்டு...

தமிழரசியுடன் வந்த பொன்மணி, வீட்டுக்குள் தனது 'பெரியண்ணன்' முத்துலிங்கம் இருப்பதைப் பார்த்து விட்டு நழுவி விட்டாள். தமிழரசி, அவரிடம் குசலம் விசாரித்தாள்.

"சுகமா அத்தான்? என்ன இது, ரெண்டு பேர் போடுற வெத்திலையை நீங்க ஒரே ஆள் போடுறீங்க?"

கல்யாண மாப்பிள்ளை ராஜதுரையும், மற்றவர்களும் சிரித்தபோது, முத்துலிங்கம் சமாளித்தார்.

"ரெண்டு கல்யாணம் நடக்கப் போறதுனால, ரெண்டு பேர் வெத்திலய போடுறேன். எங்க பொன்மணிக்கும், நாகர்கோவில் மாப்பிள்ளை குதிருது. ஒரே பந்தலுல ரெண்டு கல்யாணத்தையும் வைக்கலாமான்னு யோசனை கேட்க வந்தேன். நீ வரட்டுன்னு ஒங்க அண்ணன் சொன்னாரு. என்ன சொல்றே?"

தமிழரசி நேரடியாகக் கேட்டாள்:

"பொன்மணிகிட்ட ஒரு வார்த்தை கேட்பீங்களா? வாழப்போறவள் அவள்... அவளுக்கு சம்மதமான்னு..."

முத்துலிங்கம், தமிழரசியை முடிக்கவிடாமல், அட்டகாசமாகப் பேசினார்:

"அதிகமா படிச்சால் புத்தி போயிடும் போலுக்கு... பெண்புத்தி பின்புத்தி என்கிறது மாதிரி பேசுறியே... பொன்மணியை சாகடிக்கவா போறோம்! அந்தக் கழுதைக் கிட்ட ஏன் கேட்கணும்? தூக்கி வைக்கிற பொதியை சுமக்க வேண்டியதுதான் அதனோட வேல?"

# 5

தாமோதரன் வீட்டில் ஊரே குடிபுகுந்திருந்தது. அவன் தங்கை விஜயாவையும், தமிழரசியின் அண்ணன் ராஜதுரையையும், ஒன்றுபடுத்துவதற்காகத் திரண்ட கூட்டம். அந்த ஊரின் வழக்கப்படியும், அவர்கள் ஜாதியின் மரபுப்படியும் தமிழரசியின் பங்காளிகள், அவள் வீட்டில் இருந்து ஊர்வலம் போல் புறப்பட்டு, இரவு எட்டு மணிக்கு தாமோதரன் வீட்டில் குவிந்தார்கள். தாமோதரன் குடும்பத்துப் பங்காளிகளும், அங்கே திரண்டு நிச்சயதாம்பூல வேலைகளைப் பங்காடிக் கொண்டிருந்தார்கள்.

இந்த இரு தரப்பாரும் குட்டாம்பட்டியில் மிகப் பெரிய குடும்பங்கள் என்பதால், ஊராரில் வசதியுள்ளவர்கள், முறைப்படி தங்களுக்கு சொல்லப்பட்டதோ இல்லையோ, ஏதோ ஒரு உறவு முறையைச் சொல்லிக் கொண்டு வந்துவிட்டார்கள். இன்ஸ்பெக்டர் வீடாயிற்றே! சும்மாவா? பொதுவாக நிச்சயதாம்பூல விழாவில், மாப்பிள்ளையும், மாப்பிள்ளை வீட்டுப் பெண்களும் கலந்து கொள்வதில்லை. ஆனால், தமிழரசி இந்த மரபை உடைத்து, தான் மட்டுமல்லாமல், தன்னோடு சித்தப்பா மகள் கலாவதியையும், இன்னும் சில 'சின்ன தாத்தா—பெரிய தாத்தா' பேத்திகளையும் இழுத்துக் கொண்டு, தாமோதரன் வீட்டுக்கு வந்துவிட்டாள். அதே சமயம், அந்த ஊரின் ஒருசில 'பெண் மரபுகளை' இன்னும் மதிப்பது போல், கூட்டத்தோடு கூட்டமாக உட்காராமல், 'மசோதா' நிலையில் இருக்கும் மணப்பெண் விஜயா இருந்த அறைக்குள், பங்காளிப் பெண்களோடு போய்விட்டாள். தாமோதரன் வெளியே உட்கார்ந்திருந்தான்.

மணப்பெண் அறைக்குள் மெள்ள மெள்ள நுழைந்த தமிழரசி, தாமோதரன் உருவம் கண்ணில் முழுமையாகப் படும் இடத்தை, புகைப்படக்காரர் காமிராவை அட்ஜெஸ்ட் செய்வது போல், நின்று, சென்று, கண்களை உயர்த்தி-தாழ்த்தி, கால்களை முன்னாலும் பின்னாலும் நகர்த்தி, மைய இடத்தைப் பிடிக்கும் போதெல்லாம், தாமோதரன், தன் பங்குக்கும் அட்ஜெஸ்ட் செய்ய நினைத்து, இருக்கையில் இருந்து அங்குமிங்குமாக தன்னைத் தானே நகர்த்திக் கொண்டான். போட்டோ 'பிடிக்க' வந்தவர்கள் அசைந்தால், புகைப்படக்காரருக்கு எப்படிக் கோபம் வருமோ, அப்படிப்பட்ட கோபம் தமிழரசிக்கும் வந்தது. எப்படியோ, அவள் கண்ணுக்கு இவனும், இவன் கண்ணுக்கு அவளும் கிடைத்து விட்டார்கள்.

மணப்பெண் நாணத்தால் முகம் கவிழ்ந்து, உடம்பைக் கோணியபடி காணப்பட்டாள். வெள்ளை ரோஜாவில், இரண்டு பெரிய விழிகளைப் போட்டது போன்ற முகக்காரி; பாக்குச் செடி போன்ற பளபளப்பு மேனிக்காரி. அப்போது மட்டும், அவள் கோ. . ரியிருந்த பாங்கை, நமது பத்திரிகைக் காரர்கள் பார்த்திருந்தால், அதையே தேவையான 'போஸாக' நினைத்து அட்டைப் படத்தில் போட அலை மோதியிருப்பார்கள். விஜயாவை, பெண்கள் கூட்டம் மொய்த்தது.

தமிழரசி தாம்பாளத்தோடு கொண்டு வந்திருந்த நிச்சய தாம்பூலப் புடவையை விஜயாவிடம் நீட்டினாள். விஜயா, அவளை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, மீண்டும் தலையை கீழே போட்டாள். கொடுத்த புடவையை வாங்காமல், உடுத்த புடவையின் முந்தானையை தூக்கி, கையோடு சேர்த்து முகத்தை மறைத்துக் கொண்டாள். உடனே தமிழரசி ''என்னடி நீ...நாம எட்டாவது வரைக்கும் கிளாஸ் மேட். அப்பவே நீ எங்க அண்ணனை கண் போட்டே. எத்தன தடவ என் கிட்டயே அவனைப் பத்திக்

கேட்டிருக்கே? இப்ப ஏன் அவன் எடுத்த சேலேன்னு நாணுறே? நல்ல நேரம் முடியறதுக்கு முன்னுல கட்டுப்பா...'' என்ருள்.

புதுமையாக 'ப்பா' போட்ட தமிழரசியை, எல்லாப் பெண்களும், ஆச்சரியமாகப் பார்த்தார்கள். விஜயாவோ, முகத்தை மூடிய கையை எடுக்கவில்லே. தமிழரசி அவளைத் தூக்க முயற்சி செய்து "எப்பாடி, என்ன கனம்'' என்று சொல்லி விட்டு, மூச்சு விட்டாள்.

கலாவதி, "சேலேய கட்டத்தான் சொல்லுதாவ... அவிழ்க்க சொல்லுதது மாதிரி...இப்டி வெட்கப்படுறியோ- அதுவும் இந்தக் காலத்துல? ஒரேயடியாய் வெட்கப் பட்டு, வெக்கம் முழுதையும் தீர்த்துட்டு. அப்புறம் புருஷன் முன்னுல 'ஒன்னும் இல்லாம' நிக்கப்படாது மயினி. கொஞ்சம் வெட்கத்தை வச்சுக்கணும். பேசாம சேலய கட்டு'' என்ருள். அப்போதும் விஜயா மசியவில்லே. இயல்பிலேயே தன்னடக்கமானவள். விஜயாவை எப்படி 'புதுச் சேலேக்குள்' கொண்டு வரலாம் என்று யோசித்த போது, ஒரு குரல் பெரிதாக அதட்டலோடு ஒலித்தது.

"இது என்ன தேசிங்கு ராசன் கல்யாணமா? மொகத்தை மூடுகிருள்...ஒருவேளே மாப்பிள்ளே பிடிக் கலேயோ என்னவோ...!''

எல்லோரும் குரல் வந்த திசையைப் பார்த்தார்கள்! முத்துமாரிப் பாட்டி! வாசல் படியில் தலேசாய்த்தபடி நின்ருள். எப்படி, யார் கூப்பிட்டு வந்தாள் என்று தெரிய வில்லே. எப்படியோ வந்து விட்டாள். பாட்டி போட்ட 'பழியை' கேட்டமாத்திரத்தில், விஜயா துள்ளி எழுந்தாள். நாணத்தை எங்கேயோ போட்டு விட்டு, பாட்டியை ஒரு மொறைப்பு மொறைத்தாள். தமிழரசியிடம் இருந்த புடவையை பலவந்தமாகப் பிடுங்கிஞள்.

முத்துமாரிப் பாட்டி வாய் குலுங்கச் சிரித்தபடியே "என்ன சொன்னால் ஒன்னை வழிக்குக் கொண்டுவர முடியு முன்னு எனக்கா தெரியாது" என்று சொல்லிவிட்டு, எல்லோரையும் பார்த்தாள். மங்கள காரியத்திற்காக, பாட்டி அமங்கலமாகப் பேசியதைப் புரியாதவர்கள்போல் பெண்கள், பாட்டியைப் பார்த்தார்கள்.

வெளியே, விசாலமான தளத்தில் கூடியிருந்தவர்கள், வாழை இலை மேல் வைக்கப்பட்ட கேசரியையும், வெண் பொங்கலையும் சுவைத்தபோது, தமிழரசியின் பங்காளி அண்ணன் ஒருவன் "ஒங்களுக்கெல்லாம் கேசரி போடணு முன்னு ஏன்வே ஆசை? அதை முன்னப்பின்ன சாப்பிட் டிருந்தால் போடலாம். இல்லன்னு பார்த்திருந்தாவது செய்யணும். ஒங்களுக்குத் தெரிஞ்சதைப் போடாம, தெரி யாததை ஏன்வே போடுறிய?" என்றான்.

உடனே பெண்வீட்டு பங்காளி ஒருவன் "ஒம்ம மாதிரி ஆட்கள் வாரது தெரியாது. இல்லன்னு புண்ணாக்கு போட்டிருப்போம்..." என்றான்.

தாமோதரன், தன் அருகே உட்கார்ந்திருந்த சித்தப்பா மகன் ஒருவன் காதில் எதையோ பேசினான். உடனே அவன் வாய் விரித்தான்.

"மாப்பிள்ளை வீட்டுக்காரங்க ... ரொம்பத்தான் துள்ளுங்க... துள்ளாதிங்க...நாங்களும் ஒங்க வீட்டுக்கு மாப்பிள்ளை வீட்டுக்காரர்களாய் வரத்தான் போறோம். அப்போ கவனிச்சுக்கிறோம்."

தாமோதரன் நடவடிக்கைகளை உளவு பார்த்துக் கொண்டிருந்த தமிழரசி, 'தாமுவை' நாணங் கலந்து பார்த்தாள். அவன், அக்கம் பக்கத்து ஆசாமிகளை முறைத்துவிட்டு, பிறகு அவளைப் பார்த்துச் சிரித்தான். மீண்டும் கூட்டத்தைக் கண்ணால் நோட்டம் விட்டபடியே, வலது கையைத் தலையில் சாய்த்தபடி, விரல்களை

நாகமாய் விரித்து, தமிழரசிக்குப் 'படம்' காட்டினான். தமிழரசி, லேசாகத் திடுக்கிட்டவள் போல் கண்களை நிமிர்த்தி, பிறகு அவன் கையாட்டிற்குக் கட்டுப்பட்டு, வலது கையை தற்செயலாகத் தூக்குவது போல், பாதி தூரம் கொண்டு போனபோது, ஒருகை, அவள் கையைப் பிடித்துக் கீழே போட்டது. பார்த்தால், முத்துமாரிப் பாட்டி!

பல் தெரியச் சிரித்தபடி "இங்கே வச்சு வேண்டாம் தங்கம். இவளுவ கண்ணுபட்டால் ஒன் காதலு போயிடும். பாட்டி எங்கேயும் வேண்டாங்கல. இங்கதான் வேண்டாங் கிறேன்" என்று ரகசியமாய் கிசுகிசுத்தாள்.

வெளியே, வினைதீர்த்தான் பந்தியை கவனித்துக் கொண்டிருந்தான். தண்ணீர் கொடுப்பது முதல், தட்டுக் களில் வாழைப் பழ வகையறுக்களைக் கொண்டு போடுவது வரை, எல்லாக் காரியங்களையும் அவனே செய்து கொண் டிருந்தான்.

உடனே ஒருவர் "ஏல! ஒனக்கு மூளை இருக்கா? இன்னைக்கி நீ மாப்பிள்ளை வீட்டுக்காரன். மாப்பிள்ளை யோட சொந்த சித்தப்பா மகன். மாப்பிள்ளை பவுசுல உட்காருல" என்றார். சாப்பாட்டுச் சமாச்சாரங்களை மேற் பார்த்துக் கொண்டிருந்த தாமோதரன் அண்ணன் முத்துலிங்கம் "சரியான லூசய்யா. எந்தச் சமயத்துல எது பேசணுமுன்னு ஒனக்குத் தெரியாது. சொல்லிக் கொடுத் தாலும் புரியாது" என்று செல்லமாகவும் காரமாகவும் பதிலளித்தார்.

ஒரு சில பெரியவர்கள் அவசரப்படுத்த, தாமோதரன் தந்தை தன் முன்னால், குத்து விளக்கிற்குக் கீழே வைக்கப் பட்டிருந்த தாம்பாளத் தட்டைத் தூக்கினார். தேங்காய், மஞ்சள் வகையறுக்களுடன்—எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு கட்டு நூறு ரூபாய் நோட்டுக்களோடு கொண்ட தாம்பாளத் தட்டை, தமிழரசியின் தந்தை அருணாசலத்

திடம் ஒப்படைத்தார். அப்போது மணப் பெண்ணின் அறையில் இருந்து வெளிப்பட்ட பெண்கள், குலவையிட்டார்கள். தாமோதரனையே அப்போதும் பார்த்துப் பருகிய தமிழரசி, தன் தந்தையுடன், தான் வாங்கிக் கொடுத்த எட்டு முழ வேட்டியைக் கட்டி, ஜரிகை நேரியலை மார்பில் சுழற்றி, கம்பீரமாக உட்கார்ந்திருந்த சித்தப்பா மாடக்கண்ணுவை பெருமிதமாகப் பார்த்தாள். இப்படிப் பல இடங்களுக்குத் தாவிய அவள் கண்கள், வழக்கம் போல் மீண்டும் தாமோதரன் மேல் குவிந்த போது, அவன், சித்தப்பா மகன் காதைக் கடித்தான். கடிக்கப்பட்டவன், கடித்துக் கொண்டிருந்த உதடுகளை விட்டான்.

''தமிழரசி அண்ணி, மெட்ராஸ்ல வரதட்சணைக் கொடுமையை எதிர்த்து மேடைபோட்டு பேசுறீங்களாம். இப்போ என்னடான்னால், நாங்க கொடுக்கிற பணத்தை ஒப்பா வாங்குறார். நீங்க பேசாம நிக்கிறீங்க. என்ன நாயம்?''

தமிழரசி விட்டுக் கொடுக்காமல் பேசினாள்:

''சில சமயம் வரதட்சணை என்கிறது, ஒரு பெண்ணுக்கு, பிறந்த வீட்ல இருக்கிற சொத்துக்குக் கொடுக்கிற நஷ்ட ஈடாக்கும்.''

''என்ன ஈடோ? ஒங்க அப்பா கிட்ட இருந்து இப்போ கொடுத்த ரூபாயை வட்டியும் முதலுமாய் வசூலிக்கத் தான் போறோம். இல்லியா தாமோதரன்?''

தமிழரசி, சின்னச் சின்ன சிரிப்புகளாய் சிரித்து, தாமுவைப் பார்த்து விட்டு, தன்னையும் பார்த்து விட்டு, கூட்டத்தைப் பார்த்தாள். கூட்டத்தின் பார்வை ஒட்டு மொத்தமாய் தன்மேல் படுவதை உணர்ந்து, மணப் பெண்ணின் அறைக்குள், மணப்பெண் போல் வெட்கப் பட்டு ஓடினாள்.

விஜயாவை அவள் நெருங்கியபோது, அந்த அறைக் குள் இருந்த இன்னொரு சின்ன அறைக்குள் இருந்து

"அண்ணி... அண்ணி" என்று சத்தம் கேட்டது. தமிழரசி உள்ளே போனாள். பொன்மணி, அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு கேவினாள். இதுவரை பொன்மணியின் நினைவே இல்லாமல் இருந்த தமிழரசிக்கு, அப்போதுதான் ஞாபகம் வந்தது. நேற்றே தாமோதரனை, மாலையில் தனியாகச் சந்தித்தபோது, பொன்மணிக்கு 'நாகர் கோவில் கல்யாணம்' பிடிக்கவில்லை என்பதைச் சொன்னாள்.

உடனே அவன் 'ஊர்ல காதல் எதுலயும் சிக்கி இருக்காளா' என்றான். 'அப்டில்லாம் கிடையாதுன்னு அவளே சொல்லிட்டாள்' என்று தமிழரசி பதிலளித்ததும், தாமோதரன், "கல்யாணம் ஆகிற சமயத்துல, எல்லாப் பெண்களுக்கும், ஆண்களுக்கும் ஒருமாதிரி பயம் வருமாம். இந்த பயத்தை பொன்மணி, கல்யாணத்துமேல ஏற்பட்ட வெறுப்பாய் நினைக்கிறாள். நீயும் அவள்கிட்ட எடுத்துச் சொல்லு. பக்குவமாய் பேசி அவளை ரெடிபண்ணு" என்றான். "இப்போ வந்திருக்கிற பையன், அவள் சுபாவத்துக்கு ஏற்ற மாப்பிள்ளை" என்றான்.

தமிழரசிக்கு, அவன் சொல்வது நியாயமாகவே தெரிந்தது. கலைந்த தலையோடு, குலைந்த குரலோடு விம்மிய பொன்மணியைப் பார்க்க அவளுக்கே பரிதாபமாக இருந்தது. ஆனாலும் அவளை உரிமையோடு சாடினாள்:

"என்ன பொன்மணி! பொண்ணாப் பிறந்தால் ஒருத்தனோட வாழ்ந்துதானே ஆகணும். மாப்பிள்ளை நல்ல பையனாம். நல்ல அழகனாம். வேணுமுன்னால் மாப்பிள்ளையை இங்கே வரவழைப்போம். அவனைப் பாரு. பிடிக்கலன்னா வேண்டாம். ஒருத்தனைப் பார்க்காமல் கழுத்தை நீட்டுறது தப்பு. அவனைப் பார்க்கும் முன்னால பிடிக்கலன்னு சொல்றதும் தப்பு. ஒங்க அண்ணா சொல்றது மாதிரி கல்யாணம் கூடுற சமயத்துல ஏற்படுற படபடப்பைப் பற்றிக் கவலப்படாதே. கல்யாணம் ஆகிட்டால் சரியாயிடும்."

பொன்மணி, தமிழரசியிடம் ஏதோ சொல்லப் போனுள். இதற்குள், தற்செயலாக அங்கே வந்த தாமோ தரன் அண்ணன் முத்துலிங்கம் "என்னம்மா ரகசியம்... எனக்கும் சொல்லப்படாதா?" என்று சிரித்தபடியே கேட்டார். சிறிதுநேரம், தமிழரசியிடம் எதை எதை யெல்லாமோ விசாரித்தபடி நின்ருர். இதற்குள் வெளியே நின்ற பெண்கள்கூட்டம் உள்ளே வந்து விட்டது. பொன் மணியால், தமிழரசியிடம் தன் விவகாரத்தை முறையிட முடியாமலே போயிற்று.

இரவில், தமிழரசி, தாமோதரனைப் பற்றிய போதை நினைப்போடும், இடையிடையே பொன்மணிக்கு இன்னும் எடுத்துச் சொல்ல வேண்டிய போதனை நினைப்புடனும் தூக்கத்தைத் தூங்க வைத்து விட்டு, தனியே புரண்டாள். மறுநாள் காலையிலேயே, அத்தை வீடு, அக்கா வீடு, மாமா வீடு என்று பல வீடுகளுக்கு, அழைப்பின் பேரில் சென்று விட்டாள். மத்தியானம் வீட்டிற்குத் திரும்பிய போது, பொன்மணி அவளுக்காக வெகுநேரம் காத் திருந்ததாக கலாவதி சொன்ளுள். எப்படியோ, பொன் மணியை அப்புறம் அவளால் பார்க்க முடியவில்லை.

மாலையில், கிணற்று மேட்டில் தாமோதரன் முன்ன தாகப் போய் காத்திருந்தான். கமலைக் கல்லில் உட்கார்ந் திருந்தவன், வேகமாக வந்து கொண்டிருந்த தமிழரசிக் காக, கைக்குட்டையை எடுத்து, அருகே கல் பகுதியைத் துடைத்தான். அந்தச் சமயத்தில் அங்கு வந்துவிட்ட தமிழரசி, எதிர்க்கல்லில் உட்கார்ந்து, அவனைப் பார்த்து "நல்லாத்தான் திட்டம் போடுறீங்க" என்று சொல்லி, தலையை ஆட்டினுள். பிறகு "நேற்று ஒங்க சித்தப்பா மகன் மூலம் எப்டில்லாம் கூத்து அடிச்சிட்டிங்க. குரங்கு... குட்டிக் குரங்கு... கைய வச்சு சூடுபார்க்குமாமே அது மாதிரி" என்ருள்.

"நான் குரங்காவே இருந்துட்டுப் போறேன். ஆனா இந்தக் குரங்கு கைல...இந்தப் பூமாலை எப்போ வரப்போவுதாம்? நம்மளால இனிமேல் நாகர்கோவிலுல தனியாய் இருக்க முடியாதும்மா. கல்யாணத்தை எப்போ வச்சுக்கலாம்?"

"எப்போ வேணுமுன்னாலும் வச்சுக்கலாம். ஆனால் நம்மளால மெட்ராஸ்ல இருந்து நாகர்கோவிலுக்கு வரமுடியாது."

"ஆல் ரைட். சீதை இருக்கும் இடந்தான் ராமனுக்கு அயோத்தி. நான் மெட்ராஸ்ல ஒன்னோட குடித்தனம் செய்யத் தயார். ஆனால் எங்க டிபார்ட்மென்ட்ல என்னை டிரான்ஸ்பர் பண்ண மாட்டாங்களே."

"ஒங்க டிரான்ஸ்பரை என் பொறுப்புல ஒப்படைச்சிடுங்க. ஒங்க டைரக்டர் ஜெனரல் மிஸ்டர் ராதா கிருஷ்ணனை டி.வி.யில் இன்டர்வியூ செய்திருக்கேன். இன்னொரு இன்ஸ்பெக்டர் ஜெனரல் மிஸ்டர் பொன்பரமகுரு, போலீஸ் கமிஷனர் ஸ்ரீபால் சார்-இவங்களோட பல இலக்கியக் கூட்டத்துல பேசியிருக்கேன். என் 'ஹப்பிக்கு' டிரான்ஸ்பர் வேணுமுன்னு நான் நியாயமா கேட்கிறதை நிறைவேற்றாமலா போயிடுவாங்க."

"அப்படின்னா ஒண்ணு செய்யேன். என் பேரு, புரமோஷன் பேனர்ல இருக்குதாம். ஒன் வாயால ஒரு வார்த்தை..."

"நோ சார், நோ. என் ஹஸ்பெண்ட் தாமோதரனுக்கு ஒரு சின்ன டிரான்ஸ்பர் கேட்கலாம். புரமோஷனைப் பற்றி மூச்சே விடமுடியாது. அப்படி இருக்கையில் ஆப்டர் ஆல் காதலன் தாமுவுக்கு எதையுமே கேட்க முடியாது! இப்போ நான் சொல்றதைக் கேளுங்கள். காலையில நமக்கு குட்டாம்பட்டியில் கல்யாணம். மறுநாள் மெட்ராஸ்ல ரிசப்ஷன். இதுக்குள்ள, நீங்க நாகர்கோவிலுல டூட்டிய

ஒப்படைச்சுட்டு, மறுநாள் காலையில மெட்ராஸ்ல டூட்டில சேர்ந்துட்டு, சாயங்காலம் ரிசப்ஷன்ல மாப்பிள்ளைக் கோலம் போடலாம். அதாவது இந்தப் பொண்ணு கழுத்துல தாலி விழுந்தவுடனே டிரான்ஸ்பர் ஜெட்வேகத் துல வருமுன்னு சொல்ல வந்தேன்.''

''நீ சொல்றதைப் பார்த்தால், கல்யாணம் ஆச்சுதா, முதலிரவு முடிஞ்சுதான்னு கிடையாது. அதுக்கு நாலைந்து நாளைக்குக் காத்திருக்கணும். உம்...''

''சீ... பேசுறதப் பாரு...''

''சரிதாம்மா... வெட்கப் பட்டதுபோதும். இருக்கதே கொஞ்சநேரம்... ஏதாவது பேசு ''

''ஒன்று சொல்ல மறந்துட்டேனே. பொன்மணி என் கையைப் பிடிச்சுட்டு நேற்றுக்கூட அழுதாள். அவளைப் பார்க்கவே பரிதாபமாய் இருக்கு. கல்யாணத்தை நிறுத் தாட்டாலும் தள்ளியாவது போடுங்களேன்.''

''நீ வேற... பெண்களோட மனம் ஆண்களுக்கும், ஆண்களோட மனம் பெண்களுக்குந்தான் தெரியும். இப்பவும் சொல்றேன். அந்தப் பைத்தியம் கல்யாணப் படபடப்பை, வேற விதமாய் நினைக்குது. கல்யாணம் ஆகட்டும் பாரு. வீட்டுப்படியை தாண்டுனாலும் தாண்டு வாள். ஆனால் நாகர்கோவிலை தாண்டவே மாட்டாள்.''

''ஆமா .. போன வருஷம் 'உம்'முன்னு இருந்தீங் களாம். ஆனால் இந்த வருஷம் வெளுத்துக் கட்டுறீங்களாம். ஊர்ல இதுதான் இப்போ பேச்சு...!''

''நான் பேசுறேன் என்கிறதைவிட நீ பேச வச்சுட்டே...!''

''நான் ஒங்களை வச்சேனே இல்லியோ, மெட்ராஸ் மேடையில... பெண்கள் விடுதலையைப்பற்றி முழக்கம் செய்யுற நான்கூட.... நீங்க என்னை அடிக்கிறவராய்

இருந்தால் கூட, வாழ்ந்தால் ஒங்களோடதான் வாழணு முன்னு நினைக்க வச்சு, என்னை அடிமையாய் மாற்றிட் டீங்களே... பெரிய ஆளுய்யா நீங்க...''

''அடிமை கிடிமைன்னு ஏன் அபத்தமாய் பேசுறே?''

''காதலே ஒரு அபத்தந்தானே. இல்லன்னு பத்து வருஷம் பாராமுகமாய் இருந்த என்னால, இப்போ பத்து நிமிஷங்கூட பிரிய மனம் வரலியே...''

இருவரும் பேச்சை நிறுத்திவிட்டு, ஒருவரை ஒருவர் மவுனமான அழுத்தத்துடன், பாசம் பரிணமப்பட்டது போல் பார்த்துக் கொண்டார்கள். தாமோதரன், அவள் கையைப் பிடித்து வளையல்களை உருட்டினான். எவராவது பார்க்கிறார்களா என்பதைப் பார்ப்பதற்காக அக்கம் பக்கம் கண்போட்ட தமிழரசி, தாமோதரனைத் தள்ளி விட்டு விட்டு, 'ஸ்டெடியாக' உட்கார்ந்தாள்.

அப்போது தாமோதரனின் அண்ணன் முத்துலிங்கம், வேர்க்க விறுவிறுக்க ஓடி வந்தார். அவர்களது தனித்த நிலையைப் பொருட்படுத்தாமல் தாவி வந்தார்; கோர்வை இல்லாமல் கத்தினார்.

''நம்ம பொன்மணியை வேலக்காரப் பயல் வினை தீர்த்தான் கூட்டிக்கிட்டு ஓடிட்டான். தென்காசியில அவங்களப் பார்த்ததா மண்டையன் சொல்லிட்டுப் போறான். நான் நாலாகரையும் கத்தி கம்போட ஆட்களை அனுப்பியிருக்கேன். அடுத்துக் கெடுத்த அந்த செறுக்கி மவன, இன்னைக்கு ராத்திரிக்குள்ள கொன்னு... குழி தோண்டிப் புதைக்காட்டால் நீ இன்ஸ்பெக்டரும் இல்ல; நான் இன்ஸ்பெக்டர் அண்ணனும் இல்ல. உம்... புறப் படுடா, துப்பாக்கி வச்சிருக்கியா?''

தமிழரசி திடுக்கிட்டாள். முத்துலிங்கத்தை உற்றுப் பார்த்தாள். கண்களில் கொலை வெறி; பற்களில் நரமாமிச வேகம்; போக வேண்டாம் என்று சொல்லாமல் சொல்வது

போல், தாமோதரன் கையைப் பிடித்துக் கொண்டாள். அதே சமயம் ஏதோ ஒரு விபரீதம் விபத்தாக வரப் போவதையும் புரிந்து கொண்டாள்.

# 6

தமிழரசியால், தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. சித்தப்பா மகன் வினைதீர்த்தானை, தன் சொந்த அண்ணன் ராஜதுரையைவிட ஒருபடி அதிகமாகவே நினைத்திருந்தாள். சின்ன வயதிலிருந்தே இரட்டைக் குழந்தைகள் போல் பழகியவர்கள். அப்படிப் பட்டவன், தன்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல், வாழ்க்கையைப் பற்றி இன்னும் முழுமையாகத் தெரியாத ஒரு அப்பாவிப் பெண்ணைக் கூட்டிக்கொண்டு ஓடிவிட்டான் என்பதை நினைக்கவே அவளுக்கு அருவருப்பாக இருந்தது. அவளுக்கும், அவன் செய்தது அசல் துரோகமாகவே தெரிந்தது. முத்துமாரிப்பாட்டி அன்று பொன்மணியை, கன்னத்தில் 'கன்னம்' போடுபவள் என்று வர்ணித்ததும், வினைதீர்த்தான் தேங்காய் பறிக்கும் போது, பொன்மணி அவசரமாக ஓடியதன் அர்த்தமும், இப்போதுதான் அவளுக்குப் புரிந்தது. இருவரும் தேங்காயை சிதறடிப்பது போல், குடும்ப மானத்தையே சிதறடித்து விட்டார்கள்!

முத்துலிங்கமும், தாமோதரனும் முன்னால் ஜோடியாக நடக்க, தமிழரசி அவர்கள் பின்னால் நடந்தாள். மௌனம் பேயாட்சியாகியது. சிறிது நேரத்திற்குப் பிறகு, முத்துலிங்கம் ''எட்டி நடப்பா. இன்னைக்கு ராத்திரிக்குள்ள அவனைப் பிடிக்காட்டால் அப்புறம் ஆள் அகப்படுறது சிரமம். மொதல்ல போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகலாம் அவங்க உதவியில்லாமப் பிடிக்க முடியாது பாரு'' என்றார்.

தமிழரசி, முத்துலிங்கத்தையே உற்றுப் பார்த்தாள். தாமோதரனைவிட வளர்த்தி. எல்லோரையும் மேலே இருந்து கீழ்நோக்கிப் பார்க்கும் கண்கள். லேசாக நீண்ட கழுத்து. நடக்கும்போது கழுகு பறப்பதைப் போல். கழுத்தை நீட்டும் தோரணை. நாற்பத்தைந்து வயதிலும், வயதை வரைப்படுத்தியது போன்ற உடம்பு.

மூவரும், தத்தம் மனவெளிக்குள் அலைமோதி, புளியந் தோப்பைக் கடந்து, எல்லையம்மன் கோவிலுக்கருகே வந்த போது, முத்துலிங்கம் அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனது மோட்டார் பைக்கை 'ஸ்டார்ட்' செய்யப் போனார்.

பைக்கின் பக்கவாட்டில் இருந்த 'லெதர் பேக்கை' திறந்தார். வெட்டரிவாள் ஒன்று கண்ணாடி மாதிரி பளபளத்தது. இதற்குள், சற்று தொலைவில், கானப் பயிர் தோட்டத்தில் நின்ற ஒருவர் "டேய் முத்து! ஒரே ஒரு நிமிஷம் வந்துட்டுப் போ. வினைதீர்த்தான் ரூட்ட நான் சொல்றேன். இன்னைக்கே பிடிச்சிடலாம்" என்றார். உடனே, அப்படிச் சொன்னவரையே வினைதீர்த்தானாக நினைத்துப் பிடிக்கப் போகிறவர்போல், முத்துலிங்கம் ஓடினார்.

தமிழரசி தாமோதரனைப் பார்த்தாள். அவன் கண்களோ ஆகாயத்தைத் துழாவின. கைகள் மோவாயைப் பிசைந்தன. சற்று முன்புவரை, அவளே ரசித்துப் பார்த்த அதே அந்த நிலாக் கண்கள், இப்போது அக்கினிக் குழம் பாய் திரண்டு நின்றன. அவன் கோபத்தை வெளியே வார்த்தைகளாக்காமல், தன்னுள்ளேயே பாய்ச்சிக் கொண்டிருப்பது புரிந்தது. தமிழரசி, அவன் தோளைப் பிடித்துக் குலுக்கி "ஒங்களத்தான்... ஏன் இப்டி பார்க்கீங்க? ஒங்களத்தான்...ஒங்களத்தான்" என்றாள்.

அவனோ, அவளை குழந்தை போலவும், குழந்தையைப் போலவும் பார்த்தான். அவன் பார்த்த அவலப் பார்வை

யில், அவளுக்கு அழுகை வரும்போலிருந்தது. எப்படியோ சமாளித்துக் கொண்டு "என்ன செய்யலாம்?" என்றாள்.

தாமோதரன், அவளைப் பார்க்காமலேயே பதிலளித்தான்:

"என்னால நெஞ்சு வலியத் தாங்கிக்க முடியும். ஆனால் முதுகு வலியைத் தாங்க முடியாது. நான் பொன்மணியைப் பற்றி எவ்வளவோ கனவு கண்டேன். அந்தக் கனவை வினைதீர்த்தான் கலைச்சிருந்தால்கூட பரவாயில்ல; முடிவையே மாற்றிட்டான். ஒன் சித்தப்பா மகன், கூட இருந்தே குழிபறிச்சுட்டான். எங்க குடும்பம் முழுவதையும் அதில் தள்ளி மூடிட்டான்."

தமிழரசிக்கு 'சுரீர்' என்றது. அவன் சித்தப்பா மகனா? இப்படிப்பட்ட ஒருவனை சித்தப்பா மகன் என்று சொல்லலாமா? ஆமாம். சித்தப்பா மகன்தான். இல்லையானால், முத்துலிங்கம் அவனை வெட்டிப்போட வேண்டும் என்று சொல்லும்போது, இந்தப் பாழும் மனம் ஏன் படபடக்கிறது? சிறிது குழம்பிய தமிழரசி, தன் மனதைக் கைவசப்படுத்தியவள்போல், படபடப்பாக, உடலாட நின்ற தாமோதரனின் கைகளைப் பற்றியபடியே, மன்றாடும் குரலில் பேசினாள்:

"நீங்க சொன்னாலும் சொல்லாட்டாலும், அவன் எனக்கு சித்தப்பா மகன்தான். அதுக்காக அவன் செய்த காரியத்தை அதிகமாகவே வெறுக்கிறேன். அதே சமயம் அவனை நீங்க வெட்டிப் போடுறதையும் என்னால் தாங்கிக்க முடியல. ஒங்க குடும்பத்துல ஒருத்தியாய் ஆகப் போகிறவள் என்கிற முறையில, நான் ஒண்ணு சொல்லியாகணும். தயவு செய்து என்னைத் தப்பாய் நினைக்கப்படாது. நடந்தது என்னமோ நடந்துட்டு. அதை முறைப்படுத்திப் பார்த்தால் நல்லது. அதுக்கும் மேல ஒண்ணு. எந்தச் சந்தர்ப்பத்திலேயும் நீங்க என்னைக் கைவிட்டுடப் படாது. ஒருவேளை பொன்மணி சொன்னபோதே, நான்

உஷாராய் இருந்திருந்தால் இதைத் தடுத்திருக்கலாம். அவங்க ஓடிப்போனதுக்கு நானும் ஒரு காரணமாயிட்டேன். எந்தச் சூழ்நிலயிலயும் நீங்க...என்னை...''

''அடடே... நீ ஏன் அழுகுறே? நான் ஒன்கிட்ட இருந்து விலகிடுவேன்னு ஒனக்கு அந்தமாதிரி எண்ணமே வந்திருக்கப்படாது. இன்னும் உண்மையைச் சொல்லப் போனுல், ஓடிப் போனவள் வீட்ல சம்பந்தம் வேண்டாமுன்னு...ஒன் வீட்ல... ஒன் மனசை மாற்றிடப்படாதேன்னு எனக்குப் பயமாய் இருக்கு. என் தங்கை ஓடிப்போன சமயத்துல, எனக்கு இந்த மாதிரி எண்ணம் வரப்படாது. ஆனல் வருதே...!''

தமிழரசி, கலங்கிய அவன் கண்களைக் கலக்கத்தோடு பார்த்தாள். பிறகு மெல்லிய—நையப் புடைக்கப்பட்ட குரலில், ''அந்தக் கவலையே உங்களுக்கு வேண்டாம். விஜயாவோட கல்யாணமும் நடந்தே தீரும். ஒரு விஷயம். இந்தக் காலத்துல, இந்த வீட்ல இருந்து இவள் ஓடிட்டாளாம் என்கிறதை யாருமே பெரிசா எடுத்துக்கிறதில்ல. அப்படி இருந்தும் அந்த அபவாதத்துக்கு பயப்படுற நீங்க, கொலேகார குடும்பமுன்னு ஒரு பட்டம் வாங்கணுமா? நல்லா யோசித்துப் பாருங்க... ஒங்க அண்ணன் கிட்டேயும் சொல்லுங்க...''

''நான் யோசிக்காமல் இல்லே. எப்படியாவது அவளை வினைதீர்த்தான்கிட்டே இருந்து பிரிச்சு, ராவோடு ராவாக நாகர்கோவில் மாப்பிள்ளைக்கு கட்டி வச்சுடலாமான்னு கூட நினைச்சேன். ஆனல் அது அயோக்கியத்தனம். நான் சொல்றதை வேதவாக்காய் நினைக்கிற அந்த வாத்தியார் மாப்பிள்ளைக்கு நான் துரோகம் செய்யப்போறதில்லே.''

''ஒங்க அண்ணன் கிட்ட...''

''எப்படி தமிழு சொல்ல முடியும்? எனக்கே அந்தத் தேவடியாமவனை . ஸாரி... எனக்கே வினைதீர்த்தானை

கண்ட துண்டமாய் வெட்டணுமுன்னு தோணுது. எங்க அண்ணனைப் பத்தி சொல்ல வேண்டியதில்ல. ஒரு சிலர் முயலுக்கு மூன்று கால்னு சாதிப்பாங்க. ஆனால் இவரோ, பிறத்தியார் முயலுக்கும் மூணு கால்தான் இருக்கணு முன்னு ஒவ்வோரு முயலோட ஒரு காலையும் ஒடிக்கிற 'டைப்.' அவர்கிட்ட சுத்தி வளைச்சுத்தான் பேசணும். எப்படியோ விஷயத்தை நல்லதோ கெட்டதோ அதன் போக்கில விட்டுடப் போறேன். வினைதீர்த்தானைக் கொன்னாலும் தப்பில்ல.''

தமிழரசியும், தாமோதரனும் மேற்கொண்டு பேசாமல், தங்களுக்குள்ளேயே தத்தளித்துக் கொண்டிருந்தபோது, முத்துலிங்கம் பாய்ந்து வந்தார். வந்த வேகத்திலேயே, பைக்கை உதைத்தபடி ''செறுக்கிமவன்... நம்ம தங்கச்சியை ஆத்துல குளத்துல தள்ளிடுவான்னு நினைக்கேன். ஏன்னால், அவள் போட்டிருந்த கம்மலைக்கூட கழற்றி மேஜையில வச்சுட்டு, அவன்கூட மொட்டையாய் ஓடிட்டாள். மேஜைமேல கம்மலைப் பார்த்த பிறகுதான் எங்களுக்கு சந்தேகமே வந்தது.''

''வெறுங்கையோட போறவளை... இந்த செறுக்கிமவன் எத்தனை நாளைக்கு காலம் தள்ளுவான்? அவள் எக்கேடும் கெட்டும். கடைசியில வேலைக்காரன்கிட்ட பொண்ண விட்ட குடும்பமாய் போயிட்டோம் பாரு. எல்லாம் ஒன்னால வந்தது. நீ ஊருக்கு வரும்போதெல்லாம் அவள் மேல உயிரை விட்டே. அவள் எல்லாரையும் பந்தாடிட்டாள். நீயும் வீட்டுக்கு வந்தோம் வீட்லயே இருப்போமுன்னு நினைக்கியா? ஒன் புத்திதானே ஒன் தங்கச்சிக்கும் இருக்கும்...''

தாமோதரனும், இதுவரை எதிர்த்துப் பேசியறியாத அண்ணனை சூடாகக் கேட்டான்:

"நான் மட்டும் வீட்டோட இருந்திருந்தால் ஆரம்பத்துலயே சுண்டுபிடிச்சு, முளையிலேயே கிள்ளியிருப்பேன். ஒனக்குப் பட்டந்தான் முரடன்னு... ஒரு பச்சைக்குழந்தை மாதிரியே இருந்திட்டே..."

"சரிதாம்பா...என் மேல தப்புத்தான். அதுக்காகத் தான் இப்போ துடிக்கேன். மொதல்ல வண்டில ஏறு; போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகலாம்."

ராணுவ தளபதிபோல் கம்பீரமாகவும், களத்தில் குற்றுயிரும் கொலையுயிருமாய் துடிக்கும் வீரன் போலவும் அரற்றிய முத்துலிங்கத்தையே, தமிழரசி பயத்தோடும், பரிதாபத்தோடும் பார்த்தபோது, தாமோதரன் வண்டியில் ஏறினான். தமிழரசி 'வேண்டாம்... வேண்டாம்' என்பதுபோல், முரட்டுக் குரலோடு துடித்த மோட்டார் பைக் வண்டிக்கு, முன்னாலும் பின்னாலுமாகப் போனாள். போகிறவர்கள் எப்படி வரப் போகிறார்களோ? வருவார்களோ, வழியிலேயே கைதாகிறார்களோ? வினைதீர்த்தான் என்ன ஆகப்போகிறானோ?

தமிழரசி கண்களால் கெஞ்சி, கால்களால் மண்கிளறி, கைகளால் முட்டி மோதியபோது, மோட்டார்பைக், ஏவுகணைபோல் பாய்ந்தது. பின்னால் உட்கார்ந்திருந்த தாமோதரன், சற்று தொலைவில், கள்ளச்சாராயத்தைக் குடித்துக்கொண்டோ அல்லது காய்ச்சிக்கொண்டோ இருந்த உள்ளூர் கும்பலைப் பார்த்துவிட்டு, பிறகு தமிழரசிக்கு அவர்களை கண்களால் சுட்டிக்காட்டிவிட்டு, அவளை வீட்டுக்குப் போகும்படி கைகளால் சைகை செய்தான்.

தனித்து விடப்பட்ட தமிழரசி, அங்கேயே சிறிது நேரம் நின்றாள். கண்ணசைத்து காதல் செய்யத் துவங்கிய கண்ணிமைக்கும் நேரத்திற்குள், என்ன வெல்லாமோ நடந்துவிட்ட ஆற்றாமையில், நின்று நின்று நடந்தாள். ஆகாயத்தில் வெள்ளை ஆந்தை ஒன்றை,

காக்காக்கூட்டம் துரத்திக் கொண்டிருந்தது மைனுக் குருவி ஒன்றுக்கு, பூனை ஒன்று பதிபோட்டுக் கொண்டிருந்தது.

அந்தக் கருகிய மாலைப்பொழுதில், அவள் நடந்ததை உருவகப்படுத்துவதற்கு நிற்பது போல் நின்று, அதை நினைக்கப்படாது என்பதுபோல், வேகவேகமாய் நடப்பது போல் நடந்து, கடந்த ஒருசில தினங்களாக, தன் உள்ளத்திலும், உடம்பிலும் செங்கோலோச்சிய அந்த இனிமையான உணர்வுகளே, இப்போது கொடுங்கோல் ஆதிக்கம் புரிய, தட்டுத்தடுமாறி நடந்தாள்.

வினைதீர்த்தான் செய்த துரோகச் சுமையோடும், அவனை முத்துலிங்கம் சொல்லுக்குச் சொல் 'வேலைக்காரப் பயல்' என்று சொன்னதால் ஏற்பட்ட சுயமரியாதைக் குறைவோடும், இதற்குக் காரணமான சமூக நெறிகளை நெறிக்க வேண்டும் என்ற ஆவேசத்துடனும், கடைசியில் சித்தப்பா மகன், எல்லோரையும் பைத்தியமாக நினைத்து, பைத்தியக்காரத்தனத்தை செய்து விட்டானே என்ற வெறுப்போடும் நடந்தாள். அதேசமயம், இப்போதுதான் பழகிய தாமுவை, தன்னால் பிரிய மனமில்லை. அவர்கள் எவ்வளவுநாள் பழகினுர்களோ, எப்படிப் பழகினுர்களோ என்ற மனக்கணக்கைப் போட்டுப் பார்த்தாள். முடிவும் 'சைபர்' போல் தலைச்சுற்றுகியது.

தமிழரசி ஊருக்குள் வந்தபோது, மங்கிய நிலா வெளிச்சத்தில், ஊரார் கூட்டங்கூட்டமாக நின்று, கிசுகிசுப்பாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவளைப் பார்த்துவிட்டு, சிலர் தமது கூட்டங்களில் இருந்து 'கட்சி மாறி' அவளிடம் வந்தார்கள். "பொன்மணி குலுக்கும் போதே தெரியும். கடைசியில் அவளுக்கு வேற ஆம்புள கிடைக்காமல், இந்த அப்பாவிப் பயதான் அகப்பட்டிருக்கான்" என்றவர்கள், அவளை தாமோதரன் குடும்பத்துக்கு வேண்டப்பட்டவளாகக் கருதி, "அறியாத பொண்ண,

அவன் அப்டி கடத்தியிருக்கப்படாது'' என்றவர்கள், ''எல்லார் தலையிலயும் மண்ண அள்ளிப் போட்டுட்டு ரெண்டுபேரும் கம்பி நீட்டிட்டாவ பாரு'' என்று பொதுப் படையாகப் பேசியவர்கள்— இவர்கள் அனைவரையும் ஒரே நோக்காய் நோக்கியபடியே தமிழரசி வீட்டுக்குள் வந்தாள்.

அன்னை பகவதி மகளிடம், 'ஒனக்கு விஷயம் தெரியுமா' என்று கேட்கப் போனாள். தமிழரசியின் முகம் போன போக்கை வைத்தே, அவளுக்கும் விஷயம் தெரிந்து விட்டது என்பதை யூகித்துக் கொண்ட பகவதியம்மா, வராண்டாவில் அமர்ந்து, சுவரில் தலையை வைத்துத் தேய்த்தபடி, முகத்தைக் கைகளால் துடைத்தபடி தோன்றிய மகனைப் பார்த்தாள். தமிழரசி, அம்மாவிடம் ''அப்பாவை எங்கேம்மா...'' என்றாள்.

ராஜதுரை தங்கைக்குப் பதிலளித்தான்.

''அவரு, தாமோதரன் அப்பாவோட போலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிருக்காரு. நம்ம வீட்ல கல்யாணம் கூடப்போற சமயத்துல, வினைதீர்த்தான் இப்டிப் பண்ணிட்டதுல அப்பாவுக்கு சொல்ல முடியாத கோபம். அவனை ரெண்டுல ஒண்ணு பார்த்துடணும்னு கத்திக் கிட்டே போனாரு. பொண்ணைப் பறிகொடுத்தவங்களுக்கு நாமும் கூடமாட ஒத்தாசை செய்யணும் பாரு. செறுக்கி மவனை ஒரே வெட்டாய் வெட்டணும்.''

தமிழரசி, அண்ணனின் முகத்தில், வேதனையும், வேகமும் ஒன்றை ஒன்று விடாமல் வட்டமடிப்பதைப் பார்த்தாள். அவன் போக்கிற்கும் தனக்குள்ளேயே நியாயம் சொல்லிக்கொண்டாள். கல்யாண மாப்பிள்ளை வேடத்திற்கு தன்னை தயார்படுத்திக் கொள்ளப் போகிற சமயத்தில், வேடம் கலையுமோ என்ற பயம். அது, சித்தப்பா மகனையும், செறுக்கிமவன் என்று பேசவைக்

கிறது. காலத்தோட கோளாறே? இல்ல காதலோட கோளாறே?

தமிழரசியும், தன் பங்குக்கு விளைதீர்த்தானை திட்ட வேண்டும் என்று ராஜதுரை எதிர்பார்த்தான். அவள் திட்டாததில் அவனுக்கு ஏமாற்றம். அவளை முறைத்த படியே பார்த்தான்.

சிறிது நேரத்தில் சித்தப்பா மாடக்கண்ணுவும், அவர் மகள் கலாவதியும் வீட்டுக்குள் வந்தார்கள். ராஜதுரை அவர்களைப் பார்க்காததுபோல் பாவித்தான். மாடக் கண்ணு, மார்போடு சேர்த்துத் தூக்கிய உள்ளங்கையில், தலையைக் கவிழ்த்தபடி நின்றார். கலாவதி சிதறிய முடி யோடு, சிந்திக்கும் திராணியற்று, ஆறுதல் தேடுபவள் போல் தமிழரசியைப் பார்த்தாள். சிறிது நேரம் தயங்கி நின்ற மாடக்கண்ணு, பிறகு படபடப்பாகப் பேசினார்.

"பன்றடப்பய... இப்டிப் பண்ணுவான்னு நான் நினைக்கல. நமக்கும் கல்யாண வயசுல ஒரு தங்கச்சி இருக்காள்னு நினைக்காமல், குடியைக் கெடுத்திட்டான். தங்கச்சியாய் நினைக்க வேண்டியவள, தாரமாய் நெனச்சுட்டான். எனக்குக் கையும் ஓடல, காலும் ஓடல!"

சித்தப்பா பேசுவதையே கவனித்துக் கொண்டிருந்த தமிழரசிக்கு, அவர் முகத்தில் அப்பிய துயரம் தொத்தியது. இரண்டு வார்த்தைகளுக்கு மேல் பேசாத சித்தப்பா பேசவில்லை. வேதனைகளை வெளிக்கொண்டு போடுகிறார்! பாவிப் பயல்! இந்தத் தள்ளாத மனிதரை விட்டுட்டுப் போக எப்படி அவனுக்கு மனம் வந்தது?

தமிழரசி, சித்தப்பாவின் துயரத்தைப் பங்கிட்டுக் கொள்பவள்போல், அவரை நோக்கி "உட்காருங்க சித்தப்பா" என்றாள். அவரும் நாற்காலியில் உட்கா ராமல் தரையில் உட்கார்ந்தார்.

ராஜதுரையால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. ஓடிப் போன பயலோட அப்பன்கிட்ட என்ன பேச்சு? இவன் சித்தப்பா இல்ல; வேலைக்காரப் பயலோட அப்பன். இவனும், இவன் மகளும் இங்கே வந்து போனது தெரிந்தால், 'விஜயா' வீட்டில் என்ன நினைப்பார்கள்? இது ஏன் இந்த தமிழரசிக்குத் தெரியல? அவளுக்குத் தெரியாது. நாம சொல்லிக் கொடுக்கலாம்...

ராஜதுரை வராண்டாவில் இருந்து குதித்து, மாடக் கண்ணு அருகேபோய் நின்றுகொண்டு, ஏகத்தாளமாகக் கொக்கரித்தான்.

"ஏய்யா பெரிய மனுஷா...ஒன் மகனை வழியனுப்பி வச்சுட்டு இப்போ ஒண்ணுந் தெரியாதவன் மாதிரி நடிக் கிறியாக்கும். மொதல்ல வீட்டை விட்டு மரியாதியா நடையைக்கட்டு. போறியா... கழுத்தைப் பிடிச்சுத் தள்ளட்டுமா?"

தமிழரசி, விக்கித்துப் போனாள். கலாவதி, தலை கழுத்தில் இருந்து துண்டானதுபோல் ஆடிப்போனாள். ஆனால் அந்த 'பைத்தியாரத் தர்மர்' மாடக்கண்ணுவோ, கூடப்பிறந்த அண்ணன் மகன் வேறு யாரையோ பேசு கிறான் என்று நினைத்து, வழியைப் பார்த்தார். பகவதி யம்மாளோ, எதுவும் நடக்காததுபோல், தன் வேலையைக் கவனித்தபடி நின்றாள்

எப்படியோ மாடக்கண்ணு நிலைமையைப் புரிந்து கொண்டு, துண்டை உதறிப்போட்டபடியே எழுந்தார். பிரமிப்பில் இருந்து விடுபட்ட கலாவதி, யதார்த்தத்தில் பொசுங்கி, ஒப்பாரிபோல் பேசினாள்.

"நாங்க ஒரு பாவமும் அறியாதவங்க அண்ணாச்சி... அந்த பாழாப்போற பாவி இப்படிப் பண்ணுவான்னு எங்களுக்குத் தெரியவே தெரியாது அண்ணாச்சி... ஒங்க கிட்ட அடைக்கலமுன்னு யோசனை கேட்கத்தான்

வந்தோம். எங்கப்பாவ பேச, ஒனக்கு எப்படி அண்ணுச்சி மனசு வந்துது?''

ராஜதுரை மேலும் கோபப்பட்டு, கூப்பாடு போட்டான்:

''வாம்மா மூளியலங்காரி... மூதேவி சண்டாளி! ஒன்னைப்பற்றி எனக்குல்லா தெரியும். ஒன் அண்ணன் இருக்கிற இடத்தை மட்டும் நீ சொல்லல, முதல் பலி நீ தான். அது அப்புறம். இப்போ ஒப்பன கூட்டிட்டு மரியாதியா போ. ஒன்னத்தான்... வெளில போ நாயே..''

பிரமித்து எழுந்த தமிழரசி, எள்ளும் கொள்ளும் வெடிக்க நின்ற அண்ணனைப் பார்த்தாள். தலை கவிழ்ந்து உடல் கவிழ்ந்து நின்ற சித்தப்பாவையும், தன்னையே அடைக்கலம் தேடி நோக்கிய கலாவதியையும் பார்த்தாள். அப்படிப் பார்க்கும்போது அண்ணனின் கை, சித்தப்பாவின் பிடரிக்குப் போவதையும் பார்த்தாள். தமிழரசி அண்ணனின் கையைப் பிடித்தபோது, அவன் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் அவள் கன்னத்திலேயே 'பளார்' என்று அடித்துவிட்டு, அப்புறம் யோசிப்பது போல் கண்களால் கெஞ்சினுன். பிறகு ''எல்லாம் இந்த மூதேவிகளால வந்துது'' என்று சொல்லி, மாடக் கண்ணுவின் கழுத்தைப் பிடித்து மீண்டும் தள்ளப் போனுன்.

தமிழரசி கன்னத்தைத் தடவியபடியே, போகப் புறப் பட்ட சித்தப்பாவை வழிமறித்தபடியே, அண்ணனுக்கு சவாலிட்டாள்.

''ஒனக்கு இவர் யாரோ? ஆனுல் எனக்கு சித்தப்பா. இந்த வீட்ல எனக்கும் சட்டப்படி ஒரு பங்கு உண்டு. நீ அவரை போன்னு சொன்னுல், என்னுல அவரை 'வான்னு' கேட்க முடியும். என்னை துரத்துமுன்னுல, என்

சித்தப்பாவையோ, என் தங்கச்சியையோ நீ துரத்த முடியாது.''

பகவதியம்மாள் பரபரத்தாள். ராஜதுரை சீறப் போனான். 'பைத்தியாரத் தர்மரோ' அண்ணன் மகள் கழுத்தைக் கட்டிக்கொண்டு ''என் மவளே... என் மவளே... நான் ஒரு பாவமும் அறியலியே மவளே'' என்று பூமி பிளக்கப் புலம்பினார்.

# 7

சொந்த மகளாக நினைத்த தன்னை, இப்போது தாயாக நினைத்து சித்தப்பா மாடக்கண்ணு, குழந்தையைப் போல் மன்றுடி அழுவதைப் பார்த்த தமிழரசி, திக்கு முக்காடிப் போனாள். வாயதிரப் பேசியோ, கையுயர ஆட்டி அசைத்தோ பேசியறியாத அந்தப் பெரியவர், குழந்தை யாய் கேவியதும், தமிழரசி கிட்டத்தட்ட பாட்டியானாள். சித்தப்பாவின் துண்டையெடுத்து, அவர் கண்களைத் துடைத்தாள். ''என்ன சித்தப்பா. இது என் வீடும் இல்ல. ராஜதுரை அண்ணன் வீடும் இல்ல. இது ஒங்க வீடு. அவன் ஏதோ தெரியாத்தனமாய் சொல்லிட் டான்...'' என்றாள்.

மாடக்கண்ணு தமிழரசியை நிமிர்ந்து பார்த்தபோது, ராஜதுரை அருவருப்பாக முகம் சுழித்தான். பகவதியம் மாள் புருவத்தை உயர்த்தியபடியே பார்த்துக் கொண் டிருந்தாள். கலாவதி, ஒவ்வொருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ராஜதுரை தற்செயலாக இருமியது, கர்ஜனைபோல் கேட்டது. இருமலுக்கிடையே பொருமினான்.

''யோ! நீயா போறியா, நானுத் தள்ளணுமா?''

தமிழரசி திருப்பிக் கொடுத்தாள்:

"போறதாய் இருந்தால் நீதான் போகணுமே தவிர, அவரு போகமாட்டாரு."

தமிழரசியை, ராஜதுரை அதிர்ச்சியோடு உற்றுப் பார்த்தான். அவள் கன்னத்தில், தன் மோதிரம் பட்டு கிழிந்த ரத்தப் பகுதியை, அவள் கையை வைத்து மறைத்துக் கொண்டிருப்பதைக் கண்டான். அவள் மீது தான் உயிரையே வைத்திருக்கும்போது, அவளோ, அந்தப் பைத்தியாரன் மீது அதிக பாசம் வைத்திருப்பதைப் பார்த்து, உள்ளூறப் பொருமை பட்டான். பிறகு, தலையை மேலும் கீழுமாக ஆட்டியபடியே தங்கையிடம் பேசினன்.

"எப்போ நீ பங்காளி மாதிரி பேச ஆரம்பிச்சுட்டியோ, அப்பவே நீ என்னை அண்ணனுய் நினைக்கலன்னு தெரிஞ்சுக் கிட்டேன். ஆனுல் அதே மாதிரி, என்னுல ஒன்னை பங்காளியா நினைக்க முடியல. இன்னும் என்னேட செல்லத் தங்கச்சியாய்தான் நினைக்கேன். இந்த வீட்லயோ, சொந்துலயோ எனக்கு ஒரு துரும்புகூட வேண்டாம். நீ மவராசியா இரு. நான் போறேன்."

ராஜதுரை, மாடக்கண்ணுவையும், கலாவதியையும் அழுத்தமாகப் பார்த்துவிட்டு, அம்மாவிடம் கண்களால் விடைபெற்றபடி, தொலைதூரத்திற்குப் போகிறவன் போல், தொழுவத்தில் கட்டப்பட்ட மாடுகளையும், வீட்டின் ஒவ்வொரு மூலையையும் பிரிவு மனேபாவத்துடன் பார்த்தபடியே, வெளியே புறப்படப் போனுன்.

தமிழரசி திடுக்கிட்டு நிமிர்ந்தாள். கலாவதி 'நாங்க போறேம்...நீ இருண்ணு' என்று சொல்வதற்காக, அவன் கரத்தைப் பிடித்திழுப்பதற்காக, தன் கரத்தை நீட்டப் போனுள். 'பைத்தியாரத் தர்மர்' மாடக்கண்ணு, அவனை விநோதமாகப் பார்த்தபடி, அண்ணன் மகனை வழி மறிக்கப் போனுர்.

இதற்குள்—

பகவதியம்மாள் பாய்ந்து வந்தாள். ராஜதுரையின் இடுப்பைப் பிடித்து இழுத்தபடியே, பழைய காலத்து நாட்டுக் கட்டையான அவள், திமிறிய மகனை வலது கையால் அணை கொடுத்து, வராண்டா பக்கம் நிறுத்தி விட்டு, தனது தலையிலேயே இரண்டு தடவை அடித்துக் கொண்டாள். பிறகு, கலாவதியைப் பார்த்துத் தாவி, இரண்டடிக்கு முன்னால் நின்று கொண்டு, வார்த்தைகளைக் கொட்டினாள்.

''சண்டாளி... எத்தனை நாளு இந்தக் குடும்பத்தைக் கலைக்கணுமுன்னு நினைச்சியோ? நீ இப்போ நினைச்ச காரியம் முடிஞ்சுட்டுதுல்லா... இப்போ திருப்திதானடி ஒனக்கு...? இல்ல என் பிள்ளங்கள்ல யாராவது ஒண்ணு செத்தால்தான் திருப்தியா? வீட்ட ரெண்டாக்கப் பார்க்காதடி. அந்த அப்பாவிப் பொண்ணு பொன்மணி மனச மாத்துனது மாதிரி, நான் பெத்த பொண்ணோட மனசையும் மாத்திடாதடி. ஒனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு... ஒன் கொள்ளிக் கண்ணை வச்சு எங்கள எரிச் சுடாதடி...''

கலாவதி, மோவாய்முனை நெஞ்சில் படும்படி, தலை குனிந்து நின்றாள். கண்களில் இருந்து நீர் சொட்டுச் சொட்டாகி மூக்கின் முனையில் திட்டுத் திட்டாகி, அவளை மூழ்கடித்துக் கொண்டிருந்தது. மாடக்கண்ணு ஒரு தடவை மகளைப் பார்த்துவிட்டு, பிறகு ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தார். இன்னும் அவர்கள் அங்கே நகராமல் இருப்பதைப் பார்த்து விட்டு, பகவதியம்மாள் ஏதோ பேசப் போனாள். இதற்குள் ராஜதுரை ''நீ சும்மா இரும்மா'' என்று சொல்லிவிட்டு, தங்கையிடம் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்புபவன் போல், வராண்டாவில் இருந்து, 'இறங்கிப்' பேசினான்.

"இன்னும் நீ பள்ளிக்கூடத்துலயும், காலேஜிலயும் சொல்லிக் கொடுத்ததுமாதிரியே... உலகம் இருக்குமுன்னு நினைக்கிறே. இவளப்பற்றி ஒனக்கு என்ன தெரியும்? இன்னைக்குக் காலையிலே இன்னு...கல்லு ளிமங்கியா நிக்காளே... இந்த மூதேவி... நம்ம வீட்ல வினைதீர்த்தான் பயலோட கிசுகிசுன்னு பேசிக்கிட்டு இருந்திருக்காள். நம்ம வீட்டுக்கு வெளியே ஜன்னலுக்குப் பின்னால, பொன் மணி நின்னுளாம். நம்ம அம்மாவைப் பார்த்ததும், பேச்சை டக்குன்னு நிறுத்திட்டாளாம். இவள் அண்ணன் ஒருநாளும் இல்லாத வழக்கமாய் எட்டுமுழ வேட்டி கட்டி, சிலாக் சட்டை போட்டு வந்திருக்கான். அப்பவே நம்ம அம்மாவுக்கு சந்தேகம் வந்திருக்கு."

கலாவதி தமிழரசியை மருவியபடியே பார்த்து, அவளிடம் மன்றாடப் போனபோது, பகவதியம்மாள் மூந்திக் கொண்டாள்.

"ஒனக்கு என்னடி தெரியும்? பள்ளிப் படிப்பு புள்ளிக்கு உதவுமா? பொன்மணியையும், வினைதீர்த்தான் பயலையும் தனியா வீட்டுக்குள்ளே விட்டுட்டு, இந்த சண்டாளி எத்தனை நாள் வெளில காவலுக்கு இருந்திருக்காள்னு கேளு. ஒருநாளா... ரெண்டுநாளா... தினமும் அவங்க ரெண்டுபேரும் வீட்டுக்குள்ள கொஞ்சி குலாவுவாங்க. இவள் காவலுக்கு நிற்பாள். உண்டா இல்லியான்னு அவள் கிட்டேயே கேளு. இது தெரியாமல், நீ என்னடான்னா... கூடப் பிறந்த அண்ணன்கிட்டயே ஜென்ம எதிரிமாதிரி பேசுறே. ஏண்டி பேசாமல் நிக்கிறே...? அண்ணனுக்கு ஒரு அப்பாவிப் பொண்ணைக் கூட்டிக் கொடுத்தது நிசமா இல்லியான்னு ஒரு வார்த்தை கேளுடி."

தமிழரசி அதிர்ந்தாள். அன்று, சென்னையில் இருந்து வந்த நாளில், கிணற்றுப் பக்கம் போய்க் கொண்டிருந்த தன் பின்னால் வந்த இதோ இவளிடம் 'பொன்மணி வரலையா' என்று கேட்டபோது, இவள் 'அவள் வர்ல'

என்று சொல்லாமல், 'வரமாட்டாள்' என்று திட்டவட்டமாகச் சொன்னது, தமிழரசியின் நெஞ்சைத் தட்டியது. உடனே கலாவதியின் கண்களை நேருக்கு நேராகப் பார்த்து, சந்தேகப் பார்வையை உணர்த்தியபோது—

தன்னைத்தானே உறிஞ்சிக் கொள்பவள்போல், கண்ணென்ற மலையில் இருந்து விழுந்த அருவியை, வாயென்ற குளத்திற்குள் விட்டு உதடுகளால் உறிஞ்சுபவளாய், குனிந்த தலை நிமிராமல் நெடிதாய் நின்ற கலாவதி எவரும் எதிர்பாராத வகையில்—அவளே எதிர்பாராத வகையில், தடாரென்று தரையில் குப்புற விழுந்து, தமிழரசியின் கால்களைப் பிடித்தபடியே, விம்மி யழுது வெடித்தாள்.

''நாங்க ஒரு பாவமும் அறியாதவங்க தமிழு. சத்தியமாய் என்னை நம்புக்கா. காலையில எங்கண்ணன் விருந்துக்குப் போறது மாதிரி சட்டை போட்டிருந்தான். அதனால அவன்கிட்ட என்ன விஷயமுன்னுதான் கேட்டேன். அதுவும் இந்த வீட்ல வச்சுத்தான் கேட்டேன். ஜன்னலுக்கு அந்தப் பக்கம் பொன்மணி நின்னது சத்தியமாய் எனக்குத் தெரியாது. எங்கண்ணன் 'இன்னிக்கு வேற வழியில்லாம சினிமாவுக்குப் போறேன். அப்பாவை பத்திரமாய் பார்த்துக்கன்னு' சொன்னதை, லேசா எப்போவாவது குடிச்சுட்டு உளறுறது மாதிரி அப்பவும் உளறுறான்னு நெனச்சேன். உடனே 'என்னையும் சினிமாவுக்குக் கூட்டிட்டுப் போயே'ன்னு கேட்டேன். அப்போ பெரியம்மா வந்தாள். 'என்னளா பொம்புள இப்படி அடக்கம் இல்லாமல் சினிமா கினிமான்னு பேசுறியேன்'னு திட்டுவாள்னு, சொன்ன சொல்ல பாதில விட்டேன். சத்தியமாய் நடந்தது இதுதான். அந்தப் பாழாப் போற பாவி, இப்படிப் பண்ணுவான்னு எனக்குத் தெரியாது. தெரியவே தெரியாது.''

தமிழரசி, கலாவதியை தூக்கி நிறுத்தினாள். ஆனால் அவளால் எதுவும் பேச முடியவில்லை. கலாவதியிடம் பேசப் போனால், தனக்கும் அழுகை வந்து விடும் போலிருந்தது. ஆயிரம் நடந்ததோ, நடக்கலியோ ஒரு வயதுக்கு வந்த பெண், பழிதுடைக்க முடியாமல், கண்களைத் துடைக்கும்போது, மனிதாபிமானம் கலங்காமல் இருக்காது. தமிழரசி கலங்கினாள். உடனே பகவதியம்மாள் இடைச்செருகலானாள்:

"இந்த மூளியலங்காரி மூதேவி சண்டாளி வெனதீர்த்தானையும் பொன்மணியையும் உள்ள வச்சுட்டு, வெளில எத்தனையோ நாளு காவல் காத்திருக்காள். அதை ஏன் கேட்க மாட்டக்கே?"

தமிழரசி, கலாவதி சார்பில், அன்னையிடம் கண்களால் மோதி, தன் சார்பில் குறுக்கு விசாரணை செய்தாள்.

"அப்படின்னா நீயே... அப்பவே அவங்களையும், இவளையும் கண்டிச்சிருக்கலாம். நீ ஏன் கண்டிக்கல? நீயும் வேடிக்கை பார்க்க நினைச்சியா?"

பகவதியம்மாளுக்கு, என்ன பதில் சொல்வது என்று தெரியாததால், 'ஏதாவது பேசண்டா...' என்பது போல் மகனைப் பார்த்து விட்டு, அவனும் பேசாமல் இருந்ததால், தமிழரசியிடம் தன்னால் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்தாள். அதாவது முறைத்தாள்.

கலாவதி, மீண்டும் மன்றாடினாள்.

"சத்தியமாய் இவங்க ரெண்டுபேரோட இழவுச்சமாச்சாரம் எனக்குக் கொஞ்ச நேரத்துக்கு முன்னால வரைக்கும் தெரியாது. பொன்மணி அண்ணன்கிட்ட வந்து, அவங்க வீட்டு விவகாரத்தை சளசளன்னு சொல்லிக்கிட்டு வருவாள். அவளோட அண்ணி—அதுதான் முத்துலிங்க மச்சானோட பெண்டாட்டி இவளை எப்படில்லாம் திட்டுறாள்னு சொல்லி, அவன்கிட்ட அழுவாள். அவனும்

ஏதாவது ஆறுதல் சொல்லுவான். அடுத்த குடும்ப விவகாரம் நமக்கு எதுக்குன்னு, நான் வேற பக்கமாய் போயிடுவேன். அந்த நாசமாப் போறவன், இப்படி மோசம் பண்ணுவான்னு எனக்கு எள்ளளவும் தெரியாது. என்னை நம்பு தமிழரசி.''

பகவதியம்மாள் மீண்டும் பாய்ந்தாள்:

"ஆமாடி...இந்த மேனுமினுக்கிய நம்புடி. பெத்த அம்மா பேச்சு ஒனக்குப் பெரிசா தெரியாது. இவளையே நம்பு. அடிப்பாவி. எத்தன நாளுடி எங்க குடியைக் கெடுக்கக் காத்திருந்தே? சொந்த பெரியப்பா வீட்டை யாவது கெடுக்காமல் இருப்போமுன்னு ஒனக்குத் தோணல பாரு. என் மகளை என்கிட்ட விட்டுடுடி. என் மவள என் கிட்ட இருந்து பிரிச்சிடாதடி. பாவி... கைகேயி... கூனி... குடி கெடுப்பாள்.''

ராஜதுரை, கண்களைத் துடைத்த அம்மாவை அதட்டினன்.

''நீ ஏம்மா அழுவுற? இந்த வீட்ல யாராவது அழணு முன்னல், நான்தான் அழணும். 'இவன் ராஜதுரை, தாமோதரன் வீட்ல கால்வைக்கப் போறன். அதுக் குள்ள, அந்தக் குடும்பம் சந்திக்கு வந்துட்டுன்'னு ஊர்க் காரப் பயலுவ டீக்கடையில பேச ஆரம்பிச்சுட்டாங்களாம். இன்னும் என்னென்ன பேசப் போறுங்களோ? ஒன் மகளுக்கே என்னேட மனசு படும்பாடு புரியல. ஊருக்கு எப்டிப் புரியும்...? கடைசில, கூட்டிக் கொடுத்தவள் பெரிசாப் போயிட்டாள். கூடப்பிறந்த அண்ணன் சிறிசாப் போயிட்டான்.''

தமிழரசி, தழுதழுத்த குரலில், அழாக்குறையாகப் பேசிய அண்ணனைப் பார்த்தாள். கேவிநின்ற அம்மாவைப் பார்த்தாள். அவர்களைப் பார்க்கப் பார்க்க, அவளையறி யாமலே கலாவதிமேல் லேசாக எரிச்சல் ஏற்பட்டது. இந்தச் சமயத்தில், கலாவதியும் போட்டி போட்டு அழுத

படியே "நான் சொல்றது அத்தனையும் சத்தியம். என்னை யாரு நம்புனலும் நம்பாட்டாலும் பரவாயில்ல தமிழு... 'நீ சொல்றத நம்புறேன்'னு ஒரு வார்த்தை சொல்லுக்கா... ஒரே ஒரு வார்த்தை" என்று கேட்டாள். இதை பலவந்தமாகக் கருதிய தமிழரசியும், எரிச்சலோடு பதிலளித்தாள்.

"நான் இந்த ஊர்ல குடியிருக்கல. என்ன நடந்ததுன்னு எனக்குத் தெரியாது. தெரியவும் வேண்டாம். நான் யாரையும் நம்பத் தயாராய் இல்ல. நீ கூடத்தான் அன்றைக்கு 'பொன்மணி வரமாட்டாள்னு' என்கிட்டயே ஒரு மாதிரி சொன்னே..."

கலாவதி, தமிழரசியை நிமிர்ந்து நோக்கினுள். எதிர்பாராத அதிர்ச்சி. தனக்கு எதிராகத் தானே பேசுவது போன்ற பிரமிப்பு. எதை ஆதாரமாக நினைத்தாளோ, அதுவே அவளைத் தள்ளப்போவதைக் கண்ட தவிப்பு. எந்த முகத்திற்காக, பழிசொன்ன முகங்கள் லேசாக சுழிக்கும்படிகூட பேசாமல் நின்றுளோ, அந்த முகமே மாறுபட்ட முகமாய் மாறியதைக் கண்ட இயலாமை. என்றாலும், அதிர்ச்சி, தவிப்பு, தாட்சண்யம் தேவையில்லாத நிர்மலம், இயலாமை ஆகிய அனைத்தும் அவளை, அவளே இனங்கண்டறிய முடியாத ஒரு கூட்டுப் பொருளாக்கியது. தலையை கம்பீரமாக உயர வைத்தது. உடம்பை உறுதிப்படுத்தியது. தந்தையின் கைகளை இழுத்துக்கொண்டு, அவளை அந்த வீட்டில் இருந்து போக வைத்தது.

தந்தையை பலவந்தமாக இழுத்தபடி, கம்பீரமாக நடந்துபோன கலாவதி, தமிழரசி கண்படும் முனையில் சிறிது நின்றுள். அவளை நிமிர்ந்து நோக்கினுள். தமிழரசியோ, அவற்றைப் பார்க்க முடியாமலோ அல்லது விரும்பாமலோ வேறுபக்கம் திரும்பிய போது, கலாவதியின் பேச்சு. அவள் காதில் ஒலித்தது.

" 'இனம், இனத்தோடு; வெள்ளாடு தன்னோடு' என்கிற பழமொழி சரியாப் போச்சுக்கா. ஒரே ஒரு வரம் மட்டும் ஒன்கிட்டே கேட்கேன். அதுவும் இஷ்டமிருந்தால் கொடு. அந்த நொறுங்குவான்—என் அண்ணன் என்கிறவன் செய்திருக்கிற காரியத்துக்கு, அவனை மாறுகை மாறுகாலு வெட்டலாம். ஆனாலும் இந்தப் பாழும் மனசு கேட்க மாட்டக்குது. முத்துலிங்கம் மச்சான் அவனை கையோட பிடிச்சுவாரதுக்கு கத்தி அரிவாளோட ஆட்களை அனுப்பி இருக்காராம். மனசு கேட்க மாட்டக்கு. ஒன்னால முடியு முன்னால் அவனைக் காப்பாற்று. அப்படியே முடியாட்டாலும், அவனை எங்க கண்ணுமுன்னால கொல்லாமல்... வேற எங்கேயாவது கொல்லச் சொல்லு. இந்த ஊர்ல அவன் அடிபட்டுச் சாகுறதைப் பார்த்துட்டு எங்களால இருக்க முடியாது. உம். எட்டி நடயுமிய்யா... நம்ம வீட்டுக்குப் போவோம்..."

தமிழரசி திரும்பிப் பாராமலே நின்றாள். கலாவதி போவதைப் பார்க்கத் தைரியமோ அல்லது பேசியதை நினைத்துப் பார்க்க உறுதியோ அற்றவளாய் நின்று கொண்டிருந்தாள். எப்படியோ, அவள் திரும்பிப் பார்த்தபோது, கலாவதியும், அவள் தந்தையும் இல்லை. அம்மா, மீண்டும் எதுவும் நடக்காதது போல் வீட்டுவேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அண்ணன்காரன், சக மாட்டுடன் சண்டை போட்ட ஒரு காளை மாட்டை, சாட்டைக் கம்பால் விளாசிக் கொண்டிருந்தான்.

இரவில் தமிழரசி படுக்கையில் தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்தாள். பகவதி அம்மாள் மகளின் மனவோட்டத்தை அறிந்தவள்போல், அவளைச் சாப்பிடக் கூப்பிடாமல், தானே சாப்பாட்டுத் தட்டைக் கொண்டு போனாள். அவள் எவ்வளவு சொல்லியும், இவள் சாப்பிடவில்லை. வாயில் ஊட்ட வந்த அம்மாவை, வலுக்கட்டாயமாக வெளியேற வைத்தாள். கதவைத் தாழ்ப்பாள்

போட்டுக்கொண்டாள். வெளியே சத்தம் கேட்டது. அப்பா அப்போதுதான் வந்திருக்க வேண்டும். தாமோதரன் குடும்பத்திற்கு சப்போர்ட்டாக, போலீஸ் நிலையம் போய்விட்டுவந்த கதையை, மகனிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

"எங்க பொறுப்புல ஒப்படைச்சிடுங்க. பெண்ணை ஒங்ககிட்ட ஒப்படைக்கதும், அந்தப் பயலை கைய காலைக் கட்டி ஒங்ககிட்ட ஒப்படைக்கிறதும் எங்க பொறுப்புன்னு போலீஸ் ஸ்டேஷன்ல சொல்லிட்டாங்க. தாமோதரன் மாப்பிள்ளைக்கு எவ்வளவு மதிப்பு தெரியுமா? இவரும், சப்-இன்ஸ்பெக்டரும் இங்லீஸ்ல பேசிக்கிட்டாங்க... என்னென்னு புரியல... அவங்க பேசுனதைப் பார்த்தால் ஏதாவது நடக்கும்."

"ஒம்ம தம்பி, மகளோட இங்க வந்திருந்தாரு."

"அந்தப் பாவிப் பயல என் தம்பின்னு சொல்லாதடா. அவன் உடன் பிறந்தே கொல்லும் நோய். சொந்த அண்ணன்கிட்ட நிலத்தை விற்காமல், தெக்குத் தெருக்காரன்கிட்ட நிலத்த வித்துட்டு, அவனை நமக்கு நிரந்தர பகையாளியாய் ஆக்குன பயல். அவன் எனக்கு தம்பியில்ல... அதுவும் அவன் மகன்.. இப்படிப்பட்ட ஒரு காரியத்த செய்த பிறவு, இவன் எனக்கு கௌரவங்க மாதிரி..."

தமிழரசி உற்றுக் கேட்டாள். லேசாக வந்த தூக்கம் கூட தானாகப் போய்விட்டது. போலீஸ் நிலையத்திற்குப் போன தாமோதரன் மேல் சாடுவதா, அல்லது அவன் நிலையில் யார் இருந்தாலும் இப்படித்தான் என்று ஆற்றுப் படுத்துவதா? அடுத்துக்கெடுத்தான் என்று வினைதீர்த்தானை வெறுப்பதா, அல்லது நான்கு நாட்களுக்குள்ளேயே தானே தாமோதரமயமாகும் போது, வினைதீர்த்தானும் ஏன் அப்படி இருக்கக் கூடாது என்று நியாயம் கொள்வதா?

எத்தனை வருஷங்கள் பழகினார்களோ, எப்படிப் பழகினார்களோ?

தூங்காமலே தமிழரசி துவண்டபோது, சேவல் கூவியது. காகங்கள் கத்தின. மைனாக்கள் நச்சரித்தன. அணில்கள் விசிலடித்தன. இவற்றினூடே, சித்தப்பா வீட்டில் ஓலச்சத்தம் கேட்டது. கலாவதி "அடிக்காதிங்கய்யா... என்னை வேணும்னாலும் அடிங்க... எங்க அப்பாவை விட்டுடுங்கய்யா... அய்யோ... அம்மா" என்று புலம்பும் சத்தம் கேட்டது.

தமிழரசி வெளியே ஓடிவந்தாள். வராண்டாவில் நாற்காலியில் உட்கார்ந்திருந்த அவள் தந்தை ஒரு தினப் பத்திரிகைக்குள், தன்னை மறைத்துக் கொண்டார். அம்மா, முகத்தை ரசனையோடு திருப்பிக் கொண்டாள். ராஜதுரை சம்பந்தம் இல்லாத ஏதோ ஒன்று நடப்பது போல், பல் தேய்த்துக் கொண்டிருந்தான். சித்தப்பா வீட்டிலோ, ஓலச் சத்தம், அவலச் சத்தமாகியது. திடீரென்று முத்துமாரிப் பாட்டியின் சத்தம் ஓங்கி ஒலித்தது.

"போலீஸ் எசமான் மாரே... ஒரு பொம்புளய இப்டிய்யா அடிக்கது? அதுவும் ஜாக்கெட்ட பிடிச்சு இழுத்து..."

# 8

போலீசாரை 'அடித்துப்' பேசிய முத்துமாரிப் பாட்டி, பேச்சற்றுப் போனது போல், அவள் குரல் தமிழரசிக்குக் கேட்கவில்லை. அதற்குப் பதிலாக, சவுக்குத் தோப்பில் வீசும் காற்றின் ஓசைபோல, 'வீச்வீச்' என்ற கேட்டது. 'திருட்டுச் செறுக்கி...' என்ற ஆண்குரல்

ஒன்று, ஆவேசமாய் கேட்டது. கோழிகள் அங்குமிங்குமாய் பறந்து, வீட்டுக் கூறைகளில் தாவி, பனையோலைகளை சலசலப்புச் செய்த சத்தம் கேட்டது. கூட்டமாக நிற்பது போல் தோன்றிய ஊராரின் கிசு கிசு சத்தம். ஆட்கள், அங்கிருந்தோ அல்லது அங்கேயோ ஓடும் காலடிச் சத்தம். கலாவதியின் செல்லப் பசுமாடு 'ம்மா...' என்று கனைக்கும் சத்தம்—ஆகிய அத்தனை சப்தங்களும், தமிழரசியின் சப்த நாடிகளில் பாய்ந்து, அவளை நிமிர வைத்தன. எல்லா சப்தங்களையும் நிசப்தமாக்குவது போல் "வேண்டாய்யா ... வேண்டாய்யா... இதுக்குமேல எனக்குத் தாங்க முடியாதுய்யா..." என்று கெஞ்சும் குரலோடு, முத்துமாரிப் பாட்டி ஒப்பாரி போட்டது கேட்டது. கலாவதியின் முனங்கலும், மாடக்கண்ணுவின் ஊமைக்குரலும் கலந்து கேட்டன.

தமிழரசியின் கால்கள் சக்கரங்களாயின. முகத்தைக் கழுவாமல் முந்தானையால் துடைத்தபடியே, தளத்திற்கு வந்தவள், வராண்டாவில் நாற்காலியில் உட்கார்ந்திருந்த அவள் தந்தை அருணாசலம், அன்றைய தினசரிப் பத்திரிகைக்குள் முகத்தை மறைத்து, பூலோகத்தின் அந்தப் பகுதியில் எதுவும் நடக்கவில்லை என்பதுபோல் கண்களை மூடிக்கொண்டார். மாட்டுத் தொழுவத்தில், ஒரு காளை மாட்டின் கொம்பை தடவி விட்டுக் கொண்டிருந்த ராஜதுரை, அவளைப் பார்த்ததும், வேறுபுறமாகத் திரும்பிக் கொண்டான். அம்மாக்காரி பகவதியம்மா, இப்போதும் எதுவும் நடக்காததுபோல், "காபியை சூடாக் கட்டுமா" என்று மகளிடம் 'கூலாகக்' கேட்டாள்.

தமிழரசி படபடப்பாய், பரபரப்பாய், விறுவிறுப்பாய் வெளியே ஓடினாள். பத்திரிகையில் இருந்து முகந்திருப்பிய அருணாசலம், 'எங்கே போறே' என்று கேட்பதற்கு வாயெடுத்து வாய் மூடுவதற்கு முன்பாக, ராஜதுரை மாட்டின் இன்னொரு கொம்பை தடவுவதற்காக

கையெடுத்து கை வைக்கும் முன்பாக, அவள் மறைந்து விட்டாள்.

வீதிக்கு வந்து, சப்தங்கள் சபதமிட்ட சித்தப்பா வீட்டிற்குள் போகப் போனவள், தெருவில் போலீஸ் ஜீப்பைப் பார்த்தாள். முத்துலிங்கம் மச்சானின் மோட்டார் பைக்கையும் கண்டாள். அவர் போலீசிற்கு வேண்டப்பட்டவர் என்பதைக் காட்டும் வகையில், அவரது பைக் போலீஸ் ஜீப்பை உரசிக் கொண்டிருந்தது.

வீடு தாங்காமல் வெளியே குவிந்திருந்த ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் அத்தனை பேரும் அவளுக்கு வழிவிட்டு, அவள் பின்னாலேயே உள்ளே போனார்கள். மூன்று மண்சுவர் படிக்கட்டுக்களில் இறங்கி, சித்தப்பா செங்கோலோச்சும் ஓலை வீட்டின் முற்றத்திற்கு வந்தாள். தலைகீழான ‘ட’ வடிவத்தில் கட்டப்பட்ட அந்த வீட்டின் முன் வியாபித்திருந்த அகண்ட வெளிக்குள், மூன்றில் ஒரு பகுதியில் தெளிக்கப்பட்ட சாணநீர் முடியாக் கோலம் போல், ஒரு பானையில் கிடந்தது. ஆங்காங்கே லத்திக் கம்புகள் குடைந்ததாலோ, குத்தியதாலோ, அந்தப் பகுதி தன்னுள் இருந்த செம்மண்ணை, சதைக்கட்டி போல் காட்டியது. முத்துமாரிப் பாட்டி, குத்துக்காலிட்டு உட்கார்ந்தபடி, வீங்கிப் புடைத்த முட்டிகளை ஊதிவிட்டபடியே “அட கரிமுடிவானுவளா...எங்களுக்கும் ஒரு காலம் வராமலா போகும்” என்று தனக்கு மட்டுமே கேட்கும் குரலில், போலீஸ் நடவடிக்கைகளைப் பார்த்தபடியே விம்மிக் கொண்டிருந்தாள். கூட்டமோ, போலீசாரின் லத்திக் கம்புகளின் வீச்சிற்கும், வேகத்திற்கும் ஏற்ப, கூடிக் கொண்டும், குறைந்து கொண்டும் இருந்தது.

தமிழரசி ஆவேசியாகி, பார்த்த இடத்தில்—

சித்தப்பா மாடக்கண்ணுவின் நீண்ட தலைமுடியைப் பிடித்து, தன் கைக்குள் வைத்திருந்த ஒரு போலீஸ்காரர், தன் கையைச் சுண்டிச்சுண்டி இழுத்து விட்டபோது,

இன்னொரு போலீஸ்காரர், லத்திக் கம்பால் அந்த பைத்தியாரத் தர்மரின் முதுகிலும், தலையிலும் மாறி மாறி குத்திக் கொண்டும், குடைந்து கொண்டும் இருந்தார். "ஒன் மகன ஒளிச்சு வச்சிருக்கிற இடத்த மட்டும் நீ சொல்லல, அப்புறம் நீ எந்த இடத்துலயும் இருக்க முடியாது. கிழட்டுப் பயலுக்கு இவ்வளவு அழுத்த முன்னால், எங்களுக்கு எவ்வளவு இருக்கும்" என்று நான்காவது போலீஸ்காரர் அதட்டிக் கொண்டிருந்தார். இன்னொரு போலீஸ்காரரின் பிடியில் சிக்கியிருந்த கலாவதி, எப்படியோ அந்தப் பிடியில் இருந்து விடுபட்டு, தந்தையின் முதுகுமேல் தன் மேனியை சுமத்திக் கொண்டு, "எங்காப்பாவ விட்டுடுங்கய்யா, விட்டுடுங்கய்யா" என்று புலம்பினாள். அவள் தன்னிடம் இருந்து திமிறி வெளியேறியதை, தன் உடல் பலத்திற்கு விடப்பட்ட சவாலாக எடுத்துக் கொண்ட போலீஸ்காரர், பாய்ந்து வந்தார். அவள் கொண்டையைப் பிடித்திழுத்து, தன் புறங்கைகளால் அவளை மாறிமாறி கன்னத்திலும், காதோரத்திலும் அடித்தார். அந்த அடிகளைக் கண்டறியாதவள் போல், "என்னை வேணுமுன்னால் அடிங்கய்யா. எங்கப்பாவ விட்டுடுங்கய்யா. ஒங்களுக்கு கோடிப் புண்ணியம் உண்டுய்யா..." என்று ஈனக்குரலோடும், ஏக்கப் பார்வையோடும் முனங்கிய கலாவதி, தந்தையின் கருப்புக் கருப்பாய், பாளம் பாளமாய் காய்ப்புப் பிடித்த முதுகில், சிவப்புச் சிவப்பாய் ரத்தம் பீறிடுவதைக் கண்டு "அட பாவிப் பயலே! அடுந்துக் கெடுத்த துரோகி... ஒன்னால நாங்க படுற பாட்டைப் பார்த்தியாடா... நீ எங்கடா போனே? எங்கடா போனே?" என்று அண்ணன் வினைதீர்த்தானுக்கு, 'புலம்பல் தூது' விட்டுக் கொண்டிருந்தாள். உடனே இன்னொரு போலீஸ்காரர் "தேவடியா மவள் பேசுறதப் பாரு. ஏடி நடிச்சி மழுப்பிடலாமுன்னு நெனைக்காதே. உண்மையச் சொல்லாட்டால் சுட்டுப் பொசுக்கிடுவோம்" என்று சொல்லிச் சவாலிட்டார்.

தமிழரசிக்கு, பேசிய ஏச்சும், கொடுங்கோலோச்சிய தடிகளும் கண்களில் பட்டன. கருத்தில் பதியமுடியாத வகையில், பிரம்மிப்பில் நின்ருள். இந்த மாதிரி கெட்ட கெட்ட வார்த்தைகளோடு, குனியக் குனியக் குட்டும் நிகழ்ச்சிகளை, அவள் போலீசாரிடம் இருந்து சிறிதும் எதிர் பார்க்காமல், நடப்பவைகளை அவளால் நம்பமுடியவில்லை. எங்கேயோ, ஏதோ, யாரோ, எவருக்கோ, எதையோ கொடுத்துக் கொண்டிருப்பது போன்ற பிரமை. பெயர் பிளாஸ்டிக்கை, சட்டைப்பையில் பதித்த சப்—இன்ஸ் பெக்டரும், முத்துலிங்கமும் நிற்பதுபோல் தோன்றியது. நிற்கிருர்களோ... நினைவுதானே?

தமிழரசி கைகளைத் தூக்கப்போனுள், முடியவில்லை. உதடுகளைப் பிரிக்கப் போனுள், இயலவில்லை. தலையில் ரத்தம் சொட்டச் சொட்ட, முதுகில் ரத்த ஊற்றுப் பீறிட்டுக் கிளம்ப, தலைமுடியை போலீஸ்காரர் ஒருவரிடம் கொடுத்துவிட்டு நிற்கும் சித்தப்பா போன்ற மனிதரையும், கிழிந்த ஜாக்கெட்டை மறைப்பது போல் ரத்தச் சதை திரண்டு, நெற்றியில் குங்குமத்திற்குப் பதிலாக ரத்தக் குவியலுடனும், காதுகளில் கம்மலுக்குப் பதிலாக ரத்தக் கட்டிகளுடனும், கைகளில் நொறுங்கிய வளையல்களுக்குப் பதிலாக, லத்திக் கம்பு பதிந்த தடயங்களுடனும், கலாவதிபோல் ஒரு உருவம் பார்த்தாள். இதற்குள் முத்துலிங்கம், போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரை அவளிடம் கூட்டிவந்தார். "இவங்கதான்! நான் நேற்று சொன்னேன் பாருங்க தமிழரசி, அவங்க. ஒங்க பெரிய அதிகாரிகளுக்கு வேண்டப்பட்டவங்க. நம்ம தாமுவை கட்டிக்கப் போற வங்க..." என்ருர். பிளாஸ்டிக் அதிகாரி அவளுக்கு வணக்கம் போட்டார். பிறகு, காதலன் குடும்பத்திற்கு ஏற்பட்ட அவமானத்தால், அவள் தன்னையே மறந்து நிற்பதாக அனுமானித்து, அவளுக்கு ஒத்தாசை செய்ய வேண்டியது தனது கடமையென நினைத்து, மாடக் கண்ணுமேல் பாய்ந்தார். அந்த பைத்தியாரத் தர்மரை,

பூட்ஸ் காலால் உதைத்து, கீழே தள்ளியபடி "ஏண்டா கிழட்டுப் பயலே! இன்னும் ஒன் மகன் இருக்கிற இடத்தை சொல்ல மாட்டக்கே... போலீஸ்காரன்னு நெனச்சியா, ஒன் மாமன்னு நெனச்சியா? ஒன் மகன் இருக்கிற இடத்தைச் சொல்லல, நீ போக வேண்டிய இடத்துக்குப் போயிடுவே" என்று, மல்லாக்கப் புரண்ட மாடக்கண்ணு வின் தலையை காலால் இடறினர். அந்த மனிதரோ எதுவும் பேசாமல், ஏறிட்டு நோக்காமல், உடைந்துபோன மண் சட்டிபோல் கிடந்தார். அப்பாவை நெருங்கப் போன கலாவதியை, ஒரு போலீஸ்காரர் தொண்டையைப் பிடித்து, மல்லாக்கத் தள்ளி, அவள் கீழே விழப்போன போது, அவள் தலைமுடியைப் பிடித்திழுத்து, 'பாலன்ஸ்' செய்தார்.

தமிழரசிக்கு பிரக்ஞை வந்தது. தான் தமிழரசி என்பதும், தான் நிற்பது சித்தப்பாவீடு என்பதும், அடிப்பது போலீசார் என்பதும், அடிக்கச் சொல்வது முத்துலிங்கம் என்பதும், அடிபடுவது அபலே என்பதும் புரிந்தது. புரியப் புரிய புத்துயிர் பெற்ருள். கீழே புரண்டு கொண்டிருந்த சித்தப்பாவை நோக்கி ஓடி, கீழே குனிந்து உட்கார்ந்து, அவர் தலையைத் தூக்கி நிறுத்தி, போலீசாரை பரவலாகப் பார்த்தபடியே கத்தினுள். இடி முழக்கமாய் ஒலித்தாள். சித்தப்பா குளித்த ரத்தம் தன்னையும் குளிப்பாட்ட, ரத்த வாடையை சுவாசித்து, ஆங்காரியாய், ஓங்காரியாய், வீங்காரியாய், காட்டுக் கத்தலாகக் கத்தினுள்.

"நிறுத்துங்கய்யா. நீங்கெல்லாம் போலீஸ்காரங் களா, இல்ல... வேண்டாம், என் வாயால அதைச் சொல்லி கண்ணியமாய் வேலே பார்க்கிற போலீஸ்காரங் களையும் ஒங்களோட சேர்க்காண்டாம். ஒங்களப் பார்த் தால் சட்டத்த காப்பாற்ற வந்தவங்கமாதிரி தெரியல. நீங்க சட்டப்படி உள்ள ரவுடிங்க மாதிரி நடந்துக்கிறீங்க.

ஒங்க மனசுல என்னய்யா நெனச்சுக் கிட்டீங்க? இவங்க சிந்துன ரத்தத்துக்கு இப்பவே நீங்க பதில் சொல்லி யாகணும்?''

போலீசார் திடுக்கிட்டார்கள். எவள் பாதுகாப்பாக இருந்து, எவளுவது மேலதிகாரிகளுக்கு 'பெட்டிஷன்' போட்டால் காபந்தாக இருப்பாள் என்று நம்பி, அந்த நம்பிக்கையில் நடவடிக்கை எடுத்தவர்கள், அவளை, அரண்டுபோய் பார்த்தார்கள். தமிழரசி, பேசிக் கொண்டே போனாள்:

"ஒங்களுக்கும் அக்கா தங்கச்சி இருப்பாங்கல்ல? நீங்களும் இந்த மாதிரி ஒரு கஷ்டப்பட்ட குடும்பத்துல பிறந்திருக்கத்தானே செய்வீங்க? நீங்க அடிச்சதை நீங்களே பாருங்க. ஒரு மனிதனோட டிக்னிட்டியை பாதிக் கிறபடி எதையும் செய்ய யாருக்கும் உரிமை கிடையாது. ஒங்களுக்கு யாருய்யா இந்த உரிமை கொடுத்தது? பதில் சொல்லுங்கய்யா. எங்க சித்தப்பாவையும், என் தங்கச்சி யையும் இப்டி அடிச்சதுக்கு யாருய்யா பட்டா கொடுத்தது? எவன்யா கொடுத்தான்?''

சப்-இன்ஸ்பெக்டர் திகைத்து திக்குமுக்காடினார். அவருக்கு எதுவும் ஓடவில்லை. தொழில் சகாவான தாமோதரனுக்கு உதவுவதற்காக வந்து, உபத்திரவத்தில் மாட்டிக் கொண்டதைப் புரிந்து கொண்டார். அடிபட்ட வர்கள் தமிழரசிக்கு நெருங்கிய உறவினர்கள் என்று தன்னிடம் சொல்லாத முத்துலிங்கத்தைப் பல்லைக் கடித்த படியே பார்த்தார் மாறிய நிலைக்கு தன்னை மாற்ற முடியாமல் திண்டாடினார்.

இதற்குள் ஆங்காங்கே சிதறிநின்ற மக்கள் ஒன்று பட்டார்கள். முதலில் தமிழரசியை வியப்போடு பார்த் தார்கள். தத்தமக்குள் பேசிக் கொண்டார்கள். அப்புறம் பொதுப்படையாக, மெலிதாய் பேசினார்கள். முனங்கல்கள் முணுமுணுப்பாகி, மூர்க்கமான வார்த்தைகளாயின.

"இவனுவ உடுப்புப் போட்ட உடனே, ஆடுற ஆட்டம்... அப்பப்பா... ஏய்யா... எங்களெல்லாம் பார்த்தா ஒங்களுக்கு மனுஷனாய் தெரியாதா?"

தமிழரசியும் பேச்சை நிறுத்தவில்லை.

"மிருகமாய் இருக்கிறவனையும் மனுசனாய் நெனைத்து நடத்த வேண்டியது போலீஸ். ஆனால் நீங்க மனுசனாய் இருக்கவனையும், மிருகமாய் நடத்தி, கேடுகெட்ட மிருக மாய் நடந்துக்கிட்டீங்களே! இந்த ஜனங்க கோபத்தை ஒங்களால தாக்குப்பிடிக்க முடியுமாய்யா?"

சப்-இன்ஸ்பெக்டர், தன்னையறியாமலே சற்று பலமாகக் கேட்டார். கிரிமினல் கோர்ட்டில், மூன்று வருஷம் வாங்கிக் கொடுக்கிற ஒரு செக்ஷனை நினைத்த படியே பேசினார்.

"மேடம்! நீங்க போலீஸ் மேல் பொதுமக்களை ஏவி விடுறீங்க. போலீஸ்னா அயோக்கியன்னு ஒரு புரளிய கிளப்பிவிடப் பார்க்கீங்க."

"பிரச்சனையை திசை திருப்பாதய்யா. எனக்கும் பெண் போலீஸ் சிநேகிதிகள் இருக்காங்க. கண்ணியமான போலீஸ்காரங்க பலர் எனக்குத் தெரியும். அவங்க படுற பாடும் புரியும். போலீஸ்படை, தமிழ் நாட்ல எப்படி இருக்குதுன்னு ஒங்ககூட நான் பட்டிமன்றம் நடத்தல. அதுக்கு அறிவு வேணும்."

"அப்படின்னா..."

"அறிவு சரியாய் பயன் படாட்டாலோ இல்ல குதர்க்க மாய் பயன்பட்டாலோ அது அடிமுட்டாள்தனம். ஒங்க ளுக்கு அறிவு இருந்திருந்தால், இந்தப் பொண்ண இப்டி அடிச்சிருப்பீங்களா? இந்த மனுஷரை இப்டி சித்ரவதை செய்திருப்பீங்களா? சட்டப்படி விசாரிங்க. நான் வேண்டான்னு சொல்லல. ஆனால் சட்டத்துக்குப் புறம்பா, எதுக்குய்யா இப்டி அடிக்க வச்சே? நீ அக்கா தங்கை

யோட பிறந்தியா, இல்ல தனியாய் பிறந்தியா? அவங்க அடிபட்ட வேதனையில நான் துடிச்சால், என்னையே நான் ஏதோ தமிழ்நாட்டு போலீசிற்கு எதிராய் செயல்படுறது மாதிரி பேசறியே. இன்னும் இருபத்து நாலு மணி நேரத்துல, ஒன் காக்கி யூனிபாரம் கழறுதா இல்லியான்னு பாரு. இந்த ஏரியா டி.ஐ.ஜி. எனக்கு காலேஜ்ல எகனமிக்ஸ் டீச்சராய் இருந்தவர். அவர்கிட்ட நான் நியாயம் கேட்கப்போறேன். கலா, புறப்படும்மா! இந்த கிழிஞ்ச ஜாக்கெட்டோடயே புறப்படு. சித்தப்பா எழுந்திரும். மக்களுக்காக போலீசா? போலீசிற்காக மக்களான்னு டி.ஐ.ஜி. கிட்டேயே கேட்டுடலாம்.''

தமிழரசி தற்செயலாகத் திரும்பிய போது, தந்தையும், அண்ணனும், அம்மாவும், முத்துலிங்கத்துடன் பல்லைக் கடித்துக் கொண்டு நிற்பதைப் பார்த்தாள். கூட்டத்தின் போலீஸ் எதிர்ப்பு ஒலி, சப்தமாகி, கத்தலாகிக் கொண்டிருந்தது. கூட்டம் தைரியப்பட்டபோது, போலீஸ் அதைரியப்பட்டது. முத்துமாரிப் பாட்டியும் எகிறினாள்.

“நானும் ஒன்கூட வாரேன் தங்கம். ஆனால் இந்த கொள்ளி முடிவானுவ அடிச்ச அடில, என்னால நடக்க முடியுமோ என்னவோ. உம், புறப்படு...''

திடீரென்று, தமிழரசியின் தந்தை அருணாசலம், மகளை நோக்கிப் பாய்ந்தார். “ஒன்ன இதுக்காளா படிக்க வச்சேன். நாலு பேரு முன்னால இப்டி ஏடாகோடமாய் பேசுறதுக்கா படிக்க வச்சேன்'' என்று கையை முஷ்டிகளாக்கி ஓடியவரை, ஒரு போலீஸ்காரர் பிடித்துக் கொண்டே ‘‘பெரியவரே, அவங்க ஒங்க மகளாய் இருக்கலாம். ஆனால் அவங்களுக்கும் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது எங்க டூட்டி'' என்று எச்சரித்தார். சகாக்களைக் கண்ணடித்தார்.

ஒவ்வொருவரும், ஏதோ ஒன்று நடக்கப் போகிறது என்ற யூகத்துடன், தங்களுக்குப் பக்கத்தில் நின்றவர்களைப் பார்த்துக் கொண்டார்கள். வேண்டப்பட்டவர்களை தேடிப் பிடித்து, அவர்கள் அருகே நின்று கொண்டார்கள். பாதாதிகேசம் வரை, லத்தித் தடயங்களோடு, சிவப்புச் சாயம் பூசப்பட்டவர் போல் தலைகுனிந்து நின்ற மாடக் கண்ணு, ரத்தக் காயங்களின் எரிச்சல் தாளாமல் அவற்றை ஊதிவிட்டுக் கொண்டிருந்த கலாவதியைப் பார்த்தார். தமிழரசியின் தந்தை ராஜதுரையைப் பார்த்தார். அவன் 'விஜயாவின்' அண்ணன் முத்துலிங்கத்தைப் பார்த்தான். முத்துலிங்கம், அருகே நின்ற சிறுவனிடம் ரகசியமாய்ப் பேசி, அவனை வெளியே அனுப்பி வைத்தார். சிறிய மவுனம். எல்லோரும் இளைப்பாறிய நிசப்தம்.

எவர் எவரெல்லாமோ பேசப் போனபோது, திடீரென்று முத்துலிங்கம் கத்தினார்:

"இதுவரைக்கும் பாலைப் பார்க்கிறதா, பால் காய்ச்ச பானையைப் பார்க்கிறதான்னு நடந்த விஷயத்த முழுசாய் சொல்லல. இப்போ சொல்லப் போறேன். அருணாசலம் மாமா எப்படி நினைச்சாலும் சரிதான். என் அப்பாவி தங்கச்சிய கடத்துனதே இந்த தமிழரசிதான். இந்தப் புண்ணியவதிதான் என்கிட்டேயே 'ஒங்க பொன்மணிக்கு, நாகர்கோவில் கல்யாணத்துல சம்மதமா'ன்னு கேட்டாள். அடிக்கடி ஒன்றுமே தெரியாத என் அப்பாவி தங்கச்சிகிட்ட கிசுகிசுன்னு பேசி, அவள் மனச கலைச்சிட்டா. பொன் மணியக் கடத்துனதே இந்த அம்மாதான். சப்-இன்ஸ் பெக்டர் சார், இவளை விசாரிக்கிற முறையில விசாரிங்க. என் தங்கச்சி இருக்கிற இடம் தானாய் தெரியும்."

தமிழரசி திடுக்கிட்டாள். உதடுகள் துடிக்க நின்ற முத்துலிங்கத்தை, அதிர்ச்சியோடு பார்த்தாள். அவர் பொய்யாகச் சொல்லியிருந்தால் கவலைப்பட்டிருக்க மாட்டாள். அவரோ, உண்மையென்று நம்பிச் சொல்

வதுபோல் தோன்றியது. அவரும் மற்றவர்களும் அவளைப் பார்த்த விதத்தில், ஒரு வேளை—தானே ஒரு வேளை—அவர்களைக் கடத்தியிருக்கலாமோ என்பதுபோல்கூட, தன்னையறியாமலே தன்னுள் மூழ்கினாள். நியாயத்திற்குப் பதில் கேட்டால் பழி கிடைப்பது இயற்கைதானோ? இதனால்தான் நியாயக்காரர்களுக்கு, தங்கள்மேல் சுமத்தப்படும் பழிகளைத் துடைக்கவே நேரம் போதாததால், பழிகாரர்களே அநியாயமாய் நியாயம் பேசுகிறார்களோ?

சற்று நேரம்வரை நியாயக்காரியாய் நின்றவள், இப்போது பழிகாரியாய் தடுமாறினாள். இக்கட்டான சூழ்நிலையில் இருந்து மீளப்போவதுடன், எவளிடம் வாங்கிக் கட்டினாரோ, அவளுக்கே அதை வட்டியும் முதலுமாய் திருப்பிக் கொடுக்கப் போகிற திருப்தியில், சப்-இன்ஸ்பெக்டர் தலையை நிமிர்த்தினார். அவளை எக்காளமாக, இளக்காரமாகப் பார்த்தார்.

முத்துலிங்கம் அனுப்பிய சிறுவனோடு, தாமோதரன் வாசலுக்குள் நுழைந்து கொண்டிருந்தான்.

# 9

ஒருவர் நல்லது செய்தார் என்பதை நம்பாத சமூகம், அந்த ஒருவர் கெட்டது செய்தார் என்றவுடன் நம்புமோ இல்லையோ, நம்ப விரும்பும் என்பதை, தமிழரசி கண்கூடாகப் பார்த்தாள். கூட்டம், ஒட்டு மொத்தமாக ஒரே கண்ணாகி, அவளையே பார்ப்பது போலிருந்தது. அங்குள்ள ஒவ்வொருவரும் போலீசாராகி, தன்னை கண்களால் புலன் விசாரணை செய்வது போலிருந்தது. போலீசார் கேஸ் கிடைத்த திருப்தியோடும், கூட்டத்தினர் அவளை ஒருவித அதிருப்தியுடனும் பார்த்தபோது,

தமிழரசி, அங்கே வந்து கூட்டத்தோடு கூட்டமாக நின்ற தாமோதரனைப் பார்த்தாள். ஒருவேளை இந்தப் பழியை அவரும் நம்புவாரோ? பொன்மணி சம்பந்தமாக, அவரிடம் பேசியதையே ஒரு நடிப்பாக நினைப்பாரோ? அப்படியானால் என் காதல்...காதல் ...மண்ணாங்கட்டிக் காதல்...நாசமாய்ப்போற காதல். ஒரு ஏழைப் பெண்ணை, தனது தொழில் பலத்தால், போலீசை ஏவி அடித்த இந்த மனிதரோடு, என்ன காதல் வேண்டிக் கிடக்கு? இதோ... இங்கே... ஈரக்காயங்களோடு துடிக்கும் இவர்களை அனுதாபத்துடன் நோக்கக்கூட மறுக்கும் இந்த மனிதரை, ஒருத்தி காதலிப்பவளாக இருந்தால், அவள் நிச்சயம் வாழ்க்கையின் மெல்லினங்கள் தெரியாத வல்லினக்காரியாகத்தான் இருப்பாள்.

தமிழரசியின் தடுமாற்ற மவுனத்தை, 'குற்றத்திற்கு' ஒப்புதலாக நினைத்த சப்-இன்ஸ்பெக்டர், கண்களைக் கூர்மைப்படுத்தி, தனக்குள்ளேயே புலன் விசாரணை வார்த்தைகளை, வேலாய் செதுக்கிக் கொண்டிருந்தார். இதற்குள் அவள் தந்தை அருணாசலம், ராஜதுரையின் பிடியில் இருந்து திமிறியபடியே "சண்டாளி! இதுக்கா ஒன்ன பெத்து வளர்த்தேன்? ஒன்னை போலீஸ் விட்டாலும் நான் விடமாட்டேன். ஒன்னை என் கையால, வெட்டிப் புதைச்சால்தான் என் மனசு ஆறும். ஒண்ணு மட்டும் சொல்லுறேன். நல்லா கேட்டுக்க. நான் பெத்தது ஒரே ஒரு பையன்தான். இனிமேல், ஒனக்கும், எனக்கும் ஒட்டுமில்ல, உறவுமில்ல. போலீஸ் சாருங்களே! அவளை என்ன பண்ணணுமோ பண்ணிக்கங்க. எனக்கு சம்பந்தமில்லாதவள். ஏய் ராஜதுரை...வாடா..."

அருணாசலம், மகன் ராஜதுரையை வலுக்கட்டாயமாக வெளியே இழுத்தபோது, மகளை யாரும், எதுவும் செய்து விடக் கூடாதே என்று பயந்தவள் போல், கூட்டத்துள் நின்ற பகவதியம்மா, திடுதிப்பென்று ஓடி,

தமிழரசியின் முன்னல் நின்று கொண்டாள். "இப்படிப் பட்ட காரியத்த நீ செய்யலாமாம்மா? ஒன்னேச் சொல்லி குற்றமில்ல. ஒன்னே இப்டி... இந்த சண்டாளி மயக் கிட்டா..." என்று அரற்றிக் கொண்டே நின்ருள்.

அப்பாக்காரர் அருணசலம், ராஜதுரையை பாதி வழி வரை பலவந்தமாக நகர்த்தியபடி, "வாடா... இனிமேல் நீ ஒருவன்தான் எனக்குப் பிள்ள. எவளும் எப்டியும் போவட்டும்" என்ருர். தமிழரசி, தந்தையைப் பார்த் தாள். 'போகாதிங்கப்பா. நீங்க நினேக்கிறமாதிரி, நான் தப்புத்தண்டா பண்ணல' என்று, தந்தையை வழி மறித்து, அவர் கால்களேக் கட்டிக் கதறவேண்டும் போலி ருந்தது. அதே சமயத்தில், முட்டிகளில் கால் ஊன்றி, எழுந்திருக்க முயன்று, அது முடியாமல் போகவே, தொப் பென்று கீழே விழுந்த சித்தப்பாவையும், ஊமைக்காயங் களே ஊதியபடி, ரத்தக்காயங்களே தொட்டுப் பிதுக்கியபடி கூனிக்குறுகி நின்ற கலாவதியையும் பார்த்தாள். அவளுள், ஏதோ ஓர் ரத்தவாடை ஏற்பட்டு, அது ரத்த பாசத்தை முறியடித்தது. தந்தையைப் பார்த்து, கம்பீர மாகக் கேட்டாள்:

"இப்போ, நான் மட்டும் என்ன.. ஒங்களுக்கு மகளாய் பிறந்ததுல சந்தோஷப் படவா செய்யுறேன்? அம்மாவுக்கு, தான் மட்டுந்தான் மகன், தனக்குப் பிறகு யாருமே பிறக் கலன்னு நெனேச்சு, தம்பியையும் தம்பி மகளேயும் அடிக்க வைக்க, போலீசிற்குப்போன நீங்க, என்னே மகளேன்னு கூப்பிட்டாலும், நான் அப்பான்னு கூப்பிடப்போறதுல்ல."

அதிர்ந்துபோன அருணசலம், மகளே அடிப்பதற்காக ஓடப்பார்த்தார். ராஜதுரை அவரைப் பிடித்துக்கொண் டான். பகவதியம்மா "அய்யோ... இந்தப்பாவி முண்டை யும்...பன்னடப்பயலும்...என் குடும்பத்தை கலேச்சிட்டாங் களே...சூது வாதில்லாத என் மகளே மயக்கிட்டாங்களே" என்று ஒப்பாரி போட்டாள். அந்த ஒப்பாரியை உள்

வாங்கிக்கொண்ட அருணுசலம் "ஏய், ஒனக்கென்னடி அங்கே வேலே? இப்போ நீ வாறீயா, இல்ல அந்த சண்டாளியோடவே இருந்துக்கப் போறீயா? ரெண்டுல ஒண்ணு இப்பவே தெரியணும்" என்று எச்சரித்தார்.

பகவதியம்மா, கணவரின் எச்சரிக்கையை காதில் வாங்காதவள்போல் பாவித்துக்கொண்டபோது, தமிழரசி, பெற்றவளை பிறப்பித்தவள் போல் பார்த்தாள். "என்னிடம் இவ்வளவு பாசம் வைத்திருக்கும் இந்த அம்மா, என்னைவிட அதிக நாட்கள் உறவாடி, எடுத்ததற்கெல்லாம் எடுபிடி வேலே செய்யும் இந்த கலாவதிபட்ட அடிகளையோ, பெற்ற அவமானத்தையோ, ஏன் ஒரு பொருட்டாக நினைக்கல? இவள் அம்மா இல்ல. தன் குஞ்சுக்கு இரைபோடுறதுக்காக கோழிக் குஞ்சைக் கொத்திக் கொண்டு போகும் கழுகு. கல் மனக்காரியின் பாசம் நாசத்தைக் கொடுக்கக் கூடியது..."

பகவதியம்மாவை, கணவர் மீண்டும் "வாறீயா... இல்ல ஒரேயடியாய் நிக்கிறியா" என்று அதட்ட, அவளும் கலாவதியின் முன்னல் போய் நின்றபடி "போதுமாடி... இப்பமாவது ஒன் மனசு குளிர்ந்துதாடி? சண்டாளி... கைகேயி...என்மவளுக்கு என்ன மருந்துடி போட்டு மயக்கினே? நான் பெத்தமவளேயும், அந்த அப்பாவிப்பொண்ணு பொன்மணியை செய்தது மாதிரி செய்யாதடி. ஒன்னேக் கையெடுத்துக் கும்பிடுறேன். என்னைப் பார்த்தாடி மொறைக்கே. போலீஸ்காரங்க ரெண்டு தட்டு தட்டிட்டு, ஒன்னே விட்டுட்டாங்க பாரு. நீ இன்னும் முறைப்பே, இதுக்கு மேலேயும் முறைப்பே. சண்டாளி... அடுத்துக் கெடுத்த முண்ட..." என்று அர்ச்சித்தாள்.

தமிழரசிக்கு, எப்படிக் கோபம் வந்தது என்று தெரியவில்லே. அம்மாவின் முதுகைப் பிடித்துத் தள்ளி "போம்மா... தோ... ஒனக்காகக் காத்திருக்கார்... நான் ஒனக்கு மகள் இல்ல...போ...ஒன்னே மாதிரி கல்மனசுக்

காரி, என்னே மகளாய் நினேக்கப்படாது...அம்மா என்கிற பாசத்துல நீ ஏதாவது செய்யணுமுன்னல் நீ இங்க இருந்து போறதுதான்'' என்ருள்.

பகவதியம்மாள், மகளே விட்டு விலகி, பாதி தூரம் நடந்தாள். மேல்கொண்டு அவளால் நடக்கமுடியவில்லே. திண்ணேயில் போய் சாய்ந்து கொண்டாள். அந்தச் சமயத்தில், அவளே அதற்கு மேல் அதட்டக்கூடாது என்று நினேத்தவர்போல், அருணுசலம், ராஜதுரையுடன் அந்த வீட்டை விட்டு வெளியேறிஞர்.

சப்-இன்ஸ்பெக்டர், தமிழரசியை இளக்காரமாகப் பார்த்தார். அவருக்கு, இப்படி ஒரு பெண்ணேப் பார்த்தது ஒரு ஆச்சரியம். அவளுக்கு, தனது மேலதிகாரிகள் தெரிந்திருப்பதில் ஒரு பயம். பக்குவமாகக் கேட்கலாமா... இல்ல...கடத்தல் குற்றத்திற்கு ஏற்றபடி பேசலாமா? அவர் சிந்திக்கத் துவங்கிஞர். 'இவள் முந்து முன்னல், நாம் முந்திக்கொள்ள வேண்டும். அதுதான் புத்திசாலித் தனம்...இவள், பெரிய போலீஸ் அதிகாரிகளிடம் ஒரு வேளே புகார் செய்யப்போனல், அதற்கு உள்நோக்கம் கற்பிக்க வேண்டும்!'

சப், யோசித்தபோது, முத்துலிங்கம் மீண்டும் திடீரென்று கூவிஞர்:

"சார்! என் தங்கச்சியை கடத்துனவள் இவள்தான். நீங்க இப்போ என்ன செய்யப் போறீங்க?''

சப்-இன்ஸ்பெக்டர் அமைதியாகப் பதிலளித்தார்:

"கொஞ்சநேரம் சும்மா இருங்க சார். இவங்க படிச்சவங்க. அந்தப் பொண்ணு மாதிரி முரண்டு பிடிக்க மாட்டாங்க. வினேதீர்த்தான் எங்கே இருக்கான்னு சொல்லிடுவாங்க. இல்லன்னல் நான் ஆக்ஷன் எடுக்கத்தான் போறேன்...''

தமிழரசி சீறிஞள்:

"இந்த ஏழைகள் மேல எடுத்த ஆக்ஷனுக்கு, மொதல்ல பதில் சொல்லுங்க. அப்புறம், எடுக்கப்போற ஆக்ஷனைப்பற்றி யோசிக்கலாம்."

சப்-இன்ஸ்பெக்டருக்குக் கோபம் வந்தது.

"மேடம், நீங்க லிமிட் தாண்டுறீங்க. எங்க ஆக்ஷனுக்கு எப்படி பதில் சொல்லணுமுன்னு எங்களுக்குத் தெரியும். இப்போ நீங்கதான் ஏதோ கவர்மெண்ட் மாதிரி கத்தா தீங்க. இப்போ நீங்க என் முன்னால ஒரு அக்கூஸ்ட். நான் புலன் விசாரணை செய்ய வந்திருக்கிற ஒரு அதிகாரி. பிளீஸ் ... டெல்மி ... பொன்மணியும் வினைதீர்த்தானும் எங்கே இருக்காங்க? அவன், அவளை ஒரு வேலை கொலை செய்யு முன்னால, எனக்குத் தெரிஞ்சாகணும். பொன் மணியை நீங்கதானே கடத்துனீங்க?"

போலீசாருக்குப் பயந்து போய் ஒடுங்கி நின்ற முத்து மாரிப் பாட்டியால், பொறுக்க முடியவில்லை. குறுக் கிட்டாள்.

"போலீஸ் எசமான்...ஒமக்கு இது அடுக்காது. தமிழரசிய மிரட்டாதேயும். தமிழரசிக்குத் தெரியு முன்னாலயே அதுக ஜோடி சேர்ந்துட்டு. இதை நானே பல தடவ என் கண்ணால பார்த்திருக்கேன்."

"ஏய் கிழவி! நீ சும்மா இருக்க மாட்டே...? மேடம், என் கேள்விக்கு இன்னும் நீங்க பதில் சொல்லல..."

"நான் பொன்மணியைக் கடத்தல. அப்படி ஒரு சந்தர்ப்பத்தை அவள் கொடுக்கல. அதோட வினைதீர்த் தானும் அவளைக் கடத்தல—"

"எப்படி?"

"மைனர் பெண்ணைக் கூட்டிச் சென்றால்தான் கடத்தல். பொன்மணிக்கு இப்போ பத்தொன்பது வயசு முடியப் போவுது. வேணுமானால் பள்ளிக்கூடத்து ரிக்கார்ட்

சையோ, கிராம அதிகாரியோட ரிக்கார்ட்சையோ செக் கப் பண்ணுங்க. அவள் மைனர் பெண்ணல்ல. வினைதீர்த்தா னோடு அவள் மனப்பூர்வமாய் போயிருக்காள். வினைதீர்த் தானுக்கு அவள் மேல்தான் ஆசையே தவிர, அவள் மேல் இருந்த நகைங்க மீதல்ல. பொன்மணி, காதுல போட்டி ருந்த கம்மலைக்கூட கழட்டி வச்சுட்டுப் போயிருக்காள். மிஸ்டர் முத்துலிங்கத்திடம் உண்டா இல்லியான்னு கேட்டுப் பாருங்க...''

• "எப்படியோ பாதி உண்மையை ஒத்துக்கிட்டிங்க. இப்போ...அவங்க எங்கே இருக்காங்கன்னு சொல்லிட்டிங் கன்னுல் எல்லாருக்கும் நல்லது.. அதாவது ஒங்களுக்கும்...''

"அவங்க இருக்கிற இடத்தை... நீங்களும் கண்டு பிடிக்கப் பாருங்க. நானும் பார்க்கிறேன். அவங்களை எப்போ பார்க்கலாமுன்னு எனக்கும் ஆசையாய் இருக்கு...''

சப்-இன்ஸ்பெக்டருக்கு, கோபம் போலீஸ்தனமாக வந்தது. இப்போது அதட்டினார்.

"ஆல்ரைட்...நீங்க சொன்னதை ஒரு ஸ்டேட்மென் டாய் கொடுங்க...''

"மொதல்ல...மிஸ்டர் முத்துலிங்கத்திடம் புகார் மனுவை வாங்குங்க. அப்புறம் என்கிட்ட அபிஷியலாய் கேளுங்க...''

"கேட்கத்தான் போறேன். இந்தாய்யா—அந்தப் பொண்ணு—ஏய் .. ஒன் பேரு என்ன— கலாவதியா? .. ஆம்... கலாவதியையும், அந்தக் கிழவனையும் பிடிச்சு வண்டிக்குள்ள தூக்கிப் போடுங்க. ஸ்டேஷன்ல விசா ரிக்கிற விதமாய் விசாரிக்கலாம்...''

போலீஸ்காரர்கள், தமிழரசியைப் பார்த்தபடி, கலாவதியையும், மாடக்கண்ணுவையும் நெருங்கப் போனார்கள். அவர்களோ பயந்துபோய் தமிழரசியை நெருங்கினார்கள். தமிழரசி, இடுப்புச் சேலையை இறுக்கிக்

கொண்டான். விழுந்த கொண்டையை போட்டுக் கொண்டாள்.

"இன்னும்கூட ஒங்களுக்கு மனசாட்சி வரலியே? இன்னொருத்தன் வீட்ல வாழப்போற பெண்ணை பகிரங்கமாய் அவமானப் படுத்துறது மாதிரி அடிச்சிட்டிங்க. இது கற்பழிப்பைவிட மோசமானது. கற்பழிப்பாவது, வெளில தெரியாமல் போயிடலாம். ஆனால் ஒரு ஏழைப் பெண் பிரஜையை கண்ட கண்ட இடத்துலல்லாம் அடிச்சு, அவளோட 'டிக்னிட்டியை' போக்கிட்டிங்க. இது போதாதுன்னு போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூப்பிடுறீங்களா? ஒங்க புலன் விசாரணையைப்பற்றி எங்களுக்குத் தெரியாதா? ஏழை பாளைகளுடைய... கண், காது, மூக்கு முதலிய ஐம்புலன்களையும்...லத்திக் கம்பால விசாரிக்கிறதைத்தான் நீங்க புலன் விசாரணைன்னு சொல்றீங்க..."

"எங்கேயோ ஒரு ஊர்ல போலீஸ் சப்-இன்ஸ்பெக்டராய் இருக்கிற இதோ மிஸ்டர் தாமோதரன், தன்னோட குடும்ப விவகாரத்திற்காக ஒங்களைப் பயன்படுத்தி இருக்கார். நீங்களும் அவர் பேச்சுக்குப் பம்பரமாய் ஆடியிருக்கீங்க. இது அப்பட்டமான அதிகார துஷ்பிரயோகம். தாய்க்குலம் என்று எல்லாக் கட்சிகளும் பேசுற இந்தக் காலத்துல, ஒரு ஏழைப் பெண்ணை...முண்டைன்னு வேற திட்டியிருக்கீங்க. ஊர் வம்புக்குப் போகாத இந்த அப்பாவி மனிதரை, எப்படி அடிச்சிருக்கீங்க பார்த்தீங்களா? கிராமத்துல ஒருவர் அடிபட்டால், அது மரண தண்டனையை விட மோசமான தண்டனை. இவ்வளவு அநியாயத்தையும் செய்துட்டு, அது நடக்காதது மாதிரியும், நான் செய்யாத ஒன்றை நானே நடத்துனது மாதிரியும் ஜோடிக்கிறீங்க. காலம் மாறிட்டு சார். போலீஸ்காரங்க ஏழைங்க பக்கம் நிற்க வேண்டிய காலம் வருது சார். நாங்க... இப்போ டி. ஐ. ஜி. கிட்ட ஒங்க மேலேயும்...ஒங்க சப்-இன்ஸ்பெக்டர் சகா மிஸ்டர்

தாமோதரன் மேலேயும், கிரிமினல் கம்ப்ளெயிண்ட் கொடுக்கப் போறேம். ஒங்க நடவடிக்கைகளுக்குப் பழி வாங்கிக் காட்டாவிட்டாலும், பதில் வாங்கிக் காட்டப் போறேம். நீங்க ரெண்டு பேருமே... இப்பவே...வேற வேலைக்கு ஏற்பாடு செய்துக்கங்க. எந்த லாக்கப்புல ஏழை பாலைகளை இழுத்துப் பூட்டுவீங்களோ, அந்த லாக்கப்பில இருந்து பழகிக்கிங்க. சித்தப்பா! எழுந்திருங்க... ஏய்... கலாவதி நடடி... இந்தக் கூட்டத்துல, அக்கிரமத்திற்கு அடிபணியக் கூடாதுன்னு நினைக்கிற யார் வேணுமுன்னலும் வரலாம். முடியுமுன்ஞல் .. எங்களைத் தடுங்க பார்க்கலாம்...''

கூட்டம் வேகப்பட்டது. ''புறப்படுங்க...புறப்படுங்க... இவங்க யாரை வேண்டுமாஞலும் நினைச்சால் அடிக்கலாம் என்கிற காலத்தை மாற்றிக் காட்டணும்'' என்ற அர்த்தத்தில், கெட்ட வார்த்தைகளாய் தங்கள் கருத்துகளைச் சொல்லிக் கொண்டு, முண்டியடித்தது. முணுமுணுப்புக்கள், வெடிப்புக்களாய் ஆகிக் கொண்டிருந்தன.

சப்-இன்ஸ்பெக்டரையே பார்த்த போலீஸ்காரர்களுக்கு, அவரைப் போலவே முகங்கள் கூம்பின. தமிழரசியை அண்ணுந்து பார்த்தார்கள். இதற்கு முன்பு தாங்கள் சந்தித்த தலைவர்களையும், மனதில் வரித்துப் பார்த்தார்கள். நேற்று, தமிழரசி செல்வாக்குள்ளவள் என்று முத்துலிங்கம், தன் தரப்பை வலுவாக்குவதற்காகச் சொன்னது, இப்போது பூதாகாரமாய்த் தோன்றியது. அழகாகத் தென்படும் இந்த தமிழரசி, இப்போது, நினைத்த போதெல்லாம் அகோர வடிவெடுக்கும் ஆதிபராசக்தி போல் தோன்றியது. இந்த இக்கட்டான தருணத்தில் சப்-இன்ஸ்பெக்டர், தாமோதரனையே நம்பியிருப்பது போல், அவனையே பார்த்தார். அவனே தலைகுனிந்து நின்றான். அவன் பார்வையில் படாமல் இருக்க, நகர்ந்து

நகர்ந்து போன தமிழரசி, அவனையும் எப்படியோ பார்த்தாள். அவனும், முத்துலிங்கம் மாதிரி கத்தியிருந்தால், அவளுக்கு ஆவேசம் அதிகமாகியிருக்கலாம். ஆனால், அவனோ தலையை நிமிர்த்தவில்லை. ஒரு தடவை மட்டும் தமிழரசியை ஏற்றமாகப் பார்த்துவிட்டுக் கண்களை இறங்கிக் கொண்டான். தமிழரசிக்கு என்னவோ போலிருந்தது. காரியங்கள் அவனை மீறி நடந்திருக்கலாம் என்றும் ஒரு எண்ணம் ஏற்பட்டது. அவன் எதுவும் பேசாமல் இருப்பதை, தனக்குக் காட்டும் சலுகையாக நினைத்தாள். காதலனை இழந்தாலும், காதலை இழக்காதவள் போல், அவனைத் தாபமாய் பார்த்தாள்.

இதற்குள், முத்துலிங்கம் சவாலிட்டார்.

"யார் வேண்டுமானாலும் எங்க வேணுமுன்னாலும் போகட்டும். எங்க குடும்பத்துக்கு அவமானம் உண்டு பண்ணுனவங்களை போலீஸ் விட்டாலும், நாங்க விடப் போறதில்ல. எவ்வளவு பெரிய பொம்பிளயாய் இருந்தாலும் கவலயில்ல. சட்டப்படி பார்ப்போம். சரிப்பட்டு வராட்டால் என்ன வேணுமுன்னாலும் செய்வேன்..."

தமிழரசி, முத்துலிங்கத்தை நிமிர்ந்து பார்த்தாள். பயந்து போய் தன்மேல் சாய்ந்த கலாவதியின் தலையில் திரண்டு ஊறிப்போயிருந்த ரத்தக் கட்டியில் ஒரு துண்டு, தன் ஜாக்கெட்டில் பட்டிருப்பதைப் பார்த்தாள். ரத்த வெறியோ...நியாய வெறியோ—அவள் வெறி பிடித்தவளானாள்.

"கலாவதி... எட்டி நடடி... இன்னைக்கு ஒன்ன அடிச்சாங்க... நாளைக்கு என்ன செய்வாங்களோ? உம்... புறப்படுங்க .."

தமிழரசியின் இரு புறமும் மாடக்கண்ணுவும், கலாவதியும் சூழ, தமிழரசி திரிசூலியாய் நடக்கப் போனாள். மகளிடம் வரப்போன பகவதியம்மா,

கூட்டத்துள் சிக்கிக் கொண்டாள். கூட்டத்தினர், அவளைக் கோபத்தில் நைப்பது தெரியாமல் நைத்துக் கொண்டிருந்தார்கள். கூட்டம் எதிர்த்துப் பேசி, போலீசாரையும், முத்துலிங்கத்தையும் பகைத்துக் கொள்ளும் அளவிற்கு வெளிப்படையாகத் தெரியாவிட்டாலும்,உள்ளூற வெப்பம் போல் உஷ்ணப்பட்டு நடந்தது. ஏதாவது செய்து நிலைமையை சமாளிக்கும்படி, சப்-இன்ஸ்பெக்டர், தாமோதரன் கையை அழுத்தினார். அவன் சொன்னால் தமிழரசி கேட்பாள் என்பது, அவள் அவனைப் பார்த்த விதத்திலேயே அவருக்குப் புரிந்துவிட்டது. தாமோதரன் கைகளை மீண்டும் அழுத்தி "பிளீஸ்...டூ... சம்திங்" என்றார்.

ஆனால்—

தாமோதரனோ தலையை நிமிர்த்தாமல், கண்களை உயர்த்தாமல், தரையையே பார்த்துக் கொண்டு நின்றான். தமிழரசி முன்னால் நடக்க, கூட்டம் முரண்படாமல் அவள் பின்னால் நடந்தது.

# 10

தாமோதரனைக் கடக்கிறோம் என்ற உணர்வோடு நடந்தாலும் அவனை ஏறிட்டு நோக்காமல், நெஞ்சின் இடது பகுதியை அழுத்திப் பிடித்தபடி, மூச்சை அடக்கி, முன் நெற்றியைச் சுருக்கி, 'படுகளத்தில் ஒப்பாரி கூடாது' என்ற பழமொழியை மனதுக்குள் சொல்லியபடி நடந்தாள் தமிழரசி. தாமுவும் கைகளை குறுக்காக வைத்தபடி தரையில் இருந்து கண் பிறழாமல், தலையைப் புரட்டாமல் நின்று கொண்டிருந்தான். அவ்வளவு பெரிய சபதம் போட்ட தமிழரசியின் அப்பா, அண்ணனுடன் சேர்ந்து மோவாயில் கை வைத்தபடி நின்றிருந்தார்.

தமிழரசியின் வலது பக்கமாக வந்த கலாவதி, தாமோதரனைப் பார்த்தாள். அவனுக்கும் இந்த நிகழ்ச்சிகளுக்கும் சம்பந்தம் இருக்காது என்ற எண்ணமா, இருக்கக் கூடாது என்ற ஆவலோ, எதுவென்று தெரியவில்லை. அவன் நின்ற கோலத்தைப் பார்த்ததும் ஈரக்காயங்களைச் சுமந்த அவள் நெஞ்சும் ஈரமாகியது. கிணற்று மேட்டில், அவன் தமிழோடு காதல் பேச்சுப் பேசியது; தன்னையும் மரியாதையுடன் சரிக்குச் சமமாக நோக்கியது; அவர்களுக்காக, தான் பதநீரும், நொங்கும் கொண்டு வந்து கொடுத்தது அத்தனையும் அவள் நெஞ்சுள் கசிந்து நீர்ப்பிரவாகமாக ஊற்றெடுத்தது. தன் ஒருத்திக்காக தன்னையே அவனிடம் இன்னொருத்தியாகக் காட்டிக் கொள்ளும் தமிழரசியை பயபக்தியுடன் பார்த்தாள். அவளை அறியாமலே அவளுள் ஒரு முடிவு ஏற்பட்டது. அடிபட்ட அந்த உடம்பிற்குள் பூகம்பம் வெடிப்பதுபோல் கத்தினாள்.

"நான் வர்ல. நான் வர்ல. எப்பா, நில்லும். நாங்க வர்ல..."

நடக்காமல், முரண்டு பிடித்து நின்ற கலாவதியை, தமிழரசி, ஆச்சரியமாகப் பார்த்தாள். பிறகு, தாமோதரனுக்குச் சொல்வதுபோல், "நான் மட்டும்... சந்தோஷப் பட்டா நடக்கேன். இனிமேல் எது நடக்கணுமோ அது நடக்கட்டும். இதுவரைக்கும் நான் பேசினது ஒனக்காக. இனிமே பேசப்போறது, போலீஸ் கையில் அகப்பட்ட ஒரு ஏழைப் பெண்ணைப் பற்றி. இப்போ நீயும் ஒனக்காக நடக்கல. குறைந்தபட்சம் இந்த ஊர்ல, ஒன்னை மாதிரி ஒருநிலைமை, இன்னொரு பெண்ணுக்கு ஏற்படக்கூடாதுன்னு தான். நீ நடக்கிறே...உம்...நட கலா..." என்றாள்.

கலாவதி, வாய்விட்டு அலறினாள். தமிழரசியின் கழுத்தில், தன் கரங்களைச் சுற்றிக் கொண்டு, அவள் மார்பில் தலை வைத்து மண்ணதிர, மானுடப் பார்வைகள் அதிர வீறிட்டாள்.

"நான் வர்ல...வர்ல... என்னுல யாரோட வேலையும் போயிடப்படாது. 'தாமுத்தான்' என்னுல கஷ்டப்படப் படாது. என்னுல ஒன்னோட வாழ்க்கை போயிடப்படாது. ஒன்னை...நீ அழிச்சுக்க ஒனக்கு சம்மதமாய் இருக்கலாம். ஆனுல் எனக்கு சம்மதமில்ல. எப்பா! ஒமக்கு மூளை இருக்குதா? நான் நடக்கும்போது நீரு ஏன் நடக்கியரு? நம்ம ராசாத்தி தமிழோட வாழ்வு என்னுவுமுன்னு நெனச்சிப் பார்த்தீரா? என் ராசாத்தி! என் தமிழு! என் உடன் பிறப்பே! ஆயிரம் பேர் என்னை ஆயிரம் சொல் லட்டும். ஆயிரம் அடிக்கட்டும். நீ ஒருத்தி, அந்த நொறுங்கு வான் செய்த காரியத்துக்கும், எங்களுக்கும் சம்பந்த மில்லன்னு நெனச்சா, அதுவே எங்களுக்கு ஆயிரம் யானைப் பலம். நான் வர்ல...வர்ல..."

ரத்தம் சொட்டிய கலாவதி, மார்பில் புரண்டதால், பச்சை ஜாக்கெட்டிற்கு சிவப்புக் கறை போட்டதுபோல் தோன்றிய தமிழரசி, அவள் அவலத்தை உள்வாங்கி இடி முழக்கம் செய்தாள்.

"நடடி! நீ வர மறுத்தாலும், ஒன்னை தூக்கிட்டுப் போக முடியும்..."

கலாவதி, கண்ணகியாகாமல், அன்பினில் நெக்குரு கும் அப்பாவிக் கிராமப் பெண்ணுக முறையிட்டாள்:

"நான் வர்ல. வர்ல... அப்படியே நீ என்னை வலுக் கட்டாயமாய் கூட்டிக்கிட்டு போனுலும், போலீஸ் அதிகாரி கிட்ட, இவங்க அடிச்சதாய் சொல்ல மாட்டேன். 'நானும், அப்பாவும் கீழே விழுந்துட்டோம். விழுகிற இடத்துல பனை ஓலையோட கறுக்கு மட்டைங்க கிழிச்சுட்டு'ன்னு பொய் சொல்லுவேன். சத்தியமாய் பொய் சொல்லுவேன். நான் வர்ல. வரமாட்டேன். அப்பாவையும்வர விடமாட்டேன்..."

தமிழரசி, தன் மார்பில் புரண்ட கலாவதியின் தலையை நிமிர்த்தி, அவள் கண்களைத் துடைத்தாள். எதுவும்

புரியாமல், அப்பாவித்தனமாக நின்ற சித்தப்பாவைப் பார்த்தாள். அத்தனை பேரையும், ஒட்டு மொத்தமாகப் பார்த்தாள். பிறகு, இன்னும் குனிந்த தலை நிமிர்த்தாமல் நின்ற தாமோதரனைப் பார்த்தாள். பார்க்கப் பார்க்கச் சிவந்தாள். சிவக்கச் சிவக்க வெடித்தாள்:

"பார்த்தீங்களா மிஸ்டர் தாமோதரன், இயேசுநாதர் சிலுவையில் ரத்தம் சிந்துனது மாதிரி சிந்தினாலும், அந்த பாதிப்பு இல்லாமலே இவள் பேசுறதை? ஒங்க காதுல விழுந்துதா? இந்த அப்பாவிப் பொண்ணை அடிக்க வச்சு, வேடிக்கை பார்க்கிற ஒங்களுக்கு, வருத்தம் தெரிவிக்கிற நாகரிகம் கூட இல்ல. தான் சிந்தின ரத்தத்தைக்கூட தண்ணீர் மாதிரி நினைக்கிறாள். நீங்களோ, இதெல்லாம் தண்ணிப்பட்டபாடு என்கிறது மாதிரி நிக்கிறீங்க. போகட்டும். நீங்க வருத்தம் தெரிவிக்கிறதுனால நடந்தது மறைஞ்சுடப் போறதில்ல. எப்படியோ ஒழியட்டும். நான் ஒங்ககிட்ட கேட்கப் போறது ஒன்றே ஒன்றுதான். இவளை சித்ரவதை செய்ததை இதோட நிறுத்தப் போறீங்களா, இல்ல ஒருபடி முன்னேறப் போறீங்களா? சொல்லுங்க மிஸ்டர் தாமோதரன். கேட்கிறது தமிழரசியில்ல; ஒரு பெண்ணோட கஷ்டத்தைத் தாங்க முடியாத இன்னொரு பெண்..."

தாமோதரன், தலையைக் குலுக்கி, கலாவதியை உற்றுப் பார்த்தான். அவள் காயங்களைப் பார்த்தோ, இல்லை அவள் காய்தல்-உவத்தல் இன்றி நின்றதாலோ, அவன் அவளையே பார்த்தபடி நின்றான். அவன் தோள்கள் குலுங்கின. மெள்ள மெள்ள, பூமிப் பார்வையை ஆகாயமாக்கி, தமிழரசியைப் பார்த்தான். பிறகு, எந்த வேகத்தில் பார்த்தானோ, அந்த வேகத்திலேயே, அவளிடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொண்டு, தன் பாட்டுக்குப் பேசுபவன்போல ஒப்புவித்தான்.

“இங்கே நடந்தது எல்லாமே துரதிருஷ்டமானது. இது தெரிஞ்சால், நான் ஊருக்கே வந்திருக்க மாட்டேன். நான் ஊர்ல வந்ததுல இருந்து, என் வரையில் நடந்த எதுவும் நடக்காமல் இருந்திருந்தால் நான் எவ்வளவோ சந்தோஷப் பட்டிருப்பேன். என்னமோ ... எப்படியோ நடந்துட்டு... ஐ ஆம் ஸாரி... இனிமேல் என்னால யாருக்கும் எந்தப் பிரச்சனையும் வராது...கலாவதி நிசமாவே பெரிய மனுஷி.”

தாமோதரன், கலாவதியையே மீண்டும் பார்த்தான். பிறகு போகிற போக்கில் தமிழரசியையும் பார்த்துவிட்டு வேகமாக வெளியேறி விட்டான். அவனைப் பிடித்துக் கொண்டு வருவதற்காக, முத்துலிங்கமும் வெளியே ஓடினார். போலீஸ் படையினரும், சுற்றுப்புறச்சூழலை, குறுக்கும் நெடுக்குமாகப் பார்த்து விட்டு, வெளியேறியது.

மாடக்கண்ணுவின் வீட்டிலிருந்து, தெருவுக்கு வந்த அனைவரும், கும்பல் கும்பலாக நின்றார்கள். இதற்குள், ஜீப்பில் முன்னிருக்கையில் ஏறிய சப்-இன்ஸ்பெக்டரிடம், முத்துலிங்கம் வினயமாகப் பேசினார். அவரது கையைப் பிடித்து, இறங்கும்படி இழுத்தார். ஆனால், அவரோ பலமாக தலையை ஆட்டிவிட்டு டிரைவரைப் பார்த்தார். ஜீப் பாய்ந்தது. அதன் பின்னால் நான்கைந்து சிறுவர்கள் ஓடி, கல்லையும், மண்ணையும் வாரியிறைத்தார்கள். முனையில் திரும்பப் போன ஜீப்பை தங்களைப் பார்த்துதான் திரும்புகிறது என்று அனுமானித்து, ஓடினார்கள். கூட்டத்தில் நின்ற ஒருவர் “ஏல பசங்களா, வெளியூர்க்காரன் சைக்கிள் டயர்கள பஞ்சராக்குறது மாதிரி, ஜீப்பில காற்ற புடுங்கி விடாண்டாம்? என்ன பையங்கடா...” என்றார். உடனே ஒரு சிறுவன் “அவ்வளவுதான்...அப்புறம் வெளில போக முடியாம...நேரம் போறதுக்காக... இங்கேயே போறவன்...வாரவனை எல்லாம் அடிப்பாங்க” என்று, தன்னை புத்தியுள்ள பயந்தாங் கொள்ளிப் பையனாகக் காட்டிக் கொண்டான்.

கூட்டத்தில் கிசுகிசுக்கள், முணுமுணுப்புகளாகி வார்த்தை பிரளயங்களாக வெடித்தன. "ஆயிரந்தான் இருந்தாலும்... நம்ம ஊரு பொண்ணை...போலீச வச்சு அடிச்சால் என்னய்யா அர்த்தம்" என்ற கேள்விகள்; "இவ்வளவு நேரமும் சும்மா இருந்துட்டு, இப்போ பேசினால் என்னவே அர்த்தம்" என்ற எதிர்க் கேள்விகள். "நம்ம ஊர்ப் பையங்க பெரிய வேலைக்குப் போனால், ஊரைத்தான் குட்டப் புழுதியாக்குவாங்க என்கிறது தெரிஞ்ச கதை தானே" என்ற வியாக்கியானங்கள். ராஜதுரைக்கும், அருணசலத்திற்கும் இடையே ஒடுங்கிப் போய் நின்ற முத்துலிங்கம், கூடிக் கூடிப் பேசிய கும்பல்களை முறைத்தார். அவர்களோ, அந்த மூவரையும், ஊரின் கால, தூத, எமனாக நினைத்து, சிறிது பேச்சில் பின்வாங்கினார்கள். பிறகு, தமிழரசியின் தைரியத்தை நினைத்தபடி, பேச்சில் முன்வாங்கினார்கள். இதைத் தாக்குப் பிடிக்க முடியாத அந்த மூவரும், பொடி நடையாக நடக்கத் துவங்கினார்கள்.

பைத்தியாரத் தர்மரின் வீட்டிற்குள் மொய்த்து நின்ற கூட்டம், சிறிது சிறிதாக விலகிக் கொண்டிருந்தது. "பாவிப்பயலுவ...கரிமுடிவான் மவனுவ...எப்டி அடிச்சிருக்காங்க..." என்று அச்சத்துடன் அலுத்துக் கொண்ட தாய்மார்கள்; தமிழரசி அங்கே நடமாடிய இடத்திற்கெல்லாம் சென்று, அவளை ஆச்சரியமாகப் பார்த்த சிறுவர், சிறுமியர்கள்—அத்தனை பேரும் அகன்றார்கள். "நல்ல வேளை! கடவுளாப் பார்த்து என் தங்கம்... தமிழரசியை அனுப்பியிருக்காரு. இல்லன்னா...மாடக் கண்ணு மச்சானும், கலாவதியும் போன இடம் புல்லு முளைச்சிருக்கும்" என்றாள் முத்துமாரிப்பாட்டி, தனது அடிபட்ட அங்கங்களைத் தடவியபடியே. இன்னொரு பெண், தமிழரசியை, வாயகலப் பார்த்தபடி "ஆமாம்...தமிழு... போலீஸ்காரங்கள அப்படிப் பேசுனியே, ஒனக்கு பயமாய் இல்லே? அவங்க அடிச்சால் என்ன பண்ணுவே? நான் மனசுக்குள்ளேயே அவங்கள திட்டுனேன். அப்போகூட

பயம். அது தெரிஞ்சு, அவங்க என்னை அடிச்சிடுவாங்களோன்னு மனசு படக்படக்குன்னு அடிச்சிக்கிட்டு'' என்றாள்.

தமிழரசி, தன்மானத்தை விலையாகக் கொடுத்து, சுதந்திரத்தை அனுபவிக்கும் அந்த மானுட ஜீவிகளைப் பார்த்து, வெறுமையாகப் புன்னகைத்தாள். அப்போதுதான் மேடைப் பேச்சிற்கும், ஊர் நிலைமைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதை, முழுமையாகப் புரிந்து கொண்டாள். 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று அவளே பேசியிருக்கிறாள். ஆனால், அதோ அந்த அப்பாவித் தர்மர், தான் வாங்கிக் கொடுத்த ஜரிகை வேட்டி, தும்பு தும்பாக, ராமபாணம் துளைத்த ராவணன்போல், லத்திக் கம்புகளின் குத்துக்களாலும் குடைச்சல்களாலும் நார்க் கட்டிலில் சோர்ந்து கிடக்கிறார். 'தாய்க்குலம்...புதுமைப் பெண்...பெண் விடுதலை' என்று அரசாங்க போஸ்டர்களில் இருந்து, 'ஆண்டிகள்' அடிக்கும் போஸ்டர்கள் வரை பீற்றிக் கொள்ளும் இதே இந்தக் காலத்தில்தான், இந்தக் கலாவதிப் பெண் கிழிந்த ஜாக்கெட்டை பிய்த்துக் கொண்டு, பீறிடும் பிறண்ட சதையை வெறுமையோடு பார்த்துக்கொள்கிறாள்! சமுதாயக் கொடுமைகளைப் பற்றிப் பேசாமல், 'ராமாயணம் சிறந்ததா...பாரதமா' என்று பேசுபவர்களைத் தூக்கில்போட வேண்டும்! முஸோலினியைப் போட்டது போல், போடவேண்டும்!

கூட்டம் போய்விட்டது.

முத்துமாரிப் பாட்டி, மாட்டுச் சாணத்தைச் சுட வைத்து, அதை ஒரு கந்தல் துணியில் போட்டு, குப்புறப் படுத்துக் கிடந்த மாடக்கண்ணுவை நெருங்கினாள். அவர் உடம்பெங்கும் ஒத்தடம் கொடுத்தாள். அடிபட்ட தனது கைக்கும், காலுக்கும் ஒத்தடம் கொடுத்துக் கொண்டாள். கலாவதிக்கு ஒத்தடம் கொடுத்த போது, அவள் வலியின் வலிமைக்குள் சிக்கி, வாய்விட்டுக் கத்தினாள்.

முத்துமாரிப் பாட்டியின் ஒத்தடத்தையே பார்த்துக் கொண்டு இருந்த தமிழரசி, போலீசாரை, அவ்வளவு எளிதாக விட்டிருக்கக் கூடாது என்ற குற்றவுணர்வில் அல்லாடினாள். தற்காலிகமாகவோ அல்லது நிரந்தர மாகவோ காதலில் இருந்து மறக்கடிக்கப்பட்ட தாமோ தரனை, கலாவதி நினைவுபடுத்தியதால், தானும் அவன் காதல் ஆளுகைக்கு உட்பட்டு, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமல் இணங்கியிருக்கலாமோ என்று வெட்கப் பட்டாள். இன்னும் அவர்கள் காயங்கள் போல், அவள் மனம் ஆறவில்லை அதே சமயம், தாமோதரன் கூனிக் குறுகி நின்றதும் பிறகு திரும்பிப் பாராமலே ஓடியதும், அவள் மனதில் ஓடாமலே நின்றது.

நேரம், மனோவேகமாய் ஓடிக்கொண்டிருந்தது.

தமிழரசி, தங்களுடன் இருக்கிறாள் என்ற உணர்வு இல்லாமலே, கலாவதி, அடுப்பங்கரைப் பக்கம் முடங்கிக் கொண்டாள். வலது கையை மடித்து தலையை அதில் வைத்து, தலைமுழுவதையும் முந்தானையில் மூடிப் படுத் தாள். அவள் கண்களில் திரண்ட நீர்த்திவலைகள், ஆலங் கட்டி மழைபோல் கை வெளிக்குள் விழுந்து கொண்டி ருந்தன.

"கட்டுலுல படும்மா..." என்ற குரல் கேட்டு நிமிர்ந்த தமிழரசி, சித்தப்பா, அவளுக்காக ஒரு சேலையை மடித்து 'பெட்டாகப்' போட்டிருப்பதைப் பார்த்தாள். அவர், கட்டில் பக்கம் முடங்கப் போனார். அவள் கட்டிலில் படுப்பது வரைக்கும் தான் முடங்கப் போவதில்லை என்பதைப் போல் அவளை ஏகாறி போல் பார்த்தார். அவருக்காக தமிழரசி, கட்டிலுக்கு வந்தாள்.

"எக்கா...எக்கா" என்ற சத்தம் கேட்டு கண் விழித்த தமிழரசி, தனது வீட்டு வேலைக்காரச் சிறுவன் நிற்பதைப் பார்த்தாள்.

"என்னடா?"

“ஒங்கம்மா சாப்பிடக் கூப்பிட்டாங்க...”

“அவங்களுக்கு நான் மகள் இல்லன்னு சொல்லு... போ... போடா...”

சிறிதுநேரம், தன் பங்கிற்காகவும் காத்து நின்ற சிறுவன் போய்விட்டான். தமிழரசியால் தூங்க முடியவில்லை. அப்பாவும், அண்ணனும், தனக்கு எதுவும் நேர்ந்து விடக் கூடாது என்பதற்காக, வெளியே காத்து நின்றது அவளுக்கு நினைவுக்கு வந்தது. அம்மாவை, கூட்டத்தில், அப்படித் தள்ளியிருக்க வேண்டாமென்றும் தோன்றியது. எப்படியோ... இப்போ நடந்ததைப் பார்த்தால், என் வாழ்க்கையில் என்ன நடக்கப் போவுதுன்னு தெரியல... எது வேண்டுமானாலும் நடக்கட்டும்.

உச்சக்கட்ட துக்கத்தாலும், சோர்வாலும் மீண்டும் கண்ணயரப் போன தமிழரசி, நிமிர்ந்து உட்கார்ந்தாள். அம்மா, ராகமில்லாத நிச ஒப்பாரி போடுவது கேட்டது. கல்லூரி விடுதிக்குள், தன் குட்டியை குரங்காட்டியிடம் பறிகொடுத்த ஒரு பெண் குரங்கு கத்தியதே, அதே மாதிரியான அவல ஒலி. பாசம் என்று வந்து விட்டால், பெண் புலியும், மான் போல் மருளும் என்பதை எடுத்துக் காட்டும் ஏக்க ஏக்கமான விம்மல்கள். துக்கம் துக்கமான ஒலி...

தமிழரசி, பாய்ந்து நடந்தாள். அம்மாவைப் பார்க்காத ஒவ்வொரு விநாடியும், வீண் விநாடி என்று நினைத்தவள் போல், தெருவுக்கு வந்து, தன் வீட்டுக்குள் வந்தாள். அவள் முற்றத்திற்கு வரும் முன்பே, அம்மாக்காரி ஓடிவந்து அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள். “நான் கலாவதியை திட்டி அழ வைக்க மாட்டேம்மா... என்கிட்டேயே இரும்மா” என்று அவள் பாசத்துள் கரைந்து, தமிழரசியை தன் கர்ப்பப்பைக்குள் மீண்டும் வைக்கப் போகிறவள் போல், அழுத்திப் பிடித்தாள். ‘ஏய்’ என்ற குரல் கேட்டு, இருவரும் நிமிர்ந்தார்கள்.

வெளியே இருந்து வந்த தமிழரசியின் தந்தை அருணாசலம், மகள் மேல் பாயப் போனார். வார்த்தைகள் வேகமாகவும், அவர் மகளைப் பார்த்து ஓடியது, அதிவேக மாகவும் இருந்தன.

''நீ என் மகள் இல்லன்னு காலையிலேயே தலைமுழு விட்டேன். என் வீட்டுக்குள்ளே நீ எப்படி வரலாம்? சண்டாளி. ஒன்னை என் கையாலயே வெட்டி, இங்கேயே குழிவெட்டிப் புதைக்கப் போறேன், பாரு.''

# 11

ஒரு நாளும் தன்னை அதிர்ந்துகூட பேசாத தந்தை, இப்போது அதற்கு மானநஷ்ட ஈடு கேட்பது போல், 'அடித்து'ப் பேச முற்படுவதைப் பார்த்த தமிழரசி, முதலில் துக்கித்தும், விக்கித்தும் நின்றாள். பகவதியம் மாள் கணவனை பலவந்தமாகப் பிடித்துக் கொண்டாள். அப்படியும் அருணாசலம் அவள் பிடியில் இருந்து அத்துமீறி மகளை நோக்கிப் பாய்ந்தார். அவர் கைகள், அவள் கண்களை குத்துமளவிற்கு நீண்டன. அவரது வலது கை, அவளின் இடது காதுப் பக்கமும், இடது கரம், வலது கண்ணின் பக்கமும் நீண்டன. தமிழரசி, அனிச்சையாகக் கூட கண்களைச் சொருகி, முகத்தை மூடி, தலையைக் கேடய மாக்காமல் அப்படியே நின்றாள். வீரன் என்பவனுக்கு இலக்கணம், அவனை நோக்கி போர்க்களத்தில் எதிரிகள் ஈட்டிகளை எறியும்போதும், அவன் கண்கள் இமைக்காமல் இருக்கவேண்டும் என்ற பொருள் சுமந்த புறநானூறு பாடல் ஒன்றைப் போதித்ததால் ஏற்பட்ட பாதிப்போ அல்லது நியாயத்தை விற்கப் புகுந்தால், அதற்குப் பதிலாக அநியாயங்களை வாங்கித்தான் ஆகவேண்டும் என்ற மனத்தெளிவோ, என்னவோ தெரியவில்லை,

தமிழரசி பெருமிதத்துடனேயே தன்னையே பார்த்துக் கொண்டு நின்றாள். தானே அங்கே நில்லாததுபோல் பாவித்தபடி நின்றாள்.

அப்பாக்காரர், மனைவியின் தலையில் இரண்டடி அடித்துவிட்டு, "என்னை விடுடி! அவளை இங்கேயே குழி வெட்டிப் புதைக்கப் போறேன்" என்று கூச்சலிட்டபடியே துள்ளினார். உடனே பகவதியம்மா "நம்ம எல்லாத் துக்கும் சேர்த்துத்தான் ஒம்ம தங்கத் தம்பி மவன் பெரிய குழியாய் வெட்டிட்டானே. அவள விடுங்க. எம்மா தமிழரசி, நீயுந்தான் அந்தப் பக்கமாய் போயேன். ஏன் திமிர் பிடிச்சு நிக்கிறே?" என்று தன் பேச்சை கணவனுக்கும், மகளுக்கும் பாகப்பிரிவினை செய்து கொண்டிருந்தாள்.

ஆனால் தமிழரசி, நகரவும் இல்லை. அருணாசலம் அசையாமலும் இல்லை. மகள் அடிப்பட்டு விடக்கூடாது என்ற ஒரே ஒரு குறிக்கோளுடன் "அய்யோ... கடவுளே... கடவுளே" என்று வெளியாருக்குக் கேட்க முடியாத அளவிற்கு, கேட்கக்கூடாத அளவிற்கு, பகவதியம்மா ஒப்பாரி போட்டாள். பிறகு ஒப்பாரியை நிறுத்தி, 'தம்' பிடித்து கணவனைக் குண்டுக் கட்டாகத் தூக்கி, வராண்டா விற்குக் கொண்டு வந்தாள். அப்போதும் மனைவியை கீழே தள்ளிவிட்டு, பாயத் தயாரான கணவனைப் பார்த்து "நம்ம அப்பா நம்மை அடிக்க மாட்டார் என்கிற தைரியத் துல அவள் நிற்கிறாள். அவளைப்போய் அடிக்கப் போறீ ராக்கும்" என்று பிடியை விடாமலே, பகவதியம்மா பேசிய போது, அருணாசலம் மகளைப் பார்த்தார். அது கலக்கத் தைக் காட்டாமல் கல்லைக் காட்டியது. உடனே அப்பாக் காரர் "செறுக்கி மவளுக்கு என்னை மாதிரியே குணம்" என்று தனக்குள்ளேயே பேசியபடி கைகால்களை ஆட்டா மல் நின்றார். அப்படியும் பிடியை விடாத "பிடி"யை (அதாவது பெண் யானையை)ப் பார்த்து, "என்னை விடுடி. நான் எவளையும் அடிக்கப் போகல. எங்கேயாவது ஓடிப்

போறேன். தோ பாருடி, நாம் பெத்த பிள்ள எப்படி கலங்கி இருக்கான்னு'' என்றார்.

வராண்டாவில் நாற்காலியில் படுத்துக் கிடப்பது போல் சுருண்டு கிடந்தான் ராஜதுரை. கண்கள் மூடிக் கிடந்தன. கைகள் சோர்ந்து கிடந்தன. தலை தொங்கிக் கிடந்தது. மகனைப் பார்க்கப் பார்க்க பகவதியம்மாவின் பெற்ற வயிறு பற்றியது. ''அடி ராட்சஸி! ஒண்ணோட கோலத்தை இங்கே வந்து பாருடி! ஒன்னால அவன் இடி விழுந்து கிடக்கதைப் பாருடி...'' என்று கூவினாள். ராஜ துரை, கண்களைத் திறக்காமலே ''நீ சும்மா இரும்மா. நம்ம அண்ணனும், எச்சிக் கஞ்சி குடிக்கிற வினைதீர்த்தான் பயலும் ஒரே வீட்ல சம்பந்தம் எடுத்து, ஒரே இலையில சாப்பிட முடியுமான்னு, இவ்வளவு படிச்சும் அவளுக்குத் தெரியல. எல்லாம் என் தலைவிதி. விட்டுத்தள்ளு'' என்றான்.

உள்ளே நின்ற தமிழரசியால் பொறுக்க முடியவில்லை. மடமடவென்று வெளியே வந்து அண்ணன் முன்னால் நின்றாள். அவன் படுத்திருந்த கோலத்தைப் பார்த்ததும் துடித்துப் போனாள். கீழே குனிந்து, உட்கார்ந்து, ராஜ துரையின் முகத்தை நிமிர்த்தி, ''என்னண்ணா நீ! அப்பாம்மாதான் வயசான காலத்தை சேர்ந்தவங்க. நீயுமா? நம்ம தாத்தாவும், வினைதீர்த்தான் தாத்தாவும் ஒரே ஆளாய் இருந்தபோது, ஒன்னோட பாட்டியும், அவனோட பாட்டியும் ஒரே பெண்ணானபோது, நீ அவன் கூட ஒரே இலையில சாப்பிடுறதுல என்ன தப்பு? ராம பிரான் குரங்கு இனத்தைச் சேர்ந்த அனுமானோடேயே ஒரே இலையில் சாப்பிட்டவரு. நீ அப்படிப்பட்ட ராமசாமி கோவில் கணக்கை எழுதிக்கிட்டே, இப்படிப்பட்ட பேச்சை பேசுறே பாரு...'' என்றாள். அவள் பேச்சில் ஆத்திரத்தை விட அன்பு அதிகமாய் இருந்ததால், ராஜதுரை, அதன் அர்த்தத்திற்குள் போகாமல், தங்கையின் கைக்குள்ளேயே தன் முகத்தை மறைத்துக் கொண்டான். அருணாசலம்

"எப்டியாவது இந்த வீடு நாசமாய் போவட்டும். போவட்டும் என்ன போவட்டும்? போயிட்டுது'' என்று சொன்னபடியே, எங்கேயோ புறப்படப் போனார். அப்போது—

தாமோதரனின் சித்தப்பா மகன்—அன்று நிச்சய தாம்பூல வீட்டில், தாமோதரனின் கிசுகிசுவை காதில் வாங்கியபடியே, தமிழரசியை கிண்டல் செய்தானே, அதே இளைஞன் அங்கே தலைகுனிந்து வந்தான். முற்றத்தில் நின்றபடி தமிழரசியை கோபமாகவும், மற்றவர்களை அனுதாபமாகவும் பார்த்தான். சிறிது நேரம் வாயாடாது நின்றுவிட்டு, வந்த காரியத்தை தலையை நிமிர்த்தாமலே ஒப்புவித்தான்.

''எங்க பெரியப்பா மகன் முத்துலிங்கண்ணன் ஒரு விஷயத்தை சொல்லிட்டு வரச் சொன்னான். விஜயாவுக்கும், ராஜதுரை மச்சானுக்கும் நடந்த நிச்சய தாம்பூலம்.. வெறும் தாம்பூலமாய் போயிட்டு. இவ்வளவு நடந்த பிறகு...ஒங்க மகளே எதிரியான பிறகு... இந்தக் கல்யாணம் நடந்தால் ஊர்ல நாலு பேர் சிரிப்பாங்களாம்... அதனால நீங்க வேற இடத்துல பொண்ணு பார்த்துக்கலாமுன்னு முத்துலிங்கம் அண்ணன் ஒங்ககிட்ட என்னை சொல்லிடச் சொன்னான். இதுக்குத்தான் பொம்பிளைங்களை அதிகமாய் படிக்க வைக்கக்கூடாது என்கிறது. நான் வாறேன்.''

அந்த இளைஞன், ஏதோ பேசப்போன அருணாசலத்திற்கு காது கொடுக்காமலே, தமிழரசியை மீண்டும் ஒரு முறைப்பு முறைத்துவிட்டுப் போய் விட்டான். போகிறவனின் முதுகையே பார்த்துக்கொண்டு நின்ற குடும்பத்தினர், எதிர்பாராத அழுகை ஒலி கேட்டுத் திரும்பினார்கள். ராஜதுரை, "எய்யோ... எம்மோ... எப்டில்லாமோ நினைச்ச நான், இப்டில்லாம் நடக்குமுன்னு நினைக்கலியே. இனிமேல், நான் ஊர்ல எப்டி தலைகாட்டுறது? மருந்தை குடிச்சிட்டு

சாகப் போறேன். இவ்வளவு நடந்த பிறகு, இனிமேல் இருக்க மாட்டேன். மாட்டவே மாட்டேன்'' என்று சத்தம் போட்டுக் கத்தி, தன் தலைமுடியைப் பிய்த்துப் பிய்த்து ஆட்டினான். நாற்காலிச் சட்டத்தில் தலையை இரண்டு மூன்று தடவை முட்டிக் கொண்டான். பகவதியம்மா கைகளை நெறித்தபடியே பேச்சற்று நின்றாள். பிறகு அவளும் தன் மகனை மார்போடு சேர்த்து அணைத்தபடியே அழுதாள். மகனை கண் கலங்கப் பார்த்த அருணாசலம், மகளை கண் கொதிக்கப் பார்த்துவிட்டு, ''உடன் பிறந்தே கொல்லும் நோய் மாதிரி ஆயிட்டியேழா... சண்டாளி! இனிமேல் நான் அப்பனும் இல்ல, நீ மகளும் இல்ல! ஒரு நொடிகூட இந்த வீட்ல இருக்கப்படாது'' என்றார்.

தமிழரசி அழுகின்ற அண்ணனையும், அழ வைக்கும் அப்பாவையும் ஒருசேரப் பார்த்தாள். குழந்தைக்குக் குழந்தையாய் அழுத தமையனைப் பார்த்ததும், அவள் தலை தானாகக் கவிழ்ந்தது. விஜயாவும், அண்ணனும், இலை மறைவு காய்மறைவாகப் பேசிக் கொண்டதாகக் கூட முத்துமாரிப்பாட்டி சொல்லியிருக்கிறாள். மனத்துள் நினைத்தவளை, மனத்துள் நினைத்துப் பார்க்கவோ நிறுத்திப் பார்க்கவோ முடியவில்லையானால் அதைவிட ஒருவனுக்கு என்ன கேடு வேண்டும். நான் ஒருத்தி பட்டது போதும். இவன் படக்கூடாது. துளிர்க்கவேண்டும். காதலித்தவளைக் கூட தங்கைக்கு சம்மதம் என்றால்தான் கைப்பிடிப்பேன் என்ற அண்ணாவாச்சே.

தமிழரசியின் மனத்துள் திடீரென்று ஒரு முடிவு ஏற்பட்டது. 'எப்படியோ நடந்தது நடந்து போச்சு. அது நடக்க வேண்டிய நல்லதை ஏன் தடுக்க வேண்டும்? வினை தீர்த்தான்—பொன்மணி விவகாரம், ராஜதுரை—விஜயா திருமணத்தை ஏன் விகாரப் படுத்த வேண்டும்? பெண் வீட்டாருக்கு எதிரியாய்ப்போன நானே போனால், அவர்

களுக்கு ஒரு வெற்றி மனப்பான்மையும் ஏற்படும். நிறுத்தப் பட்ட கல்யாணமும் நடைபெறலாம். நான் ஏன் இந்த விஷயத்தில் பெருந்தன்மையாக நடக்கக் கூடாது? ஆயிரம் நல்ல தன்மைகளில் முக்கிய தன்மை பெருந்தன்மைதானே!'

தமிழரசி எழுந்தாள். கலைந்த முடியை கொண்டை யாக்கிக் கொண்டு நடக்கப் போனாள். உடனே மகனை விட்டு விட்டு, மகளை குறுக்காக வழிமறித்த அம்மாவிடம், "எங்கேயும் போகலம்மா. பெண்வீட்டுக்காரங்க கிட்டே நான் பேசிப் பார்க்கலாமுன்னு போறேன். மொதல்ல, அண்ணனை சமாதானப்படுத்து. நான் நல்ல செய்தியோடு வாறேன்" என்று நடந்தபடியே சொன்னாள்.

பாதப் பெருவிரல்கள் மட்டுமே கண்களில் படும்படி, விழிகளை வேறு பக்கம் செலுத்தாமல் கால்களை செலுத்திக் கொண்டிருந்த தமிழரசி, தாமோதரன் வீட்டுக்கு முன்னால் வந்த பிறகுதான் தலையை நிமிர்த்தினாள். அங்கே திட்டுத் திட்டாய் நின்று திட்டிக்கொண்டிருந்த ஆட்கள் அவளை அதிசயித்துப் பார்த்தார்கள். நம்ப முடியாத ஒன்றை நம்ப வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானவர்கள் போல், ஒருவருடன் ஒருவர் கண்களால் பேசிக் கொண்டார்கள். "இவளுக்கு நம்ம தாமோதரனைப் பார்க்காம இருக்க முடியாது" என்று ஒருவர் கிசுகிசுப்பாய் பேசுவதும், தமிழரசிக்குக் கேட்டது. எதையும் எவரையும் சட்டை செய்யாமல், அவள், தாமோதரன் வீட்டுக்குள் நுழைந்த போது—

'அரங்கு' வீட்டில், 'மார்வாடிப்' பலகை ஒன்றின் மேல், ஏதோ ஒரு காகிதத்தில் எதையோ வேக வேகமாய் முத்துலிங்கம் எழுதிக் கொண்டிருந்தார். தாமோதரன் தன் சூட்கேஸிற்குள் ஆடைகளை அலங்கோலமாகத் திணித்துக் கொண்டிருந்தான். "தம்பி தம்பின்னு ஒன்னை தலையில் வச்சு குதிச்சேன். நீ என்னடான்னால் என் தலையையே குனிய வைக்கிறது மாதிரி பேசுறே! நீ அவளோட,

காசியாபிள்ளை கிணத்துல விளையாடுனே; அவள் ஒன்கிட்ட விளையாடுனது போதாதுன்னு, பொன்மணி கிட்டேயும் விளையாடிட்டாள்...'' என்று கத்திவிட்டு, மீண்டும் பேனாவை பயங்கரமாய் உதறியபடியே எழுதுவதைத் தொடர்ந்தார். அண்ணனுக்கு ஆறுதலாகவோ அல்லது அமுக்கலாகவோ பதிலளிக்கப் போன தாமோதரன், தமிழரசியைப் பார்த்து, அவளை ஆச்சரியம் பொங்கப் பார்த்தான். பிறகு அமைதியாக ''வாங்க... தமிழரசி... உட்காருங்க... எண்ணு... யார் வந்திருக்காங்க பாரு'' என்றான்.

தமிழரசி நிற்க முடியாமல் நின்று, தாமோதரனை நேருக்கு நேராகப் பார்த்தாள். கொலையுண்ட பல பிணங்களைப் பார்த்துப் பழகிப் போன அவன் முகமோ, பிணக் களையுடன் இருந்தது. 'இங்க' போடுறாரே .. இதுக்காகவா இங்க வந்தேன்? இதைவிட அவரே என் கன்னத்தில் நாலு அறை போட்டிருக்கலாம்...

முத்துலிங்கம், அவளை ஆவேசமாகப் பார்த்தார். சமையலறைக்குள் அடுப்பைக் குடைந்து கொண்டிருந்த அவர் மனைவி கனகம், அகப்பையுடன் வாசலில் வந்து நின்றாள். அங்கே அவளுக்கு ஒத்தாசை செய்து கொண்டிருந்த விஜயா, இரண்டு வகையிலும் அண்ணியாகப் போற தாய் நினைத்தவளை, வில்லியாக நினைத்தோ அல்லது வெறுமையாக நினைத்தோ தொப்பென்று தரையில் உட்கார்ந்து தலையில் கை வைத்துக் கொண்டாள்.

தமிழரசி, அங்கே நில்லாததுபோல் பாவனைகள். தாமோதரன் சூட்கேஸை பூட்டிக் கொண்டிருந்தான். மனத்தின் உணர்வுகளைப்போல் துணிகள் அலங்கோலமாய் வைக்கப்பட்டிருந்ததால், அவன் இதயத்தைப்போல் அந்தப் பெட்டியும் மூட மறுத்து வம்பு செய்தது. அவன் மீண்டும் சூட்கேஸைத் திறந்தான். முத்துலிங்கம் எழுதுவதை

நிறுத்தவில்லை. தடுமாறிப் போன தமிழரசி தன்பாட்டுக்கு தரையையே பார்த்தபடி பேசினாள்:

"ஆயிரம் நடந்திருக்கலாம். அதுக்காக ஆயிரங் காலத்துப் பயிரான இந்தக் கல்யாணத்தை நிறுத்தக் கூடாது. கல்யாணத்துக்கு நான்தான் இடைஞ்சல்னு, இந்த ஊரை விட்டு, என் குடும்பத்தைவிட்டு, ஒரேயடியாய் விலகிப் போக தயாராய் இருக்கேன். எங்கண்ணனையும், ஒங்க தங்கையையும் விலக்கிடப்படாது. முத்துலிங்கம் அத்தான் கிட்டே சொல்லிட்டுப் போகலாமுன்னு வந்தேன்...!"

முத்துலிங்கம், காகிதத்தில் எழுத்துகள் தப்புத் தப்பாக வந்ததாலோ என்னவோ அதை கையால் கசக்கிக் கிழித்துவிட்டு வேறொரு காகிதத்தை எடுத்தார். பிறகு தமிழரசியை கண்களால் எரித்தபடியே பதிலளித்தார்:

"ஒன்னைப்பற்றி எனக்குத் தெரியும். இன்னும் எங்களை எப்டில்லாம் அவமானப் படுத்தணுமுன்னு நினைக்கிறியோ? நீ இப்போ, அண்ணனுக்குப் பெண் கேட்டு வரல; ஒனக்கு மாப்பிள்ளை தேடி வந்திருக்கே. என் தங்கச்சியை கடத்துனது மாதிரி, இதோ இவனையும் கடத்த வந்திருக்கே. என்ன ஜெகசாலம் போட்டாலும் சரி, நீ செய்திருக்கிற அக்கிரமத்துக்கும், என் தங்கச்சியை கடத்துனதுக்கும்... ஒன்னை சும்மா விட்டுடுவேன்னு மட்டும் நினைக்காதே. மானம் இருந்தால் இதுக்குமேல இங்கே நிற்கமாட்டே..."

தமிழரசி ஒடுங்கிப்போய் நின்றபோது, அடுப்படியில் இருந்து கனகம் கர்ஜித்தாள்:

"'ஒய்யாரக் கொண்டையாம் தாழம் பூவாம், உள்ளே இருக்குமாம் ஈறும் பேனும்'. ஆம்புளயப் பார்க்க ஆசப்பட்டு, வீடு தேடி வாரதை விட, தூக்குப் போட்டுச் சாகலாம். ஏய் விஜயா, நான் ஒன்னையாடி வைதேன்?

நீ ஏண்டி அழுகிறே? ராஜதுரையை மறக்க முடியாட்டால், வேணுமுன்னால் இவள் கூடவே போய், அவன்கிட்ட சேர்ந்துக்கிறியா? தூ... குடி கெடுப்பாள்! எந்த நேரத்துல மெட்ராஸ்ல இருந்து இந்த ஊருக்குள்ள காலடி வச்சாளோ, ஊரே ஆடிப் போச்சு!''

தமிழரசி சமையலறைப் பக்கம் திரும்பினாள். கனகம் எதையோ ஒன்றை சட்டியில் தாளித்துக் கொண்டே பேசிக் கொண்டிருந்தாள். அந்தப் பேச்சைக் கேட்கக் கேட்க மூளையோடு சேர்ந்து, உடம்பே குழம்பியதுபோல் நின்ற தமிழரசி, மீண்டும் சுயமரியாதைக்காரியானாள். தாமோதரனைப் பார்த்தாள். அவனோ எதுவும் நடக்காதது போல் இன்னும் சூட்கேசோடு போராடிக் கொண்டிருந்தான்.

தமிழரசி தலை நிமிர்ந்தாள். தன்னளவில் தன் மானத்தையே கூலியாகக் கொடுத்துச் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்ட திருப்தி. ஒரு பெண்ணின் கவுரவத்தைக் காப்பாற்றுவதற்கு இரண்டாவது தடவையாக தவறியவன் ஆண் மகனே இல்லை. அப்புறம் அவன் எப்படிக் காதலனாக இருக்க முடியும் என்பதைக் கண்டு பிடித்து விட்ட அதிருப்திகரமான திருப்தி—சுயமரியாதைக்கு வழி விட்டு, காதலை தேய்பிறையாக்கிய எண்ணக் கம்பீரம்...

தமிழரசி நடந்தாள். சமையலறைக்குள் இன்னும் சுவரில் தலைபட, கண்களில் நீர்பட, காதோரம் அதன் கறைபட, உடைந்த வளையல் துண்டு ஒன்றை கழுத்தில் குத்தியபடியே இருந்த விஜயாவைப் பார்த்தாள். அவளோ, அண்ணியை ஜாடையாகப் பார்த்துவிட்டு, தலைக்குமேல் கரங்களைக் கொண்டுபோய் தமிழரசியை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டாள். ''தமிழு! இந்தக் கும்புடுக்கு ஒனக்கு அர்த்தம் தெரியுமா? எங்க அண்ணி கனகம் இந்தச் சாக்குல என்னை அவளோட குடிகாரன் தம்பிக்கு பலியாக்க நினைக்கிறாள். ராஜதுரை மச்சானை நினைச்ச இந்த மனசு,

ஒனக்குப் புரியலியா? கலாவதியைக் காப்பாற்றுனது மாதிரி என்னையும் காப்பாற்று தமிழு...''

தமிழரசி, விஜயாவிடம் கண்களால் மன்னிப்புக் கேட்ட படியே, அந்த வீட்டைவிட்டு வெளியேறினாள். கால்களால் நடக்க முடியவில்லை. கண்களால் பார்க்க முடியவில்லை. மனதால் நினைக்க முடியவில்லை. தாமோதரன் வீட்டின் சுற்று வட்டார ஆண்களும், பெண்களும் தன்னையே கண் களால் சல்லடை போடுவது தெரியாமல் தள்ளாடித் தள்ளாடி நடந்து, ஒரு ஆலமரத்தின் கிளையை, ஆதர வாகப் பற்றிக் கொண்டாள்.

சிறிது நேரத்திற்குப் பிறகு தமிழரசி, தன் காது களுக்குக் கேட்கும்படியே தானாகவே பேசினாள்.

''இழக்கக் கூடாத எல்லாரையுமே நான் இழந்துட் டேன். நான் இழந்தால்கூட பரவாயில்ல... ராஜதுரை, விஜயாவை இழந்தான். கலாவதி, அண்ணனை இழந்தாள். என்னோட பெற்றோர், என்னை இழந்துட்டாங்க. இனிமேல் இந்த ஊரையே நான் இழக்கப்போறேன்... இந்த ஊருக்கு இனிமேல் திரும்ப மாட்டேன்... திரும்பக்கூடாது ..''

தமிழரசி யந்திரமாய் வீட்டை நோக்கி வேகமாய் நடந்தாள். "இப்போ புறப்பட்டால்தான் சென்னை ரயிலைப் பிடிக்க முடியும். என்னைப் பொறுத்த அளவில் அது திரும்பி வராத ரயில்—என் காதலைமாதிரி.''

தலையே என்ஜின் ஆகி, உடம்பே ரயில் பெட்டிகளாய் ஆனதுபோல், தமிழரசி தலையை நீட்டி, உடம்பைச் சாய்த்து நடந்தாள்.

''அவளை தடம்புரள வைப்பதற்காக முத்துலிங்கம் இன்னொரு திக்கில் நடந்துகொண்டிருந்தார்.''

# 12

இக்கட்டான சமயத்தில், நமக்கு நாமே வழிகாட்டிப் போவதுண்டு. இதற்கு, மனதுள் புதையுண்டு கிடக்கும் மனோசக்திதான் காரணம் என்பார்கள்.

மயானத்தில், "பதி இழந்தனம், பாலனை இழந்தனம்" என்று அரிச்சந்திரன் புலம்பியதாக, நல்லூர். வீரை. ஆசுகவிராயர் எழுதிய வரிகளை நினைத்து, அந்த அனுதரவு அரிச்சந்திரனுடன் தன்னை ஐக்கியப்படுத்தி, பேதலித்து நின்ற தமிழரசி, அந்த பொய்யாமை மன்னன், அடுத்துக் கூறிய 'கதி இழக்கினும் கட்டுரை இழக்கோம்' என்ற வரிகளை நினைத்து, புடவையை வரிந்து கட்டிக் கொண்டாள்.

இலக்கிய வரிகள், சில சமயம், சிக்கலில் தவிப் போருக்கு, தெய்வ வரிகளாகி, அசரீரி குரலாய் ஒலித்து, அடிமனோசக்தியை, அணுசக்தியாக்கும் என்பதை எடுத்துக் காட்டுவது போல், தமிழரசி தனக்குத்தானே வழிகாட்டி யாகி மீண்டும் வீராங்கனையானாள். குனிந்த தலையோடு நின்றவள், நிமிர்ந்த தலையோடு நடந்தாள். அவளுள் ஒரு அசைக்க முடியாத முடிவு ஏற்பட்டது. இனி, யார் தடுத்தாலும் தனது மனமே, அதற்கு எதிராய் வாதிட் டாலும் மசியப் போவதில்லை என்ற தீர்க்கத்துடன் வீட்டை நோக்கி நடந்தாள்.

அக்கம் பக்கம் நின்று, தன்னையே அதிசயமாய் பார்த்தவர்களை, கண்டும் காணாமலும் நடந்தவள், அனிச்சையாக, வீட்டிற்குள் வந்த பிறகுதான் அது, தான் பிறந்து வளர்ந்த வீடு என்பதை உணர்ந்தாள். வீட்டின் மூன்று மூலைகளிலும், சொல்லி வைத்ததுபோல், பெற்றோரும், அண்ணனும், தமக்குத்தாமே துணை என்பது போல் சாய்ந்திருந்தார்கள். பகவதியம்மா, வாய்க்குள் ஈயாடுவது தெரியாமலும், அருணாசலம் அசைவற்றும், ராஜ

துரை, அடியற்ற மரம் போலவும் சோர்ந்து கிடந்தார்கள்" தமிழரசியைப் பார்த்தாலும், அவளை ஏறெடுத்தும் பார்க்க வில்லை. 'என்ன ஆச்சு' என்று கேட்கவும் இல்லை.

தமிழரசி, உள்ளறைக்குள் போய், கொடியில் தொங்கிய புடவைகளை மடித்து, சூட்கேஸிற்குள் திணித் தாள். அப்போது, தாமோதரனும் அப்படிச் செய்தது, அவளுக்கு நினைவுக்கு வந்தது. இந்நேரம் புறப்பட்டாலும் புறப்பட்டிருப்பார்! இரண்டாக மடித்த புடவை ஒன்றை, நான்காக மடிக்காமல், விரித்த கரத்தை சுருக்காமல், பிரித்த வாயை மூடாமல், கண்களை மூடி, அவற்றை தானுகப் பார்த்துக் கொண்டாள்.

மூடப்பட்ட கண்களுக்குள் காசியாபிள்ளை கிணற்று மேடும், தாமோதரன் தன் முகத்தை கரங்களில் ஏந்தியதும், கலாவதி பதனீர் கொண்டு வந்ததும் நிழல் படங்களாய் வந்தன. முதலில் கருப்புக் கருப்பாய் வந்த காட்சிகள்-அப்புறம் சிவப்புச் சிவப்பாய், நீலமாய், பச்சையாய், பவளமாய், பல்வேறு வண்ணக் கலவையாகி, மீண்டும் கருப்புக் கருப்பாய் மாறி, கண்ணிருட்டில் கரைந்தன.

தமிழரசி, கண்களைத் திறந்தாள். எல்லாமே சூன்ய மாய், வெட்ட வெளியாய் தோன்றின. திறந்த கண்களில் தோன்ருத காட்சிகள், மூடிய கண்களில் எப்படி 'கலர் கலராய்' வருகின்றன? இதனுல்தான் மனக்கண் புறக் கண்ணைவிட மகத்தானது என்று யோகிகள் சொல் கிருர்களோ... இந்தச் சமயத்தில், இப்படிப்பட்ட ஒரு நினைப்பு வருகிறதே என்று தன்னைத்தானே எள்ளி நகை யாடியவள்போல், வெறுமையாகச் சிரித்தாள். மீண்டும் இனந்தெரியாத சோக சுகப் போதையில் மூழ்குவதற்காக கண்களை மூடப்போனவள், அவற்றைப் பலவந்தமாகத் திறந்து வைத்துக் கொண்டாள். தன்னைத்தானே நிர்த்தர்ட்சண்யமாகக் கேட்டுக் கொண்டாள்.

'இந்த தாமோதரன், ஒரு அபலைப்பெண்ணையும், அவள் தந்தையையும், உத்தியோக பலத்தை வைத்துத் தாக்கிய மனிதர். என்னை, அவர் வீட்டார் இழிவு செய்தபோதும், ஒப்புக்குக் கூட தலையிடாத மனிதர். அப்படி இருந்தும், அவரை மறக்க முடியவில்லையே. அவர் செய்த அல்லது செய்யத் தவறிய ஒவ்வொரு காரியத்திற்கும், என் மனம் ஏன் வக்காலத்து வாங்குகிறது? இந்த நினைப்பிற்குப் பேரென்ன? 'காதலுக்கு, கொடுக்கத்தான் தெரியும்; வாங்கத் தெரியாது' என்று சொல்வது இதனால்தானோ...'

தமிழரசிக்கு, தான் படித்த—மாணவிகளுக்குப் பயிற்றுவித்த, ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான, மணிமேகலை நினைவுக்கு வந்தது. அந்த மாதவிக் குட்டியை, அரசகுமாரனான உதயகுமாரன், ஆணவத் தாலும், அளவற்ற காதலாலும் உவவனத்தில் கைப்பற்றப் போகிறான். அவனுக்குப் பயந்து ஒளிந்து கொண்ட மணிமேகலையோ, அவன் போனதும் 'புதியோண்பிள்ளை போனது என் நெஞ்சே... ஈதோ அன்றய' என்று காதல் சிலிர்க்கப் புலம்புகிறாள்!

அந்த நிலைதான் என்றன் நிலை. இந்த மணிமேகலை, பெண்மையாலும், சக்தி வீரியத்தாலும், பாத்திரப் படைப்பாலும், கண்ணகியைவிடப் பெரிதும் வளர்ந்தவள். தமிழ் இலக்கியத்தில், பாட்டாளி வர்க்கப் படைப்பாலும், அவர்களுள் ஒருவராய் வாழ்ந்த நெறியாலும், எந்த எழுத்தாளனும் தொடாத இலக்கியச் சிகரத்தை தொட்ட வீச்சாலும், தக்காரும் மிக்காரும் இல்லாத தனிப்பொருள் படைப்பாளியான விந்தன், திறனாய்வாளர்களாலும், முட்டாள் வாசகப் பரப்பாலும், 'அமுக்கப்பட்டதுபோல்' இந்த மணிமேகலையையும், இலக்கியப் பேச்சாளர்கள் அமுக்கி விட்டார்கள். இவளின் பாத்திரப் படைப்பை, கண்ணகிதாசர்களுக்கு முதலில் விளக்கியாக வேண்டும்...!

தமிழரசி, சிந்தனையில் இருந்து கலைந்து செயல் பட்டாள். மனதுள் இருந்த எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக எடுத்து வெளியே போடுவதுபோல், சூட்கேஸிற்குள் எல்லாத் துணிகளையும் எறிந்தாள். பின்னர் சூட்கேஸும் கையுமாக முற்றத்திற்கு வந்தாள். அப்பாவையும் அம்மாவையும், அண்ணனையும் ஒட்டு மொத்தமாகவும், தனித் தனியாகவும் பார்த்தாள். பார்த்துக் கொண்டே நின்றாள்.

இதோ இந்த இடம், அவள் தந்தையும், தாயும் கொஞ்சிக்குலாவி அவளைப் பிறப்பித்த இடம். பள்ளிக் காலத்திலேயே, தாமோதரன் நினைப்போடு வலம் வந்த பூமி. அண்ணன் ராஜதுரையுடன் ரயில் விளையாட்டும், கலாவதியுடன் 'கிளித்தட்டும்' ஆடிய வீடு. இனிமேல், இந்த வீட்டிற்கு, என்றால் வர முடியுமோ முடியாதோ? எப்படியோ, நான் இந்த வீட்டில் இருந்து போனால்தான் ஒருவேளை ராஜதுரையோடு வாழ்க்கை நடத்த விஜயா வர முடியும்.

சூட்கேஸை கையில் தூக்கியபடி, தன்னையே தாபமாகப் பார்த்த தமிழரசியை, அவள் அம்மா பகவதியம்மா, மலங்க மலங்கப் பார்த்தாள். பிறகு கையை தரையில் ஊன்றி எழுந்திருக்கப் போனாள்.

அது முடியாமல் போகவே "போடி, போ! வெளை தீர்த்தான் பயல் வீட்டுக்கா போறே? பெத்துப் போட்டவளை விட்டுட்டு, வெத்து வேட்டுக்காரிக் கிட்டேயே போறியா? போ. என் இழவுக்காவது வந்து தலையைக் காட்டு. ஒன்னை சொல்லி குற்றமில்லடி. அந்தப் பாவி முண்டை, பச்சிலை தட்டியிருக்காள். நீ எங்கே இருந்தாலும் நான்தாண்டி ஒனக்குத் தாய்! இதை எந்த பச்சிலையாலும் மாற்ற முடியாது" என்று புலம்பினாள்.

தமிழரசி ஓடிப்போய், அம்மாவின் முகத்தை நிமிர்த்தினாள். பிறகு, அவளோடு அவளாக உட்கார்ந்தபடியே அம்மாவை கட்டியணைத்துக் கூவினாள்.

"அப்டில்லாம் யாரையும் மனம் நோக பேசாதம்மா. நான் மெட்ராசுக்குப் போறேன். இங்கே இதுக்கு மேலயும் நான் இருந்தால், நல்லதுக்குப் பதிலாய் கெட்டதுதான் நடக்கும். அண்ணனுடைய கல்யாணம் நின்னுடப் படாதுன்னு, நான் ஒரேயடியாய் போறேம்மா. அதனால நீ பெற்ற குழந்தை ... ஒன் மடியில புரண்ட நான் போறேம்மா. கலாவதியை திட்டாதம்மா. அண்ணன் கல்யாணத்தை முடிச்சுடும்மா. அப்பாவை நல்லா பார்த்துக்கம்மா. அப்புறம்..."

தமிழரசியால் பேச்சைத் தொடர முடியவில்லை. அந்த பேச்சுத் தொடர்ச்சிக்கு விம்மல்கள், 'கமாக்களாயின', கேவல் ஒலிகள் ஆச்சரியக் குறிகளாயின. இறுதியில் அழுகை அதற்கு முற்றுப்புள்ளியாகியது. பேசிய வாய்க்கு அம்மாவின் தோள் அடைக்கலமாகியது.

குழந்தையாய் கேவிய மகளைக் கட்டியணைத்து, உச்சி மோர்ந்து தாய்க்காரி, சக்திக்கு மீறிய குரலில் அழுதாள். பிறகு மகளின் முகத்தை நிமிர்த்தி "நீ எதுக்கம்மா போகணும்? அண்ணனுக்கு நல்லது செய்யுறதாய் நெனைச்சு, நீ போகாண்டாம்மா. அதோ பாரு, அண்ணன் கூட அழுகிறான் பாரு" என்றாள்.

தமிழரசி அண்ணனை, ஆசை மிஞ்சப் பார்த்தபோது, அவனோ "நான்...யாரும் போகப்படாதுன்னு அழல..." என்று சொல்லியபடியே அழுதான். ஒரு வேளை, தமிழரசியை, சென்னைக்குக் கொடுத்து, விஜயாவை வீட்டிற்குள் வாங்கிக் கொள்ளலாம் என்ற நினைப்போ... என்னவோ.

அப்பட்டமான சுயநலம், அண்ணனின் முகத்தில் ரேகைகளாய், சுழிப்புக்களால் தோன்றியிருப்பதைக் கண்ட தமிழரசி, அம்மாவை பலவந்தமாக உதறியபடி எழுந்தாள். கீழே கிடந்த சூட்கேஸை எடுத்துக் கொண்டு, தந்தையைப் பார்த்தாள்.

அவரோ, சிறிது நேரம் பேச்சற்றுப் போனார். மகளை தற்செயலாய் பார்த்த கண்களை விலக்கி, அவற்றை மனைவி மீது வீசியபடியே "இவளை கண்டபடி திட்டுனலாவது, முத்துலிங்கம் மனசு மாறுமுன்னு நினைச்சேன். அவனும் ஒரேயடியாய் குதிக்கான்'' என்றார்.

தமிழரசி புரிந்து கொண்டாள். தந்தை, மறைமுக மாக தன்னிடம் வருத்தம் தெரிவிப்பதைக் கண்டு கொண் டாள். அவள் மனம், உடம்புள் அனல் காற்றை வீசியது. கல்லூரிக்கு வெளியேயும் உள்ளேயும் தன்னை தவம் செய்வது போல் காத்துக் கிடந்து பார்த்துக் களித்த தந்தையை, மனம் பொங்க, கண் பொங்கப் பார்த்தாள். பிரியப்பட்டவளைக் கூட, தன் அனுமதியுடன் கை பிடிக்க நினைத்த அண்ணனை மருவி மருவிப் பார்த்தாள்.

ஒரு வேளை, அவரோ அவனோ 'ஏன் போறே' என்று கேட்டிருந்தால் தமிழரசி, தோற்றிருக்கலாம். பகவதி யம்மாதான், "அவளை போகாண்டாமுன்னு சொல் லுங்க... சொல்லுங்க'' என்று சொன்னபடியே எழுந்தாள்.

தமிழரசி, தன்னிடம் தானே தோற்க விரும்பாதது போல், வாசலை நோக்கி நடந்தாள். அப்பா, போகாண் டாம் என்று சொல்வதற்கு முன்பே புறப்பட்டாக வேண்டும் என்று எண்ணி, வாசலுக்கு வந்தவள், அங்கிருந்தபடி, அண்ணனை ஒரு தடவையும், அப்பாவை இரு தடவையும், அம்மாவைப் பல தடவையும் பார்த்துக் கொண்டாள்.

"ஒரு தடவையாவது என் கையால சாப்பிட்டுட்டுப் போம்மா. நீ திரும்பி வரும்போது, நான் இருக்கேனோ இல்லியோ'' என்று அம்மா அழுதபோது தமிழரசி, வீட்டிற்கு வெளியே ஓடி வந்தாள். அம்மா, பாசக் கயிற்றால் கட்டிப் போட்டு விடுவாள் என்ற பயம். கடவுளே... கடவுளே... அம்மா சொல்வது மாதிரி, இது தான் அவளை நான் பார்க்கும் கடைசித் தடவையோ?

அம்மாவுக்கு எதுவும் ஆயிடுமோ? ஆகாது. அண்ணன் இருக்கான், அப்பா இருக்கார். நான்தான் இருக்கப் படாது

தெருவில் நின்றபடி, தன் வீட்டையே வெறித்துப் பார்த்த தமிழரசி, சித்தப்பா வீட்டிற்குள் நுழைந்தாள். மாடக்கண்ணு, லத்திக் காய முத்திரைகளுடன், அசந்து தூங்கிக் கொண்டிருந்தாலும், இன்னமும் ரத்தம் உலராத அந்தக் காயங்களைக் கடித்த கொசுக்களையும், ஈக்களையும் தூங்கியபடியே கைகளால் அவ்வப்போது துரத்தினர். உடம்பை நெளித்தார்.

அதைப் பார்க்கப் பார்க்க தமிழரசிக்கு மீண்டும் ரத்தம் கொதித்தது. பெற்றோர் மீதும், தனக்கு முன்னல் பிறந்தவன்மீதும் மீண்டும் வெறுப்பேற்பட்டது. வீட்டிற்குள், மகளின் பிரிவுத்துயரைக் கண்ணீரால் கழுவிக் கரைப்பதுபோல் சத்தம் போட்டு அழும் அம்மா, அப்போது அவளுக்கு ஒரு பழிகாரியாகத் தோன்றினள்.

இளமைக் காலத்தில், தன்னை ஒரு தோளிலும், கலாவதியை இன்னொரு தோளிலும் சுமந்தபடி, ராமலட்சுமணரைச் சுமந்த அனுமான் போல, தங்களை கோவில் குளங்களுக்குக் கொண்டு சென்ற அந்த 'பைத்தியார'த் தர்மரையே பார்த்தபடி நின்றுள். பிறகு, அவர் கால் மாட்டில் பதினைந்து பத்து ரூபாய் நோட்டுக்களை வைத்து விட்டு, நிமிர்ந்தபோது, அடுப்பங்கரையில் முடங்கிக் கிடந்த கலாவதி, அவளையே பார்த்தபடி இருந்தாள். தமிழரசிக்கு, மனம் வியர்த்தது. குரல் கனத்தது. கண் பனித்தது. அவளைப் பார்க்காமல், ஆகாயத்தைக் காட்டிய கூரை மேட்டையே பார்த்தபடி பேசினுள்.

"நான் இப்பவே மெட்ராஸ் போறேன் கலா. இந்தச் சமயத்துல நான் இங்கே இருக்கது நல்லதல்ல. அப்பாவை ஜாக்கிரதையாய் பார்த்துக்கோ. எனக்கு அடிக்கடி லட்டர் போடு. வினைதீர்த்தானையும், பொன்மணியையும் தேடிப்

பிடிச்சு, இங்கே அனுப்பி வைக்கேன். ரூபாய்... அதோ வச்சிருக்கேன். அப்பாவும் நீயும் டாக்டர் கிட்டே காயத்தைக் காட்டுங்க. ஒரு வேளை ஊமைக் காயம் இருக்க லாம். அது ரத்தக் காயத்தைவிட...உயிர்ல முடிக்கிற காயம்... ஏன் கலா பேச மாட்டக்கே?''

கலாவதி, கண்ணீர் விட்டாள். காயத்தை ஆற்றிவிட லாம். ஆனல் ஊர் கண் முன்னுல் அடிபட்ட மானத்தை எப்படி ஆற்றுவது என்று கேட்க நினைத்தாளோ? இந்த நிலையில், எங்களை நிர்க்கதியாய் விட்டுட்டுப் போவது நியாயமான்னு சொல்ல நினைத்தாளோ? ஒரு வேளை, எதுவும் கேட்கத் தோன்ருததால்தான் கண்ணீர் சிந்து கிருளோ?

தமிழரசி, கலாவதியை தூக்கி நிறுத்தினுள். அவள், தலையைக் கோதியபடி பரிவோடு பேசினுள்.

''ஏண்டி கலங்குறே? என் உடம்பு எங்கே இருந்தாலும், என் மனம் இந்த ஊர்லதான் சுத்திக்கிட்டு இருக்கும். வடக்குத் தெருவுல இல்லே... அதோ அழுகிருளே... அந்த வீட்ல இல்லே... இந்த வீட்லயே சுற்றும்... நான் இருக் கேன்... பயப்படாதே... ஏண்டி இன்னும் அழுவுறே? 'போயிட்டு வா தமிழு'ன்னு ஒரு வார்த்தை சொல்லேண்டி. ஒனக்குக் கூடவா என் மனசு புரியல?''

கலாவதி, தமிழரசியை இறுகக் கட்டினுள். உடம்பில் ஏதாவது ஒரு இடத்தில் அடிபட்டால், அடிபட்ட பகுதியில் வலியெடுக்காமல், அது வெள்ளை வெளேரென்று தோன்றி, அதில் இடியுடன் கூடிய மழைபோல், வலியுடன் கூடிய செம்மழை பீறிடுவதுபோல், முதலில் பேதலித்து நின்ற கலாவதி, தமிழரசியை அழுந்தப் பிடித்தபடி ஒரே யடியாய் அரற்றினுள்.

''எங்களைப் பிடிச்ச கெட்ட காலம், ஒன்னையும் பிடிச் சுட்டே தமிழு. நாங்க அடிபட்டதுகூட பெரிசில்ல. நீயும் ஒன் வாழ்க்கையில அடிபட்டு, ஊமைக்காயத்துல தவிச்சதைப் பார்க்க என்னுல தாங்கமுடியலியே தமிழு.

இந்த ஊரு, நீ இருக்கதுக்கு தகுதியில்லாத ஊரு. போம்மா. நீ எங்கெல்லாம் போறீயோ, அங்கெல்லாம் இந்த கலாவதியோட உயிரு சுத்தும். எய்யா...எய்யா... நம்ம ராசாத்தி மெட்ராசுக்கு போறுள். எழுந்திரும்.''

''அப்பாவை எழுப்பாதடி, அவரைப் பார்த்துட்டு என்னுல போக முடியாது. நான் வரட்டுமா? நீ கூட வரப் படாது வழியனுப்ப. வாசலுக்குக்கூட வராண்டாம். இல்லன்னு, அதோ, அங்கே ஒப்பாரி வைக்கிற எங்கம்மா... நீதான் என்னைக் கடத்திட்டேன்னு பழி போடுவாள். வினைதீர்த்தானை தேடிப் பிடிச்சு அனுப்பி வைக்கேன்.''

''அந்த நொறுங்குவான் எக்கேடாவது கெடட்டும். ஊர்ல எல்லாம் ஆடி அடங்குனதும், நீ இங்கே வந்து, ஒரு தடவையாவது மொகத்தைக் காட்டிட்டுப் போ.''

தமிழரசி, கலாவதியிடம் இருந்து விடுபட்டு, சித்தப்பாவைப் பார்த்தாள்; அவர் காயங்களில் மொய்த்த ஈக்களை, தன் முந்தானையால் வீசிஞள். அதைச் செய்யும்படி, கலாவதிக்கு கண்களால் ஆணையிட்டு விட்டு, ஸ்தம்பித்து நின்றுள். பிறகு, மடமடவென்று வீதிக்கு வந்து, விதி காட்டிய வழியில் நடப்பவள் போல் நடந்தாள்.

ஊர் கிணற்றில், தோண்டிப் பட்டைகளில், தண்ணீர் மொண்டு கொண்டிருந்த பெண்கள் நீரை ஊற்றுமல், தமிழரசியையே பார்த்தார்கள். ஆங்காங்கே பேசிக் கொண்டிருந்த உள்ளூர் பெரிய மனிதர்கள், அவளை ஏளனமாகப் பார்ப்பது போலிருந்தது. அவர்களைக் கடந்து, சற்று நகர்ந்தபோது ''பொன்மணிய கடத்துனதே இவள் தான். இப்போ அவங்களை ஒளிச்சு வச்சுருக்கிற இடத்துக்குப் போகிறுளாக்கும்'' என்று சொல்வது காதில் விழுந்தது.

தமிழரசி, உதடுகளை வெறுமையாய் கடித்தபடி, வெறித்துப் பார்த்தபடி தன் பாட்டுக்கு நடந்து கொண்டிருந்தாள்.

முன்பெல்லாம் இப்படி சென்னைக்குப் புறப்படும்போது 'பெற்றோர், ராஜதுரை, வினைதீர்த்தான், கலாவதி முதல் முத்துமாரிப் பாட்டிவரை ஊரில் கால்வாசிப்பேர் அவள் பின்னால் நடப்பார்கள்.

அவள், டீக்கடைப் பக்கம் வந்தபோது "நான் சொல்றத இப்பவாவது நம்புங்கப்பா. இதெல்லாம் 'நான் அடிக்கிறது மாதிரி அடிக்கிறேன்...நீ அழுகுறது மாதிரி' என்கிற நாடகம். இல்லன்னா, இவள் ஏன் இன்ஸ்பெக்டர் வீட்டுக்குப் போகணும்? கடைசில மாட்டிக்கிட்டது அந்த அப்பாவிப் பயல் வினைதீர்த்தான் தான். ஏல மண்டையா! சொல்றது மண்டையில உறைக்குதாடா?" என்று 'கில்லாடியார்' கேட்பதும், "செறுக்கிமவனுக்கு நல்லா வேணும். என்னை எப்டில்லாம் அடிச்சான்" என்று 'மண்டையன்' சொல்வதும், அவனுக்குக் கேட்டது.

தமிழரசி, தன்னை நிமிர்த்திக் கொண்டாள். நல்லதைச் செய்து விட்டு, 'அல்லதை' வாங்கிக் கொண்ட கம்பீரத்துடன், தன்னைப் புரிந்து கொள்ளாத ஊரைத் தான் புரிந்து கொண்ட தெளிவோடு பெருமிதமாய் நடந்தாள். வாய் வம்பர்களைப் புழுவாய் நோக்கி, தன்னை புனிதம்போல் நோக்கிய ஆசாரிப் பெண்களையும், அப்பாவிக் குயவர்களையும் சோகமாய் பார்த்தபடியே, சுதேசியாய் நடந்தாள்.

ஊரைத் தாண்டி, பனந்தோப்புப் பக்கம் நடந்தபோது பழக்கப்பட்ட உருவம் ஒன்று, கையில் கற்களோடும், வாயில் சொற்களோடும், பனைமரங்களுக்குள் சுற்றிச்சுற்றி வருவதைப் பார்த்தாள்! முத்துமாரிப் பாட்டி!

தமிழரசி, பனந்தோப்பிற்குள் பாட்டியைப் பார்த்து ஓடினாள். "பாட்டி... பாட்டி" என்று பதறியபடியே ஓடி, முத்துமாரிப் பாட்டியின் கைகளைத் திருகி, கற்களைக் கீழே போட்டாள். ஆனால் தலைமுடியும், சேலையும் அலங்கோலமாய்த் தோன்ற, திரிசூலி போல் தோன்றிய முத்துமாரிப் பாட்டி, அவளை அடையாளம் கண்டு கொள்ளவில்லை.

தரையில் விழுந்த கற்களைப் பொறுக்கிக் கொண்டாள். நாக்கை, வாய்க்கு வெளியே துருத்திக் கொண்டாள். பிறகு, அந்தக் கற்களால், ஒரு பனைமரத்தை குறிபார்த்து எறிந்தபடியே, பாட்டி புலம்பினாள். அங்குமிங்குமாகக் குதித்தாள். அப்புறம் அழுதாள். பற்களைக் கடித்தாள். வட்டவட்டமாய் ஓடிக் காட்டினாள். பிறகு சோர்ந்து போய், புலம்பினாள்.

"ஊருக்குச் சொல்லுமாம் பல்லி.. காடிப்பானைக்குள்ளே விழுமாம் துள்ளி... அடேய் முத்துலிங்கம், வினைதீர்த்தான் பொன்மணியக் கூட்டிக்கிட்டு ஓடலடா.. பொன்மணிதான் அவனைக் கூட்டிட்டு ஓடிட்டாள். இவ்வளவு குதிக்கியே, நீ யாருடா? பத்து வருஷத்துக்கு முன்னால, ஒன்னையே சதமுன்னு நம்புன 'காலனிப்' பொண்ண என்ன பாடுபடுத்துனே? கடைசில அவள் அரளி விதையில உயிரை முடிச்சாள். சின்னஞ்சிறுசுக ஓடுனால் ஓடட்டேண்டா... ஒன் பெண்டாட்டி கூடத்தான் ஓடுனாளாம், வினைதீர்த்தானை கொல்லுவேன்னு சொல்றியே; அவனைக் கொன்னுட்டாலும், அவன் தொட்டது தொட்டதுதானடா. இந்த பைத்தியாரத் தர்மர் சின்ன வயசுல, இப்படியா இருந்தான்? இந்த அருணாசலம் பண்ணின ஒரு அந்தரங்கமான துரோகம் தெரியுமா? அந்தக் கதை நாளைக்கு... இப்போ... இது போதும்... என் தங்கம் தமிழு மட்டும் இல்லன்னா, நாங்க போலீஸ் அனுப்புற இடத்துக்குப் போய், இந்நேரம் புல்லு முளைச்சிருக்கும். இந்த ஊரில தமிழரசி ஒருத்திதான் சேலை கட்டலாம்..."

பைத்தியமாய் போன முத்துமாரிப் பாட்டியை, தமிழரசி, கண்குலுங்கப் பார்த்து, வாய் குலுங்கக் கேட்டாள்:

"பாட்டி! நான்தான் அந்த தமிழு! நீ சொல்ற தமிழரசி! நான்தான் பாட்டி... என்னைப் பாரு பாட்டி.... மெட்ராஸ் போறேன் பாட்டி..."

முத்துமாரிப் பாட்டி, தமிழரசியை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. மீண்டும் கற்களை எடுத்து, அதே பனை மரத்தில் எறிந்தாள். குறுக்கே போன தமிழரசியை கோபமாகத் தள்ளினுள்.

பாட்டியையே பார்த்துக் கொண்டு நின்ற தமிழரசியை, ரயிலின் விசில் சத்தம் ஊடுருவியது. உடனே, தனது ரயிலுக்கும் நேரமானதைப் புரிந்துக் கொண்டாள். போலீஸ் அடியாலோ அல்லது சித்தப்பாவும், கலாவதியும் அனுபவித்த கொடுமையைப் பார்த்ததாலோ, மீண்டும் பைத்தியமான முத்துமாரிப் பாட்டி முகத்தில், உலகத்துக் கொடுமைகள் அத்தனையையும் கண்டு விட்டு ஆவேசத்துள் துடித்து நின்ற தமிழரசி, பாட்டியை நோக்கி கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு, பயணத்தைத் தொடர்ந்தாள்.

ரயில் நிலையம் வந்ததும், அவசர அவசரமாக டிக்கெட் எடுக்க, 'கியூவில்' நின்ருள் அப்போது, ஒரு போலீஸ்காரர் அவளை அதட்டிக் கேட்டார்:

"ஒன்னை சப்-இன்ஸ்பெக்டர் கையோட ஸ்டேஷனுக்கு கூட்டிட்டு வரச் சொன்ஞர். ஸ்டேஷனுக்கு நடம்மா."

# 13

போலீஸ்காரர் அதட்டுவதுபோல் கேட்டது தமிழரசிக்கு என்னவோ போலிருந்தது. டிக்கெட் எடுப்பதற்காக வரிசையில் நின்ற பயணிகள் வரிசையைக் கலைத்து, போகப் போகும் ரயிலையும் மறந்து 'ரவுண்டானுர்கள்'. இதைப் பார்த்த 'மற்றும் பலர்' ஒன்று திரண்டு வந்தார்கள். தமிழரசியை, போலீஸ்காரர் அதட்டுவதை, ஒருவித ரசனையோடு பார்த்து விட்டு, இன்னும் அவர் வேறு ஏதாவது திட்டுவாரா என்பதைக் கேட்க, மிக்க ஆவலோடு காத்திருந்தார்கள். தமிழரசி, நாகரிகத்

திருடி அல்லது வேறு காரியங்கள் செய்பவள் என்பதில் அவர்களுக்கு சந்தேகம் இல்லை.

வார்த்தைகளால் பாயப்போன தமிழரசி, சுற்றுப் புறச் சூழலை உணர்ந்தாள். போலீஸ்காரரின் வருகையையும், 'வரவேற்பையும்' எதிர்பாராத அவள் சிறிது துணுக்குற்றாள். கூட்டம், தன்னையே பார்ப்பதில் எரிச்சல் ஏற்பட்டது. அவரை கோபமாகப் பார்த்தபடி, கூட்டத்திற்குச் சொல்வதுபோல், அவரிடம் சொன்னாள்.

"நான் ஒரு கவுரவமான பிரஜை; கல்லூரி ஆசிரியை. எதுக்காக என்னை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூப்பிடுறீங்க?"

போலீஸ்காரர் மீண்டும் சத்தம் போட்டார். எல்லோரிடமும் சொல்லப்படும் 'ஸ்டாக்' பதிலை வழங்கினார்.

"என்னைக் கேட்டால் எப்படி? எது பேசணுமுன்னாலும் ஸ்டேஷன்ல வந்து பேசு. உம்...நட...சீக்கிரம்...ஜல்தி... குயிக்..."

"மொதல்ல...நீங்க மரியாதை கொடுத்து பேசக் கத்துக்கங்க. நம்ம நாடு சுதந்திரமடைஞ்சுட்டது ஒங்களுக்குத் தெரியுமா? இல்ல, அதிக நாளைக்கு முன்னாலயே சுதந்திரம் வந்துட்டதுனால, அதை மறந்திட்டிங்களா?"

போலீஸ்காரரும், கூட்டமும், தமிழரசியை அண்ணாந்து பார்த்தது. பலரை, ஒரு வார்த்தை மூலமே, அது பேசப்படும்போது ஏற்படும் முகத்தோற்றம் மூலமே எடை போடும் பலே'காரரான' போலீஸ்காரர் "என் பேச்சே அப்படித்தாம்மா. சரி போகலாமா" என்றார் வினயத்துடன்.

தமிழரசி, டிக்கெட்டை வாங்கிக் கொண்டு போகலாமா என்பதுபோல் யோசித்தாள். பின்னர், டிக்கெட் வாங்காமல், போலீஸ்காரரைப் பார்த்தபடியே முன்னால் நடந்தாள். அவரும், தான் கொண்டு வந்த சைக்கிளை உருட்டிக்கொண்டு, அவளுக்கு இணையாக

நடந்தார். ரயில் நிலைய வாசிகளில் கால்வாசிப்பேர், அவர்களைப் பின்தொடரப் போனார்கள். தமிழரசிக்கு, அவமானமாக இருந்தது. எரிச்சலோடு சுற்றும் முற்றும் பார்த்தாள். இதைப் புரிந்து கொண்ட போலீஸ்காரர், உருண்ட சைக்கிளை நிறுத்தியபடி, கூட்டத்தைப் பார்த்து கண்களை உருட்ட, அது உருண்டோடியது. "கச்சடாப் பயலுவ. போலீஸ்காரங்களோட யார் போனாலும் அவங்க தப்புத் தண்டா செய்ததாய் நினைக்கிற பசங்க. அதுலயும் லேடீஸ், போலீஸோட போனால், இவங்க ரேட்டை நினைச்சுட்டு தயாராய் இருப்பாங்க" என்றார்.

தமிழரசி, போலீஸ்காரரை கோபமாகப் பார்த்தாள். அவரிடம் குதர்க்கம் இருப்பதாகத் தெரியவில்லை. அட கடவுளே. அப்படியானால் அவளைப் பார்த்த கூட்டம்... பாதி வழி வரை முண்டியடித்து வந்த கூட்டம், அவளை 'அப்படித்தான்' நினைத்திருக்குமா? பெண் என்பவள், 'அது' தவிர வேறு எதற்குமே ஏற்றவள் இல்லையா? தமிழரசி, போலீஸ்காரரிடம் படபடப்பாகப் பேசினாள்.

"சார், நீங்க முன்னால போங்க, நான் பின்னால வாரேன்."

"நான் இன்னைக்கு 'ஸ்பாட்டுக்கு' வரலைன்னாலும் ஒங்க ஊர்ல நடந்ததுல்லாம் எனக்குத் தெரியும். ஒங்களுக்கு முன்னால 'எங்கய்யா' முந்திக்கிட்டார். நீங்க அப்பவே டி. ஐ. ஜி.க்கு தந்தி கொடுத்திருக்கணும். இப்பவும் லேட்டாகல. நான் சொல்றபடி நடந்தீங்கன்னா, இந்த சப்-இன்ஸ்பெக்டர் கண்ணுல விரல் விட்டு ஆட்டலாம்."

தமிழரசி, போலீஸ்காரரை கடைக்கண்ணால் நோக்கினாள். இவர், 'மனோன்மணியத்தில்' வரும் 'குடிலனா'? இல்லை சங்க காலத்தில் இருந்த நக்கீரரா? நடந்த விஷயமும், அவளை நடத்திய விஷயமும் பிடிக்காத நல்ல மனிதரா? யாரோ எவரோ... எப்படியாவது இருந்துட்டுப் போகட்டும்...

"அதை நான் பார்த்துக்கிறேன். இப்போ நீங்க ஸ்பீடாய் போங்க. நான் பின்னால வாரேன்" தமிழரசி பதிலளித்தாள்.

போலீஸ்காரர் தயங்கியபடியே சைக்கிளில் ஏறினார். அவர் போகட்டும் என்பது போல் தமிழரசி நின்றாள். அவரைப் பார்க்க விரும்பாமல், ரயில் நிலையத்தைப் பார்த்தாள். அங்கே, கூட்டம் இன்னும் கலையாமல், அவளையே ரசனையோடு பார்த்துக் கொண்டிருந்தது. அவளைப் பார்த்த விதம் என்ன விதமோ, தமிழரசி, கூனிக் குறுகினாள். கண்கள் கூசி, வாய் கோணி, உடம்பெல்லாம் ஆட்டம் எடுத்தது...அந்தக் கூட்டத்தின் முன்னிலையில், தான் நிர்வாணப் படுத்தப் பட்டது போன்ற தவிப்பு. இதற்கெல்லாம் யார் காரணம்? யார்? எவன்?

தமிழரசி, சப்-இன்ஸ்பெக்டர் எதற்குக் கூப்பிடுகிறார் என்பதைப் புரிந்து கொண்டாள். கண் முன்னால் நடந்த அநியாயத்தைக் கண்டித்ததற்காக அவர் தன்னை மறைமுகமாகக் கண்டிப்பதை உணர்ந்த அவள் ஒரு நிமிடம் சோர்ந்தாள். ஒருவரை, நம்மால் தாக்கி சேதப்படுத்த முடியும் என்று தெரிந்தும், மனிதாபிமானத்தால் விட்டுக் கொடுக்கும் போது அதுவே நம் பலத்தை குறைக்கக் கூடியதானால் எப்படி? நாம் ஒருவருக்குக் காட்டும் சலுகைகளே, நமக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் ஆயுதங்களானால் எப்படி?

'எப்படி' என்பதற்கு 'என்ன' என்பதையும், 'ஏன்' என்பதையும் அறியத் துடித்தவள் போல் சீறிநடந்தாள். அங்கிருந்தபடியே தாவிப் பறந்து அந்த போலீஸ் மனிதரிடம் நேருக்கு நேராய் சூடு சொரணையுள்ள கேள்விகளைக் கேட்டே தீர்வது என்பதுபோல் அவள் ஓடினாள். பற்களைக் கடித்தபடி, கால்களை கடத்திக் கொண்டிருந்தாள்.

போலீஸ் நிலையத்தில் ஒரே கூட்டம். சர்வகட்சித் தலைவர்களின் 'சமரச'க் கூட்டம் சென்னையில் நடைபெறு

கிறதோ இல்லையோ, ஒவ்வொரு காவல் நிலையத்திலும் நடைபெறும் என்பதை எடுத்துக்காட்டுவது போல், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 'லோகல்' அரசியல்வாதிகள் போலீஸ் நிலைய வராண்டாவில் கூடிப் பேசியபடி நின்றார்கள். அவர்கள் முகங்களையே பார்த்தபடி திறந்த வெளியில் 'அடிதடிக்காரர்கள்' நின்றார்கள். போலீஸ் முன்னிலையில் 'விவகாரத்தை' முடித்துக் கொள்வதற்கு அன்றும் முயற்சி செய்யப் படுவதுபோல் தோன்றியது, இதற்கிடையே திறந்தவெளி கட்டாந்தரையில் சில ஏழை பாழைகள் 'பழி' கிடந்தார்கள்.

தமிழரசி, போலீஸ் நிலையத்திற்குள் நுழைந்ததும், தனக்குத் தெரிந்தவர்கள் யாராவது தென்படுகிறார்களா என்று பார்த்தாள். தெனபட்டார்கள். முத்துலிங்கம், தன் தந்தையுடனும், பங்காளிகளுடனும், ஒரு வேப்ப மரத் தடியில் நின்றபடி, காரசாரமாகப் பேசிக் கொண்டிருந்தார். அவளைப் பார்த்ததும், அவர் தலையை முன்னும் பின்னும் ஆட்ட, உடனே அவருடன் நின்றவர்கள் அவளை ஒருசேரப் பார்த்தார்கள். அவர்களைப் பார்த்ததும், தமிழரசி கம்பீரப்பட்டாள். குழம்பிய சிந்தனை கூர் வேலாகியது. துவண்ட கால்கள் துருதுருத்தன. வெளுத்த கண்கள் சிவந்தன.

போலீஸ் நிலையப் படிக்கட்டுகளில் ஏறி நின்று சற்று நிதானித்துப் பார்த்தாள். கட்டிடத்தில் நடுநாயகமாய் போட்டிருந்த பெரிய மேஜையை ஒட்டியிருந்த நாற்காலி காலியாக இருந்தது. அதன் பக்கவாட்டில் போடப்பட்டிருந்த மேஜைமீது பலப்பல ரிஜிஸ்டர்கள். அவற்றைப் புரட்டிக் கொண்டிருந்த ஒரு ரைட்டர். இடது பக்கம், அளிப் பாய்ந்த கம்பிகளை ஜன்னல்களாகக் கொண்ட உள்ளறையில் நான்கைந்து பேர் தார் பாய்ந்த வேட்டிகளோடு கம்பிகளில் முகம் பதித்து, கண்களில் நீர் பதித்து நின்றார்கள். வலது பக்கம், ஆயுதக்கிடங்கு போலிருந்த

அறைக்கு முன்னால் போலீஸ்காரர் ஒருவர் துப்பாக்கிகளைத் துடைத்துக் கொண்டிருந்தார்.

தமிழரசி, சுற்று முற்றும் பார்த்து விட்டு, ரைட்டரைப் பார்த்து "என் பெயர் தமிழரசி. சப்-இன்ஸ்பெக்டர் வரச் சொன்னாராம்" என்றாள். ரைட்டர், அவளை ஓரக் கண்ணால் பார்த்தபடி "அவசரமாய் வெளியே போயிருக்கார்" என்றார்.

"எப்போ வருவார்?"

"எனக்கு என்ன ஜோஸ்யமா தெரியும்?"

"ஒங்களுக்கு ஜோஸ்யம் தெரியுமா என்பதை தெரிஞ்சுக்கிறதுல எனக்கு அக்கறை இல்ல. அவர் எப்போ வருவார்னு தெரியணும். நான் இப்போ சென்னைக்குப் புறப்பட்டு நிற்கிறேன். அவர் வர லேட்டாகுமுன்னால், நான் போகணும்."

"உட்காருங்கம்மா. ஒரு அடிதடி கேஸ். போற இடத்துல எப்படியோ' பட், வந்துடுவார். உட்காருங்க.?'

தமிழரசி, உட்கார்ந்தாள்.

ஒரு மணி நேரம் ஓடி, முப்பது நிமிடம் கழிந்து கொண்டிருந்தது. அவள், எரிச்சலோடு கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டாள். போவது போல் எழுந்து, எழுந்து நின்றாள். முத்துலிங்கம், இன்னும் பேசிக் கொண்டே இருந்தார். அப்போது, வேப்ப மரத்தடி; இப்போது, பூவரசு மரத்தடி; அவ்வளவுதான் வித்யாசம். ரயிலுக்கு நேரமாகிக் கொண்டிருப்பது உறைத்தது. உடனே, 'வருவது வரட்டும்' என்ற வைராக்கியத்துடன், தமிழரசி உறுதியோடு எழுந்தாள். எழுந்தவள் மீண்டும் உட்கார்ந்தாள்.

மோட்டார் பைக்கில், சப்-இன்ஸ்பெக்டர் வந்தார். அவர் வண்டிக்கு, சர்வ கட்சி லோகல் தலைவர்கள், அகலமாகவே வழி விட்டார்கள். வண்டியை 'ஆப்' செய்யா

மலே, அவர் தலைவர்களிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார். பிறகு, வண்டியை ஒரு சுழற்றுச் சுழற்றி, ஒரு ஓரமாக நிறுத்தி விட்டு, தமிழரசியைப் பாராதது போல் 'பாவலா' செய்தபடியே, பெரிய நாற் காலியில் உட்கார்ந்தார். "வெட்டாம்பட்டி அக்கூஸ்டுக்கு வாரண்ட் வாங்கியாச்சா" என்று ரைட்டரிடம் கேட்ட படியே, ஒரு சில ரிஜிஸ்டர்களைப் புரட்டினார். இதற்குள், முத்துலிங்கம் தம் கோஷ்டியுடன் வராண்டாவிற்கு வந்தார். 'லோகல்கள்' சப்-இன்ஸ்பெக்டரை மொய்த்துக் கொண்டார்கள். அவர்களிடம் தக்காளி விலை கிலோ பத்து ரூபாய்க்குப் போனதில் இருந்து, வெயில் எப்படி மோசமாய் இருக்கிறது என்பது வரைக்கும், சப்-இன்ஸ்பெக்டர், சாவகாசமாய் பேசிக் கொண்டிருந்தார். அவர் பேச்சை கவனமாகக் கேட்ட லோகல்களில் ஒருவர், "அந்த விவகாரத்தை ஒரு வழியா முடிச்சுட்டோம்..." என்றதும், போலீஸ் அதிகாரி, 'முடிச்சு' விவகாரத்தை சுவாரஸ்ய மாய் கேட்கப்போனார்.

வருவதற்கு முன்பு ஒன்றரை மணி நேரமும், வந்த பிறகு அரை மணி நேரமும் காத்திருந்த தமிழரசி, பொறுமை இழந்தாள். காரமாகக் கேட்டாள்:

"என்னை எவ்வளவு நேரம் காக்க வைக்கப் போறீங்க? அதையாவது சொல்லிட்டுப் பேசுங்க!"

லோகல் லீடர்கள், வாயடைத்து நின்றபோது, சப்-இன்ஸ்பெக்டர், அவர்கள் முன்னிலையில் தன் அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ள நினைத்தவராய், "பொறுங்கம்மா, சில்லறை விஷயங்களை முடிச்சுகிறேன்" என்றார்.

"சில்லறை செலவாகாமலே இருக்கும். என்னை எதற் காகக் கூப்பிட்டீங்க சார்? மொதல்ல அதைச் சொல்லுங்க சார்."

"ஒன்று ஞாபகம் வச்சுக்கங்கம்மா. இது காலேஜ் இல்ல, நான் ஒங்க ஸ்டூடண்டும் இல்ல. போலீசிற்கு,

அக்கூஸ்ட்தான் காத்து இருக்கணுமே தவிர, அக்கூஸ்டுக்கு போலீஸ் காத்திருக்க முடியாது. ஏன்னு எங்க வேலை அப்படிப்பட்ட வேலை.''

''ஒங்க வேலை எப்படிப் பட்ட வேலைன்னு எல்லோருக்கும் தெரியும். இப்போ எனக்கும் மெட்ராஸ்ல வேலை இருக்கு.''

''அப்படின்னு நாளைக்கு வாங்க.''

''நான் மெட்ராஸ் போறேனே.''

''நீங்க எங்கே போனல் எனக்கென்ன. கூப்பிட்ட நேரமில்லாம் நீங்க வரணும். அவ்வளவுதான் சொல்வேன். போலீசிற்குன்னு சில பொறுப்புண்டு. ஒங்களை எங்களுக்கு வசதிப்பட்ட நேரத்துல விசாரிக்க போலீசுக்கு உரிமையுண்டு.''

''நீங்க கடைசியாய் சொன்னீங்க பாருங்க 'உரிமை' அந்த வார்த்தையிலதான் சார் அடிப்படைக் கோளாறே இருக்கு. நீங்க கடமை செய்யுறதுக்காக கொடுத்திருக்கிற அதிகாரங்களை உரிமையாய் நினைக்கிறீங்க. கடமையாற்றுவதை ஏதோ சலுகை காட்டுறதாய் நினைக்கிறீங்க. இதுதான் இந்த நாட்ல... போலீஸ் டிபார்ட்மெண்ட்ல மட்டு மில்ல... எல்லா டிபார்ட்மெண்ட்லயும் இருக்கிற அடிப்படைக் கோளாறு. நீங்க சொல்றதைப் பார்த்தால், யாரோ ஒருவர், எவரையோ ஒருவரைப்பற்றி. ஒரு புகார் கொடுத்திட்டால் போதும். நீங்களே ஒருவரை அக்கூஸ்டா நெனைத்து என்ன வேணுமானலும் செய்யலாம். இதுதான் இன்றைய சட்டமுன்னல், இந்த நாடு, நாடல்ல; பெரிய லாக்கப் அறை. அகலமான குற்றவாளிக் கூண்டு. திறந்த வெளிச் சிறைச்சாலை. சரி... என்னை விசாரிக்கப் போறீங்களா இல்லையா?''

''மிரட்டுறீங்களா?''

''அப்படி வேண்டுமானலும் வச்சுக்கங்க. நான் இப்போ வெளியேறப் போறேன். என்னை வேண்டுமானல் லாக்கப்புல தள்ளுங்க. ஐ டோன்ட் கேர்.''

தமிழரசி எழுந்தாள். அவளை, இன்னும் லாக்கப்பில் தள்ளாமல் இருக்காரே என்பது மாதிரி முத்துலிங்கத்தின் உதடுகள் துடித்தன. இதற்குள், லோகல் லீடர்களுக்கு தங்களது காரியம் தாமதப்படுவதில் எரிச்சல். அவர்களுள் ஒருவர், "அந்தம்மா சொல்றதும் ஒரு வகையில் சரிதான். சட்டுப்புட்டுன்னு விசாரிங்களேன்" என்றார். சப்-இன்ஸ்பெக்டர், அவர்கள் வார்த்தைக்கு மதிப்பளிப்பவர் போல், ஒரு காகிதத்தை கையில் வைத்தபடியே, அவளிடம் கேட்டார்.

"முத்துலிங்கம், தன்னோட மைனர் தங்கை பொன்மணியை வினைதீர்த்தான் கடத்திப் போறதுக்கு, நீங்கதான் உடந்தைன்னு ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கார்."

"நீங்க ஏழைக் குடிமக்களான மாடக்கண்ணுவையும், கலாவதியையும் கொடுமைப் படுத்தும்போது என்ன சொன்னேனோ, அதைத்தான் இப்பவும் சொல்றேன். அதற்கும், எனக்கும் சம்பந்தமில்ல. அதோடு பொன்மணி மைனர் பெண்ணல்ல."

"நீங்களே அனுமானித்தால் எப்படி?"

வாக்குவாதம் பலத்தபோது, தாமோதரன் எவரும் எதிர்பாராத வகையில், கையில் சூட்கேசுடன் வந்தான். சப்-இன்ஸ்பெக்டர், அவனை உட்காரச் சொன்னார். அவன் நின்றபடியே பதிலளித்தான். பிறகு, "பொன்மணி விவகாரத்திற்கும், மிஸ். தமிழரசிக்கும் எந்த சம்பந்தமும் இல்ல. இதை நீங்க சாட்சியாய் கூட பதிவு செய்துக் கலாம்," என்றான்.

சுமைதாங்கிக் கல் போல் அசையாது நின்ற தாமோதரனை, சப்-இன்ஸ்பெக்டர் முகம் சுழிக்கப் பார்த்தார். முத்துலிங்கம், கண்களில் கனல் கக்கப் பார்த்தார். என்றாலும், அவன் வருகையால் தமிழரசி கோபம் குறைந்தவளாகத் தெரியவில்லை.

"நான் வாரேன் சார். இதுதான் என் மெட்ராஸ் முகவரி. எனக்கு அரெஸ்ட் வாரண்ட் அனுப்பனுமுன்னுல், இதுதான் என் அட்ரஸ்."

தமிழரசி, திரும்பிப் பாராமல், திரும்பினுள். சப்-இன்ஸ்பெக்டர் அவளைத் தடுக்கவில்லை.

போலீஸ் நிலையத்திற்கு வெளியே தமிழரசி வந்த போது, சற்றுத் தொலைவில், ஆலமர நிழலில், தலைகளில் கை வைத்தபடி இருந்த மாடக்கண்ணுவும், கலாவதியும், அவளை நோக்கி ஓடி வந்து, ஆளுக்கு ஒருவராக, அவள் கைகளைப் பிடித்துக்கொண்டார்கள். யாரும், யாருடனும் பேசவில்லை. நீண்ட மவுனம். நெடிய மவுனம். மூவரும், பஸ் நிலையத்தைப் பார்த்து நடந்தார்கள். போக வேண்டிய ரயில், இந்நேரம் தென்காசியில் இருந்து போயிருக்கும். இனி திருநெல்வேலிக்குப் போய், அங்கிருந்து நெல்லை எக்ஸ்பிரஸ்ஸில்தான் சென்னைக்குப் போகவேண்டும்.

பஸ் நிலையத்தில் தமிழரசி, இருவருக்கும் இடையில் நின்ருள். ஊருக்கே திரும்பலாமா என்று நினைத்தாள். கலாவதியையும், சித்தப்பாவையும் போலீசார் விசாரணை என்ற பேரில் மீண்டும் தாக்குவார்களோ என்ற பயம். அந்த அளவிற்கு அவர்கள் துணிய மாட்டார்கள் என்ற தெளிவு. போவதற்கு முன்பு, தாமோதரனை ஒரு தடவை யாவது பார்த்துவிட்டுப் போய்விட வேண்டும் என்பது போல், தமிழரசியிடம் ஒரு தாகம். சில பஸ்களை, அசட்டை யாக விட்டு விட்டாள். 'கடைசியில் அவர் என்னைக் கை விடவில்லை. எப்படிச் சொல்ல முடியும்? விசாரணை வலுத்து, நான் மேல் அதிகாரிகளிடம் புகார் செய்து, அதனுல் தனது வேலைக்கும் ஆபத்து வந்துவிடக் கூடாது என்று நினைத்து, அவர் முன் யோசனையோடு நடந்திருக்க லாமா... எவ்வளவு நெருக்கமாய் பழகினேம்... ஒரு வார்த்தை 'ஐ அம் சாரி தமிழு' என்று சொல்லியிருக்க லாமே... மிஸ் தமிழரசியாம்...'

தமிழரசி, தன்னுள் அவனையும், அவனுள் தன்னையும் தேடிக்கொண்டிருந்தபோது, தாமோதரன், முத்துலிங்கம் கோஷ்டியுடன் வந்து கொண்டிருந்தான். அவளைப் பார்த்து, லேசாய் திடுக்கிட்டது போல், நடக்காமல் நின்றான். பின்னால் வந்த அண்ணனை ஒரு தடவையும், அவளை ஒரு தடவையும் பார்த்துக் கொண்டான். பிறகு, ஆகாயத்துள் எதையோ தேடுபவன்போல், கண்களால் துழாவினான். முத்துலிங்கம், அவன் முதுகைத் தட்டினார். அப்புறம், அவர்கள் ரயில் நிலையத்தைப் பார்த்து நடந்தார்கள்.

தாமோதரனைப் பாராதது போல், உடம்பில் எந்தவித அசைவுமின்றி நின்ற தமிழரசியிடம், "தாமுத்தான் நாகர்கோவில் போறார் போலுக்கு ... ரயில்வே ஸ்டேஷனைப் பார்த்து நடக்காங்க" என்றாள் கலாவதி. அவளுக்கும் குரல் உடைந்தது. மாடக்கண்ணு, ஏதோ ஒன்று புரிந்ததுபோலவும், ஆனால் அது, தன் சக்திக்கு மீறியது என்பது போலவும், கண்களை சிமிட்டியபடியே தலையைத் தடவியபடி, தமிழரசியைப் பார்த்தார். தமிழரசியோ, கலாவதிக்கு எந்தப் பதிலையும் வழங்காமல், நிலைகுலைந்து நின்றாள்.

'தாமு... தாமு... இனிமேல் நம் இருவருக்கும் இடையே கசப்பான நாட்கள் கடக்கலாம். ஆனாலும், அந்த காசியாபிள்ளை கிணறும், அந்த இனித்த நாட்களும் என்னளவில் வாழ்க்கை என்னைத் தாலாட்டிய நாட்கள். காதல் பாட்டோடு, கல்யாணி ராகத்துடன், நான் என்னை மறந்த நாட்கள்!

இனிமேல் வரும் நாட்கள் எப்படியோ...நாட்களோ... நரகங்களோ...எதையோ நினைச்சேன்...எதையோ முடிச்சேன். எதுலயோ முடிஞ்சிட்டேன். தாமு...என் தாமு... ஒங்களை நான் இனிமேல் பார்ப்பேனா? சந்தர்ப்பம் பார்க்க விடுமா?"

நெல்லை பஸ் வந்தது. பார்வை கலையாமல் நின்ற தமிழரசியை, கலாவதி உலுக்கினாள். தமிழரசி தயங்கினாள். ஒருவேளை ரயில் போய்விட்டது என்று 'தாமு' இங்கே வந்தாலும் வருவாரோ? இன்னொரு தடவை, அவரை ஆசைதீரப் பார்த்துவிட்டுப் போகலாமே. பஸ், சத்தம் போட்டது. தமிழரசி, கலாவதியிடம் இருந்த சூட்கேசை வாங்கிக் கொண்டாள். அவளைக் கட்டியணைத்து, முகத்தில் முத்தம் கொடுத்து விட்டு, தன் தோளில் பட்ட துளிகளுக்குச் சொந்தமான கண்களை மருட்சியோடு பார்த்த சித்தப்பாவின் கரங்களை எடுத்து கண்களில் ஒற்றியபடி, தமிழரசி பஸ்சிற்குள் வரவும், அவளை நிலையிழுக்கச் செய்தபடி, பஸ் விசில் சத்தம் முடியு முன்னாலேயே பாய்ந்தது.

தனித்துவிடப்பட்ட மாடக்கண்ணுவும், கலாவதியும் புழுதித் தடயங்களை விட்டுச் சென்ற பஸ்சையே வெறித்துப் பார்த்தார்கள். பிறகு ஒருவர் கையை ஒருவர் பிடித்தபடி ஊரை நோக்கி நடந்தார்கள்.

ரயில் நிலையத்தில், தாமோதரனை, நாகர்கோவிலுக்கு வைதபடியே வழியனுப்பி விட்டு, திரும்பிக் கொண்டிருந்த முத்துலிங்கமும், அவரது கையாட்களும், காலாட்களும், மாடக்கண்ணுவையும், கலாவதியையும் 'வெறி'த்துப் பார்த்தார்கள். எல்லா வகையிலும் அவமானப் பட்டதாகக் கருதிய முத்துலிங்கம், தன் ஆட்களிடம் ஆணையிட்டார்:

"ரெண்டு பேரையும், என் தோட்டத்துக்கு இழுத்துட்டு வாங்க. போலீஸ் செய்து காட்ட முடியாததை, நான் செய்து காட்டுறேன்?"

# 14

இரவு கொடுங்கோலோச்சிய வேளை.

ஊருக்கு இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள முத்துலிங்கம் தோட்டம். கிணற்றை மறைக்கும்படி எருக்கலைச் செடிகள் படர்ந்திருந்தன. நான்கு பக்கத்தில் மூன்று பக்கம் சரல் மேடுகள் குவிந்து கிடந்தன. ஒரு பக்கத்தில் கமலைக் கிடங்கு, பள்ளமாய் நீண்டிருந்தது. பச்சைப் பசேலென்ற சோளப் பயிர்கள்— ஆறடிக்கு மேல் வளர்ந்து, தோகை விரித்து காற்றில் ஆடின. வரப்போர ஆமணக்குச் செடிகளில், 'கொட்டை முத்துக்கள்' வெடித்துக் கொண்டிருந்தன. ஆடிக் காற்று தென்னைமர வோலைகளைக் குனிவித்து, சோளத் தட்டைகளை மண்டியிட வைத்து, 'உய்' என்ற கூச்சலுடன் பேயாய், பேத்தலாய் ஒப்பாரியிட்டது.

ஆங்காங்கே இருந்த எலி வளைகளுக்குள், பாம்புகள் ஊர்ந்து கொண்டிருந்தன. 'விருவு' எனக் கூறப்படும் காட்டுப் பூனைகள், பூவரசு மரங்களிலும், ஆலமரங்களிலும், அடைக்கலமான பறவைகளைப் பிடித்துக்கொண்டிருந்தன. இவற்றைப் பார்த்து, காகங்களும், கரிச்சான்களும் தங்கள் பகையை மறந்து, ஆகாயத்தில் ஒன்றாக, ஓல ஒலியே உயிரொலியாக வட்டமடித்தன. வண்ணத்துப் பூச்சிகள், வலையில் மாட்ட, அதைப்பின்னிய சிலந்திகள் தன் வலையை வேகவேகமாய் சுற்றி, அந்தப் பூச்சிகளைக் கசக்கிக் கொண்டிருந்தன. அருகே இருந்த சுடுகாட்டில், நரிகள் அகோரமாய் ஊளையிட்டுக் கொண்டிருந்தன.

சரல் மேட்டில், கையும், காலும் தனித்தனியாகக் கட்டப்பட்டு, பிறகு அவை ஒன்றோடொன்றாய் சேர்த்துக் கட்டப்பட்டு, ஆறடி அளவிலான மேனி மூன்றடி அளவில் குறுக்கப்பட்டுக் குப்புறக்கிடந்த தந்தையையே கலாவதி கமலைக் கிடங்கில் இருந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அய்யாவ... விட்டுடுங்கய்யா... விட்டுடுங்கய்யா'' என்று சொல்லிச் சொல்லி, அழுதழுது, அவளுக்கு வாயடைத்து விட்டது. கண்ணீர் தீர்ந்து விட்டது. அவரைப் பார்த்துப் பார்த்து, பார்வையும் தீர்ந்துவிட்டது. இப்போது அவள் அரை மயக்க நிலையில், மரணமும், வாழ்வும் ஒன்றாக, தலையில் கை வைத்து, முட்டிக்கால்களில் முகம் புதைத்து வெம்பிக் கொண்டிருந்தாள்.

தமிழரசியை, பஸ்ஸில் பறிகொடுத்துவிட்டு, தந்தைக்கு விரைவில் சமைத்துப் போட வேண்டும் என்று தான், அவள் ஊரை நோக்கி விரைந்து கொண்டிருந்தாள். இருவரும், தலைச்சுற்றலும், உடல் உற்றலுமாய் நடந்து கொண்டிருந்தபோது, நான்கைந்துபேர், அவர்களை வழி மறித்தார்கள். திகைத்து நின்ற மாடக்கண்ணுவையும், கலாவதியையும், தங்களுக்குள்ளே பங்கு போட்டுப் பிடித்துக் கொண்டார்கள். இரண்டு பேரையும் தரதர வென்று இழுத்தும், அடியடி என்று அடித்தும், இழுஇழு என்று இழுத்தும், இந்தத் தோட்டத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னாலேயே கொண்டு வந்து போட்டார்கள்.

மாடக்கண்ணுவை, 'தாம்புக்' கயிற்றாலும், வாழை நாராலும் கட்டி, சரல் மேட்டில் உருட்டிப் போட்டு விட்டு ''கிழட்டுப் பயலே...கிடடா... கிட .. எங்க பொன் மணி இருக்கிற இடத்தைச் சொல்றதுவரைக்கும் ஒன்னை விடப்போறதில்ல'' என்று கொக்கரித்தார்கள்.

அன்று, கோழி கூவியதில் இருந்து, இந்த இரவுவரை, நடந்ததையும், நடப்பதையும் நம்ப முடியாமல் போன கலாவதி, கட்டப்பட்டவரை மீட்கப் போனபோது, அந்த ஐவரும் அவளைச் சுற்றி நின்று கொண்டார்கள். அவர்களையே, அவள் வியப்பாக, திகைப்பாக, நம்ப முடியாதவளாகப் பார்த்தாள்.

ஒருவர், பிள்ளையார் மாமா—முத்துலிங்கத்தின் சித்தப்பா. வழியில் பார்க்கும் போதெல்லாம் 'என்ன மருமகளே... எப்படி சவுக்கியமெல்லாம்' என்று குசலம் விசாரித்தவர். இன்னொருவர் வீரபத்திர மச்சான். 'ஒன் அழகுக்கு நீ சினிமாவுல சேரணும்' என்று விகற்ப மில்லாமல் கிண்டல் செய்பவர். மூன்றாவது ஆள், முத்துத் தாத்தா. இவரும் 'கலாவதி... வயசு காலாவதியாவுது பிள்ள... ஒனக்கு மாப்பிள்ள கிடைக்காட்டால் சொல்லு... தாத்தா இருக்கேன் தயாராய்' என்று ஹாட்டி செய்பவர். இதேமாதிரித்தான் இந்த மாரிமுத்து மச்சானும், பேச்சி முத்து மாமாவும். ஆனால் இப்போதோ, இந்த தெரிந்த முகங்களே, எமராஜ முகங்களாய் அவளுக்குத் தென் பட்டன. இந்த சினேகித முகங்களால், எப்படி இவ்வளவு சீக்கிரமாய் சினப்பு முகங்களாய் ஆக முடிகிறது?

அவர்களின் நீண்டகால பழக்கத்தை வைத்து, தங்களைப் பிடிக்கும்போதும், தந்தையைக் கட்டிப் போடும் போதும், கலாவதிக்கு வேடிக்கை மாதிரியே தெரிந்தது. அப்பா, வலி தாளாமல் கத்தியபோதுதான் கலாவதி, சுயத்திற்கு வந்தாள். மண்டியிட்டாள். மன்றாடினாள். கையெடுத்துக் கும்பிட்டாள். நெடுஞ்சாண் கிடையாகத் தரையில் விழுந்து, ஒவ்வொருத்தர் காலாக, ஊர்ந்து ஊர்ந்து தொட்டுத் தொட்டுக் கும்பிட்டாள். அழுதழுது புலம்பினாள். "ஒங்கள கையெடுத்துக் கும்புடுறேய்யா... ஒங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டுய்யா... நாங்க ஒரு பாவமும் அறியாதவங்கய்யா... அதோ பாருங் கய்யா... எங்கய்யா எப்டி வலியில துடிக்காருன்னு பாருங்கய்யா .. ஏற்கனவே போலீஸ்ல அடிபட்டு உடம் புல்லாம் காயமய்யா... காயம் பட்ட இடத்துல கயிற்றைக் கட்டுனால் எப்படிய்யா? என்னை வேணுமுன்னால் கட்டிப் போடுங்கய்யா .. அய்யாவ விட்டுடுங்கய்யா... வீரபத்திர மச்சான்... பிள்ளையார் மாமா... முத்துத் தாத்தா... எங்கய்யாவ இப்டி நடத்த ஒங்களுக்கு எப்டி மனசு

வந்தது? எங்கள காலால உதறி கையால தள்ளிவிட்டுடுங்; கய்யா.''

தோட்டத்துப் பாண்டவர்களான அந்த ஐவரும் கலாவதியையும், மாடக்கண்ணுவையும் அப்போது மனிதப் பிறவிகளாக நினைக்கவில்லை. கோவில்களில் வெட்டப்படும் ஆடுகளாக, சமையலறையில் திருகப்படும் கோழிகளாகத் தான் நினைத்தார்கள். இப்போது அவர்களுக்கு முத்து லிங்கத்தின் குடும்ப மானமே பெரிதாய் தெரிந்தது. ஒரு தடவை, குடித்துவிட்டு போலீசில் மாட்டியபோது, வீரபத் திரனை மீட்டியவர் முத்துலிங்கம். பிள்ளையார் மாமா பக்கத்து வயல்காரனின் பல் ஒன்றை வெளியே எடுத்துப் போட்டபோது, அதை போலீசிற்குப் போக விடாமலே சரிக்கட்டியவர் இந்த முத்துலிங்கம். அவ்வப்போது, ஐந்து பத்தென்று கடன் கொடுப்பவரும் இந்த முத்து லிங்கம்தான். எல்லாவற்றிற்கும் மேல் பங்காளி. அவன் மானமே போகிறதென்றால், அப்படிப் போன மானத்தை நிலைநாட்ட, எந்த மானங்கெட்ட செயலை வேண்டு மானாலும் செய்யலாம். செய்ய வேண்டும்!

ஏதோ ஒருவித சேடிஸத்தில்—அதாவது பிறர் துன்பத்தைக் கண்டு மகிழும் மனோபாவத்தில் சிக்கி, ஐவரும் எக்காளமாகச் சிரித்தார்கள். ஏளனமாய்ப் பார்த் தார்கள். ''என்னடி நெனைச்சே? இது மானத்தை மட்டுமே உயிராய் நினைக்கிற மவராசா குடும்பம். ஒண்ணன் வினைதீர்த்தான் எங்க பொன்மணியை கடத்திட்டுப் போனதுக்கு, அவன் ஆயுள் முழுசும் வருத்தப்படணும். நீங்க பட்ட பாட்டையும், அதைப் பார்த்துட்டு அவன் படப்போற பாட்டையும் பார்த்தால், அப்புறம் எந்த செறுக்கி மவனும் எங்க குடும்பத்து பொம்பிளைங்கள ஏறெடுத்துப் பார்க்கமாட்டான். இவ்வளவுதான் எங்க ளுக்குத் தெரிஞ்சுது. ஒங்கள விடக்கூடாது என்கிறது 'எங்க பையன்' உத்தரவு. இதுக்குமேல எது பேசணு முன்னாலும்

அவன்கிட்டே பேசிக்கலாம். இப்போ வந்துடுவான். டேய் பிள்ளையாரு! இன்னும் ஏன் அவன் வர்ல?''

''நிதானமாய் வரட்டேன், இப்போ என்ன அவசரம்?''

இதற்கிடையே, போலீசார் நன்கொடையாய் கொடுத்த காயங்களில், கயிறு அழுத்தியதால் மாடக் கண்ணு, வலி தாளாமல் கூப்பாடு போட்டார். கலாவதி, தந்தையிடம் ஓடப் போனாள். ஒருவரை இடித்துக் கீழே தள்ளிவிட்டு ஓடினாள். உடனே, பிள்ளையார் மாமா அவளை, மல்லாக்கத் தள்ளினார். வீரபத்திர மச்சான், அவள் தலைமுடியைப் பிடித்து, தரதரவென்று இழுத்து கிணற்றுப் பக்கம் கொண்டு போனார். லேசான மனச் சாட்சி 'கிக்கில்' தவித்த மீதி மூவரும், குப்பியில் கொண்டு வந்ததைச் சப்பிக் கொண்டார்கள். அப்போது அவள் ''எங்கய்யாவுக்குப் பதிலா என்னை என்ன பாடு வேண்டு மானாலும் படுத்துங்கய்யா. அய்யாவ விட்டுடுங்கய்யா,'' என்று துடித்தபடியே கேட்டாள். உடனே, அந்த கொலை தேசப் பிரஜைகளில் ஒருவர் ''அப்பனுக்கு வலிக்குதுன்னு இப்டி துடிக்கிறியே, இந்நேரம் எங்க பொன்மணி ஒங்கண்ணன்கிட்ட என்ன பாடுபடுறாளோ? நெனச்சுப் பார்த்தியா செறுக்கி?'' என்றார்.

கலாவதி, திருதிருவென்று விழித்தபோது, மேட்டுச் சரட்டில் புரண்ட மாடக்கண்ணு, ''எப்பா... ஒங்களத் தாம்பா... என்னை வேணுமுன்னால் ஒரேயடியாய் கொன்னுடுங்கப்பா. ஆனால் தர்மப் பிரபுக்களே! புண்ணிய வான்களே! இப்டி சித்ரவதை பண்ணாதிங்கப்பா. என்னால தாங்க முடியலப்பா'' என்றார்.

கீழே விழுந்து கிடந்த கலாவதி, கையையும், காலையும் உந்தியபடி எழுந்தாள். அருகே கிடந்த ஒரு பாராங் கல்லைத் தூக்கி வைத்துக் கொண்டு, ''எங்கய்யாவ கொன்னால் ஜெயிலுக்குப் போகணுமுன்னு நீங்க பயப் படுறது நியாயந்தாய்யா. அதனால நானே... எங்கய்யாவ

கொல்றேய்யா. அவரு இப்டி துடிச்சு சாகிறதவிட, மொத்தமாய் செத்துடலாம்" என்று சொல்லியபடியே, கொலைப் பாசம் கொண்டு, தூக்கிய கல்லோடு, கலாவதி சரல் மேட்டுக்குத் தாவப்போனுள். மகாத்மா காந்தி பார்த்த கன்றுக்குட்டி போல் துடித்தவரைப் பார்த்து பாயப் போனுள். அந்த ஐவரும் அவளை மடக்கியபடி, சிரித்தார்கள். சாராயச் சிரிப்பாய் சிரித்தார்கள். "அவ்வளவு சீக்கிரமாய் உயிர் போகலாமா?... போகத் தான் விடுவோமா?" என்ருர்கள்.

அவர்கள், ஏதோ விட்டுக் கொடுப்பதற்காகத்தான், அப்படிச் சிரிக்கிருர்கள் என்று நினைத்த கலாவதி, மீண்டும் மன்ருடினுள்:

"தப்புப் பண்ணுனவன் எனக்கு அண்ணன், அவருக்கு மகன்னு இருந்தால் நாங்க என்னய்யா பண்ணுவோம்? நிர்க்கதியாய் நிற்கிற எங்களுக்கு உதவ வேண்டிய நீங்களே இப்படிச் செய்தால் எப்படிய்யா? எங்கள விட்டுடுங்கய்யா. இந்த ஊர்ல கூட இருக்கல. கண் காணுத இடத்துக்கு வேணுமுன்னுலும் ஓடிப் போயிடுருேம்."

உடனே வீரபத்திரன், "ஒண்ணன் இருக்கிற இடத் துக்கு போயிடுருேமுன்னு சொல்றியா? தாராளமாய் போ! நாங்க ஒன்னை ஒன்றுமே செய்யல, போறவளை தடுக்கப் போறதுமில்ல. வேணுமானுல் போ! ஒப்பனத் தான் கட்டிப் போட்டிருக்கோம். ஒன்னைக் கட்டிப் போடல. போகணுமுன்ஞல் போ. ஏண்டா, இவள் போகப் போருளாம்... போவட்டும்" என்ருர், பெரிதாய் நகைச்சுவையோடு பேசுகிற நினைப்பில். மற்றவர்கள், குரூரமாகச் சிரித்தார்கள்.

கலாவதி, பேசுவதை நிறுத்திக்கொண்டாள். குற்று யிரும், கொலையுயிருமாய் கிடந்த தந்தையைப் பார்ப்பதை மறுத்துக் கொண்டாள். தந்தையைப் பார்க்கக்

கூடாது என்று கண்களை மூடிக்கொண்டாள். அய்யாவின் புலம்பலை கேட்கக் கூடாது என்று காதுகளை கைகளால் பொத்திக் கொண்டாள். இறுதியில் தன்னையே தொலைத் தவளாய், நியாயமில்லாத சந்தேகத்திற்கு உட்பட்ட சீதாப்பிராட்டிபோல், பூமாதேவியிடம் அடைக்கலம் கேட்பவளாய், அவளுக்கும், சீதைக்குப்போல் பூமி பிளக்கும் என்று நினைத்தவளாய், பூமியோடு தன் மேனியைக் கவிழ்த்துக் கொண்டாள்.

எவ்வளவு நேரம் அப்படிக் கிடந்தாளோ, அவளுக்குத் தெரியாது. எவரோ செருப்புக்காலால் தன்னை இடறு வதைப் பார்த்து விட்டு கண் விழித்தாள்!

முத்துலிங்கம்!

அவளை, மதர்ப்பாகப் பார்த்தபடி நின்றார். கலாவதி, தடுமாறி எழுந்தாள். முத்துலிங்கத்தின் கைகளைப் பிடித்தாள். அவர் உதறியதால், தடுமாறி விழுந்தவள், மீண்டும் அவர் கால்களைப் பிடித்துக் கொண்டாள். தானே அறியாதவகையில் மன்றாடினாள்:

"மச்சான்! ஒம்மத்தான் மச்சான்... நாங்க ஒரு பாவமும் அறியாதவங்க. எங்களை விட்டுடுங்க மச்சா அய்யா துடிக்காரு மச்சான். ஒரு தடவை அவரை பக்கத்துல போய் பாரும் மச்சான். ஒமக்கே மனசு மாறும் மச்சான். எய்யா... நீரும்... மச்சான்கிட்டே பேசு மிய்யா..."

முத்துலிங்கம், அவளைக் காலால் இடறி விட்டு, கையாட்கள் நிற்கும் பக்கமாய் நடந்தார். பிறகு "அவள்... தமிழரசியா... தடியரசியா... அந்த செறுக்கி மவளையும் இங்கே கொண்டு வந்திருக்கணும். அவள் இங்கே இல்லாதது, எனக்கு மனசு கேட்க மாட்டங்குது..." என்றார். கலாவதி, தடுமாறித் தடுமாறி, மீண்டும் அவர்

காலடிக்கு வந்து "மச்சான்... மச்சான்" என்றாள் அவரோ சிங்கம் தோற்கும்படி கர்ஜித்தார்.

"ஒப்பன விட்டாலும், ஒன்னை விடப் போறதில்ல. செருக்கி மவளே! நீ தானே ஒங்க அண்ணனுக்கும், எங்க வீட்டு மூதேவிக்கும் காவல் காத்தது? ஒனக்கு இப்போ எவன் காவல் காக்க வாரான்னு பார்ப்போம்?"

"சத்தியமாய் நான் அப்படிப்பட்ட காரியத்த செய்யல மச்சான். என்னை நம்பும் மச்சான்."

"சரி போனது போவட்டும். நான் ஒன்னை நம்பணுமுன்னால், ஒன் அண்ணன் இருக்கிற இடத்தைச் சொல்லிடு. ஒன்மேல மேற்கொண்டு ஒரு துரும்புகூட விழாது."

"எனக்கு, அந்த நொறுங்குவான் போன இடம் தெரிஞ்சால்தானே சொல்ல முடியும் மச்சான்? எனக்கு எதுவுமே தெரியாது."

முத்துலிங்கம், வீராப்பாகச் சிரித்தார். பிறகு, அவர், அடிமேல் அடி வைத்து, சரல் மேட்டில் ஏறினார். குப்புறக் கிடந்த குறுகிய மாடக்கண்ணுவை காலால் இடறினார். அதனால் மயக்கம் கலைந்த மாடக்கண்ணு, மகளைப் போலவே, அந்த மகானுபாவரின் காலைப் பிடிக்க முடியாமல் கட்டப்பட்டிருந்ததால், தனது தலையை எடுத்து, அவர் திருப்பாதத்தில் வைத்து உருட்டியபடியே—

"முத்துலிங்கம்! ஒன்னையும் சின்ன வயசுல சில சமயத்துல என் தோள்ல எடுத்திருக்கேன். ஒம்மா எனக்கு ஒரு வகையில சொந்தண்டா. என்னையா இந்தப் பாடுபடுத்துறே? என்னையா?" என்று சொன்னபடியே, வறண்ட கிணற்றில், சிறிய இடைவெளியில் ஊறிய நீர் போல், பொட்டல் கண்களை, புலம்பல் நீரில் நனைத்தார்.

முத்துலிங்கம், இறுதித் தீர்ப்பு வழங்கினார்.

"இந்தா பாருடா கிழட்டுப் பயலே! ஒன் மகன் தப்பிச்சது மாதிரி, நீயும் தப்பிச்சிடலாமுன்னு நெனைக்

காதே. அந்தப் பயல் இருக்கிற இடத்தை மட்டும் நீ சொல்லல... ஒனக்கு உயிரோட சமாதிதான்... சீக்கிரமாய் சொல்லிட்டால், சீக்கிரமாய்... ஒன் மகளோட ஒன் வீட்டுக்குப் போயிடலாம். இல்லன்னு உயிருதான் சீக்கிர மாய் போகும். அப்புறம் ஒன் இஷ்டம்.''

மாடக்கண்ணு வாதித்தார்.

''இப்போ தப்பிக்கதுக்காக ஏதாவது ஒரு ஊரை சொல்லணுமுன்னுல் சொல்லலாம். ஆனுல் நான் அந்த மாதிரி வளந்தவன் இல்ல. அதனுலதானே என்னவோ இப்டி அவஸ்தப்படுறேன்.''

கையாட்களில் ஒருவர், இடைமறித்தார்.

''கிழவன விடுப்பா. இவளை விசாரிக்கிற விதமாய் விசாரிச்சால், உள்ளதைச் சொல்லிட்டுப் போருள். இந் நேரம் நம்ம பொன்மணியை வினைதீர்த்தான் பயல் என்ன பாடு படுத்துருனே?''

முத்துலிங்கம், கலாவதி பக்கம் வந்தார்.

''ஒன் கிட்ட ஒரே ஒரு தடவைதான் வாயால் கேட்கப் போறேன். ஒண்ணன் எங்கே இருக்கான்?''

''கூட்டிக்கிட்டு வாங்க காட்டுறேன்.''

''அவ்வளவு திமுராடி ஒனக்கு?''

''பின்ன என்ன மச்சான்?... சொல்லிச் சொல்லிப் பார்த்துட்டோம். நீங்க கேட்காட்டால்... நாங்க அனுதைங்க... என்ன பண்ணமுடியும்?... நீரே சொல்லும்...''

இன்னொரு கையாள், இடையில் புகுந்தார்.

''இவள் சப்-இன்ஸ்பெக்டர் கிட்டேயே நடிச்சவள். நீ எம்மாத்திரம்? வீட்டுக்குள்ள ரெண்டு பேரையும் படுக்க வச்சுட்டு, காவல் காத்த நாயை விசாரிக்கிற விதமாய் விசாரிக்காமல் கொஞ்சிறியாக்கும்.''

முத்துலிங்கம், பதிலளிக்கவில்லை. எல்லாவற்றையும் எதிர்பார்த்தவர் போல், கையாட்களிடம் வந்தார். "உம்... நெருப்ப மூட்டுங்கப்பா... இந்தா... இதைச் சுட வை... ரெண்டுல ஒண்ண பாத்துடலாம்" என்றார்.

கையாட்கள், அங்குமிங்குமாய் குதி போட்டுச் சென்றார்கள். பழுத்து விழுந்த தென்னை ஓலைகளையும் தூக்கணாங்குருவிக் கூடுகளையும், குஞ்சுகளோடும், குருவிகளோடும் எடுத்தார்கள். சோளப்பயிர் காவலுக்காய் போடப்பட்ட பரணில் இருந்து மண்ணெண்ணெய் டின்னை எடுத்தார்கள். ஒருவன் தீக்குச்சியைக் கிழித்தபோது, இன்னொருவன் அது காற்றில் அணையாமல் இருக்க, தன் வேட்டியால் திரை போட்டான்.

கலாவதியின் காயங்களைப் போல், நெருப்பு, விறகுகளில் அங்குமிங்குமாய் சிவப்புச் சிவப்பாய் பற்றி, செந்தீயானது. 'உய்...உய்' என்ற சத்தத்துடன், பாம்பு படமெடுத்து ஆடுவது போல், காற்றில் ஆடியது. கலாவதியின் பக்கம் ஒரு தடவை. மாடக்கண்ணுவின் பக்கம் மற்றொரு தடவை. அதற்குள் இருந்த வளைந்த கதிருவாளும் சிவப்பாகிக் கொண்டிருந்தது. நெருப்பின் ஒளியில், மாடக்கண்ணு, லேசாகத் தலையைத் தூக்கி மகளைப் பார்த்தார். அவளோ, தந்தையை மருவி மருவிப் பார்த்தாள். ஒரேயடியாகப் பார்த்தாள்.

முத்துலிங்கம், சிவப்பு அரிவாளின் பிடியைப் பிடித்தபடியே, கலாவதியை நெருங்கினார் அவள் நடப்பது நடக்கட்டும் என்பதுபோல் இருந்தாள். அதை உதாசீனமாக நினைத்த முத்துலிங்கம் கையாட்களிடம் கர்ஜித்தார். காளி கோவில் சாமியாடிகள், அறுத்த ஆட்டின் ரத்தத்தை குடிக்கும்போது, குரல் எழுப்புவார்களே, அப்படிப்பட்ட குரலில் ஆணையிட்டார்.

"இவள் உடம்புல சேலயும் ஜாக்கெட்டும் இருந்தால் எப்படிப்பா சூடு போட முடியும்? உம்... சீக்கிரம்! இவள் வாயில சூடு வச்சால் சொல்ல மாட்டாள்!"

# 15

கொடுமை என்பது லாட்டரிச் சீட்டு மாதிரி. தோற்கத் தோற்க, வாங்கச் சொல்லும்; போதை மாதிரி-போடப்போட, போட வைக்கும்; சூதாட்டம் மாதிரி—தோற்ருலும், வென்ருலும், தொடரச் சொல்லும்; எல்லாவற்றிற்கும் மேல், பப்ளிசிட்டி மோகத்தைப் போன்றது—இருப்பதில் துவங்கி, இல்லாததில் முடிய வைக்கும்.

ஆரம்பத்தில், மாடக்கண்ணுவையும், கலாவதியையும் லேசாக அடித்து, பலமாக மிரட்டி 'உண்மையை' வரவழைத்துவிட வேண்டும் என்றுதான், முத்துலிங்கம் அவர்களை, தோட்டத்திற்குக் கொண்டு வரச் செய்தார். ஆளுல், வீட்டிலிருந்து புறப்படும் போதே, தமிழரசியிடம்—அவர் பாணியில் சொல்லப் போளுல் 'கேவலம், ஒரு பொம்பிளையிடம்' தோற்றதை, கலாவதியிடம் வெற்றியாகக் காட்டவேண்டும் என்ற வெறி வந்தது.

இரண்டு 'போடோ', ஒரு 'சூடோ' போட்டால், உண்மை தாளுக வந்துவிடும் என்பதில் அவருக்குச் சந்தேகமில்லை. உடனே, அவர்கள் சொல்லப் போகும் இடத்திற்கு, தமது தலைமையில் ஒரு 'பிரதிநிதிக் குழுவை' அழைத்துச் சென்று, வினைதீர்த்தானை ராத்திரியோடு ராத்திரியாகக் கொண்டு வந்து, அவன் தலையை மொட்டை யடித்து, கரும்புள்ளி செம்புள்ளி குத்தி, கழுத்தில் எருக்கலை மாலையைப் போட்டு, கழுத்தில் மணல் பெட்டியை ஏற்றி, தெருத் தெருவாக, அவனை ஊர்வலமாக அடித்து, அழைத்துச் செல்ல வேண்டும். அப்புறந்தான், 'ஒரு கையையோ, காலையோ வெட்டவேண்டும் என்று நினைத்தார்.

ஆனால், கட்டிப் போட்ட மாடக்கண்ணுவும், கட்டாமல் போட்ட கலாவதியும் 'உண்மையை' சொல்ல மறுத்ததை, அவர்கள் தன்னை அவமானப்படுத்துவதாக நினைத்தார். இனிமேல், வினைதீர்த்தானை கண்டுபிடிக்கவே முடியாது என்ற ஒரு எண்ணம் ஏற்பட்டதும், அவர் வெறியரானார்.

'முத்துலிங்கம் தங்கச்சியை, கூட்டிக்கிட்டுப் போன வினைதீர்த்தான் குடும்பத்தை, நிர்மூலமாக்குனவனுக்கும் இந்த முத்துலிங்கம்' என்று ஊரார், தன்னை பயபக்தியுடன் பாராட்ட வேண்டும் என்ற துடிப்பு ஏற்பட்டது. அவர் கண் முன்னால், வினைதீர்த்தான்—பொன்மணி ஜோடிக்கு, கலாவதி தன் வீட்டு வாசலில் காவல் காப்பதுபோல் ஒரு கற்பனைக் காட்சி தோன்றியது. அந்தக் காட்சி விரிய விரிய, அவருள் இருந்த மிச்சம் மீதி மனிதாபிமானமும், மிருகத்தனமாய் மாறியது.

கலாவதியை நிர்வாணப்படுத்தத் தயங்கிய கையாட்களை, முத்துலிங்கம் அதட்டினார்.

"இதுல யோசிக்கதுக்கு என்ன இருக்கு? நம்மள பேடிப் பயலுவன்னு நெனச்சு இவள் 'கல்லுளி மங்கியா' கிடக்குறது ஒங்களுக்கு உறைக்கலியா? ஒங்களால முடியாட்டால் சொல்லுங்க, நான் செய்யுறேன். அப்புறம் ஒங்களுக்குன்னு ஏதாவது வந்தால், என்கிட்ட வரப் படாது. நாம் இனிமேலும் சும்மா இருந்தால், பேடியிலயும் பேடி பெரிய பேடின்னு அர்த்தம்."

கையாட்கள், தாங்கள் பேடிகள் இல்லை என்பதைக் காட்டுவதற்காகவோ என்னவோ, சும்மா இருக்கவில்லை. உடம்பையே கையில் பிடித்து நிற்பவள்போல், நின்று, கையெடுத்துக் கும்பிடப் போன கலாவதிமேல், கட்டு விரியன் பாம்புபோல் பாய்ந்தார்கள். ஏற்கனவே அவிழ்ந்திருந்த கலாவதியின் சேலை, அவர்கள் கையோடு வந்தது. பாவாடை, துண்டு துண்டாக வந்தது. அவள் முண்டி

யடித்து முருங்கை மர வேரில் விழுந்தாள். அதில் சிக்கிக் கிழிந்த ஜாக்கெட், அவர்களிடம் கந்தல் கந்தலாகப் போனது. அவர்கள் நிர்வாணப் படுத்தும்போது, கலாவதி சொன்ன ஒரே வார்த்தை:

"எய்யா... என்னப் பெத்த அய்யா..."

எரியும் நெருப்பில், விரியும் வெளிச்சத்தில், மகள் படும் மானப்பாட்டைப் பார்த்துவிட்டு, மாடக்கண்ணு சொன்ன ஒரே வார்த்தை:

"மவளே... மவளே!"

கலாவதி, முதலில் உடம்பை மறைக்கப் போனாள். அதற்காக, உடம்பை குறுக்கப் போனாள். அது முடியாது என்பது தெரிந்ததும், கண்ணோடு சேர்த்து, முகத்தைக் கரங்களால் மூடியபடி, எவர்கள் துகிலுரிந்தார்களோ, அவர்களிடமே ஆதரவு தேடுபவள்போல் சாய்ந்தாள். அவர்கள், ஆணுடம்புக்காரர்கள் என்றோ, தன்னுடம்பு பெண்ணுடம்பு என்றோ பேதம் தெரியாமல் பேதலித்துச் சாய்ந்தாள்.

வழியிலே. ஒரு கிழவியைப் பார்த்தால்கூட, மாராப்புச் சேலையை இழுத்து மூடி, பாவாடை தெரியாமல் இருக்க, இடுப்புச் சேலையை தூக்கி நிறுத்தி, வயிறு தெரியாமல் இருக்க, முந்தானைச் சேலையை முன்னால்மூடி நடந்து பழகிய கலாவதி, இப்போது, மானத்தை மறைக்க முடியாமல் வானத்தையே பார்த்தாள். மாடக்கண்ணுவோ, நெற்றியை ஒரு கல்லில் மோதியபடி, குப்புறப் புரண்டார்.

திரௌபதியைப் போல், கையெடுத்துக் கும்பிட அவளுக்கு கண்ணன் இல்லை. வாசகர்கள் எதிர்பார்ப்பது போல்—சினிமாக்காரர்கள் நம்மை நம்ப வைப்பதுபோல், வினைதீர்த்தான் அங்கே திடீரென்று குதிக்கவில்லை. தமிழரசி, ரயில் கிடைக்காமல் ஊருக்குத் திரும்பி, ஆட்களைத் திரட்டிக் கொண்டு அங்கே வரவில்லை.

அவளுக்கு, அவளே காவல். கசப்பான கொடுமையை, இனிப்பாகச் செய்த திருப்தியில் நின்ற அந்த மனிதப் பேர்வழிகளின் கண்ணில் பட்ட, தன் நிர்வாணத்தை மறைக்க முடியாது என்பதை உணர்ந்து, அவள் தன் கண்களை— நிர்வாணமாயிருந்த தனது கண்களைத்தான்— இமைகள் என்னும் ஆடைகளால் மறைத்தாள்.

சிறிது நேரத்தில், மானம் அவளைப் பங்கப்படுத்த, அவள் சோளப் பயிருக்குள் ஓடப் போனாள். சற்று பள்ள மாய்க் கிடந்த கமலைக் கிடங்கின் முடிவிடத்தில் பதுங்கப் போனாள். தென்னை மரத்தருகே மறையப் போனாள். ஓடப் போனவளை, வீரபத்திரன் ஓடிப் பிடித்தார். பதுங்கப் போனவளை, பேச்சிமுத்து பாய்ந்து பிடித்தார். மறையப் போனவளை, பிள்ளையார் மடக்கிப் பிடித்தார். கலாவதி பேச்சற்று, நினைப்பற்று, பிரமைக்குள் நின்றாள்.

"நெருப்பிற்குப் பயந்து, ஆகாயத்தை வட்டமடித்த பறவைகளே! நீங்களாவது ஊருக்குச் சொல்லலாமே.. ஓ... நிர்வாணப் பறவைகளான உங்களுக்கு அவள் நிர்வாணம் ஒரு பொருட்டாகத் தெரியலயோ...? தோட்டத்தின் நிர்வாணத்தை மறைக்கும் பயிர் பச்சைகளே! பட்டென்று கீழே விழுங்கள். அப்படி விழுந்தால், தொலைவில் யாராவது போனால், அவர் கண்ணில் இந்தக் காட்சி பட்டு, ஊருக்கு சேதியாய் போனாலும் போகலாம்!

தாவர சங்கமம், கலாவதியைக் கைவிட்டது. காதல் தூதுக்கு கிளியுண்டு; நிர்வாணத்திற்கு ஏது?

கலாவதி, கை சோர்ந்து, மெய்சோர்ந்து, சிந்தை யிழந்து, செயலிழந்து, உடம்பில் ஏற்பட்ட நிர்வாணத் தால், உள்ளத்தாலும் நிர்வாணப்பட்டவள் போல், வீரபத் திரன் மேல் சாய்ந்தாள். அவர் 'சீ' என்று உதறியபோது, அவள் தலை, பேச்சிமுத்துவின் தோளிலும், கைகள்,

பிள்ளையார் தலையிலும் விழுந்தன. சாய்த்தவர்கள் மேலேயே சாய்ந்தவள், அப்படியே கிடந்தாள்.

முத்துலிங்கத்தின் கையில், கதிரருவாள், சிவப்புச் சிவப்பாய் பளபளத்தது. ரத்தச் சிவப்பாய் மின்னியது. ஏழையின் பிழைப்பாயுதமான அந்த பன்னருவாளின் மரப் பிடியைப் பிடித்தபடி, முத்துலிங்கம், நிதானமாய், அடிமேல் அடியாய் நடந்தார்.

''இப்போதாவது உண்மையைச் சொல்லு'' என்று கேட்கப் போனவர், வாயை மூடிக் கொண்டார். வினை தீர்த்தான் வந்தாலும் சரி, கிடைத்தாலும் சரி, கலாவதியை விடப் போவதில்லை என்ற கங்கணக் கொடுமை விழிகளோடு, கலாவதியின் விழிகளை பலவந்தமாகத் திறந்தார். நெருப்புத் துண்டை நீட்டினார்.

''இந்தக் கண்ணுதானடி காவல் பார்த்தது'' என்று சொல்லியபடியே, நெருப்புத் துண்டை கண்களுக்குள், கொடுமையின் அடிக்கல்லாக நாட்டப் போனபோது, கலாவதியின் அனிச்சை உணர்வு, விழிகளை, அவரிடம் இருந்து விடுபட வைத்து, மூடச் செய்தது. இதனால் கண்களுக்குள் போகப் போன சூட்டருவாள், கலாவதியின் இமைகளுக்குக் கீழே பட்டது பட்ட இடம் பொசுங்கியது. அவள் மீண்டும் ''எய்யோ... எய்யோ...'' என்றாள்.

மனித ரத்தம் ருசி கண்ட புலிபோல முத்துலிங்கம் மாறினார்.

''இந்தக் கையாலதானடி அவங்களுக்கு வழியனுப்பினே?'' என்று கைகளில் சூடு போட்டார். ''இந்த நெஞ்சுலதானடி அவங்க போன இடம் மறைஞ்சு இருக்கு'' என்று மார்பகங்களிலும் மார்பகங்களுக்கு மத்தியிலும், காய வைத்த அரிவாள் முனையை ஏவி விட்டார்.

''இந்த வாய்தானடி அவங்கள போகச் சொன்னது'' என்று அவர் கத்தியபோது, தீக்கோல், அவள் வாய்க்குள்

நுழைந்தது, இப்படி ஒவ்வொரு உறுப்புக்கும் ஒரு தொழிலைக் கற்பித்து, ஒவ்வொரு விதமாக பன்னருவாள் முத்திரையிட்டது. கலாவதிக்கு எங்கெல்லாம் நெருப்பு முத்திரையை பதிக்கமுடியுமோ, அங்கெல்லாம் பதித்தார்.

உடம்பின் ஒன்பது வாசல்களில், கண் வாசல்கள் தவிர, மீதி வாசல்களை, அரிவாள் முனை, அனலாய் சுட்டெரித்தது. உடம்பு முழுவதும் அந்தத் தீக்கோலால், அவர் கொடுங் கோல் புரிந்தபோது, முதலில் "எய்யோ... எய்யோ" என்ற கலாவதி, பிறகு அந்த அரிவாள் முனை, உடம்பில் சூட்டை கக்கக் கக்க, அதே விகிதத்தில் உயிரை உடம்பிலி ருந்து கக்கி விட்டவள் போல, 'ஆங்...ஆங் ' என்று மட்டும் தனக்குள்ளே புலம்பி, தனக்குள்ளே தவித்தாள். கடைசி யாக, உடம்பில் எல்லாப் பக்கமும் பொசுங்கியதால், நிற்க முடியாமல் கீழே விழுந்தாள். வலி தாங்க முடியாது தரையில் புரண்டாள்! பிறகு புரளாமலே கிடந்தாள்.

திடீரென்று சரல் மேட்டில், உயிரை உறைய வைப்பது போல் சத்தம் கேட்டது. குறுக்கப்பட்ட மாடக்கண்ணு மரணப் பிரகடனத்தை வெளியிடுபவர் போல் வெளி யிட்டார்.

"அடேய் முத்துலிங்கம்! என் பெண்ணையாடா பண்ணுத கோலமெல்லாம் பண்ணிட்டே? ஒரு காலத்துல ஒம்மா இதே இந்தத் தோட்டத்துல, என் கையைப் பிடிச்சு இழுத்து சோளத்தட்டைக்குள்ளே கூப்பிட்ட போது, அவளை கையெடுத்துக் கும்பிட்டு ஓடினவண்டா நான். அப்படிப் பட்டவன் பெத்த மகளயாடா இந்தப் பாடுபடுத்துரே? ஒன்னோட சொத்துல்லாம் ஒம்மாவுக்கு வெளியூர் வியாபாரிங்க கொடுத்ததுடா. ஒம்மா சங்கதிய ஊர்ல கேட்டுப் பாருடா. கடவுள் ஒன்னை விட மாட்டாண்டா. ஆண்டவா! நீ இருக்கியா இருக்கியா... நீ இருக்கப்படாது... நீ அப்படி இருந்தால் இவன்கூட சேர்ந்ததா அர்த்தம் ஆயிடும். அடேய்... என் மவள

பலவந்தமாய்தான் அம்மணமாக்குனே. ஆனல் ஒன் அம்மா பலர்கிட்ட அம்மணமாய் நின்னவள். அந்த புத்திய கடைசில காட்டிட்ட பாத்தியா...''

அம்மாவின் கற்பை சோதித்துப் பார்க்காமலே தெரிந்துகொண்ட முத்துலிங்கம், கதிரருவாளை கீழே போட்டுவிட்டு, சரல்மேட்டைப் பார்த்து ஓடினர். மாடக் கண்ணுவின் தலைக்கு, தனது வலது காலை அம்பாக்கி, அவர் ஓடிச்சேர்வதற்குள்—

மாடக்கண்ணு, தனது உடம்பின் மூலைமுடுக்கெல்லாம் உள்ள சக்தியனைத்தையும் ஒன்று திரட்டி, மூச்சை நிறுத்தி, முன் நெற்றியைச் சாய்த்து, சரல்மேட்டில் இருந்து தன்னைத்தானே உருட்டினர். துவக்கத்தில், உருளாதது போல் அங்குமிங்குமாக ஆடிய உடம்பு, அவர் அடிவயிற்று நெருப்பை, கரிஎஞ்ஜின்போல் தலைக்குக் கொண்டு வந்ததும், சரல் மேட்டுச் சரிவில் உருண்டோடியது. சுருண்டு சுருண்டு, உருண்டு உருண்டு, விழுந்து விழுந்து போன அந்த உடம்பை, திடீரென்று காணவில்லை. 'மூலைப்படி' வரை தண்ணீர் நிரம்பிய கிணற்றில் மட்டும் 'தொப்' என்று சத்தம் கேட்டது. நெருப்பின் ஒளியில், தீர்த்திவலைகள், அந்தரத்தில் வானவில்லாய்த் தோன்றி, பின்பு வடிவம் குலைந்தன.

முத்துலிங்கம் உட்பட எல்லோரும் பிரமித்தபடி, கிணற்றுப் பக்கம் நடந்தார்கள். கையில் உள்ள பேட்டரி லைட்டைப் போட்டு, கிணற்றுக்குள் பார்த்தார்கள். கிணற்று நீர், சுழிபோட்டுக் கொண்டிருந்தது. நடுப் பாகத்தில் குமிழிகள் தோன்றின. மாடக்கண்ணு, உயிர்த் தாகம் தீர, தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தாரோ என்னவோ?

எல்லோருக்கும் என்ன செய்வதென்று புரியவில்லை. கிணற்றையே பார்த்துக்கொண்டிருந்தவர்கள், கிணறு மாதிரியே, வாயைப் பண்ணினர்கள். 'உம்...உம்...ஆங்... ஆங்' என்ற சத்தத்தைக் கேட்டு, தலை திருப்பினர்கள்.

கலாவதி, மீண்டும் குப்புறப்படுத்து, மல்லாந்து புரண்டு பக்கவாட்டில் சாய்ந்து, கால்களை நீட்டி, கைகளை முறுக்கி கசிந்து கொண்டிருந்தாள். உயிரை உருட்டுவது போல், உடம்பை உருட்டிக் கொண்டிருந்தாள். பிறகு, பழைய படியும் அசைவற்றுக் கிடந்தாள்.

திகைத்து நின்ற முத்துலிங்கமும், கையாட்களும், ஒருவரை ஒருவர் பார்த்துப் பயப்படுவது போலவும், பயமுறுத்துவது போலவும் பார்த்துக் கொண்டார்கள். நெடிய மௌனம்! இரவிற்கு மரண முத்திரை குத்திய மௌடீக மௌனம்! ஐந்து நிமிட அராஜக இடைவெளிக்குப் பிறகு, பிள்ளையார், வாயைப் பிராண்டினார்.

"என்னப்பா இது, பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடியுது. முத்துலிங்கம்... ஒன்னத்தான். இது, இதோட நிக்காதே... ஒன்னால நாங்களும் முட்டாத்தனமாய்..."

பேச்சிமுத்தும் பேசினார்.

"கடைசில, விதி நம்மை தூக்குல போடப் போகுது பாரு. இதுக்குத்தான் கேட்பார் பேச்சைக் கேட்கக் கூடாது என்கிறது."

தலையில் கை வைத்தபடி நின்ற முத்துலிங்கம், லேசாய் சுதாரித்தார்.

"எப்படியோ எதிர்பார்த்தது கிடைக்காமல், எதிர் பாராதது நடந்துட்டு. ஒங்க வீட்ல இப்படி ஒருத்தி ஓடிப் போய், ஒங்க தோட்டத்துல இப்படி ஒன்று நடந்திருந்தாலும், அங்கேயும் முன்னால் நிற்கிற ஆளு நான். நான் வேணுமுன்னால்... எல்லாத்துக்கும் பொறுப்பேத்துக் கிறேன். தலைபோனாலும் ஒங்களக் காட்டிக் கொடுக்கல. நீங்க வேணுமுன்னால் போங்க. நான் எக்கேடும் கெட்டுப் போறேன்."

"சரிப்பா ... இப்போ இவளை என்ன பண்ணலாம்? இவளும் செத்து ரெண்டு கொலையாய் ஆயிடப் போவுது."

"அப்படிக் கேட்டிங்கன்னு அது முறை. ஒங்கள நான் கைவிட்டுடுவேனு? தாமோதரன் எதுக்கு இருக்கான்? ஒங்க ஒடம்புல ஒரு துரும்பு பட்டாலும், நானே கையைக் காலே கட்டிக்கிட்டு இந்தக் கிணத்துல விழுவேன். மாடக் கண்ணு தலைவிதி கிணத்துல முடிஞ்சால், நீங்களோ நானே என்ன செய்ய முடியும்?"

"இப்போ என்னப்பா செய்யுறது?"

"இவள தூக்கிக்கிட்டுப் போய் என் மயினி மகன் டாக்டர்... டவுன்ல நர்ஸிங் ஹோம் வச்சிருக்கிறுன் பாருங்க... அதுல சேர்த்துடுங்க. உம்...சரி தூக்குங்க..."

"நீ வர்லயா?"

"வர்ல!"

"நாங்க மட்டும் எதுக்காகப் போகணும்?"

"ஏன் இப்படிக் கத்துறீங்க? நாம் எல்லாரும் போயிட்டால், ஊர்ல சந்தேகம் வந்துடும். அதனுல ரெண்டு பேரு போனுல் போதும். நான் காலையில பணத்தோட வாறேன். வீரபத்திரன் அண்ணனுக்குத்தான், என் மயினி மகனை நல்லாத் தெரியுமே. இவளை அங்கே சேர்க்கிறது, யாருக்கும் தெரியப்படாதுன்னு அவன்கிட்ட சொல்லிடுங்க."

"ஒருவேள இவளுக்கு வழில ஏதாவது ஆயிட்டால்?"

"சின்னப்பிள்ளை மாதிரி பேசுறது தப்பு. வழியில குழி வெட்டிப் புதைச்சிட்டு வர வேண்டியதுதானே."

செத்தவள் போல் கிடந்த கலாவதியின் மூக்கில், பேச்சிமுத்து விரல் வைத்துப் பார்த்தார். மூச்சு வந்தது. அவள் உடம்பின் பல இடங்கள், பொசுங்கியும், பிதுங்கியும் கிடந்தன. உடம்பெங்கும் பொசுங்கிப் போன, கருப்புக் கருப்பான கொடுமை முத்திரைகள். சிலவற்றில், வெள்ளைக் கொப்பளங்கள். இன்னும் ஒரு சில உறுப்புக்களில், சதைத்திரள்கள் புகைந்துகொண்டிருந்தன.

தொட்ட இடத்திலெல்லாம், அவர்கள் கை சுட்டது. பார்த்த இடத்திலெல்லாம் பாளம் பாளமான கருப்பு மேடுகள்; பொசுக்கல் காடுகள்.

கலாவதியின் உடம்பில், தனது மேல் துண்டை எடுத்துப் போட்ட பேச்சிமுத்து, அவளைத் தூக்கி, தன் தோளில் போட்டுக் கொண்டார். வீரபத்திரனைப் பார்த்து "பேய்க்கு வாழ்க்கைப் பட்டால், புளியமரத்தில் ஏறித் தான் ஆகணும். உம் நடடா..." என்றார்.

கலாவதியைத் தூக்கிக் கொண்டு பேச்சிமுத்துவும், வீரபத்திரனும் சுடுகாட்டுப் பக்கம் போனபோது, நரிகள் ஊளையிட்டன; ஆந்தைகள் ஓலமிட்டன; அண்டங்காக்கை கள் வட்டமடித்தன. சாகாத பிணத்தை வழி மறிக்க, அவை ஆயத்தம் செய்தன.

சரல்மேட்டில் நின்றபடி சுடுகாட்டைப் பார்த்த முத்து லிங்கம், கிணற்றை ஒரு தடவை பார்த்துவிட்டு, கமலைக் கிடங்கிற்கு வந்து, கையாட்களுடன் சேர்ந்து கொண்டார். ஒவ்வொருவரும், நடந்ததையும், நடக்கப் போவதையும், தத்தம் மனோபாவத்திற்கு ஏற்றபடி மனதுக்குள் கற்பனை செய்து, கண்களை ஆட்டாமல், கல்லாய் சமைந்தார்கள். அரை மணி நேரம் இடைவெளிக்கு ஒரு தடவை, ஒவ்வொருவராக, ஊரைப்பார்த்து நடந்தார்கள்.

இறுதியாக எஞ்சிய முத்துலிங்கம், உடம்பாட எழுந் தார். உயிராட பயந்தார். கிணற்றுக்குள் உயிர் பாய்ச்சிய மாடக்கண்ணு, பேயுருவாகி, அவரையும் கிணற்றுக்குள் தூக்கிப் போடுவதுபோல் ஒரு பிரமை; கலாவதி வழியிலேயே உயிர்போய், மோகினிப் பிசாசாகி, அவர் முன்னால் பாம்பாய் வந்து, உடம்பைச் சுற்றுவது போன்ற பயப்பிராந்தி. முத்துலிங்கம் எழுந்தார். கால்கள் தரையில் மடங்கின. சுடுகாட்டு நரிகளின் ஊளை, அவர் ஊனை சில்லிட வைத்தது. 'எய்யோ...எய்யோ...' என்று கலாவதி, காதில் கத்திக் கொண்டிருந்தாள்.

கிணற்றையும், சுடுகாட்டையும் பார்த்தபடியே, முத்து லிங்கம் குத்துக்காலிட்டு உணர்ச்சியற்றுக் கிடந்தார். பிணக்களையோடு, பேய்க்களை தோன்ற, முகத்தை கால்களுக்குள் மாட்டிக் கொண்டார்.

பகலவன் உதித்து, பறவைகள் ஆர்த்தபோதும், எழாத முத்துலிங்கம், வெயிலின் உறைப்பு உஷ்ணமான போதுதான் எழுந்தார். மீண்டும் கிணற்றுப் பக்கம் போய், கீழே பார்த்தார். எதுவும் தெரியவில்லை. பிணம் மிதக்க எப்படியும், இன்னும் இரண்டு நாட்கள் ஆகும். அதற்குள் எதையாவது ஜோடிக்க வேண்டும். எப்படி ஜோடிக்கலாம்? இந்த தமிழரசி என்ன செய்வாளோ?

முத்துலிங்கம் தள்ளாடினார். தள்ளாடித் தள்ளாடி, நடந்தார். வீட்டில் போய் அப்படியே சாய வேண்டும் போலிருந்தது. அதே சமயம், வீட்டிற்குப் போகவே மனமில்லை. 'கடைசியில், அம்மா—என்னைப் பெற்றவள்— இப்படிப்பட்டவளா? மாடக்கண்ணு, நீ தோற்கல. நான் தான் ஒன்கிட்டே தோற்றுட்டேன்.'

ஆங்காங்கே, உட்கார்ந்து உட்கார்ந்து, எழுந்தெழுந்து நடந்தார் முத்துலிங்கம். வழியில் பார்த்தவர்களிடம் முகம் காட்டாமல், ஒதுங்கியபடியே நடந்தார். ஊர் முனைக்கு வந்ததும், அவர் தலை தானாகக் கவிழ்ந்தது. தொலைவிடத்தைப் பார்க்காமலே, தலை குனிந்தபடியே நடந்தவர்...

"அதோ...வாரான்...அதோ வாரான். பிடியுங்க... பிடியுங்க" என்ற கோரஸ் குரல் கேட்டு திடுக்கிட்டு நிமிர்ந்தார். எதிரில் பத்துப் பதினைந்து போலீசாருக்கு மத்தியில், கலாவதியைத் தூக்கிச் சென்ற பேச்சிமுத்து, வீரபத்திரன், தோட்டத்தில் இருந்து போன பிள்ளையார் ஆகிய மூவர் கைகளும் ஒன்றுடன் ஒன்று கட்டப்பட்டு, அவர்களை ஒரு சிலர் மாடுகளைப் போல் விரட்டிக் கொண்டிருந்தார்கள்.

போலீசார் அவர்களை அடித்தும், பிடித்துத் தள்ளியும் நடத்திக்கொண்டிருக்க, அவர்கள் பின்னால் ஊரே திரண்டு வந்தது. முத்துலிங்கத்தைப் பார்த்ததும் கையாட்களின் பெண்டு பிள்ளைகள் போலீசாருக்கு முன்னால் ஓடி வந்தார்கள். முத்துலிங்கம் செய்வதறியாது நிலையிழந்து நின்ற இடத்தை நோக்கி, மண்ணை அள்ளி வீசினார்கள். ஒப்பாரிச் சத்தத்துடன், அவரைப் பார்த்து ஓடினார்கள்.

"ஏ...கரிமுடிவான்...இந்த தடிமாட்டு மனுசங்க கிட்டே...கலாவதிய கொடுத்துட்டு தப்பிக்கவாடா பார்த்தே? ஒரு ஏழை மேல, வேற ஏழைங்களையாடா ஏவி விட்டே? குடிகெடுப்பான். நீ கொலகாரனாய் ஆனது போதாதுன்னு, எங்க குடும்பத்தையும் அப்படி ஆக்கிட்டியேடா. வழியில இவங்கள மடக்குன போலீஸ் ஒன்னை விடாதுடா?"

முத்துலிங்கத்தை நோக்கி போலீசாரும், ஊர்க் கூட்டமும் ஓடியது. லத்திக்கம்புகள் நீளமாக, பெண்களின் கைமண்கள் தூள் பறக்க, கூட்டம் கத்திக்கொண்டே ஓடியது.

முத்துலிங்கமும் ஓடினார். எந்தப் போலீசிடம், சின்னச் சின்ன காரியங்களுக்குப்போய் வெற்றி கண்டாரோ, அவர்களுக்குப் பயந்து ஓடினார். "ஏய்...நில்லு...நில்லு" என்ற போலீஸ் வார்த்தைகளோடு, ஊர்க் கூட்டம் எறிந்த கல்லும் மண்ணும் முதுகில்பட, முத்துலிங்கம் கண்மண் தெரியாமல் ஓடினார். ஊருக்குள் வந்த நரி தப்பித்து ஓடுவதுபோல், சந்து பொந்துகளில் புகுந்து, மேடுகளில் கைகளை ஊன்றி, நான்கு கால் மனிதர்போல் ஓடிக்கொண்டிருந்தார்.

# 16

கேரளம்போல், சாலை நெடுக வீடுகளாகவும், அவற்றின் முன்னாலும், பின்னாலும் முக்கனி மரங்களோடு, ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த பாக்கு மரங்களும், தென்னை மரங்களும் மலிந்த பகுதி; நாகர்கோவிலில் இருந்து பத்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சாலையோர காவல் நிலையம். திருவனந்தபுரத்திலிருந்து, கன்னியாகுமரிக்கு அடிக்கடி 'வி. ஐ. பி. க்கள்' போய்க் கொண்டும், வந்து கொண்டும் இருப்பதால், பொதுமக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதைவிட, பொதுமக்களிடமிருந்து 'தலைவர்களுக்குப்' பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற லட்சியத் துடிப்புடன், மக்களையே சந்தேகப் பேர்வழிகளாய் நினைத்து, செயல்பட வேண்டிய கேந்திர நிலையம்

தனித்திருக்க விரும்பியது போல், பக்கவாட்டில் உள்ள அறையில், எல்லாவற்றையும் இழக்கத் தயாரான ஏகாந்தி போல், தன்னையறியாமலே தலையால், ஆகாய அந்தரத்தில் வட்டமடித்த தாமோதரன், உரத்த சத்தம் கேட்டு, வெளியே உற்றுப்பார்த்தான். யாரோ ஒருவர், 'ஏட்டு' பொன்னுச்சாமியிடம், படபடப்பாய்ப் பேசிக் கொண்டிருந்தார். உடனே அவன், தன் இருக்கையில் இருந்து எழுந்து அந்த இடத்திற்குப் போய், பேசியவரை அதட்டலாகக் கேட்டான்:

"என்னய்யா விஷயம்?"

"ஒண்ணுமில்லிங்க. என் வயலுல தண்ணீர் பாயக் கூடாதுன்னு, என் தம்பி வாய்க்காலை அடைச்சுட்டு, கொடுக்கரிவாளோட வாய்க்கால்பக்கம் நிக்கிறான். அவன் பக்கத்துல போகவே பயமாய் இருக்கு. இன்னிக்கு வயலுல தண்ணீர் போகாட்டால், போட்டபயிரு பொசுங்கிப்

போயிடும். அதைத்தான அய்யா கிட்ட சொன்னேன். அய்யா அதுக்கு, ரத்தக் காயத்தோட வந்தியாஞல் ஏதாவது ஆக்ஷன் எடுக்கலாம். சும்மா வந்தால் எப்டிய்யான்னு அய்யா சொல்றுர்!''

தாமோதரன், பொன்னுச்சாமியை முறைத்தான். ஐம்பதைத் தாண்டிய அவரை, அதற்குமேல் முறைக்க அவனுக்கு மனம் வரவில்லை. பக்கத்தில் நின்ற இன்னொரு போலீஸ்காரரைப் பார்த்து, "நீங்க அவரோட போங்க. இப்போ நாட்ல தம்பிக்கு முதல் விரோதியே இந்த அண்ணங்கதாய்யா'' என்று சொல்லியபடியே, மீண்டும் தன் அறைக்குள் போனுன். சிறிதுநேர இடைவெளிக்குப் பிறகு, "மிஸ்டர் பொன்னுச்சாமி! கொஞ்சம் வந்துட்டுப் போறீங்களா!'' என்றுன், வினயமாக.

தாமோதரன் கூப்பிட்டு முடிக்கும் முன்னலேயே, ஏட்டு பொன்னுச்சாமி, அவன் முன்னல் சலூட் அடித்தபடி நின்றுர்.

தாமோதரன் நிதானமாகக் கேட்டான்: "ஒங்களுக்கு எத்தனை வருஷம் சர்வீஸ் ஆகுது சார்?''

அவர் 'நீ பிறக்கு முன்னலயே சர்வீஸ்ல சேர்ந்துட்டேன்' என்று மனதுக்குள் சொல்லியபடியே, தாமோதரனை பயப்பட்டுப் பார்ப்பவர்போல், பாவலா செய்தார். தாமோதரன் நிதானம் இழக்காமல் கேட்டான்:

"சாந்தமாய் பேசுறதுனுலே நான் கோபப்படலன்னு அர்த்தமில்ல. நான் கேட்டதுக்குப் பதில் சொல்லுங்க.''

"முப்பது வருஷம் சார்.''

"போலீஸ்காரன் டூட்டி, குற்றத்திற்கு ஆக்ஷன் எடுக்கிறது மட்டுமில்ல; குற்றம் ஏற்படாமல் தடுக்கிறதுலயும் இருக்கு. இத்தனை வருஷத்துல இதுகூடவா ஒங்களுக்குத் தெரியல? ரத்தக் காயத்தை சாட்சியா கேட்கிறீங்களாம்.''

"சில்லறை, விஷயமுன்னு..."

"இப்போ நான் கேட்கப் போற விஷயமும் சில்லறை யான்னு தயவு செய்து சொல்லிடுங்க. போன வாரம் பூமிநாதன் எஸ்டேட்ல, ஒரு தொழிலாளி தூக்குல தொங்குனராமே, நீங்கதானே விசாரிக்கப் போனது?"

"ஆமாம் சார். அது தற்கொலைதான் சார்."

"தற்கொலையோ, வெறுங்கொலையோ? நீங்க, எந்த எஸ்டேட்ல அந்தத் தொழிலாளி தூக்குல தொங்குனரோ, அந்த எஸ்டேட் முதலாளி அனுப்புன கார்லயே விசாரணைக்குப் போயிருக்கீங்க. இதனுல, ஒரு கொலைக்கு போலீசும் உடந்தைன்னு தொழிலாளிங்க நினைக்கிறுங்க. எஸ்டேட் ஒர்க்கர்ஸ் அஸோஷியேஷன் பிரதிநிதிகள் வந்து, என்கிட்ட பேசிட்டுப் போனுங்க. நான் ஏதாவது பண்ணுட்டால் மேலே மேலே போவாங்களாம். இதுக்கு என்ன சொல்றீங்க. இதுவும் சில்லறை விஷயந்தானு?"

அவனை, மனதுக்குள் இளக்காரமாய் நினைத்த கான்ஸ் டேபிள் திகில்பட்டார். இந்த மாதிரி சமாச்சாரங்களில் சிக்கி, காவல்துறை வீரர்கள் சந்திக்கு வந்தது மனசுக்கு வந்தது. அதோடு பத்திரிகைக்காரங்க சந்தி சந்தியாய் எழுதிபெட்டுவானுவ... குழைந்தார்:

"அய்யாதான் அந்த லேபர் விஷயத்தை..."

"நீங்க மனசில எந்த கல்மிசமும் இல்லாமல்தானே கார்ல போனீங்க. அது ஒங்க விசாரணையைப் பாதிக் கலியே?"

"ஆமாங்க அய்யா!"

"அப்படின்னு நீங்க பயப்பட வேண்டாம். எது நியாயமோ அதைத்தான் விசாரிச்சு செய்வேன். யூ கேன் கோ."

போலீஸ்காரர் பொன்னுச்சாமி, தாமோதரனுக்கு 'கொன்னுடுவேண்டா' என்பது மாதிரி மீண்டும் ஒரு

சலூட்டை அடித்துவிட்டு, வெளியேறினார். தனக்குள்ளே கருவிக்கொண்டார். 'பொதுமக்களில் ஒருவர் மேல் ஒரு அநியாயம் நடந்தால், அதுக்குக் காரணமான டிபார்ட்மெண்ட் ஆளைக் காட்டிக் கொடுப்பது, டிபார்ட்மெண்டை காட்டிக் கொடுப்பதாய் ஆகாது. ஆகக்கூடாது' என்று பேசுகிற இவன் கிட்ட என்ன பேச்சு? இருக்கவே இருக்கார் இன்ஸ்பெக்டர் அய்யா.

பொன்னுச்சாமி அகன்றார்.

தாமோதரன், தன் சிந்தனைச் சிறைக்குள், தன்னைத் தானே கைது செய்து காவலிட்டான். வேலைப் பளுவால் ஊர் நிகழ்ச்சிகளை சிறிது நேரம் மறந்திருந்த அவன் மனதுள், வெற்றிடத்தில் வெள்ளம் புகுவதுபோல், ஊரின் நிகழ்ச்சி சுமை, சகோதரச் சுமையாக, அவமானச் சுமையாக, கையாலாகாச் சுமையாக, காதல் சுமையாக அழுத்தின. இறுதியில் எல்லாச் சுமைகளும், மனதின் அதலபாதாளத்திற்குள் ஆழமாய் மூழ்க, மன மேல் மட்டத்தில் காதல் சுமை மட்டும் மிதந்தது. சுவையாக இருக்க வேண்டியது சுமையாக, அவன் மனப்பாரம் தாங்க முடியாமல், தலையை ஆட்டினான். தனக்குள்ளேயே முனங்கிக் கொண்டான். தமிழரசியைப் பார்த்து, இரண்டு நாட்கள்தான் கடந்திருக்கின்றன என்றாலும், அந்த ஒவ்வொரு நாளும், வருடமாய் வடிவெடுத்தது. அவளை எப்போது பார்ப்போமோ என்று நினைத்தபடியே மேஜைப் பரப்பில், பேப்பர் வெயிட்டை உருட்டினான். அது, அவன் கையை விட்டுக் கீழே விழுந்தது. இதே இந்த காவல் நிலையத்திலும், தான் வேலை பார்த்த இதர காவல் நிலையங்களிலும், எத்தனையோ காதல் ஜோடிகள், "விவகாரமாகும் போது" அவர்கள் 'விவாகம்' முடிக்கக் காரணமான அவன், இப்போது தனது காதலும், ஒரு 'லா அண்ட் ஆர்டர்' பிரச்சனையாகி விட்டதில், கை கால்கள், அராஜகமாக, ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன.

தாமோதரன் சட்டென்று எழுந்தான். ரைட்டரிடம் வந்து "நான் நாராயண குரு கோவில் வரைக்கும் போயிட்டு வாரேன்" என்ருன். ரைட்டர் அவனை விநோத மாகப் பார்த்தார்! கோவில் குளத்திற்கு, டூட்டிக்குப் போகும் போதும், சாமி கும்பிடப் போகாதவன், இப்போது நாராயண குருவிடம் போகிருர் என்ருல், ஊரில் ஏதோ நடந்திருக்கும். போலீஸ்காரர்களை, நம்பர் சொல்லிக் கூப்பிடாத இந்த இளைஞருக்கு எதுவும் வரப் படாது. ரைட்டர் தன் பங்குக்கு ஒரு சிபாரிசு செய்தார்.

"அப்படியே குமார கோவிலுக்கும் போயிட்டு வாங்க சார்."

தாமோதரன் புறப்பட்டான்.

ரைட்டர் 'மோட்டார் சைக்கிளில் போங்களேன்' என்று சொல்லப் போனுர். அப்படிச் சொன்னுல் 'நான்... டூட்டில போகல...' என்று பதில் சொல்வான் என்பதும் அவருக்குத் தெரியும். இவரைப் போல், எத்தனையோ கான்ஸ்டபிள்கள் வாழ்கிறதும் வாழ்ந்து வதங்கிக் கொண் டிருப்பதும் ரைட்டருக்குத் தெரியும். அவரே அப்படித் தான். ஆனுலும், இந்தக் காலத்துப் பையனுன தாமோதர னிடம் இந்த நெறிகளை எதிர்பார்க்காதவர் அவர். இப்படியே இருந்தால், இவர் எத்தனை நாளைக்கு இந்த டிபார்ட்மென்டில் குப்பை கொட்ட முடியுமோ!

சாலைக்கு வந்த தாமோதரன், ஸ்தம்பித்து பார்வை நிலைகுத்த நின்ருன். அண்ணன் முத்துலிங்கம், எதிர் திசையில் இருந்த பஸ் ஸ்டாப்பில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தார். பறட்டைத் தலையோடு வந்தார். கை கால் முழுவதும் ஒரே சேறு. முகத்திலும், கழுத்திலும் பல உராய்ப்புக்கள். தாமோதரன் பதறிப் போய் அண்ணனை நோக்கி, நட்டநடு வீதிக்கு வந்தான்.

"என்னண்ணு... என்ன கோலம் இது?"

"தெருவுல நின்று பேசாண்டாம். உள்ளே போவலாம்."

இருவரும் உள்ளே வந்தார்கள். ஏற்கனவே பரிச்சயமான முத்துலிங்கத்தின் பிதுங்கிய விழிகளையும், கூம்பிய முகத்தையும் பார்த்துவிட்டு எல்லாப் போலீஸ்காரர்களும் ஆச்சரியப் பட்டார்கள். முத்துலிங்கம், தாமோதரன் காட்டிய நாற்காலியில் உட்கார்ந்தார்.

"என்னண்ணு திடீர்னு?"

"வினைதீர்த்தானை எப்படியாவது கண்டு பிடிக்கணுமுன்னு நினைச்சு, மாடக்கண்ணுவையும், கலாவதியையும், நம்ம தோட்டத்துக்குக் கொண்டு போனேன். மாடக் கண்ணுவை, லேசா ரெண்டு தட்டுத் தட்டுனேன். உடனே அந்தக் கிழட்டுப் பயல் திடீர்னு நம்ம கிணத்துக்குள்ளேயே விழுந்து... செத்..."

தாமோதரன், நாற்காலியில் நிமிர்ந்து உட்கார்ந்தான். முகம் அதிர்ந்தது. விழிகள் வெளுத்தன. நெற்றி புடைத்தது. வாய், பல் தெரிய விரிந்தது. உதடுகள் துடித்தன. அண்ணனையே, அதிர்ச்சியுறப் பார்த்தான். அவர், அவன் பார்வை தாளமாட்டாது, முகத்தைக் கவிழ்த்துக் கொண்டார். ஐந்து நிமிடம்வரை அண்ணனையே விழியாடாது பார்த்தவன், சோர்ந்து போய் நாற்காலியின் சட்டத்தில் சாய்ந்தான். இரண்டு நிமிடம் சாய்வாய் கிடந்துவிட்டு, மீண்டும் நிமிர்ந்தான். நாற்காலியின் முனைக்கு, உடம்பை நகர்த்திக் கொண்டபடியே, அனல் கக்கப் பேசினான்:

"ஒங்களுக்கு மூளை இருக்கா? அது இல்லாட்டாலும் பரவாயில்ல, கொஞ்சமாவது ஈவு இறக்கம் வேண்டாமா? நீங்க என்ன பெரிய சினிமா வில்லனா? எதுக்காக அந்த அப்பாவிங்களை தோட்டத்துக்குக் கொண்டு போனீங்க? கேழ்வரகுல நெய் ஒழுகுதுண்ணு நீங்க சொன்னால், நான் நம்பணுமா? மாடக்கண்ணு மாமா, சும்மா கிணத்துக்

குள்ள விழுந்திருக்க முடியாது. என்னெல்லாம் செய்தீங்க? சொல்லுங்க!''

முத்துலிங்கம், அவனைப் பார்க்காமல், சுவரைப் பார்த்தார். பிறகு, வலுக்கட்டாயமாக வார்த்தைகளை வரவழைத்தார்.

''என்னால இப்போ எதுவுமே பேச முடியல. வேற வழியில்லாமல்தான் ஒன்கிட்ட வந்திருக்கேன். போலீஸ் என்னை துரத்துது. ஊர்ல இப்போ என்ன நடக்குதோ? நம்ம அப்பாவை என்ன பண்ணுறுங்களோ? ஒன் அண்ணியை என்ன பண்ணுறுங்களோ?''

''இந்தப் புத்தி மொதல்லே இருந்திருக்கணும்.''

''நீயும் உதறிட்டால், நான் கன்னியாகுமரி கடலுல விழவேண்டியதுதான்.''

''அப்படிச் செய்யாதீங்க. நீங்க செய்திருக்கிற பாவம், மூன்று கடலுலயும் ஒட்டி... புனித நீராடுறவங்களையும் பிடித்துக்கிடும்... மாடக்கண்ணு விழுந்த கிணத்துலயே போய் விழுங்க. சீ!''

ரைட்டர், தன் இருக்கையில் இருந்து எழுந்தார். தாமோதரன் அறைக்குள், உரிமையோடு நுழைந்தார்.

''என்னோட இன்டர்பியரன்ஸை தப்பா நினைக்கப் படாது. ஒங்கண்ணு இப்போ பேசுற நிலையில இல்ல. ஆயிரம் செய்தாலும் அவரு ஒங்களுக்கு அண்ணு. எதுக்கும் அந்த ஏரியா போலீஸ் ஸ்டேஷனுக்கு டிரங்கால் போட்டு, மொதல்ல லேட்டஸ்ட் சுட்சுவேஷனைக் கேளுங்க சார்.''

தாமோதரன் பதிலளிக்கவில்லை. அதை சம்மதமாக எடுத்துக் கொண்டு, ரைட்டர் 'கால்' போட்டார். டயலைச் சுழற்றினர். ஒரு நம்பர் உருண்ட உடனேயே 'ஒய்ங்' என்ற சத்தம். ''இந்தக் காலத்துல பிளட்பிரஷ்ஷர் வருறதுக்கு இந்த டெலிபோனும் ஒரு காரணம்'' என்று

சற்று தொலைவில் உயிர்ப்பில்லாமல் நின்ற போலீஸ்காரர் பொன்னுச்சாமியைப் பார்த்தபடியே சொல்லிக்கொண்டு, மீண்டும் எண்களைச் சுழற்றினார்.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு 'லைட்னிங்' கால் கிடைத்தது. ரைட்டர், ரிஸீவரை தாமோதரனிடம் நீட்டினார். அவன், வேண்டா வெறுப்பாகப் பேசினான்.

"ஹலோ சோமசுந்தரமா? தாமோதரன் ஹியர்! என்ன நீங்களே என் கிட்ட பேச நினைத்தீங்களா? எங்கண்ணாவா? இங்கே இல்லியே. சாரி... இங்கேதான் இருக்கார். என்ன... என்ன... ஆ... அய்யய்யோ... அப்புறம்... அடகடவுளே... பிறகு ஊரு... கொதிக்காமல் என்ன சார் செய்யும்! ஒங்களுக்கு என்ன தோணுதோ அதைச் செய்யுங்க. என் தலைவிதி இப்படிப்பட்ட குடும்பத்துல பிறந்து தொலைச்சிட்டேன். நைட்ல பேசுவீங்களா? தேங்யூ! கலாவதி பிழைச்சுக்குவாளா? என்ன .. இப்போ சொல்ல முடியாதா? அவ்வளவு சீரியஸா... நீங்ககூட ஒண்ணும் செய்ய முடியாதா? செய்ய வேண்டாம். ஓகே."

டெலிபோன் ரிஸீவரை, தாமோதரன் வீசியெறிந்தான். அது சில்லி சில்லியாய் உடைந்து சிதறியது. ஒரே ஒரு துண்டு மட்டும், எஸ்டேட்டில் தூக்கில் தொங்கிய ஏழைத் தொழிலாளி போல, டெலிபோன் ஒயருடன் ஒட்டிக் கிடந்தது. தாமோதரன் எழுந்தான். கைகளைப் பிசைந்தான். 'சே...சே' என்றபடி, கைகளை முதுகிற்குப் பின்புறமாய் கட்டியபடி, குறுக்கும் நெடுக்குமாய் நடந்தான். முத்துலிங்கம், அவனைப் பயத்தோடு பார்த்த போது, அவன் பயங்கரமாய் கத்தினான்:

போலீஸ்ல எல்லாம் சொல்லிட்டாங்க. மாடக் கண்ணு மாமாவை கையைக் காலைக் கட்டி கிணத்துக்குள்ளே போட்டிருக்கே. கலாவதிக்கு கண்ட கண்ட இடத்துல எல்லாம் சூடு போட்டிருக்கே. தேவையில்லாமல், கொலை

காரனைக்கூட தொடாதவன் நான். இதுவரைக்கும் நயா பைசா வாங்காமல் யோக்கியமாய் வேலை பார்க்கிறவன். இப்படிப்பட்ட எனக்கு நீ அண்ணன்! சீச்சீ ... தமிழரசி கிட்டே என்னை தலை குனியவச்சே! பொறுத்துக்கிட்டேன். என்னைக் காட்டி இதுவரைக்கும் ஏழை பாழைகளை மிரட்டிக்கிட்டு இருந்தே. பொறுத்துக்கிட்டேன். ஆனால் இதைப் பொறுக்க மாட்டேன். என்னோட டூட்டி, ஒன்னை கைது செய்து அந்த சப்-இன்ஸ்பெக்டர் கிட்ட ஒப்படைக்கணும். ஏனோ மனசு கேட்க மாட்டக்கு. என் மனசு கல்லாகுமுன்னால, இங்கே இருந்து ஓடிடு. கெட் அவுட். ரைட்டர் இந்த ஆளைப் பிடித்து வெளில தள்ளுங்க. இவரு எனக்கு அண்ணனும் இல்ல. நான் அவருக்கு தம்பியும் இல்ல."

முத்துலிங்கம் எழுந்தார். கண்களைத் துண்டால் துடைத்தபடி, தழுதழுத்த குரலில், படபடக்கப் பேசினார்:

"எப்போ ஒனக்கு நான் அண்ணன் இல்லன்னு சொன்னியோ, அப்பவே எனக்கு தூக்குத் தண்டனை சின்னதாய் போயிட்டு. என்னால ஒனக்கு எந்தத் தொந்தரவும் வராது. நான் எப்படியாவது தொலைஞ்சு போறேன். கூடப்பிறந்த ஒரே ஒரு பாவத்துக்காக, எப்போவாவது ஊருக்குப் போய்... அண்ணியையும் பிள்ளைங்களையும் கவனிச்சுக்கோ. அடுத்த பிறவியிலயாவது நான் ஒனக்கு அண்ணனாய் பிறக்கப்படாதுன்னு கடவுளை வேண்டிக்கோ. சத்தியமாய் ஒன்மேல் எனக்குக் கோபம் இல்ல. நான் வாரேன்."

முத்துலிங்கம், நின்ற இடத்திலேயே சிறிது நேரம் நின்று, தாமோதரனை இனிமேல் பார்க்கப் போகாதவர் போல் பார்த்தார். பிறகு மெள்ள அடியெடுத்து-அப்புறம் வேக வேகமாய் நடந்தார்.

தாமோதரன், தொப்பென்று நாற்காலியில் விழுந்தான். போகிற அண்ணனையே, பாச மயக்கத்தில் பார்த்

தான். கல்லூரியில் படிக்கும்போது ஹாஸ்டல் பீஸ் கொண்டு வந்து, தன்னை 'தம்பி... தம்பி...' என்று தலையில் தூக்கி வைத்து ஆடாத குறையாக ஆடிய அண்ணன்; 'ஒங்க தம்பியை... இவ்வளவு ரூபாய் செலவழித்து எதுக்காக படிக்க வைக்கணும்...' என்று அடிக்கடி நச்சரிப்பு செய்த அண்ணியை அடிக்கப்போன அண்ணன்; சப்-இன்ஸ்பெக்டர் வேலை கிடைத்ததும், தன்னைக் கட்டியணைத்து, ஆனந்தக் கண்ணீர் விட்டவன். 'பெரியவங்க பழக்கத்தால, இந்த சின்னவனை மறந்துடமாட்டியேடா...' என்று கேட்டவன். ஊருக்குப் போகும்போதெல்லாம், 'செலவுக்குப் பணம் வேணுமாடா' என்று இப்போகூட கேட்டவன். இவன் உள்ளே போய், நான் வெளியில் இருக்கணுமா? இவனை தற்கொலை செய்ய விட்டுவிட்டு, நான் உடம்பை வைத்துக் கொண்டு இருக்கணுமா?

'அண்ணு... அண்ணு' என்று கூப்பிடப்போனுன். அவனையே பார்த்த ரைட்டரைப் பரிதாபமாகப் பார்த்தான். ரைட்டர் புரிந்து கொண்டார். வெளியே ஓடி, முத்துலிங்கத்தின் கையைப் பிடித்தார். அவர் உதறப் போனுர். உடனே முத்துலிங்கத்தை, பலவந்தமாகத் தூக்கிக் கொண்டு, ரைட்டர் உள்ளே வந்தார். தாமோதரன் அறைக்குள், பக்கவாட்டில் போட்டிருந்த ஒரு 'பெஞ்சில்' போட்டார்.

அரைமணிநேரம் சகோதரர்கள் மூச்சு மட்டுமே விட்டார்கள். பிறகுதான் தம்பிக்காரனுக்குப் பிரக்ஞை வந்தது.

தாமோதரன், அண்ணனைப் பார்த்து 'சாப்பிட்டியா' என்றுன். அப்படிச் சொல்லி முடிப்பதற்குள், அவன் வாய், கண்ணீரைச் சாப்பிட்டது. இதுவரை பதுங்கியபடி இருந்த போலீஸ் பொன்னுச்சாமி, தாமோதரனுக்கு விறைப்பாய் ஒரு சலூட்டை அடித்தபடியே, பேச்சை பணிவாய் துவக்கி, துணிவாய் முடித்தார்.

"முந்திரிக் கொட்டை மாதிரி பேசுறேன்னு நினைக்காதிங்க சார். கொலையோ தற்கொலையோ, நடந்தது நடந்து போச்சு. நடந்ததை மாற்ற முடியாது. நடக்கப் போறதையாவது மாற்றலாம். ஒங்க அண்ணுவை இப்போ நீங்க கை விட்டுட்டால், அப்புறம் நீங்கதான் காலமெல்லாம் நிம்மதியில்லாமல் தவிப்பீங்க. தனக்குப் போகத்தான் தானம். தமையனுக்குப் பிறகுதான் தர்மம். பார்க்க வேண்டிய ஆட்களைப் பார்த்து, முடிக்க வேண்டிய காரியத்தை முடியுங்கள். நாகர்கோவிலுல ஒங்களுக்கு வேண்டிய பெரிய போலீஸ் அதிகாரி .. அதுதான் 'அவரு' வந்திருக்காரு. போய்ப் பாருங்க சார். அண்ணுவ வாழ வைக்காட்டாலும், சாக வைக்காமலாவது பார்த்துக்கங்க சார்; என்ன யோசிக்கிறீங்க? ஒங்களால இப்போ மோட்டார் பைக்ல... போக முடியாது. நானே காருக்கு ஏற்பாடு செய்யுறேன்."

கால்மணி நேரத்திற்குள் படகுக் கார் ஒன்று வந்து நின்றது. தாமோதரன் மவுனமாக எழுந்து முத்துலிங்கத்தைப் பார்த்தான். அவரும் எழுந்து பொன்னுச்சாமியைப் பார்த்தார். ரைட்டர், தாமுவைப் பார்த்துக் கண்ணடித்தார். இருமிக் காட்டினர். அவன், அவனைப் பார்க்கவில்லை. கேட்கவில்லை.

படகுக் காருக்குள், மூவரும் ஏறினர்கள். தாமோதரன் குனிந்ததலை நிமிராமல் இருவருக்கும் நடுவில் அமர்ந்திருந்தான். போலீஸ்காரரர் பொன்னுச்சாமி, டிரைவர் முதுகைத் தட்டவும் கார் சிட்டாய் பறந்தது.

போகிற காரையே, மனம் புகைக்கப் பார்த்த ரைட்டர், திடீரென்று முழங்காலிட்டு, கண்களை மூடி, தலையை லேசாய் உயர்த்தி, பிரார்த்தித்தார்.

"ஆண்டவரே! இந்தக் கார், எந்த எஸ்டேட்ல ஒரு தொழிலாளி தூக்குல தொங்குனேனோ, அந்த எஸ்டேட் முதலாளியோட கார் என்பதும், அந்தக் காரை அந்த

முதலாளி பூமிநாதன் ஓட்டிவந்தார் என்பதும் தெரியாமல் இந்த போலீஸ் இளைஞன் போகிறானே... சிலந்தி வலையில் விழுகிறானே... இந்த டிபார்ட்மெண்டில் இவன் குப்பை கொட்டவேண்டும் என்று உம்மை தோத்திரம் செய்தது உண்மைதான் கர்த்தரே. இப்போ மறுபடி கேட்கிறேன்... இவன் குப்பை கொட்டுகிறானோ இல்லையோ, குப்பை யாகாமல் பார்த்துக் கொள்ளும் பரமபிதாவே!''

''ஏசாண்டவரே! ஒருவன் செய்த பாவத்தில், ஒருவன் பலியாகிறான். இன்னொருவன் பாவியாகிறான். அப்படி யானால் பாவம் தொற்று நோயா? பலிகேட்கும் பாசமா? எப்படியோ, என் ஆண்டவரே! இதுவரை நல்வழியில் போன இந்த இளைஞனைக் காப்பாற்றும். சாத்தான் இவனைப் பாவக்குழியில் தள்ளப் போகிறான். தேவகுமாரனான நீர் என்ன செய்யப் போகிறீர்?''

# 17

பத்து நாட்கள், மாடக்கண்ணுவைப் போல் கடந்த காலமாயின.

சினிமா தியேட்டர் ஒன்றிற்கு, 'டூட்டியில்' போயிருந்த நான்கைந்து போலீஸ்காரர்கள், அந்த நள்ளிரவில் கலா வதியைத் தூக்கிக்கொண்டு போன பேச்சிமுத்துவையும், வீரபத்திரனையும் வழிமறித்து, அவர்கள் பிடறியில் இரண்டு போடு போட்டார்கள். லத்திக்கம்புகள் உயர்ந்த போது, அவர்கள் நடந்ததை நடந்தபடி சொல்லிவிட் டார்கள்.

குற்றுயிரும் கொலையுயிருமாய் துடித்த கலாவதியைப் பார்த்த அந்த மனிதப் போலீசார், பேச்சிமுத்துவையும், வீரபத்திரனையும், லத்திக்கம்புகளால் வாங்கு வாங்கென்று வாங்கி விட்டார்கள். ஆனால், அந்த சூட்டுக்கோல்காரர்

களின் நல்லகாலம், கலாவதி, உடனடியாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட வேண்டிய கெட்ட காலத்தில் இருந்தாள். இல்லையானால், அப்போதைக்கு மனிதாபிமானத்தின் உச்சக்கட்டத்தில் இருந்த அந்த போலீசார், அங்கேயே, அந்த இருவரையும், கலாவதியை மாதிரி ஆக்கியிருப்பார்கள். 'யானை இறந்தாலும் ஆயிரம் பொன்' என்பதுபோல், அவர்கள் உயிர்தப்ப, கலாவதியே காரணமானாள்.

போலீசார், கலாவதியை அருகே இருந்த அரசாங்க மருத்துவ மனையில் உடனடியாகச் சேர்த்தார்கள். குற்றவாளிகளின் கைகளை சேர்த்துக்கட்டி, 'ஏரியா' போலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தார்கள். 'ஏரியா' போலீசார், பேச்சிமுத்துவையும், வீரபத்திரனையும், ஊருக்குள் கொண்டு வந்தபோது, தோட்டத்தில் இருந்து திரும்பிய ஒருவன் அகப்பட்டான். அவனையும் 'கட்டிப்பிடித்த' போலீசார், சூடுபோட்ட இடத்திற்கு, கூட்டத்தோடு கூட்டமாய் ஓடியபோதுதான், முத்துலிங்கம் எதிர்ப்பட்டார்.

அவரைத் துரத்தினால், ஆசாமி தப்பித்து விட்டார். அப்புறம் அவரைக் கவனித்துக் கொள்ளலாம் என்று நினைத்தார்களோ அல்லது அவர் ஒரு சப்-இன்ஸ்பெக்டரின் அண்ணன் என்ற எண்ணமோ, போலீசார், முத்துலிங்கத்தை விட்டு விட்டு, அவர் தோட்டத்தை முற்றுகையிட்டார்கள். மாடக்கண்ணுவின் பிணத்தைத் துழாவி எடுத்தார்கள். ஊர் வழியாய் போனால் ரகளை நடக்கும் என்று நினைத்து, கலாவதி எந்த வழியாகத் தூக்கிக் கொண்டு போகப்பட்டாளோ அந்த வழியாக, அவள் அப்பாவையும் தூக்கிக் கொண்டுபோய், அரசாங்க மருத்துவமனையில், பிரேத பரிசோதனைக்காகச் சேர்த்தார்கள். பிறகு பிணத்தை ஒப்படைப்பதற்கு, தமிழரசியின் தந்தை அருணாசலத்தை அணுகினார்கள். அவர் முதலில் தயங்கினார். பிறகு ஊருக்கும், உறவுக்கும் பயந்து, பிணத்தை

வாங்கி 'நல்லடக்கம்' செய்தார். அப்போது ஊரே அழுதது. குற்றவாளிகளை கண்டதுண்டமாய் வெட்டி, காக்காக்களுக்குப் போடவேண்டும் என்று போர்க்கீதம் எழுப்பியது.

என்றாலும் ஊராரின் ஆவேசம் சோடாபாட்டல் ஆவேசம் மாதிரிதான். அதாவது, சோடாவைத் திறந்தால் பெரிதாய் ஏதோ நடக்கப்போவதுபோல் 'உஷ்' என்ற சத்தம் வரும். அப்புறம் அதை யார் வேண்டுமானாலும் குடிக்கலாம். இதுபோல், மூன்று நாட்கள் கொதித்துப்போன ஊரார், படிப்படியாய் ஆறி, பனிக்கட்டியாய் மாறி தத்தம் வேலையை மட்டுமே கவனிக்க முற்பட்டார்கள்.

அதோடு, கலாவதியின் பங்காளிகளில் பெரும்பாலோர் விவசாயக் கூலித் தொழிலாளர்கள். 'அம்பாசமுத்திரத்திற்கு' தங்கியிருந்து கதிரறுக்கப் போய் விட்டார்கள். ஆகையால் மாடக்கண்ணுவின் இழவில், கொடுமைக்காக அழுதவர்களே அதிகம். உறவுக்காகக் கொதித்தவர்கள் குறைவு. என்றாலும் சும்மா சொல்லப் படாது, அருணாசலம் "தம்பி...தம்பி" என்று நான்குபேர், ஆறுதலாய் தன்னைப் பிடித்துக் கொள்ளும் வரை அழுதார். அவர் மனைவி, "தர்மத்துரையே...கொழுந்தா" என்று கூப்பாடு போட்டாள். ராஜதுரை துக்கமே உருவானவன் போல், துண்டை எடுத்துத் தலையை மூடியபடியே பிணத்தின் பின்னால் நடந்தான். பிண ஊர்வலம் முத்துலிங்கம் வீட்டை நெருங்கியபோது கில்லாடியார் "மொதல்ல இவன் வீட்டை நொறுக்கணும்பா" என்று மண்டையனிடம் பேசினார். ஆனால், ராஜதுரையோ யார் செத்தாலும் காதல் சாகாது என்பதுபோல், விஜயா தென்படுகிறாளா, தான் சோகமாக இருப்பதைப் பார்த்து, சோகப்படுகிறாளா என்று கண்களை சோதனைப் பார்வையில் விட்டான்.

மாடக்கண்ணு புதைக்கப்படுவதற்கு முன்பாகவே போலீசார், முத்துலிங்கத்தின் மிச்சம் மீதி கையாட்களையும் கைப்பற்றி காவலில் வைத்தார்கள். இப்போதும் அவர்கள், காவலில்தான் காத்துக் கிடக்கிறார்கள் இந்த விவகாரம் முழுவதையுமே ஊர் மறந்தது போல் தோன்றினாலும் இந்த ஐந்துபேர் குடும்பத்தினரும் மறக்கவில்லை. காவல் நிலையத்திற்குப் போய் தத்தம் குடும்பத்து சாதனையார்களைத் திட்டிவிட்டு அவர்கள் திரும்பும் போதெல்லாம், வீடுகளுக்கு போகும் முன்னாலேயே, முத்துலிங்கத்தின் வீட்டிற்கு முன்னால் போய் நின்று மண்ணை அள்ளி தட்டினார்கள்.

"அடியே கனகம்...கழிசடை....ஒன் புருஷன் மட்டும் வெளில சுத்தணும், எங்க புருஷன்மாரு ஜெயிலுல இருக்கணுமா? வெளில வாடி...முண்டை. ஒன் புருஷன் இருக்கிற இடத்த சொல்லுடி. அந்த தடிப்பயல...கொலைகாரப் பயல...எங்கேடி ஒளிச்சி வச்சிருக்கே? சொல்லுடி, வாடி வெளியே" என்று அவர்கள் போடும், கண்மண் கலந்த கூப்பாடு, அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது. ஊரார் யாரும் இதைத் தடுக்கவில்லை. ஒரு தடவை கூனிக்குறுகி வயலுக்குப் போகப்போன, முத்துலிங்கத்தின் தந்தையை, சில பெண்களும், ஆண்களும், அவர்களின் பிள்ளைகுட்டிகளும் வழிமறித்து "ஒன் மகன் இருக்கிற இடத்த சொல்லாமல்...கிழட்டுப் பயலே...நீ இப்போ ஒரு அடி கூட நகர முடியாது .." என்றார்கள்.

கிழவர் "சத்தியமாய் எனக்குத் தெரியாது" என்றார். மாமனாரை மீட்க வந்த, முத்துலிங்கத்தின் மனைவி, கூட்டத்தைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டபடியே "அந்த கரிமுடிவான்... நாசமாப் போற பாவி ... இப்படிச் செய்வான்னு நாங்க நினைக்கல... அவன் தங்கச்சி எங்க வீட்ல இருந்தும் கெடுத்தாள். இல்லாமலும் கெடுத்தாள். சத்தியமாய் அந்த குடிகாரன் போன இடம் எங்களுக்குத் தெரியாது. இவர விட்டுடுங்க..." என்று, கலாவதி,

தோட்டத்திலும், போலீசாரிடமும் புலம்பியது போலவே கனகமும் புலம்பினாள். அவள் கணவனை கண்டபடி திட்டினாள். லாக்கப்காரரர்களின் மனைவிகள் அவளை விட வில்லை.

“நீ சொல்லிக் கொடுத்துத்தாண்டி ஒன் புருஷன் பைத்தியாரத் தர்மரைக் கொன்னான். அப்பாவிப் பொண்ணை அலங்கோலம் பண்ணுனான். அந்த சோம் பேறிப்பயல் எங்கடி இருக்கான்? சொல்றியா, சொல்ல வைக்கட்டுமா?” என்று அவள் தலைமுடியைப் பிடித்து இழுத்தார்கள். அந்தச் சமயத்தில், ஊருக்குள் ‘தீவிர’ புலன் விசாரணை செய்வதற்காக மூன்று போலீசார் மட்டும் வராதிருந்தால், மிஸ்ஸஸ் முத்துலிங்கமும், அவள் மாமனாரும், படாதபாடு படவேண்டியதிருக்கும்.

போலீசார், அவர்களை மீட்டியதுடன், மிரட்டிய வர்களை அதட்டினார்கள். ஆண்களை அடித்தார்கள். பெண்களை அடிக்கப் போவதுபோல், கைகளை ஓங்கினார்கள். “தொலைச்சிப் பிடுவோம் தொலைச்சி” என்றார்கள். லாக்கப்கார குடும்பத்தினரும், எந்த வேகத்தில் முதலில் கோபப் பட்டார்களோ, அதே வேகத்தில் இப்போது பயந் தார்கள். போலீசாரை கையெடுத்துக் கும்பிட்டார்கள். முத்துலிங்கம் மனைவி, தன்னையும் அவர்கள் கையெடுத்துக் கும்பிட வேண்டும் என்பதுபோல எகிறப் போனாள். போலீசார், அவளையும் கையோங்கினார்கள்.

மறுநாளிலிருந்து, இரண்டு போலீசார், முத்துலிங்கம் வீட்டில் காவலுக்குப் போடப்பட்டார்கள். இன்னும் காவல் காத்து வருகிறார்கள். தற்செயலாய், அந்தப் பக்க மாய் போகிறவரையும் அதட்டுகிறார்கள். பணமோ, செல்வாக்கோ அல்லது இரண்டுமோ இடையில் விளையாடி விட்டது என்பதையும், இயல்பான மனிதாபிமானத்தில் துவக்கத்தில் துடித்துப்பேசிய போலீஸ் வாய்கள், ‘இனிப்புக்களாலோ’ அல்லது இன்புளுயன்சாலோ

அடக்கப்பட்டு விட்டன என்பதைப் புரிந்து கொண்ட ஊரார், யாரும் அடக்காமலே அடங்கி விட்டார்கள்.

என்றாலும்—

தாமோதரன் முயற்சியால், பெருமளவு சரிக்கட்டப் பட்ட இந்த விவகாரத்தை, சட்டப்படி சரிக்கட்டவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. பிரேத பரிசோதனை ரிப்போர்ட் இன்னும் பூர்த்தியாகவில்லை. எப். ஐ. ஆர். நீக்குப்போக்காக நிரப்பப்பட்டுள்ளது. கலாவதிக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற 'பாஸிட்டிவ்' மனிதாபி மானத்துடனும், 'டிபார்ட்மென்ட் மேன்' குடும்பத்தைக் காட்டிக் கொடுக்கக் கூடாது என்ற 'நெகட்டிவ்' மனிதாபி மானத்துடனும் முழுப் பூசணிக்காயை, தன்னந்தனியாய் தாங்கள் மட்டுமே மறைக்கக் கூடாது என்ற ராஜதந்திரத் துடனும், காவல் நிலையத்தினர், தங்களிடம் தவம் கிடக்கும் லோகல் லீடர்களிடம், ஒரு யோசனை சொன்னார்கள்; அதுதான் பஞ்சாயத்தார் தீர்ப்பு—

இதன்படி, ஊர்ச்சாவடி முகப்பில் கூட்டம் நிரம்பி யிருக்கிறது. உள்ளூர் பிரமுகர்களும், வெளியூர் பிரமுகர் களும், சாவடிக்குள் விரிக்கப்பட்ட 'கோரம்பாய்களில்' உட்கார்ந்திருக்கிறார்கள். பிள்ளையார் கோயில் தர்ம கர்த்தா சோமசுந்தரம், அந்த ஏரியாவின் பாதிரியார், சர்வகட்சி லோகல் தலைவர்கள், ஒருவர் உடம்பை ஒருவர் இடிக்கும்படி, வெற்றிலை பாக்கைப் போட்டுப் போட்டு, துப்பித் துப்பி, பேசிப் பேசி, அந்த விவகாரத்தை மூடுமந்திரமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். சாவடி முகப்புக்கு வெளியே, கில்லாடியார், மண்டையன் உட்பட வாயாடிகள் முன்னாலும் வாய் செத்தவர்கள் பின்னாலு மாய் இருக்கிறார்கள். கூட்டத்தின் விளிம்புபோல, லாக் கப்பில் இருக்கும் ஐவரின் தேவியரும் அவர் தம் பிள்ளை பெண்டுகளும், பிரமுகர்களையே பரிதாபமாகப் பார்த்த படி, ஏங்கிய முகங்களோடு, தொங்கிய கோலத்தோடு

காட்சி தருகிறார்கள். சற்றுத் தொலைவில் கசாமுசா சத்தத்துடன் பெண்கள் கூட்டம். கூட்டத்திற்கு வலது பக்கம், பாதிரியாரின் மோட்டார் பைக். இடது பக்கம், நாகர் கோவிலைச் சேர்ந்த அதே அந்த படகுக்காரர்.

எல்லாவற்றிற்கும் மேலாக—

பிரமுகர்களின் வட்டத்திற்கு மையமாக கலாவதி உட்கார்ந்திருந்தாள். இல்லை... உட்கார்த்தி வைக்கப் பட்டிருந்தாள். அன்றுதான் அவளை, அவசர அவசரமாக, அரையும் குறையுமாக, மருத்துவமனையில் இருந்து 'டிஸ்சார்ஜ்' செய்தார்கள். அம்மணமாகப் போனவள், இப்போது புத்தம் புது சேலையோடு, கண்ணைப் பறிக்கும் வண்ண ஜாக்கெட்டோடு இருக்கிறாள்.

என்னதான் அவள் உடம்பைப் பூசி மெழுகினாலும், உடம்பில் சூடுபட்ட பல பகுதிகளைப் பார்க்க முடியவில்லையானாலும், அவள் கண் விழிக்குக் கீழே இருந்த வெள்ளை வெளேர் தோலையும், நெற்றிப் பொட்டில் பத்துப் பைசா அளவிற்கு இருந்த புண்பட்ட பொத்தலையும் யாராலும் மறைக்க முடியவில்லை. இவை மட்டுமா? உதடுகள் வெள்ளையாய் வெந்திருந்தன. கழுத்தில் இரும்பு நெக்லஸ் போட்டதுபோல், 'சூட்டாரம்'. தொண்டையில் சாம்பல் நிறக் குழி. கை கால்களிலும், பார்ப்பவர் கண்ணுக்குப் புலப்பட்ட அத்தனை அங்கப் பகுதிகளிலும் தோலுரிக்கப்பட்டது போன்ற சதைத் திரட்டுக்கள். இந்த புண்பட்ட பெண்ணிற்கு மகுடம் சூட்டுவதுபோல், தலை மொட்டையடிக்கப்பட்டு, அதில் களிம்பு போடப்பட்டிருந்தது.

கலாவதி, மலங்க மலங்க, விழிகள் பிதுங்கப் பிதுங்கப் பார்த்துக் கொண்டாள். ஒரு தடவை தன்னையும், மறு தடவை சூடுபட்ட தோட்டம் இருந்த திக்கையும் பார்த்துக் கொண்டாள். உடம்பை ஒடிக்காமல், தலை மட்டும் தனியாய் இருப்பது போல் பார்த்தாள். பிறகு

"எய்யோ ... யோ ... யோ..." என்று தன்பாட்டுக்கு இழுத்தபடியே மெள்ளப் புலம்பினாள். அருகே தலை கவிழ்ந்து இருந்த தாமோதரனையும், தலை நிமிர்ந்து இருந்த அவன் தந்தையையும் பார்த்துப் பயந்தவள்போல், சற்று விலகிப் போனாள். உட்கார்ந்து களைத்தவள் போல் படுக்கப் போனாள். மொத்தத்தில் எங்கே இருக்கிறோம் என்ற உணர்வோ, யாருடன் இருக்கிறோம் என்ற ஒளிவோ இல்லாமல், 'ஏதோ இருக்கிறேன்' என்பது மாதிரி இருந்தாள்.

"நாசமா போற பயலுவ! அச்சடிச்சது மாதிரி இருந்த பொண்ண, அடையாளம் தெரியாமல் பண்ணிட்டாங்களா. இவங்க மட்டும் வாழ்ந்திடுவாங்களாக்கும்" என்று தொலைவில் நின்ற தாய்மார்கள், சத்தம் போட்டே பேசினார்கள். முத்துலிங்கம் வீட்டில் காவலுக்குப் போட்டிருந்த போலீசார், இப்போது கூட்டத்தைச் சுற்றிச் சுற்றி வந்தபடியே, தங்களை உற்றுக் கவனிப்பதைப் பொருட்படுத்தாமலே பேசினார்கள். முத்துமாரிப் பாட்டி, கையில் கற்களையும், தோளில் வாதமடக்கி இலைகளையும் வைத்தபடி, அந்தப் பக்கமாய் போய் தலையை ஆட்டி னாலும், அவளைக் கிண்டல் செய்யவேண்டும் என்ற வழக்க மான உணர்வற்று வைதுகொண்டிருந்தார்கள். தாமோ தரனுக்கும் திட்டு; அவன் தகப்பனுக்கும் திட்டு; நீதிக்கும் திட்டு; சாமிக்கும் திட்டு.

தாமோதரன், தலை கவிழ்ந்தபடியே தன் கண்களை தோளில் வைத்து தேய்த்துக் கொண்டான். கலாவதியைப் பார்க்கப் பார்க்க, அவன் பார்வை இழந்தான். மண்ணுலகு இல்லாத விண்ணுலகில், மனிதர்கள் இல்லாத பொன்னுலகில், தமிழரசி மனிதப் பெண் என்பதால் அவளையும் சேர்க்காமல், தான்மட்டும் தன்னந்தனியாய் சஞ்சரிப்பதுபோல் தோன்றினான். தலைக்கு மேல் வெள்ளம் போய்விட்ட விரக்தியில், உள்ளமே அற்றுப் போனவன் போல் உட்கார்ந்து கிடந்தான்.

ஒரு லோகல் லீடர் பேசத் துவங்கினார்:

"பெண்ணுக்கு உரியவரு யாரு?"

இன்னொரு லோகல் லீடர் மொய்தீன் பதட்டப்பட்டுப் பேசினார்:

"அடடே! அருணாசலம் வர்லியா? கையோட கூட்டி வாங்க."

அருணாசலம் வருவது வரைக்கும், லோகல் லீடர்கள் எம்.ஜி.ஆர். ஆட்சியில் இருந்து எதிர்க்கட்சிகளின் பேரணி வரைக்கும், காரம் இல்லாமலும், சாரம் இல்லாமலும் விசாரித்துக் கொண்டிருக்க, அரசியல் கலப்பற்ற இதரப் பிரமுகர்கள் சில்க் சுமிதாவில் இருந்து, வெளியூர் பெண் வில்லுப் பாட்டாளி 'அசக்' லட்சுமி வரைக்கும் பரிசீலனை செய்து கொண்டிருந்தார்கள். இதற்குள், அருணாசலமும், அவர் பின்னால் ராஜதுரையும், துக்கம் தாளாதவர்கள் போல, தோள் துண்டை தலையில் போட்டபடி வந்து, பிரமுகர்கள் கூட்டத்தில், சுட்டிக்காட்டப்பட்ட இடத்தில் உட்கார்ந்தார்கள்.

லோகல் அரசியல்வாதிகளிலேயே படுலோகலான ஒருவர், சமரசத்தின் முதல் ரசத்தைத் தெளித்தார்.

"ஏதோ நடந்தது நடந்து போச்சு. இனிமேல் அதை மாற்ற முடியாது. முத்துலிங்கத்தையோ, மற்றவங்களையோ தூக்கில போடுறதுனால போன உயிர் திரும்பப் போறதில்ல. ஒருவேளை அப்படி திரும்புமுன்னு ஒரு நிலைமை இருந்தால், நானே இவங்கள தூக்குல தொங்கப் போடுவேன். அருணாசலம் மச்சான் கொஞ்சம் பெரிய மனசு செய்து, கொஞ்சம் விட்டுக் கொடுக்கணும்."

அருணாசலம், காரமாகக் கேட்டார்: "எப்டிண்ணேன்? என் தம்பியை அநியாயமாய் கொன்னதும் இல்லாமல், இவளை இந்தப் பாடுபடுத்திட்டாங்க. இதை எப்டி விட முடியும்?"

பாதிரியார், வினயமாகப் பேசினார்:

"ஒங்களோட பாசம், எனக்குப் புரியாமல் இல்லே. அதே சமயம், தீமை செய்தவர்களையும் மன்னிப்பதுதான் வீரத்திலேயே பெரிய வீரம். ஏசுநாதர் சிலுவையில் அறைந்தவர்களைக் கூட மன்னிக்கும்படி பரமபிதாவை வேண்டலையா? பொறுத்தவர் பூமியாள்வார்."

பூமியாளும் அருணாசலம், பொறுத்துக் கொண்டார். ஆனால் அது இல்லாத மண்டையனால் பொறுக்க முடியவில்லை. கூட்டத்துள் இருந்தவன் சத்தம் போட்டே கேட்டான்:

"என்ன ஃபாதர் பேசுறீங்க பேச்சு? ஏசாண்டவர் மரித்தெழுந்தார்; ஆனால் மாடக்கண்ணுவால மரித்தெழ முடியுமா? இந்த கலாவதிப் பெண்ணால இனிமேல் சுய நினைவுக்கு வரமுடியுமா? வாய் வயிற்றைக் கழுவ வேலைக்குத்தான் போக முடியுமா?"

பாதிரியார், எல்லோரையும் சங்கடமாய் பார்த்த போது, மண்டையனின் டீக்கடை, தேங்காய் கடை வாய்க்குப் பயந்தவர்போல், அருணாசலமும் வீறாப்பாய் கேட்டார்.

"ஆமா. மண்டையன் சொல்றது மாதிரி, என் தம்பியை இனிமேல் என்னால பார்க்க முடியுமா? தம்பி மகள் பழைய நிலைக்குத் திரும்பத்தான் முடியுமா? பேசாமல் கோர்ட்டுத் தீர்ப்புக்கு விட்டுடலாம். உப்பைத் தின்னவங்க தண்ணீரைக் குடித்துத்தான் ஆகணும்."

பிள்ளையார் கோவில் தர்மகர்த்தா, பேரத்திற்குள் போனார்.

"நாங்களும் மனுசங்கதான். சும்மா விட்டுடுவோமா? கலாவதிக்கு தாமோதரன் அய்யா ஐயாயிரம் ரூபாய் கொடுத்திடணும்."

அருணுசலம் எகிறினர்.

"இது என்ன, விலே பேசுற விவகாரமா?"

"சரிப்பா, ஒரே பேச்சு! கலாவதியை கட்டிக் காப்பாத் துறதுக்காக, அருணுசலம் கையில, கூட இரண்டாரயிரம் போட்டு, ஏழாயிரமாய் கொடுத்துடணும்."

அருணுசலம், பெரிய மனிதர்கள் பேச்சை தட்ட முடியாதவர்போல், ஏதோ ஒரு மனக்கணக்கைப் போட்டுக் கொண்டு இருந்தார். தாமோதரனின் தந்தை ராமையா மடிக்குள் இருந்து, நூறு ரூபாய் நோட்டுக்களாக எடுத்து எண்ணி, அருணுசலத்திடம் பயபக்தியுடன் கொடுத்தார்.

"எல்லாம் முன்னேற்பாட்டோட நடக்குதுடா..." என்று மண்டையனிடம், ரகசியமாய் முணுமுணுத்த கில்லாடியார், "கலாவதிக்கு சம்மதமா'ன்னு ஒரு வார்த்தை கேளுங்க" என்ருர். உடனே தர்மகர்த்தா, அதர்மமான ஒரு ஆபாச வார்த்தையால் கில்லாடியாரை மனதுக்குள்ளேயே திட்டியபடி "கலாவதி, ஒனக்கு இது சம்மதந்தானே? சொல்லும்மா!" என்ருர்.

கலாவதியோ, தன் கையைத் தொட்ட தர்மகர்த் தாவை, சூடு போடப் போகிறவர்போல் பார்த்தபடியே "வேண்டாம் மச்சான், வேண்டாம் மச்சான். அவன் நொறுங்குவான், கூடப்பிறந்த குற்றத்த தவிர, எந்தக் குற்றத்தையும் அறியாதவள் நான்" என்று சொல்லிவிட்டு, அப்படிச் சொன்னதை மறந்தவள்போல் "எய்யோ... ஓ...யோ..." என்று வாயை இழுத்தாள்.

முன்னுரை சொன்ன லோகல் லீடரே, இப்போது முடிவுரையும் சொன்னர்:

"எல்லாரும் நல்லா கேட்டுக்கங்க. மகன் விஜே தீர்த்தான் இன்னெருத்தன் பொண்ணோட ஓடிப்போன அவமானம் தாங்காமல், மாடக்கண்ணு கிணத்துல விழுந்து தற்கொலே செய்துகிட்டார். அவருக்கு நீச்சல்

தெரியும். அதனால, கையைக் காலைக் கட்டிக்கிட்டு கிணத்துல குதிச்சார். இதுதான் பஞ்சாயத்தார் தீர்ப்பு. யாராவது ஏதாவது சொல்லணுமுன்னால் இப்பவே சொல்லுங்க.''

கில்லாடியார் கிள்ளுவது பொறுக்க முடியாமல், மண்டையன் கேட்டான்:

''பக்கத்துல எத்தனையோ கிணறுங்க இருக்கும் போது, மாடக்கண்ணு ஏன் முத்துலிங்கம் கிணத்துல விழணும்? இதை நானு கேட்கல? போலீஸ் கேட்குமேன்னு கேட்கிறேன்.''

''அதுவா? மாடக்கண்ணு மானஸ்தர். உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்த மவனுக்கு பாடஞ் சொல்ல நினைச்சார். 'அடேய் . நீ எவன் வீட்டுப் பெண்ணை கூட்டிக்கிட்டுப் போனியோ, அவன் வீட்டு கிணத்துலயே விழுந்து நான் சாகுறேண்டா...சண்டாளா'ன்னு வாயால் சொல்லாமல், செய்கையில காட்டிட்டார். அவ்வளவு தான்.''

''அப்புறம், கலாவதி சூடுபட்ட சமாச்சாரம்?''

''அது போலீஸ் கணக்குல வராது. இந்தாப்பா மொய்தீன், பஞ்சாயத்தார் தீர்ப்பை எழுது. சட்டுப் புட்டுன்னு கையெழுத்து வாங்கலாம்.''

எத்தனையோ பஞ்சாயத்தார் தீர்ப்புக்களை எழுதிப் பழக்கப்பட்ட லோகல் அரசியல்வாதியான மொய்தீன், தாமோதரன் தந்தையின் காதில் ''இன்னும் ரெண்டாயிரம் ரூபாய் எடுத்துக்கங்க; போலீஸ் ஸ்டேஷனுக்கு பஞ்சாயத்தார் தீர்ப்போட போகணும்'' என்றார். உடனே அவர் ''நான் அழ வேண்டியத அழுதாச்சு. மிச்சம் மீதியை கையாள் பயலுவகிட்ட வாங்குங்க. அந்தப் பயலுவதான், என் மகனைக் கெடுத்தது'' என்றார்.

இந்தச் சமயத்தில் வாயால் கெட்ட பூணிக் குருவி மாதிரி லாக்கப் வாசி பேச்சிமுத்துவின் இரண்டாவது

சம்சாரம் "இந்தப் பஞ்சாயத்தால, பிடிபடாத முத்துலிங்கம் மட்டுந்தான் தப்பிக்காரா, பிடிபட்ட எங்க ஆட்களும் தப்பிக்காங்களா?" என்றாள் அழுகையோடு.

அந்த அழுகையில் உள்ள மூலதன முதலீட்டைப் புரிந்து கொண்ட மொய்தீன் "ஒங்க புருஷன்மாரு உயிரோட திரும்பணும் முன்னால், ஆளுக்கு ஐநூறு ரூபாய் சீக்கிரமாய் கொண்டு வரணும்" என்றார். இதை ஆட்சேபிக்கப் போன குற்றேவல்காரர்களின் குடும்பத்தினர், வீரியத்தை விட காரியம் முக்கியம் என்பதை உணர்ந்தவர்களாய், உள்ளூர் வட்டிக் கடைக்காரரைத் தேடி காதுகளையும் கழுத்துகளையும் தடவியபடியே ஓடினார்கள்.

கில்லாடியார் ஒரு சந்தேகத்தைக் கிளப்பினார்.

"மாடக்கண்ணு தற்கொலை பண்ணுனார்னு சொல்றதைவிட, வினைதீர்த்தானே வந்து, நம்ம அப்பாவி முத்துலிங்கம்மேல பழிவரட்டுமுன்னு, அப்பனை ராத்திரியோட ராத்திரியா வந்து சாகடிச்சிட்டுப் போயிருப்பான்னு நினைக்கேன். பஞ்சாயத்தார் தீர்ப்பு இப்டி இருந்தால் நல்லா இருக்கும்."

தர்மகர்த்தா, இப்போது அதட்டலோடு பேசினார்.

"ஏல கில்லாடி! ஒனக்குத்தான் பேசத் தெரியுமுன்னு பேசாத. அப்புறம் நீதான் வருத்தப்படப் போறே. இந்த விவகாரத்துக்குப் பின்னால, யாருல்லாம், எதுல்லாம் இருக்குன்னு தெரியாமல் கிண்டல் பண்ணுதடா."

கில்லாடியார் அடங்கிப் போனவர் போல், தலையைத் தாழ்த்திக் கொண்டார். சப்தம் அடங்கியதும், பாதிரியார் எல்லோரையும் கையமர்த்திவிட்டு, நிதானமாகப் பேசினார்.

"ஒரு கெட்டதை முடித்த கையோட இன்னொரு நல்லதையும் நடத்திடுவோம். நம்ம ராஜதுரைக்கும்,

தாமோதரன் தங்கை விஜயாவுக்கும் நடக்கறதாய் இருந்த கல்யாணம் நின்னுட்டதாய் கேள்விப்பட்டேன். கல்யாணம் சொர்க்கத்துல நிச்சயிக்கப் படுறது. அதை நாம் தடுக்கப் படாது. அருணுசலம் என்ன சொல்றீங்க? ராமையா, சொல்லும்!''

''அவருக்குச் சம்மதமுன்னல், எனக்கும் சம்மதம்.''

''எனக்கும் சம்மதந்தான்.''

அருணுசலமும் தாமோதரன் தந்தையும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள். பிரமுகர்கள், ''பேஷ் பேஷ்'' என்று சொல்லிக் கொண்டார்கள். கலாவதி ''எய்யோ...'' என்று கத்திக் கொண்டாள்.

கம்பீரம் கலந்துபோன தாமோதரன், எஸ்டேட் முதலாளி இருந்த படகுக்காரரை நோக்கி, நடக்க முடியாமல் நடந்து கொண்டிருந்தான்.

# 18

சென்னை நகர மக்களுக்கு, 'குடி' வாசத்தலமாகவும், ஆந்திர மக்களுக்கு வழிபாட்டு திருத்தலமாகவும் விளங்கும் காசமுகமலை அடிவாரம். இயற்கையன்னை எழிலாய் வடிவெடுத்து, தாயினும் சாலப்பரிந்து, பாலூட்டுவது போல், பச்சைப் பசேலென்ற பாறையின் மேல்மகுடத்தில் இருந்து, எம்பிக்குதித்து, வெள்ளை வெளேரென்று அருவி நீரை கொட்ட வைக்கும் அழகுப் பகுதி. குற்றுலம் அருவியைப்போல் பெரிதாகவும் இல்லை. அதைப்போல் சில சமயம் அம்போவென்று கைவிடாத சிற்றருவி. வானம் பொய்த்தாலும், இயற்கையின் அந்த இடத்து தானம் பொய்த்ததில்லை. வறட்சிக்கு இடம் கொடுக்காத புனித நீரோட்டம்.

மூன்று பக்கமும் மலைவளைய, முன்பக்கம் நீர் பொழிய, மாணிக்க வாசகர் காட்டும் தாவர சங்கமத்தின் பிரதிமை போல் தோற்றம் காட்டும் கோணப் பகுதியில், அருவியை அடுத்த குகையில், பிரபஞ்சவெளியை கோடுபோட்டுக் காட்டுவதுபோல் காட்சியளிக்கும் லிங்கம். காலையிலேயே வந்து லிங்கத்தை அலங்கரித்த அர்ச்சகர், அருவிகளில் குளித்துக் கொண்டிருப்பவர்கள் கோவிலுக்கு, 'தரிசனம்' கொடுத்தாலும் கொடுக்கலாம் என்று நினைத்து, அவர்களையே அவ்வப்போது பார்த்துக் கொண்டார்.

குளித்துக் கொண்டிருந்தவர்களில் பலர், குடித்துக் கொண்டிருக்கப் போய்விட்டார்கள். எஞ்சிய ஆண்களும் வெளியேறுவதற்காக காத்திருந்த இளம் பெண்கள் கூட்டம், அவர்கள் வெளியேற மாட்டார்கள் என்று நினைத்து, அவர்களை வெளியேற்றிக் காட்டுவதற்காக, கூவியபடியே அருவிக்குள் ஓடியது. சென்னை நகரில், ஒரு நாள் விட்டு மறுநாளே தண்ணீருடன் பரிச்சயம் கொள்ளும் அந்தப் பெண்கள், பாய்ந்தார்கள். தலையை விரித்துப் போட்டு தண்ணீரை வாங்கிக் கொண்ட ஒருத்தி, ஆனந்தம் தாங்க முடியாமல் "இந்த அருவியை மெட்ராசுக்கு தூக்கிட்டு போயிடுவோமாடி" என்றாள். உடனே இன்னொருத்தி "ஓ. கே. நீ என்ன செய்யுறேன்னா, இந்த மலையைத் தூக்கி என் தலையில வைப்பியாம். நான் தூக்கிக்கிட்டு வருவேனாம்" என்றாள். உடனே, வளையொலி சிணுங்க கைதட்டியது பெண்கள் கூட்டம்; "ஓல்ட் ஜோக்... ஓல்ட் ஜோக்..." என்று சொல்லவும் ஒருத்தி தவறவில்லை.

பிறகு எல்லோரும் சொல்லிவைத்ததுபோல், குளியல் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் தனித்து, குகையை எதிர்த்தாற்போல் பாறை விளிம்பில் போடப்பட்ட கம்பி மேல் சாய்ந்தபடி நின்றவளைப் பார்த்தார்கள். தலையெங்கும் தண்ணீர் மயமாய், உடலெங்கும் ஒட்டிய ஆடை

யோடு நின்ற பெண்களில் சிலர், அவளைப் பார்த்து ''மேடம் மேடம்'' என்றார்கள். சிலர் ''தமிழு... வாயேன்... ஏன் அப்படி பார்க்கிறே?'' என்றார்கள்.

தமிழரசி அசையாமல் நின்றாள். முன்னால் தோன்றிய லிங்கத்தையே கண் கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தாள். எல்லையற்ற விண்பரப்பை, கண்ணால் எப்படி வடிவ வரைவு கொள்ள முடியுமோ—அப்படிப் பட்ட வடிவம் காட்டிய லிங்கம் உடலைத் தாண்டும் உயிரையும், உயிரைத் தாண்டும் ஆன்மாவையும், ஊடுரு வும் உள்ளொளியாய் எதையோ ஒன்றைச் சொல்லாமல் சொல்லி, காட்டாமல் காட்டிக் கொண்டிருப்பதுபோல், அவளுக்குத் தோன்றியது. முன்பு, கோவில்களை எதிர்ப்பட வேண்டிய கட்டாயம் ஏற்படும்போதுகூட, மாணவிகள், 'மேடம்களுக்கு' அடிக்கும் சலூட்போல், அனிச்சை யாகவும், ஒரு ஒப்பு மரபுக்காகவும் கரங்குவிக்கும் தமிழரசி, இப்போது கரங்குவிக்கவில்லையானாலும், மனங் குவித்து, அந்த லிங்கத்தையே பார்த்தாள்.

வாழ்க்கை என்ற திடவஸ்துக்கு அப்பாலும், இப் பாலும், அதை ஆட்டிப்படைத்து அபிசேகமாய் ஆக்கிக் கொள்ளும் திரவ வெளியும், வாயு வெளியும், எவையும் இல்லாத—பரிசுத்த சூன்ய வெளியும், தன்னைச் சுற்றிக் கொண்டது போன்ற பிரமைக்குள் சிக்கியிருந்தாள். குடி மயக்கம் தீராமலே குளித்து முடித்த ஒருவர் நீட்டிய கற்பூரத்தை, அர்ச்சகர், ஒளிமயமாக்கியபோது, அவள் காதில், வள்ளலார் பாடிய 'செம்பொருளான சிவமே' என்ற பக்தி வரியும், அந்த வடலூர் ஜோதி, 'அருட்பெருஞ் ஜோதி தனிப் பெருங் கருணை' என்று பாட்டுக்குப் பாட்டாய், பாடிய தேடல் வரிகளும், அவள் காதில் ஒலித்தன.

குளித்துக் கொண்டிருந்த பெண்கள் 'மேடம்... மேடம்...' என்றும், பலர் 'தமிழு... தமிழு' என்றும் இரு

வேறுபட்டு எழுப்பிய ஒலிவகைகள், "மேடம் தமிழ் "தமிழ் மேடம்" என்று ஒரே ஒருவகை ஒலியாய் எழுந்த போது, தமிழரசி தோள்களைக் குலுக்கி, புருவத்தை நிமிர்த்தி, மோனம் கலைத்து, அரைக்கண் பார்வையை முழுதாக்கி, அவர்களின் ஒன்றித்த பார்வையை சந்தித்த தால், அவசர அவசரமாய் அருவிக்குள் ஓடினாள். பெண் களோடு பெண்ணாய் நின்று கொண்டாள். உடம்பையும், உணர்வையும் இனிமையாய் சுண்டியிழுக்கும் அருவிதரும் சுகத்தை அறியாமலே, நீர்ச் சுமையை சுமப்பதுபோல் நின்றாள் தமிழரசி. தன்னை மறக்க முடியாத தர்ம சங்கடத்தில் நின்றாளென்றால், இதரப் பெண்களுக்கு இன்னொரு வகையில சங்கடமான தர்மம்.

அங்கே குளிக்கும் எல்லாப் பெண்களும், கல்லூரி களிலும், மேல்நிலைப்பள்ளிகளிலும், ஆசிரியைகளாகவும், கம்பெனிகளில் செகரட்டரிகளாகவும் பணிபுரிபவர்கள். 'ஸ்வீட் சிக்ஸ்டீனைத்' தாண்டி, 'காரமான லேட் இருபது களுக்குள்' காலூன்றியவர்கள். ஆனாலும் அருவிக்குள் நின்றபடியே ஆடவேண்டும் என்று மனதுக்குள் என்னமோ ஆசை. அதே சமயம், மற்றவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்களோ என்ற தார்மீகப் பயம். ஆகையால், ஒவ்வொருத்தியும், உடம்பைத் தேய்த்துக் கொள்ளும் சாக்கில் ஆடிக்கொண்டாள். ஒரே ஒருத்தி மட்டும் "இந்த வயதில் ஆடாவிட்டால், இனிமேல் வரப்போவது கிழவி யாட்டந்தான்" என்பதை வலுக்கட்டாயமாய் மனதுக்குள் கொண்டு வந்து, ஒரு ஆங்கிலப் பாடலைப் பாடி, பகிரங்க மாய் ஆடினாள். உடனே பல பெண்கள், தங்கள் மேலேயும், மற்றப் பெண்களின் முதுகுகள் மேலேயும் தாளம் போட்டார்கள். தப்பாட்டம்... தப்புத்தாளங்கள் தான் என்றாலும், அருவியாட்டத்தில் ஏற்பட்ட மனதின் ஆட்டம் உடலை ஆட்டி, உள்ளத்தையும் ஆட்டுவித்தது. மலையில் இருந்து இறங்கி, அந்தப் பெண்கள் வைத்திருந்த பைகளை 'ஆய்வு' செய்யப் போன குரங்குகள், அவர்கள் போட்ட

ஆட்டத்தைப் பார்த்துவிட்டு, வந்த காரியத்தைப் பற்றி யோசித்தன.

உடனே ஒருத்தி ''ஆ... குரங்கு... ஏய்... நிர்மல்! டான்ஸ் ஆடுடி! அப்போதான் குரங்குக பயந்து ஓடும்'' என்று சொல்லவும், நிர்மல், குரங்கு மாதிரியே அபிநயம் பிடித்தாள். பைகளில் மாற்றுப் புடவைகளை வைத்திருந்த பெண்களும், உடம்பில் இருந்த புடவைகளை உருவிப் போட்டுவிட்டு நின்ற பாவாடைக்காரிகளும், குரங்குகளைப் பார்த்து, பாயப் போவதுபோல் பாசாங்கு செய்தனர்.

எல்லோரும் குளித்து முடித்துவிட்டு, கூந்தல்களை உலர்த்தியபடி, வெளியே வந்து ஆடைகளை மாற்றிக் கொண்டார்கள். குகையில் கொலு கொண்ட கைலாசநாதர் லிங்கத்தைப் பார்த்து ஒப்புக்குக் கையை தூக்கிக் காட்டிவிட்டு, கீழே இறங்கினார்கள். தமிழரசியும், அவள் அறைத் தோழி பத்மாவும், வானுக்கும் பூமிக்கும் வள்ளலாய் விளங்கும் லிங்கத்தை, கரம் கூப்பி, மனம் விட்டு வணங்கினார்கள். கீழே இறங்கிய பெண் பட்டாளம் ''தமிழு...மேடம்'' என்றது. உடனே பத்மா ''வா... போகலாம்'' என்றாள். அந்தக் குகையருகே குடிசை போட்டு இருக்கலாமா என்பது போல் சிந்தித்த தமிழரசியை பலவந்தமாய் கடத்திக் கொண்டு சென்றாள்.

அருவியில் இருந்து கால் கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தோப்புக்குள் இறங்கிய பெண் பட்டாளம், தமிழரசியும், பத்மாவும் போய்ச் சேருவதற்கு முன்பாக, பெட்ஷீட்டுகளை விரித்து, டிரான்ஸிஸ்டர் செட்டை தட்டிவிட்டு, உணவுப் பொட்டலங்களைப் பிரித்துக் கொண்டிருந்தது. அங்கே பரிதாபகரமான மைனாரிட்டியாக இருந்த டீலக்ஸ் பஸ் டிரைவரும், கிளீனரும், ஹாஸ்டல் சிப்பாயும், பொட்டலங்களை வினியோகித்துக் கொண்டிருந்தார்கள். தமிழரசி, தன்னிடம் நீட்டப்பட்ட பார்சலை யந்திரம் போல் வாங்கி, அதைப் பிரிக்காமல்

மனதைப் பிரித்துக் கொண்டிருந்தாள். இதைப் பார்த்த பத்மாதான், அதைப் பிரித்து அவள் மடியில் திணித்தாள்.

தமிழரசியோ, இதோ இந்த அருவி, தானும் தாமுவும் நீராடிவிட்டு, இதே இந்த தோப்பில், இன்னும் சற்று மறைவான இடத்தில், கையோடு கொண்டு வந்த உணவுப் பொட்டலங்களைப் பிரித்து, நெஞ்சோடு கொண்டு வந்த காதல் மேலோங்க, ஒருவருக்கொருவர் ஊட்டிக் கொள்வதுபோல் மனதில் கற்பித்துக் கொண்டாள். பிறகு, "அய்யய்யோ... காதல் ஜோர்ல லிங்கத்தை மறந்துட்டேன்" என்று உதட்டைக் கடித்தபடி, தானும், தாமுவும் லிங்கநாதர் முன்னால் கற்பூரம் ஏற்றி, "மாசில் வீணையும், மாலை மதியமும், வீசுதென்றலும்" பாடுவது போல் பாவித்துக் கொண்டாள்.

திடீரென்று, "என்னடி, எல்லாரும் கை கழுவி யாச்சுது. நீ இன்னும் தொட்டுக்கூடப் பார்க்கல..." என்ற அதட்டல் கேட்டு, லேசாய் கண்ணுயர்த்தினாள். பத்மா, அவள் வாயில் இரு இட்லித் துண்டை 'விரலைக் கடிச் சுடாதடி' என்று சொல்லியபடியே வைத்தாள்.

தமிழரசி, தன்னையே தான் தின்பதுபோல் அதைத் தின்றாள். "ஒன் கண்ணில் உள்ள உத்திரத்தைக் கவனிக் காமல், பிறத்தியார் கண் துரும்பை கவனிக்காதே" என்று சொன்னது எவ்வளவு உண்மை! பொது நீதிக்காகப் போராடுகிறவள்னு எனக்குப் பேரு. ஆனால் இப்போ... இப்போ மட்டுமில்ல, சென்னைக்குவந்த பிறகு எப்பவுமே கலாவதி ஞாபகம் வர்ல; சித்தப்பாவைப் பத்திய சிந்தனையே இல்ல. அண்ணனைப் பற்றி அக்கறைப் படல. பெற்றோரைப் பத்தி நினைத்துப் பார்க்கல. எப்போதும், உண்ணும்போதும், உறங்கும் போதும், எண்ணும்போதும், எழுதும் போதும், எதற்காக தாமுவைப் பற்றி மட்டுமே நான் நினைக்கணும்...? நானா நினைக்கேன்...? நான் நினைக்கல! ஏதோ ஒன்று அப்படி என்னை நினைக்க வைக்குது. அதற்குப்

'பெயர் தான் காதலா? அப்படியானால்... காதல் விவஸ்தை கெட்டதா...? என்னுள் உயிரையும் தன்னுள் உடம்பையும் வைத்திருக்கும்—கலாவதியைவிட, இந்த தாமு எந்த வகையில் உசத்தி?'

தோளில் எடுத்து வைத்துச் சுமந்த சித்தப்பாவைவிட, என்தோளைத் தட்டிவிட்டு, அப்புறம் அண்ணனின் அநியாய இழுப்புக்கு தலையைக் கொடுத்த இந்த சப்-இன்ஸ்பெக்டர் மகாராஜா எந்த வகையில் உசத்தி? என் மனம் ஏன் அவரிலேயே உழல வேண்டும்? என்னிலும் ஏதோ ஒரு சுயநலம் இருக்கு. அதை அகற்ற முடியாட்டாலும் அடக்கணும். உறுதியென்ற அங்குசத்தால் ஒரேயடியாய் அடக்கணும்.

தமிழரசி, உணர்ச்சிகளைக் கடித்து உருக்குலைப்பவள் போல், உணவை பலங்கொண்ட மட்டும் பற்களால் குதறினாள். குதறியபடியே, காதல் உணர்வை உதற முயற்சித்தாள். ஊரிலிருந்து வந்து ஒரு மாதமாகிறது. அங்கே என்ன நடந்தது என்று அவளும் அறிய விரும்பவில்லை; எவரும் அறிவிக்கவும் இல்லை.

ஊருக்குப் போனவள், போனவளாய் திரும்பி வரவில்லை என்பதைப் புரிந்து கொண்ட அறைத் தோழி பத்மாவிடம் கூட, ஒரு வாரம் வரைக்கும், தனது இனிய—கொடுமையான அனுபவங்களைக் கூறவில்லை... அப்புறந்தான் அவளுடைய வற்புறுத்தலாலும், யாரிடமாவது சொல்லித்தான் ஆக வேண்டும் என்ற மனக் கட்டாயம் ஏற்பட்டதாலும், காதலை மட்டும் கொஞ்சம் 'எடிட்' செய்துவிட்டு, இதர விவகாரங்களை அப்படியே சொன்னாள். பிறகு, போகப்போக காதல் விவகாரத்தையும், உள்ளது உள்ளபடியாய் ஒப்பித்தாள். நல்ல வேளையாக, 'ஸோஷியாலஜி' (சமூக இயல்) உதவிப் பேராசிரியையான பத்மா அவள் மனோ நிலையைப் புரிந்து கொண்டு, அவளின்

அரைப் பைத்திய' நிலைக்கு ஈடு கொடுத்ததோடு, அவ்வப்போது ஆறுதலும் சொன்னாள்.

மூன்றாண்டு காலமாக, சென்னையில் பிரபலமான உழைக்கும் பெண்கள் விடுதியில், தங்கி இருக்கும் தமிழரசி, அதை தன் சொந்த வீடு போலவே நேசித்தாள். ஆண்டுக்கு மூன்று தடவை, அவளே முன்நின்று, 'ஹாஸ்டல் மேட்களை' ஒன்று திரட்டி, எங்கேயாவது 'பிக்னிக்' போக ஏற்பாடு செய்வாள். தேக்கடிக்குப் போன போதும், ஒகேனக்கலுக்குப் போன போதும் அவளே முன் நின்று, எல்லாப் பொறுப்புகளையும் வலியச் சுமந்தாள். இந்தத் தடவை அவள் ஒதுங்கிக் கொண்டபோது, தலைமைப் பொறுப்பை, தகுதி இல்லாமலேயே பெற விரும்பிய சில பெண்கள் பொறுப்புக்களை மேற்கொண்டார்கள். வரமறுத்த தமிழரசியை, இந்த பத்மாதான் வரவழைத் தாள்

மீன்களோடு போட்டி போட்டு துள்ளிக்குதித்த நீர்த் துளிகளைப் பார்த்ததாலோ என்னவோ, தமிழரசிக்கு, ஏதோ ஒருவகை வீரியம் ஏற்பட்டது. ஊரில் என்ன நடந்தது என்பதைப் பற்றி அறிய மனமில்லாமல் இருந்தது பொறுப்பற்ற செயல். தொட்டிலையும் ஆட்டி, குழந்தையையும் கிள்ளிவிட்ட செயல். முதல் வேலையாய் சென்னைக்குப் போனதும், அடையாறில் உள்ள மகாலிங்கம் மெடிக்கல்ஸ் உரிமையாளர் ராஜகோபாலுக்கு டெலிபோன் செய்ய வேண்டும். பக்கத்து ஊர்க்காரர். இல்லையானால், ஊரில் யாருக்காவது லட்டர் எழுதிக் கேட்க வேண்டும். வாரம் ஒருமுறை வீட்டுக்கு லட்டர் போடுறதை நிறுத்தி ஒரு மாதமாச்சுது. அவங்களும் போடல. கலாவதி எப்படி இருக்காளோ? வினைதீர்த்தான்—பொன்மணி ஊருக்குப் போய் விட்டார்களோ என்னமோ?

தமிழரசியின் முன்னாள் மாணவியும், இந்நாள் மேல்நிலைப்பள்ளி ஆசிரியையுமான அலமேலுமங்கை, "மேடத்துக்கு என்ன வந்தது? எல்லாத்துக்கும் முன்னால

நிற்கிறவங்க, இப்போ பின்னுல கூட நிற்க மாட்டங்காங்க. ரூம்ல போர்வையை தலையோட சேர்த்து மூடி, பால்காரன் கூவுன பிறகும் தூங்குறுங்க. 'ஓட் இஸ் திஸ்' என்றவள், —பிறகு, "டேலண்டும்... இளமை மாதிரி ஒரு நிலையில்லாத அம்சந்தானே?" என்று இன்னொருத்தியின் காதைக் கடித்தாள். உடனே, அந்த இன்னொருத்தி "நான் மேடத்தை வழிக்குக் கொண்டு வாரேன் பாரு" என்று சொல்லிவிட்டு, தமிழரசியின் முன்னுல் வந்து உட்கார்ந்த படி தன் டேலண்டைக் காட்டினுள்:

"மேடம், நீங்க டி.வி.யில நமது விருந்தினரை இன்டர் வியூ செய்தது நல்லாவே இல்ல. பொதுவாய், நீங்க டி.வி. யிலே வந்தால் நேச்சுரலாய் இருக்கும். 'அவர்களே... அவர்களேன்னு' செந்தமிழ்ல சிக்க மாட்டிங்க. நடமாடும் தமிழ்ல, ஏற்கனவே 'கூடம்' போட்டு ஒப்பிக்காமல் 'பிரஷ்ஷா' கேட்பீங்க. பட், போன வாரம் 'போர்'. நீங்களான்னு எனக்கே சந்தேகம். 'தடங்கலுக்கு வருந்து கிறோம்' என்கிற போர்டை, டி.வி.க் காரங்க ஒங்க கழுத்துல தொங்கப் போட்டிருக்கலாமுன்னு தோணிச்சுது."

தமிழரசி, தன் முன்னுள் மாணவியைப் பலவீனமாய் பார்த்தாள். போன வாரம், டி.வி. நிகழ்ச்சிக்குப் போக மறுத்தாள். ஆனால் தயாரிப்பாளர் 'ரிக்கார்டிங்...' பிக்ஸாயிட்டு... நீங்க வருவீங்கன்னு... அந்த தமிழ் அறிஞர் கிட்டேயும் சொல்லிட்டேன் என்று சொன்னதும் அவளால் தட்ட முடியவில்லை...

முன்னுள் மாணவி விடவில்லை. "அது போகட்டும் மேடம். நீங்க டாக்டரேட்டுக்கு, எதுக்காக 'தமிழ் இலக்கியத்தில் வீரம் இல்லாமல் மார் தட்டியதால் ஏற் பட்ட விளைவுகள்னு' சப்ஜெக்ட் எடுத்தீங்க? இதுக்கும் இலக்கியத்துக்கும் என்ன சம்பந்தம்?"

தமிழரசி, தமிழரசியானுள்:

"இலக்கியம் என்கிறது கற்பனை வாதம் இல்ல. அது மக்களின் காலக்கண்ணாடின்னு ஒனக்குத் தெரிஞ்சிருந்தால், இப்படிக் கேட்டிருக்க மாட்டே. எனக்கு டாக்டர் பட்டம் கிடைக்கோ இல்லியோ, என்னால நிரூபிக்க முடியும். கண்ணகியை போற்றிக்கிட்டே, பரத்தையரைப் பாடினோம். அமைதியை தேடிக்கிட்டே, மார்புக் காயத்தைப் புற்றியும், போரில் சாக சந்தர்ப்பம் இல்லாமல், இளமையில் செத்த குழந்தையின் மார்பை இரண்டாகப் பிளந்து புதைச்சதாய் கதைக்கிறோம். புறநானூறு வந்த பிறகும் அதைப் பாடிக்கிட்டே, யார்னு இன்னும் கண்டு பிடிக்க முடியாத 'களப்பிரர்' கிட்டே தோற்றோம். அந்தக் காலத்திலேயே தலைவிக்கு ஒரு கற்புநிலை, தோழிக்கு ஒரு கற்பு நிலைன்னு வச்சோம். ஜனரஞ்சக பத்திரிகைகள்ல சங்கராச்சாரியார் படத்தையும், வாரியார் படத்தையும் சில்க் சுமிதா படத்தையும் ஒரே மாதிரி போடுறோம். அந்நிய கலாச்சாரத்தைப் புகுத்துறோம். இதை எதிர்த்து என்னால போராட முடியாட்டாலும், நம்ம யோக்கியதையை, பல்கலைக்கழக அறிஞர்களுக்காவது தெரியப் படுத்தலாமுன்னுதான் இந்த 'டாபிக்கை' எடுத்தேன். ஒனக்குப் புரியாட்டால், இனிமேல் ஒரு தடவை என் கிளாசுக்கு வா."

கேள்வி கேட்டவள், குறும்பாய் சிரித்தாள்.

"புரியுது மேடம், புரியுது. அப்புறம் நான் எம். பில், எடுக்கலாமுன்னு நினைக்கேன். 'அடித்தள மக்களும்-இன்னாருடைய புதுக் கவிதையும்' என்கிறது சப்ஜெக்ட். எந்தக் கவிஞரை எடுக்கலாம் மேடம்? மேத்தாவா, நா. காமராசனா, வைரமுத்தா, இல்ல வாலியோட பொய்க்கால் குதிரையைப் பிடிக்கட்டுமா?"

"நீ சொல்ற கவிஞர்கள் எல்லாம் நல்ல கவிஞர்கள். ஆனால் நீ இவங்க கவிதைகளை விட, இவங்களுக்கு சினிமா மோஸ்தர் இருக்கதாலதான் கேட்கிறேன்னு நினைக்கேன்.

ஆய்வு என்கிறது பிரபலமானவங்களோட படைப்புகளை மட்டும் பரிசீலனை செய்யுறது இல்ல. உண்மையான ஆய்வு, மொதல்ல தக்க படைப்பாளிகளைக் கண்டுபிடிக்கிறதுல துவங்கணும். இப்போ எவ்வளவோ புதுக்கவிதை புத்தகம் வருது...நமக்குத் தெரிந்தவங்களைவிட, இந்த தெரியாதவங்க சிறப்பாய் எழுதியிருக்கலாம். தேடிப் படிக்கணும். எனக்குத் தெரிந்த வரைக்கும் கவிஞர்கள் தணிகைச் செல்வன், ஈரோடு தமிழன்பன், இன்குலாப், ஜீவபாரதி, பழனி சுந்தரேசன், வெங்கடேசரவி இவங்க அடித்தள மக்களைப் பற்றி மட்டும் எழுதல, பொருளாதாரத்துல அடித்தள மக்கள் முன்னேறுத வரைக்கும் நாங்களும் முன்னேற மாட்டோமுன்னு பப்ளிசிட்டிக்கோ பணத்துக்கோ ஆசைப்படாமல் இருக்காங்க.''

"தேங்க் யூ மேடம்!''

''நான்தான் ஒனக்கு தேங்ஸ் சொல்லணும்.''

எல்லோரும் தமிழரசியையே பார்த்தார்கள். வெளியே தோற்றது போல் பாசாங்கு காட்டிய அந்த முன்னாள் மாணவி, வெற்றி மதர்ப்போடு திரும்பினாள். பேசி முடித்த தமிழரசியோ, தன் முன்னால் தனியாய், அந்தரத்தில் தொங்கிய அச்சமும் ஆவேசமும் இயலாமையும் ஏக்கமும் உருக்கமான பூதம் ஒன்று தன்னை வாரிச் சுருட்டி, வாயில் போடப் போவதைப் பார்த்தவள் போல் பத்மாவுடன் நெருக்கியடித்து உட்கார்ந்தாள். உடனே பத்மா, அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தபடியே! "மனம் நெருப்பு மாதிரி. எதையாவது ஒன்றை பற்றாமல், தனியாய் நிற்காது... முடியாது. அதனால இந்த மாதிரி பாஸிட்டிவ்வாய் பேசு'' என்றாள்.

டீலக்ஸ் பெண்களோடு, அந்த டீலக்ஸ் பஸ் புறப்பட்டது. மேட்டில் பதுங்கிப் பதுங்கி ஏறி, பள்ளத்தில் பாய்ந்து, திருப்பதி—சென்னை சாலைக்கு வந்து, சீராக ஓடியது. தமிழரசி, கோனைப் பகுதிக்குள் இருந்த

இன்னொரு, விநாயக முருக ஆலயத்தைக் கையெடுத்துக் கும்பிட்டாள். பஸ்லே, சிரிப்பும் கும்மாளமுமாய் பேசிச் செய்வது போல் பெண்கள் ஒலி, பெருவொலியானது.

பிச்சாட்டூர் 'டாஞு' வளைவைத் தாண்டி, பஸ் பாய்ந்த போது, சில பெண்கள், ''ஹோல்டான்... ஹோல்டான்... பூ...வாங்கணும்'' என்றார்கள். பஸ் நின்றதும், பெண் பட்டாளம், கீழே இறங்கி, பூ வாங்காமல் சோடா குடித் தார்கள்.

பஸ்சுக்குள்ளேயே இருந்த தமிழரசி, ''மொதல்ல இறக்குறதை இறக்குறேன், காசைப் பற்றி கவல இல்லே'' என்ற பழக்கப்பட்ட குரல் கேட்டு, பஸ்சிற்கு வெளியே கழுத்தை நீட்டி, எட்டிப் பார்த்தாள்.

தார் பாய்ந்த வேட்டியோடு, வேர்வை பாய்ந்த மேனி யோடு, ஒருவன் எதிர்ப்புறத்து பஸ்சில், பால் கேன்களை இறக்கிக் கொண்டிருந்தான்.

வினைதீர்த்தான்!

# 19

**கோ**ளையில் இருந்து தோழிகளுடன் திரும்பும்போது, மனதை அங்குசம் பாய்ந்து கட்டுப்படுத்தி விட்ட தாகத்தான் தமிழரசி நினைத்தாள். ஆனால் இப்போது வினைதீர்த்தானைப் பார்க்கப் பார்க்க, அடக்கப்பட்ட உணர்வு களும், உளைச்சல்களும் ஆவேசமாய் வெளிப்பட்டன. நம்ப முடியாமல் போனவனை, நம்ப முடியாத கண்களோடு பார்த்தாள். எவன், தான் மடியும் வரை விடியாத ஒரு பிரச்சனைக்கு விடையில்லா கேள்வியாய் போனானோ, அவன் பிரச்சனை ஏதும் இல்லாதவன் போல் அனுவசியமாய் பஸ்சி லிருந்து, பால் கேன்களை இறக்கிக் கொண்டிருப்பதைப் பார்க்கப் பார்க்க, அவள் இறந்து கொண்டிருந்தாள். அவள் கண்கள் தங்களையே எரிப்பவைபோல் எரிந்தன.

தமிழரசி சட்டென எழுந்தாள். அவள் பஸ்சில் இருந்து இறங்கிய வேகத்தில், பஸ் படிக்கட்டில் ஏறிய ஒருத்தி மேல் இடித்துக் கொண்டாள். வேகமாய் கீழே இறங்கியதால், பஸ் கதவின் இடுக்கில் சிக்கிய அவள் முந்தானை கசங்கியும், நைந்தும், அவள் மனதைப்போல் கிழிந்தும், அவளிடம் மீண்டு வந்தது,

எதிர் திசை பஸ்ஸருகே வந்து நின்ற தமிழரசி, 'வினைதீர்த்தான்' என்று அவனை விளிக்கலாமா என்று நினைத்தாள். 'இவனா...வினைதீர்த்தான்? இல்லை, இவன் தீர்த்தவன் அல்ல, கொடுத்தவன்.' அவனாக தன்னைப் பார்க்கட்டும் என்று நினைத்து, அவன் பார்வையில் படும்படி நிற்கலாமா என்று நினைத்தவள், அப்படி நிற்கவில்லை; இவனுக்குப் பார்வை கிடைத்திருப்பதே, மற்றவர்களை எரிப்பதற்குத்தான், ஏறிட்டுப் பார்க்க அல்ல. இவன் கண்ணில் உள்ள ஒளி, உஷ்ணத்தால் ஏற்பட்டது. ஒளியில் ஏற்பட்ட உஷ்ணமல்ல.

வினைதீர்த்தான் பஸ்ஸில் ஏறி இறங்கி, உருட்டிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு பால் கேனும், ஒரு கலாவதி, ஒரு சித்தப்பா, ஒரு தாமோதரன், ஒரு தமிழரசி!

'தமிழரசிக்கு, முதுகைக் காட்டிக் கொண்டிருந்த வினைதீர்த்தான், வேலை முடிந்ததும், தலையில் கட்டிய முண்டாசை எடுத்து உதறி விட்டு, உடம்பெங்கும் பொங்கிய வியர்வையைத் துடைத்தபடியே திரும்பினான். திரும்பியவன், மேலும் திரும்ப முடியாமல் நின்றான். பார்வையில் பட்டது தமிழரசிதானா என்று வாய்பிளக்க அவளைப் பார்த்தான். பிறகு தான் இந்த தமிழரசியின் சித்தப்பா மகனா என்று தன்னைத்தானே சோதனைப் பார்வையால் வீசிக் கொண்டான். தன்னை அறியாமலே அப்பாவி மாணவன் போல் தார் பாய்ந்த வேட்டியை இறக்கிக் கொண்டான்.

அவளை நோக்கி, ''தமிழு!'' என்று சொல்லியபடியே இரண்டடி நடந்தவன், அவள் பார்வைத் தீயில் முகம்

எரிந்து சாம்பலானவன் போல், கவிழ்ந்த தலையில் தும்பும் துரும்புமாய், பஞ்சுகளுமாய் இருந்த தலைமுடி சாட்சியம் கூறியது. அவன் கைகளைப் பிசைந்து, கால் பாதங்களைத் தேய்த்தபடி அவளை அரைக் கண்ணால் பார்த்த போது, தமிழரசி அவனை நோக்கி நடந்தாள். அவள் நெருங்க நெருங்க அவன், மனநெடி தாங்க முடியாமல் குப்புறச் சாயப்போனான். தன்னை நிலைப்படுத்திக் கொள்ள உடம்பை பின்னால் இழுத்ததால் பின்னால் விழப்போனான். வினை தீர்த்தானை வெறுத்தும், வெகுண்டும், சிலிர்த்தும், சினந்தும் பல்வேறு பார்வைகளால் பாய்ந்த தமிழரசி, இறுதியில் அரை நிமிடம் செலவழித்து உதடுகளைப் பிரித்து "நீ மனிதன்தானப்பா?" என்றாள், ஒரு வினாடிக்குள்.

வினைதீர்த்தான் பதிலேதும் சொல்லாமல் தலை குனிந்தான். பெருவிரலால் தரையில் வட்டம் போட்டான். தமிழரசி கேள்வியை தொடர்ந்தாள்.

"ஊர்ல எத்தனையோ பேரை இப்படிக் கேட்ட ஒன்னைப் பார்த்துத்தான் இந்தக் கேள்வியை கேட்கிறேன். ஒன்னோட பெரியப்பா மகள் என்கிற உரிமையிலயோ, கடமையிலயோ கேட்கல. ஒன்னால நாசமாய்ப் போன ஒரு பெண் என்கிற நிலைமையில கேட்கிறேன். சொல்லு. ஒருவேளை ஒரு காலத்துல மனிதனாய் இருந்து, அப்புறம் மிருகமாய் போனதால, ஒனக்கு பேச்சும் போயிட்டா? நீ மிருகமில்லன்னா, எனக்குப் பதில் சொல்லு. நீ மனுஷன்தானா?"

வினைதீர்த்தான் அவளை அதிர்ச்சியோடு பார்த்தான் நாசமாய் போயிட்டதாய் சொல்றாளே;எதையோ கேட்கப் போனவன், கண்களை மூடியபடியே கைகள் இரண்டையும் கோர்த்து, அவற்றைப் பிடரிக்குப் பின்புறமாய் கொண்டு போய் அதில் தலையைச் சாய்த்தான். ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தான். தமிழரசி கேட்க வேண்டியதை. கேட்கத்தகாதபடி கேட்டாள்.

"சொல்லு, பொன்மணியை இன்னும் வச்சுருக்கியா, இல்ல யார்கிட்டேயும் வித்துட்டியா?"

வினைதீர்த்தான், தமிழரசியை நேருக்கு நேராய் பார்க்கப் போனான் -முடியவில்லை. அவள் ஏன் தன் கண்களுக்குக் கோடு கோடாய் தெரிகிறாள் என்பது அவனுக்குப் புரியவில்லை. கண்களில் ஏன் அவள் கரைந்து போகிறாள் என்பதும் அவனுக்குத் தெரியவில்லை. பார்த்தவனின் கண்களை மறைத்த நீர், பார்க்கப் பட்டவளை கோடு கோடாக்கி, கேடு கேடாக்கி விட்டது. புரியாமலே, அவன் தலை கால் புரியாமல் ஓடினான். அவளைத் திரும்பிப் பார்க்காமலே, தென்புறமாக ஓடினான்.

குழம்பிப்போன தமிழரசி குமைந்தாள். ஏன் ஓடுகிறான்? ஒரு வேளை பொன்மணியை நான் சொன்னது மாதிரியே, அய்யோ...

தமிழரசி, வினைதீர்த்தான் போன திசையைப் பார்த்து ஓடினாள். வெட்ட வெளிக்குள் வந்தவள், அவன் எந்தப் பக்கமும் இல்லாதது கண்டு திகைத்தாள். இதற்குள் அவன் ஓடி முடித்து, அந்த நிலப்பரப்பைக் கடந்திருக்க முடியாதே என்று நாலா பக்கமும் திரும்பியபோது, பஸ் நிலையத்தின் புறமுதுகுப் பகுதியைப் பார்த்தாள்.

வினைதீர்த்தான், கூனிக் குறுகி, குழந்தைபோல் ஏங்கி ஏங்கி, அழுது கொண்டிருந்தான். தலையை அவ்வப்போது அடித்துக் கொண்டான். தமிழரசி தாயானாள். படபடப்போடும், பரபரப்போடும் ஓடிப்போய் நின்றாள். அப்படியும் ஆவேசம் தணியாமல், "பொன்மணியை எங்கே?" என்றாள். வினைதீர்த்தான் அவளை ஏறிட்டு நோக்கினான். பிறகு "என்கிட்டேயே நல்லாத்தான் இருக்காள்" என்றான். அவனே பேசட்டும் என்பதுபோல் தமிழரசி பேசாது நின்றாள். இரண்டு நிமிட மவுனத்தில் கண்ணீரைக் கரைத்த வினைதீர்த்தான், அவளைப் பார்க்

காமலே பஸ் நிலைய தூணைப் பார்த்தபடியே கேவிக் கேவிப் பேசினான்.

"ஒன் காலுல கிடக்கிற செருப்பைக் கழட்டி என்னை நீ அடித்தாலும் தகும். அவ்வளவு பெரிய பாவத்த செய்துட்டேன். நான் அயோக்கியன்தான். அற்பன்தான். நான் செய்தது நம்பிக்கை துரோகந்தான். இவ்வளவையும் தெரிஞ்சுகிட்டுத்தான் செய்தேன். ஆனால் ஒண்ணு; நான் மனுஷன் என்கிறதாலதான் செய்தேன். என் அப்பாவும், தங்கச்சியும், எல்லாருக்கும்மேலே... என்னோட தமிழும் துடிச்சுப் போவாங்கன்னு தெரிஞ்சுதான் செய்திட்டேன். நீ இனிமேல் என்ன பண்ணனுமின்னாலும் பண்ணு. அதுக்கு முன்னால ஒரே ஒரு பிச்சைக் கேக்கேன். அப்பாவும், தங்கச்சியும் ஊர்ல எப்டி இருக்காங்கன்னு கூட சொல்லாண்டாம். நீ நாசமாய் போயிட்டதாய் சொன்னியே, அதையாவது என்கிட்ட சொல்லு. ஒனக்கு ஒண்ணுன்னா, அது எனக்கும், பொன்மணிக்கும், அப்பாவுக்கும், கலாவதிக்கும், ரெட்டிப்பாயும் மொத்தமாயும் வந்ததாய் அர்த்தம். தமிழு, என் கூடப் பிறவா தங்கச்சியே! என் பத்தரைமாத்துத் தங்கமே! சொந்த அண்ணனைவிட இந்த அண்ணனை தலையில வச்சு கூத்தாடுன என் தமிழு! சொல்லும்மா. ஒன்கிட்ட தாமு மச்சான் பேசலியா? அண்ணன்னு நினைச்சால், பேச்சு வராது. இப்போ என்னை அக்காள்னு நினைச்சு சொல்லும்மா."

வினைதீர்த்தான், மீண்டும் ஏங்கி ஏங்கி அழுதான். தமிழரசியும், தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள். இரு துருவ உணர்வுகளுக்கு இடையே ஊசலாடிக் கொண்டிருந்தாள். சிறிது நேர இடைவெளியில் வினைதீர்த்தான் துண்டாலும், தமிழரசி முந்தானையாலும் துடைத்துக் கொண்டார்கள். இதற்குள் பஸ் ஹாரன் சத்த அலைகளுக்கிடையே, அங்கிங்குமாய் ஓடிக் களைத்த அறைத்தோழி, அவர்கள்பக்கம் ஓடிவந்து மூச்சு விட்டாள். வினைதீர்த்

தானைப் பார்த்துப் பயந்தவள்போல், தமிழரசியின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

"என்னடி இது? ஒன் ஒருத்திக்காக நாற்பது பேர் காத்து இருக்காங்க. எதைத் திருடுனாலும் நேரத்தைத் திருடப்படாது. எதை சமமாய் பங்கிட முடியாட்டாலும் நேரத்தையாவது சமமாய் பங்கிடணுமுன்னு மேடையின் முன்னால அறுக்கிற பேச்சாளரை இடிச்சுப் பேசுற நீயா இப்படி?" என்றாள்.

தமிழரசி, சிறிது பரபரப்பாகி "பத்... இதுதான் வினை தீர்த்தான்..." என்றாள்.

பத்மா, வினைதீர்த்தானை இழிவாகப் பார்த்தாள். "ஐ ஸீ..." என்று சொல்லியபடியே, அவனை நகர்ந்து நகர்ந்து பார்த்தாள். பிறகு "ஏய்யா பெரிய மனுஷா, ஒனக்கு நீ குழி வெட்டிக்கோ, வேண்டாங்கல. பட், அடுத்தவங்களுக்கு ஏய்யா வெட்டுற? ஒன்னால இவள் பட்ட... வாயை மூடாதடி இந்த மாதிரி தராதரம்..."

பத்மாவால் மேலும் பேச முடியவில்லை. தமிழரசி அவள் வாயை, பிரஷ்ஷர் குக்கர் மாதிரி கெட்டியாக மூடிக் கொண்டாள். பிறகு கையை எடுத்து பத்மாவின் அன்பில் கட்டுண்டு, அவளை அப்படியே அணைத்துக் கொண்டாள். கழுத்தில் ஆரம் போல் விழுந்த நீர், தன் கழுத்தில் பட, நிமிர்ந்த பத்மா, தமிழரசியின் கண்களைத் துடைத்தாள். இதற்குள் பஸ்சில் இருந்த பெண்கள் தமிழரசியைப் பார்க்க நாலாபக்கமும் சிதறி ஓடி, அவர்களும் அங்கே வந்து கூடிவிட்டார்கள். சில பெண்கள், திரைப்படங்கள் பலவற்றில் வரும் 'பிளாக் மெயில்' வில்லனை வினைதீர்த்தானை கற்பித்து, அந்த முரடனிடம் தமிழரசி எப்படியோ ஒரு வகையில் மாட்டிக் கொண்டிருக்கலாம் என்றும் பாவித்துக் கொண்டார்கள். தமிழரசி, பொதுப்படையாகப் பேசினாள்.

“இவர் என் சொந்த சித்தப்பா மகன். இவரோடு குடும்ப விவகாரங்களைப் பேசவேண்டியதிருக்கு. நீங்க போங்க, நான் பஸ்ல வந்துடுறேன்!”

ஒரு முன்னாள் மாணவி, தனக்குள்ளே தமிழரசிக்காய் பயந்து “ஒங்களுக்காக எவ்வளவு நேரமானாலும் நாங்க காத்திருக்கோம் மேடம். தனியா வரவேண்டாம், பிளீஸ் மேடம்!” என்றாள்.

“நோ, தேங்க்ஸ்! இவர் என் கஸின் பிரதர்தான். நீங்க போங்க. எனக்கு எதுவும் ஆகல. ஆகாது. ஏய் பத்மா! அவங்களுக்குச் சொல்லேண்டி.”

“சொல்றேன். முதல்ல நானும் ஒன்னோட இருக்கணு மான்னு சொல்லு.”

“வேண்டாம். நீயும் அவங்களோட போ. நான் பின்னாலேயே வந்துடுறேன்.”

எல்லாப் பெண்களும் தயங்கியபோது, தமிழரசி சாலையை நோக்கி நடந்தாள். எல்லோரும் அவளைப் பின் தொடர்ந்தார்கள். பஸ்சுக்குள் ஏறி கையோடு கொண்டு வந்திருந்த சின்னஞ்சிறு சூட்கேசை எடுத்துக் கொண்டு இறங்கினாள். பிறகு தோழிகளைப் பார்த்துக் கையாட்டினாள். அவர்கள் பதிலுக்குக் கைகளை ஆட்டியபோது டிரைவர் ‘கீரை’ ஆட்டினார். பஸ் கிழக்கு நோக்கியும், தமிழரசியும் வினைதீர்த்தானும், மேற்கு நோக்கியும் பாய்ந்து நடந்தார்கள்.

பிச்சாட்டூர் ஏரிக்கரையில், வினைதீர்த்தானும், தமிழரசியும் மவுனமாக நடந்தார்கள். வினைதீர்த்தான் அவளிடம் பேசப் போனான். ஆனால் அவள் முகம் இறுகியிருப்பதைப் பார்த்ததும் உள்ளடங்கிப் போனான். அவளோ அந்த ஏரியின் அடித்தளத்தையே பார்த்தபடி நடந்தாள். குறுக்கும் நெடுக்குமாய் ஆங்காங்கே வெள்ளைக் கோடுகள் போன்ற படிக்கட்டுகளால் அகல நெடுகத்

தோன்றும் இந்தக் கரையைத் தொலைவில் பார்த்து, ஏதோ அணைக்கட்டு என்று நினைத்தாள். கரைக்கு வந்த பிறகு தான், முன் பக்கமும், பக்க பக்கங்களும் மொட்டையாய்— கட்டாந்தரையாய் போன ஏரி என்று புரிந்தாள். வாழ்க்கை என்பதும் இந்த ஏரிக்கரை மாதிரி தானோ? எதிர்பார்ப்பின் வெளிமுனை இந்த ஏரிக்கரையென்றால், அதன் உள்முனைதான் அனுபவம் என்ற கொதிதரையோ? இன்பம் என்பது, அனுபவிக்காதவனுக்கு நீர்த்தேக்கம் மாதிரி. அனுபவித்தவனுக்கு அதன் கரை மாதிரியோ? இந்த உதாரணம் கூட சரியல்ல. என் காதலை மட்டுமே இதனோடு ஒப்பிடலாம்!

இருவரும் மறுமையின் ஞானபீடம் போல் தோன்றிய ஒரு ஆலய மடத்தைத் தாண்டி, இம்மையின் ஞான வாசஸ்தலமான ஒரு சாராயக் கடையைக் கடந்து, ஊரின் வால் பகுதிக்கு வந்தார்கள். சந்து பொந்துகளால் சலனப் பட்ட தெருவில் நடந்து, குடிசைப் பகுதிக்குள் வந்தார்கள். ஆங்காங்கே மக்கள், அந்தக் காலத்து மணிப்பிரவாள தமிழ் நடைபோல், தெலுங்கையும், தமிழையும் கலந்து, குதப்பிப் பேசிக் கொண்டிருந்தார்கள். தமிழரசி, ஊரில் நடந்தவற்றை வினைதீர்த்தானிடம் சொல்லலாமா வேண்டாமா என்று வழி நெடுக சிந்தித்தபடியே நடந்தாள்.

குடிசைகளிலேயே படு குடிசை ஒன்றில், அடுப்புக்குள் கண்ணீர் புகை விட்ட நெருப்பை ஊதிக் கொண்டிருந்த பொன்மணி, காலடிச் சத்தம் கேட்டுக் கண்களைத் துடைத்தபடி எழுந்தாள். தமிழரசியின் கண்கள், அவளை கடுமையாக விமர்சித்துக் கொண்டிருக்கும்போதே, "அண்ணியா? அடிடா சக்கே!" என்று சொன்னபடியே, தமிழரசியைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள். அவள் தோளில், தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

பிறகு அவளிடமிருந்து மெல்ல விலகி, "ஏன் குத்துக் கல் மாதிரி நிக்கீங்க? நாற்காலியை எடும்" என்று வினை

தீர்த்தானை அதட்டினாள். தமிழரசி, பொன்மணியை மலைத்துப் பார்த்தாள். மயங்கிப் பார்த்தாள். அவள் முகத்தில் எந்த குற்ற உணர்வும் இருப்பதாகத் தெரிய வில்லை. ஊருக்குச் செல்லும்போதெல்லாம் தன்னை முன்பு எப்படிப் பார்ப்பாளோ, அதே மாதிரி, ஈரப்பசை உதடு கள், புன்னகையால் பிரிக்கப்பட்ட பொங்கல் பானை கண் களோடே, தன்னைப் பார்ப்பவளை, தமிழரசியால் மேலும் வெறுக்க முடியவில்லை. இதழோரம் நகரப்போன புன்னகையை, வலுக்கட்டாயமாகக் கடித்தாள்.

பொன்மணியோ, அடுப்போடு போராடினாள். காணுமல் கண்டவளுடன் பேச முடியாது என்று நினைத்து, அடுப்பு விறகை வெளியே இழுத்து, அனல் கங்கை காலால் மிதித்தாள். இதற்குள், முக்காலியோடு வந்து நின்ற வினைதீர்த்தானிடம் இருந்து அதைப் பிடுங்கி, பள்ளமும் மேடுமற்ற சமதளப் பரப்பைத் தேடிக் கண்டுபிடித்து முக்காலியை அதில் போட்டுவிட்டு, தமிழரசியை கட்டிப் பிடித்துக் குண்டுக்கட்டாய் தூக்கி அதில் உட்கார வைத்தாள்.

பிறகு "அண்ணி முகத்தைப் பார்த்தால், வயிறுல பசி தெரியுது. சீக்கிரமாய் ஒரு மசால் தோசையும், சுடச்சுட மசால் வடையும் வாங்கிட்டு வாங்க" என்றாள். அவன் சிறிது நகர்ந்தான்.

பிறகு "தமிழு, நீ வாரது பொன்னுக்குத் தெரியாது. அதனால் நான் சொல்லிக் கொடுத்து, அவள் எதையும் சொல்ல முடியாது. எந்த சந்தர்ப்பத்துல இது நடந்த துன்னு அவள் கிட்டயே கேளு," என்று பயபக்தியோடு சொல்லிவிட்டு நடையைக் கட்டினான்.

முக்காலியில் உட்கார்ந்த தமிழரசியையே, சிறிது நேரம் லயித்துப் பார்த்த பொன்மணி, திடீரென்று அவள் மீது பாய்ந்து, அவள் கன்னங்களில் மாறிமாறி முத்த மிட்டாள். மரக்கிளைபோல் கிடந்த தமிழரசியின் கரங்கள்

இரண்டையும், தன் முதுகைச் சுற்றிப் போட்டபடியே "ஊர்ல எல்லாரும் சவுக்கியமா அண்ணி?" என்ருள். பிறகு, "நீங்க ஏன் ஆளே அடையாளம் தெரியாம போயிட்டீங்க?" என்று சொல்லிக் கொண்டே, தமிழின் கால்மாட்டில் உட்கார்ந்தாள். தன் மோவாயை, அவள் மடியில் போட்டபடியே கனவில் பேசுபவள் போல் பேசினுள்.

"நீங்க பேசாமல் இருக்கதுல இருந்தே, ஒங்க கோபம் புரியுது அண்ணி. அதே சமயம் ஊர்லயும், சொந்தக் காரங்க மத்தியிலயும் ஒரு வாரம் நடக்கிற அமளிக்குப் பயந்து, எந்த பெண்ணும் தன்னேட இஷ்டத்துக்கு விரோத மான கல்யாணத்துக்கு சம்மதிக்கதை விட, அவள் தூக்குப் போட்டு சாகலாம். நான் என்ன அண்ணி செய்ய முடியும்? எப்படியோ, இவரு மேல ஒரு 'இது' வச்சிட்டேன். எனக்கு கல்யாணமுன்னு பேச்சு அடிபட்ட பிறகுதான், இவர் இல்லாமல் என்னுல வாழ முடியாதுன்னு எனக்கே தெரிஞ்சுது. ஒங்களால என் கல்யாணத்தை நிறுத்த முடியாதுன்னு சொன்னதும், இவர் கிட்ட ஓடிப் போயிடலாமுன்னு சொன்னேன். ஒடனே, இந்த மரக் கட்டை, ஒனக்கும், எனக்கும் என்ன பிள்ளே சம்பந்த முன்னு கூசாம சொல்லிச்சுது. என் தலையில இது குட்டுன குட்டை அம்பலப் படுத்துனுல், இந்தப் பைத்தியக்கார மனுஷர் 'சும்மா விகற்பம் இல்லாமல் குட்டுனேன்'னு சத்யம் போட்டாரு. என்னை குழந்தை மாதிரி நினைச் சேன்னுரு 'அப்போ ஏய்யா எனக்கு முத்தம் கொடுக்கத் தோணல? இதுல இருந்தே நான் வயசுப் பொண்ணுன்னு தெரிஞ்சுக்கும் போது, தலையில ஏன் கை போட்டீர்'னு திருப்பிக் கேட்டேன்?

"ஏன் அண்ணி அப்டி பாக்கீங்க? நீங்க ஊருக்கு வந் திருக்கும் போது, முத்துமாரிப் பாட்டி, நான் கன்னத்துல 'கன்னம்' போட்டதைச் சொன்னதும், நான் ஒடுங்கிப் போயிட்டேனேன்னு கேட்காமல் கேட்கிறீங்களா? இவரு

எப்படில்லாம் என்கிட்ட நடக்கணுமுன்னு நினைச்சேனே, அதையே நடந்ததாய் பாட்டிகிட்டே ரசிச்சு சொன்னேன். அவள் அதையே திருப்பிச் சொன்னாள். அவ்வளவு தான். சரி, நடக்காத கதையை விட்டுட்டு, நடந்த கதைக்கு வருவோம். ஒங்க அண்ணன் முடியாதுன்னார். உடனே இடுப்புல இருந்த ஒரு விஷப் பாட்டலைக் காட்டி, நான் அதோட போயிடுவேன். என்னை நீரு ஏமாத்துன பாவம், ஒம்மைப் பிடிக்காட்டாலும், ஒம்ம தங்கச்சி கலாவதியை யும் தமிழரசியையும் பிடிச்சே தீருமுன்னு சொன்னேன். இப்படிச் சொல்லி வாய மூடு முன்னாலயே, சட்டுன்னு என்னை அடிச்சுட்டார். அடிக்கிற கை என்ன செய்யும்? அதைத்தான் அவரும் செய்தார். மொத்தத்துல அவரு என்னை கூட்டிக்கிட்டு வந்தார்னு சொல்றதை விட, அவரை நான் கூட்டிகிட்டு வந்துட்டேன்னு சொல்லலாம்.''

அப்போது மசால் தோசையோடு வந்த வினைதீர்த் தான், ''இவள் பிடிச்சால் பிடிதான். ஒரு தடவை முத்துலிங்கம் மச்சானும், அவரு சம்சாரமும் திட்டு னுங்கன்னு, என்கிட்ட தோட்டத்துல தூக்குப் போட்டுச் சாகப் போறதாய் சொன்னாள். நான் பெரிசா எடுத்துக்கல. தற்செயலாய் தோட்டத்துக்குப் போனால், குத்துக்கானு சட்டத்துல வால் கயிற்றை கட்டிக்கிட்டு இருக்காள். அப்போ கோபத்துல அடிச்சேன் பாரு அடி, நான் இவள் கூட வராட்டால் நிச்சயம் செத்துத் தொலைஞ்சிருப்பாள். அதனால்தான் நானும்...''

தமிழரசி சிறிது நேரம் மவுனித்தாள். வினைதீர்த் தானும் பொன்மணியும், அவள் முகத்தையே பார்த் தார்கள். பிறகு ''நல்லதோ, கெட்டதோ, நம்பிக்கைத் துரோகமோ, நயவஞ்சகமோ, நடந்தது நடந்து போச்சு. நான் யார் ஒங்களைக் கேட்கதுக்கு?'' என்றாள்.

''தமிழு, நான் யோக்கியன்னு வாதாட வர்ல. என்னை உன் காலுல கிடக்குறதை கழட்டி வேணுமுன்னாலும் அடி.

ஆனுல், ஒனக்கும் எனக்கும் சம்பந்த மில்லன்னு மட்டும் சொல்லாத தமிழு. என்னுல தாங்க முடியாது. நான் ஊருக்கு முரடன்; ஆனுல் ஒனக்கு, ஒன் காலுல கிடக்கிற செருப்பு மாதிரி.''

''இவ்வளவு பேசுறியே, ஊர்ல அப்பா தங்கச்சி எப்படி இருக்காங்கன்னு ஒரு வார்த்தை கேட்டியா?''

''அதை கேக்குறதுக்கு எனக்கு எங்கே தமிழு யோக்கியதை இருக்கு? அதோட அவங்களுக்கு ஒண்ணுன்னுல், நீ எங்க இருந்தாலும் ஆண்டவன் ஒன் உடம்பை துடிக்க வச்சுட மாட்டாரா...? பிச்சாண்டியை நேற்று பஸ்ல பார்த்தேன். அடுத்த வாரம் அம்மங்கொடைக்கு ஊருக்குப் போருனும். நாங்க இங்கே சுகமாய் இருந்ததை ஊர்ல சொல்லுவான். அப்பாவும், தங்கச்சியும் சந்தோஷப் படாமலா போவாங்க?''

''இவரு ஒருத்தரு சாப்பிட விடமாட்டாரு. சாப்பிடுங்க அண்ணி.''

பொன்மணி மசால் தோசையைப் பிய்த்து தமிழரசி வாயில் ஊட்டினுள். அந்த அன்பின் ஈர்ப்பு சக்திக்குக் கட்டுப்பட்டவளாய் தமிழரசி வாயைத் திறந்தாள். வினை தீர்த்தான் தலையைச் சொறிந்தபடியே நின்றுன். பொன்மணி, மசால் தோசையோடு மசாலாவாக, ஒரு கோரிக்கையைப் போட்டாள்.

''எத்தனை நாளைக்கு அண்ணி இப்படி கழுத்துல ஒண்ணுமில்லாமல் இருக்கது? தாலி கட்டணுமுன்னுல் தமிழு வந்து தான் கட்டணுமுன்னு சொல்லிட்டார். நீங்க லீவ் முடிஞ்சு மெட்ராஸ் வாரது வரைக்கும் சும்மா இருப்போ முன்னுரு. இவர் வேலை பார்க்கிற லாரி ஷெட் ஓனர், சீக்கிரமாய் பஞ்சாயத்தார் முன்னுல கல்யாணத்தை செய்துக்கங்க. நான் சப்ரிஜிஸ்டிராரை கூட்டிவாரேன். இல்லன்னு, ஒங்க ஊர்ல யாரும் கம்ப்ளெயின்ட் கொடுத்திருந்தால், ஒங்களை எப்போ வேணுமுன்னுலும் போலீஸ் பிடிச்சுட்டுப் போகலா

முன்னு சொல்றார். எனக்குப் பயமாய் இருக்கு. இந்த ஊருக்கு வந்து ஒரு மாசமாகுது. கோவிலுல கல்யாணம் செய்து, பஞ்சாயத்தார் சப்ரிஜிஸ்டிரார் முன்னுல ரிஜிஸ்டர்ல கையெழுத்துப் போட்டுட்டால், சட்டப் படியான கல்யாணமாம். நாளைக்கு நல்ல நாள் அண்ணி. நீங்களே முன்னுல நின்னு நடத்தி வச்சுடுங்க அண்ணி. பிளீஸ்!''

தமிழரசி திடுக்கிட்டாள். இதுவரை, இவர்கள் காதலில் தலையிடாத கம்பீரத்தோட நிற்கேன். கல்யாணத்தை நடத்தி வச்சால், ஊர்ல என்ன நினைப் பாங்க? தாமு என்ன நினைப்பார்? அதோட இந்த 'பிளஸ்டூ' பொன்மணியால படிப்பில மைனஸான இவனோடு தொடர்ந்து வாழ முடியுமா? இப்படிப்பட்ட பெண்கள், அப்புறம் சிதைஞ்சு போனதை பார்த்திருக்கேனே. வினை தீர்த்தான் கிட்ட பக்குவமாய் பேசி, சினிமாவுல வாரது மாதிரி, பொன்மணியை வெறுக்கது மாதிரி அவனை நடிக்கச் சொல்லி, அப்புறம் பொன்மணியை தாமு கிட்ட ஒப்படைச்சுடலாமா? எப்டி முடியும்? ஏன் முடியாது? இந்தக் காலத்துல எத்தனையோ குடும்பத்துல பிற ஆண் களோட 'டூர்' போன இளம் பெண்கள், அப்புறம் மற்ற வங்களை கல்யாணம் செய்து, கண்ணகி மாதிரி பார்க் கிறதை பார்த்திருக்கேனே.

# 20

ஒரு சில நாட்கள், ஊர்ரார் ஒட்டுமொத்தமாக அழுத போது அந்த அழுகையை, கோபமாக மாறு முன்பே பயமாக மாற்றிக் காட்டிய சப்-இன்ஸ்பெக்டர் தாமோ தரன், விநாடி விநாடியாய், அணு அணுவாய், நினைவு நினைவாய், கனவு கனவாய், உணர்வு உணர்வாய் அழத் துவங்கினான். அன்றும், காவல் நிலையத்தில், தனித்திருந்த

அறையில், உள்ளூற அழுது கொண்டுதான் இருந்தான். அதே அறை. அதே ஏட்டு பொன்னுச்சாமி. அதே ரைட்டர் சபாஸ்டின். அதே போலீஸ்காரர்கள். ஆனாலும் ஒரே ஒரு கூடிய மாற்றம்.

எஸ்டேட் முதலாளி பூமிநாதன், புதிதாய் முளைத்திருந்தார். சினிமாவில் எஸ்டேட் ஆதிக்க இளைஞர்கள் வருவது போல, இந்த ஐம்பத்தைந்து வயது முதலாளியும், டவுசரும், 'டி' சட்டையும் போட்டு, கையில் ஒரு பேட்மிட்டனோ, குட்மிட்டனோ-அதற்கான வலைக் கம்பை கையில் பிடித்தபடி, தாமோதரனுக்கு எதிர் நாற்காலியில், இரண்டு கால்களையும் தூக்கிப் போட்டுக் கொண்டு, என்னவெல்லாமோ பேசிக் கொண்டிருந்தார்.

தாமோதரனுக்கு, அவரைப் போலவே, அவரது பேச்சும் புரியவில்லை. இவ்வளவுக்கும், அவர் போட்ட சத்தத்தில், சாலையில் போன ஒரு நாய்கூட வாலை வளைத்து, காதுகளை நிமிர்த்தி திரும்பிப் பார்த்தது. என்றாலும், தாமுவுக்கு அவரின் ஒலிதான் கேட்டதே தவிர, அதில் உள்ளடங்கிய வார்த்தைகள் கேட்கவில்லை. ஆனாலும் ஒப்புக்கு, அவ்வப்போது தலையை ஆட்டிக் கொண்டான். அவர் இடையிடையே சிரிக்கும் போது, இவனும் அரை குறையாய் சிரித்துக் கொண்டான். அவனது கேட்பு ஞானம் மட்டுமல்ல; பார்வை ஞானமும் பாதிக்கப் பட்டிருந்தது.

எதிரில் பூமிநாதன் மட்டும் அவனுக்குத் தோன்றவில்லை. அவர் வாய்க்குள், மாடக்கண்ணு விழுந்த கிணற்றைப் பார்த்தான். அவர், லைட்டரை வைத்து சிகரெட்டைப் பற்றவைத்த போது, அந்த நெருப்பில், கலாவதி சூடுபட்ட காட்சியைப் பார்த்தான். பயந்து போன தாமு, தலையைத் தூக்கி மின் விசிறியைப் பார்த்தான். அது மின் விசிறியல்ல. பூமியின் பேய் வாயான கிணற்றுக்குள் வீழ்த்தப்பட்ட மாடக்கண்ணு மாமா

சுற்றிக் கொண்டிருந்தார். கலாவதி 'எய்யோவ் யோ... யோ...' என்று கூக்குரலிட்டுக் கொண்டிருந்தாள்.

திடீரென்று பூமிநாதனை மறைத்தபடி, தமிழரசி இடுப்பில் கை வைத்தபடி, அவனை இளக்காரமாகப் பார்ப்பது போல் தோன்றியது. உடனே ஊருக்குப் போவதற்கு முன்பாக, அண்ணன் சொன்ன ஆலோசனையும் நினைவுக்கு வந்தது. 'வெற்றியுடன்' புறப்பட்ட அண்ணன் காரர், "எதுக்கும் மெட்ராசிக்குப் போய், தமிழரசியையும் கொஞ்சம் 'கைக்குள்ள' போட்டுக்கோ. அவள் விஷயம் தெரிஞ்சு...ரகளை பண்ணுமல் பார்த்துக்கணும். இல்லன்னு, நம்ம எல்லாருக்கும் ஆபத்து" என்ருர்.

உடனே தாமோதரன், "ஊர் உலகத்துல, குறிப்பாய் ஆபீஸ்கள்ல காரியத்தை முடிக்கிறதுக்காக, பொம்பிளைய கூட்டிக் கொடுப்பார்கள். நீ ஆம்புளைய கூட்டிக் கொடுக்க பார்க்கிறியாக்கும்" என்ருன் சூடாக. அண்ணனை அப்படிக் கேட்டதற்காக, இப்போது கூட, அவன் வருத்தப்பட வில்லை. எதற்காக வருந்த வேண்டும்?

கொலைகாரர்களை விட, கொடியவர்களாய் நடந்து கொண்டவர்கள், விடுதலையாகி, ஊரில் கோவில் மாடு மாதிரி சுற்றித் திரிகிருர்கள். சூடுபட்ட கலாவதியோ, அய்யா விழுந்த கிணற்றை எட்டி எட்டிப் பார்த்தபடியே 'எய்யோ...வ்...' என்று கூப்பிடுகிருளாம். அப்பாவைத் தேடுகிற சாக்கில், அவரைப்போல் போன நீதி தேவனைத் தேடுகிருளோ? மனிதன் கிணற்றுக்குள் விழுந்தால் சடலமாவது நீரில் மிதக்கும். ஆனுல் நியாயம் விழுந்தால்? இதற்கெல்லாம் காரணம் யார்? யாரோ, எவரோ? ஆனுல் இதன் கிளைமாக்சை முடித்தவன் நான். இதனுல் வாழ்க்கையில் எந்த கிளைமாக்சும் இல்லாமல் போய் விட்டேன்.

தாமோதரன் தனக்குள்ளே முனங்கிக் கொண்டான் அவனுக்குத் தேவைப்படுவது தமிழரசி கூட இல்லை.

தனிமை, தனிமையேதான். இது தெரியாமல், அவனை இருப்பிடத்தில் காலை ஒன்பது மணிக்கே பிடித்துக்கொண்ட இந்த பூமிநாதன், அவனை அதே படகுக்காரில் ஏற்றிக் கொண்டு இங்கே வந்து விட்டார். அவனுள் இருந்த பழைய தாமோதரன் காரில் ஏறத் தயங்கினான். ஆனால் 'புதுமை' தாமோதரன் புறப்பட்டான்.

நேர்மை என்பது கற்பு மாதிரி. கற்பழிக்கப்பட்ட பிறகு முத்தமிட்டது பெரிய குற்றமா? அதற்காக இந்த மனிதர் இப்படியா அறுப்பது? பெரிய யோக்கியர் போல நாடே குட்டிச்சுவராயிட்டு என்கிறார். நல்லவன், கெட்டவன் கைல சிக்கியிருப்பதால் அவரே சொல்லிக் கொள்கிறார். அதற்கு விளக்கமும் கொடுக்கிறார். தப்புச் செய்கிறவனை எல்லாம், சவூதி அரேபியாவுல மாதிரி, ஒரு கை, ஒரு காலை எடுத்திடணும் என்கிறார். அப்படியானால் தனக்கு இன்னும் எத்தனையோ உறுப்புக்கள் தப்புக்கு தண்டனையாக தேவை என்பது தெரியாமலே...

பூமிநாதனும் இறுதியில் பூமிக்கு வந்து விட்டார்.

“அப்புறம் எஸ்டேட் பசங்க இங்க வந்தாங்களா சார்?”

தாமோதரன், அவர் கேள்வி புரியாமல், அரை குறையாய் சிரிப்பதுபோல் பாவலா செய்தான். அந்தக் குறை பிரசவ புன்னகையை “நான் இருக்கேன், பார்த்துக்கிறேன்” என்று அவன் சொல்வதாக, பூமிநாதன் பொருட்படுத்திக் கொண்டார். பிறகு தான் அந்த எஸ்டேட்டை, எப்படியெல்லாம் உருவாக்கி, எப்படியெல்லாம் முன்னுக்குக் கொண்டு வந்த புராணத்தை, தொடுத்துக் கொண்டிருந்தார். தாமு அவ்வப்போது தலையை ஆட்டி, அவர் பாட்டுக்கு தப்பாத தாளமாகிக் கொண்டிருந்தான். ஆனாலும் அவர் லூட்டியை அவனால் தாள முடியவில்லை. நரை முடியில் மை தொங்க, கழுத்தில் பணம் கட்டிய தாலி போன்ற மைனர் செயின் தொங்க, மேலுதட்டின் மேலே டிரிம் செய்யப்பட்ட மீசை மின்ன, அட்டகாசப்

பட்டுக் கொண்டிருந்த அவரை, அவனால் போகச் சொல்ல முடியவில்லை.

எப்படி முடியும்?

அண்ணனையும், தன்னையும் 'ஏஸி' வைத்த பட்டுக் காரில் நாகர்கோவிலுக்குக் கூட்டிக் கொண்டு போனவர். 'அந்த' பெரிய போலீஸ் அதிகாரியைப் பார்த்து, அவன் விவகாரத்தைச் சொன்னபோது, அதற்கு "ஒனக்காக நான் மாட்டிக்க முடியுமா? மொதல்ல பொலிடிக்கலாய் ஏதாவது செய். அப்புறம் அபிஷியலாய் செய்யுறதைப் பற்றி யோசிக்கலாம்" என்று அந்த அதிகாரி பதிலளித்த போது, தன்னையும் தமையனையும் பல அரசியல்வாதிகளிடம் அழைத்துச் சென்றவர். அவர்கள் கேட்ட டொனேஷன்களை அள்ளிக் கொடுத்தவர். எஸ்டேட்டில் ஆயிரக்கணக்கான ரூபாயில் 'காக்டெய்ல்' காட்டி, அரசியல் வாதிகளை அதில் முக்கி, தன் கட்சியை அவர்களிடம் எடுத்துரைத்தவர். அர்ச்சுனனுக்குக் கண்ணன் தேரோட்டியதுபோல் தனக்காக சொந்த ஊருக்கே காரோட்டியவர். அப்படிப்பட்ட 'நல்ல' மனிதரை எப்படிப் போகச்சொல்வது? அண்ணனை ஜெயிலுக்குப் போக விடாமல் செய்தவரை, எப்படிப் போகச் சொல்ல முடியும்? மனிதனுக்கு நன்றி வேண்டும். அந்த நன்றி, கடமைக்கு துரோகமாய் ஆகக்கூடாதா? எவன்யா சொன்னான்? கொண்டுவா... லாக்கப்ல... போடுறேன்... பார்...

"நன்றியுள்ள தாமோதரனால் பூமிநாதனை போகச் சொல்லவும் முடியவில்லை. அவரோடு சேர்ந்து இருக்கவும் முடியவில்லை... அவன்பாட்டுக்கு தலையாட்டிக் கொண்டிருந்தான். பூமிநாதனே அவனை உரிமையோடு கண்டித்தார்.

"என்ன சார், நான்பாட்டுக்குப் பேசுறேன், நீங்க பாட்டுக்கு தலையை ஆட்டுறீங்க. எதுல விட்டேன்? சொல்லுங்க பார்க்கலாம்!"

"ஓ அதுவா? மாடக்கண்ணுவ கிணத்துல விட்டாங்க; கலாவதியை சூட்ல விட்டாங்க; என்னை எங்கேயோ விட்டாங்க..."

பூமிநாதன், அதிர்ந்து போய் அவனைப் பார்த்தார். உற்றுப் பார்த்தார். அவனோ, அவர் பார்ப்பதைப் பார்க்காமல், தனக்குள்ளேயே தன்னையே பார்த்துக் கொண்டிருந்தான். அடப் பாவி, எஸ்டேட் பசங்க இன்னிக்கு ஸ்டேஷனுக்கு வந்து நியாயம் கேட்கப் போறுங்களாம். அதைச் சொல்றதுக்காக வந்தேன். அதுக்குள்ளே இவன் இப்படி ஆயிட்டானே.

பூமிநாதன். அங்கிருந்தபடியே, "பொன்னுச்சாமி! பொன்னுச்சாமி!" என்று ஏலம் போட்டார். எஸ். பி. மாதிரி அதட்டிக் கூப்பிட்டார். உடனே, ரைட்டரிடம் ஏதோ வாதிட்டுக் கொண்டோ, வைதுகொண்டோ நின்ற பொன்னுச்சாமி, ஓடோடிவந்தார். விறைப்பாய் ஒரு சலூட் அடித்தார். அது, சப்-இன்ஸ்பெக்டர் தாமோதரனுக்கா, எஸ்டேட் முதலாளி பூமிநாதனுக்கா என்பது தெரியவில்லை. பூமிநாதன் வாய் திறந்தார்.

"பொன்னுச்சாமி! என் எஸ்டேட்ல நடந்த தற்கொலை விஷயமாய் எஸ்டேட் பசங்க ஒங்க ஸ்டேஷனுக்கு வாராங்களாம். காதுல போட்டுட்டேன். இனிமேல் கம்புலயோ, துப்பாக்கியிலயோ போடுறது ஒங்க பொறுப்பு. ஒங்க அய்யாவுக்கு ஊர் விஷயத்துல மூளையில விஷம் பாஞ்சுட்டு. அவரைக் குழப்பாதீங்க. ஒங்களால செய்ய முடியுறதை யெல்லாம் செய்யுங்க."

ஏட்டு பொன்னுச்சாமி, தாமோதரனைப் பார்த்தார். வெளியே இருந்த ரைட்டரைப் பார்த்தார். பிறகு கிசு கிசு குரலில் "எங்க சப்-இன்ஸ்பெக்டர் அய்யா ஒரு வார்த்தை சொல்லட்டும், ஒங்களுக்கு எவன் எவன்லாம் எதிரியோ, அவன்களை வெட்டாம்பட்டி கொலை கேஸ்ல சிக்க

வச்சுடுறேன். ஆனால், அய்யா ஒரு வார்த்தை சரின்னு சொல்லணும்.''

பூமிநாதன், சப்-இன்ஸ்பெக்டர் பொறுப்பை மேற் கொண்டார்.

''என்னய்யா பேசுறீங்க பேச்சு? தாமு தம்பி சும்மா இருக்கதுல இருந்து, ஒங்களுக்கு முழு அதிகாரம் கொடுத் திட்டார்னு அர்த்தம் ஆகலியா? இதுக்குமேல எழுதிக் கொடுப்பாராக்கும்? தாமோதரன் சார், ஒங்க கிட்ட இந்த ஏட்டையா எவ்வளவு விசுவாசமாய் இருக்கார் பாருங்க. ஒரு வார்த்தை நீங்களும் சொல்றது! ஒங்களத்தான் சார்!''

தாமோதரன் மோவாயைத் தடவியபடியே ''ஆங்... ஆமா...அப்படித்தான் செய்யணும்'' என்றான். பொன்னுச் சாமி, தாமோதரனை மோவாயில சுட்டிக் காட்டி, பூமிநாதனிடம் கண்ணடித்து விட்டு ரைட்டரிடம் போனார்.

சிறிது நேரத்தில், பூமிநாதன் புறப்பட்டார். தாமோதரன் நாற்காலியில் மல்லாந்து கிடந்தபடி, அவருக்கு அரைகுறை கண்களை நிமிர்த்தி குலுக்கி வழி யனுப்பினான். பிறகு அப்படியே சாய்ந்தான். அந்த நாற்காலி தேர் போலவும், அவன் பிணம் போலவும் கிடந்தான்.

எவ்வளவு நேரமோ அவனுக்குத் தெரியாது. பயங் கரமான சத்த பரிவர்த்தனை கேட்டு கண் விழித்தான். உடம்பை நிமிர்த்தாமலே, வெளியே பார்த்தான். ரைட்டர் சபாஸ்டினும், ஏட்டு பொன்னுச்சாமியும், ஒருவரை ஒருவர் அடிக்காத குறையாக கத்திக் கொண் டிருந்தார்கள். தாமோதரன், எதுவுமே நடக்காதது போல் எழுந்து, அவர்களிடம் போய் மவுனமாக நின்றான். ரைட்டர் அவனை தார்மீகக் கோபத்தோடு சாடினார்.

''இந்த ஸ்டேஷனுக்கு நீங்க இன்சார்ஜா, இல்ல எனக்கும் ஜூனியரான இந்த பொன்னுச்சாமியா சார்?

வெட்டாம்பட்டி கொலை கேஸ்ல வெட்டுனவனையும், வெட்டுப்பட்டவனையும் பார்த்தவங்க, மூணு பேர் பெயருங்களைத்தான் கொடுத்தாங்க. இந்த மனுஷன், 'அடையாளம் தெரியாத-ஆனால் நேரில் பார்த்தால் காட்டக்கூடிய-நாலைஞ்சு பேரும் 'கொலை செய்தாங்கன்'னு எப். ஐ. ஆர்ல சேர்த்துக்கச் சொல்றார். இந்த மாதிரி பிளாக் மெயில் மற்ற ஸ்டேஷன்கள்ல நடக்கலாம். ஆனால் நம்ம ஸ்டேஷன்ல எதுக்காக சார் நடக்கணும்? அப்படி அடையாளம் தெரியாத நபர் யாராவது கொலையில சம்பந்தப்பட்டிருந்தால், அது இந்த பொன்னுச்சாமியாய் தான் இருக்கும்.''

ஏட்டு பொன்னுச்சாமி, ரைட்டரை வன்முறை அங்கலாவயங்களோடு அணுகினார். உடனே ரைட்டரும் எழுந்தார். ஆங்காங்கே, துப்பாக்கிகளை துடைத்துக் கொண்டிருந்த இதர போலீஸ்காரர்கள், அங்கே தடதட வென்ற சத்தத்தோடு ஓடி வந்தார்கள். ரைட்டருக்கும், ஏட்டுக்கும் தடியடியில்லாத வாயடிகள். அம்மாக்களை யும், அக்காக்களையும் கூட வாய் வழியாக இழுக்கப் போனார்கள். ஒரு காலத்தில் — ஒரு காலத்தில் என்ன காலத்தில், இரண்டு வாரங்களுக்கு முன்பு வரை அவனைப் பார்த்ததும், கட்டுண்டு நிற்கும் அந்த இருவரும், இப்போது அவன் முன்னாலேயே மல்கட்டப் போனார்கள்.

அவனோ தனது 'ஸ்டேட்டஸ்' போனதை உணராத வனாய் அவர்களை நோக்கினான். பிறகு தலைக்குமேல் கைகளை கொண்டுபோய் கும்பிட்டான். அதைப் பார்த்த ரைட்டருக்கு, இதயம் வெடிப்பது போலிருந்தது. இந்த ஆபீஸர் எப்படிப் போயிட்டார். உடம்பு மாறியது மாதிரி, போக்கும் எப்படி மாறிட்டு. என்னால் இவருக்கு சிரமம் வரப்படாது. இவரால் நியாயத்திற்கு சிரமம் வரப்படாது. பரம பிதாவே! தேவகுமரா! பார்த்துக் கொள்ளுங்கள், பார்த்துக் கொள்ளுங்கள்.''

ரைட்டர் சபாஸ்டின் வெளியே ஓடியதும், தாமோதர னும் தனது அறைக்குள் வந்தான். எந்தத் தாக்கு தலுக்கும் இலக்காகாத தூரத்திற்குப் போய் விட்டவன் போல் வந்தான். இந்த பொன்னுச்சாமி அதிகார நடனம் ஆடுவது அவனுக்கு லேசாய் புரிந்தது. என்ன செய்ய? பொன்னுச்சாமி இல்லையானால் பூமிநாதன் வந்திருக்க மாட்டார். பூமிநாதன் வராவிட்டால், அண்ணன் போக வேண்டிய இடத்திற்குப் போயிருப்பான். நல்லவர்களுக்கு, கெட்டவர்களே பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய காலம் இது. ஒரு நேர்மைவானின் தர்மத்தை, அதர்மவான்களே விசாரிக்க வேண்டிய காலம் இது. கலாவதி, என்னை மன்னிச்சுடும்மா! ஒனக்கு போடப்பட்ட சூடு ஒன்னோட மட்டும் முடியலம்மா, அது என்னையும் சுட்டு, இந்த போலீஸ் நிலையத்தையும் சுடுதம்மா. என் காதலையும் எரிச்சுட்டும்மா. ஒன் அப்பாவையும், ஒன்னையும் நாங்க அடிக்க வச்சபோது, தமிழரசி மேலதிகாரியிடம் போகப் போன போது 'தாமுத்தான் என்னால கஷ்டப்படப்படா துன்னு' சொன்னியே...அதை நான் மறக்கலாமா? மறக்க லம்மா!'

நெற்றி நெளிய, விழி பிதுங்க, தானாய் புலம்பிக் கொண்டிருந்த தாமோதரன், 'சார்' என்ற சத்தம் கேட்டு, வாயை மூடி, கண்களைத் திறந்தான். நான்கைந்து எஸ்டேட் தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள்- ஏற்கனவே ஓரளவு அறிமுகமானவர்கள்தான் - ஆனால் இப்போது அவர்கள் சரியாகத் தெரியவில்லை.

''நீங்க யாருங்க?''

''மார்த்தாண்டன் கொலையை மறந்தது மாதிரி... எங்களையும் மறந்துட்டீங்க சார்.''

''ஓ, நீங்களா? உட்காருங்க.''

''நாங்க உட்கார வர்ல. நீங்க எங்களை உட்கார வச்சு, அநியாயம் வழங்குறதை விட, நிற்க வச்சே நியாயம் வழங்கினால், அதுவே போதும். பூமிநாதன் எஸ்டேட்ல,

எங்க தோழனை முதலாளியும், அடியாட்களுமாய் சேர்ந்து கொலை செய்துட்டாங்கன்னும், ஏட்டு பொன்னுச்சாமி அதை மழுப்பிட்டாருன்னும் சொன்னோம். என்ன ஆக்ஷன் எடுத்தீங்கன்னு கேட்கிறதுக்கு வந்தோம்.''

''ஆக்ஷனு? ஆமா, ஆக்ஷன் எடுத்தேன். அது கொலையில்ல, தற்கொலை. போஸ்ட் மார்ட்டம்-அதுதான் டாக்டர் ரிப்போர்ட்லயும் கொலைன்னு சொல்லல.''

''டாக்டர் ரிப்போர்ட்டைப்பற்றி எங்களுக்குத் தெரியாதா சார்? போலீஸ் சொல்றபடி டாக்டருங்க ரிப்போர்ட் கொடுக்காட்டால், அவங்க வீட்ல கல்லு விழும். பொறுக்கிப் பசங்க வம்புச் சண்டைக்குப் போவாங்க. அந்தக் கதை பெரிய கதை. அது இப்போ வேண்டாம். இப்போ, எங்களுக்கும் சில விவரம் கிடைச்சிருக்கு. பூமிநாதன் எஸ்டேட்ல, எங்கள் தோழன் மார்த்தாண்டன் தொழிலாளர் சங்கம் துவக்குறதுக்குப் போயிருக்கான். பூமிநாதன் சொல்லிப் பார்த்தும் அவன் கேட்கல அதனுல, பகலுல அவனை சாகடிச்சுட்டு, ராத்திரில மரத்துல தொங்கப் போட்டுட்டாங்க. மனச்சாட்சிக்குப் பயந்த பூமிநாதனின் வீட்டு வேலைக்காரப் பையன், எங்ககிட்டே வந்து அழுதுட்டு, இப்போ...எங்க கூடயே இருக்கான்.''

தாமோதரன், பேச முடியாத குரலில் பேசினுன்:

''இது ஒங்களோட வெர்ஷன். நான் நல்லாத்தான் விசாரிச்சேன். அது சூயிசைட் தான்.''

''எப்போ விசாரிச்சீங்க? பூமிநாதன் ஒங்களை நாகர் கோவிலுக்கு கார்ல ஏற்றிக்கிட்டுப் போகும்போதா, அல்லது ஒங்க ஊருக்கு கூட்டிகிட்டுப் போகும்போதா? இல்ல அவர் எஸ்டேட்ல நடந்த காக்டெயில் பார்ட்டியிலயா? எப்போ விசாரிச்சீங்க.''

தாமோதரன், தமிழரசி போல் துடித்தான். கலாவதி போல் மருண்டான். மாடக்கண்ணுபோல்

நிர்க்கதி பார்வையை நிலைநாட்டினான். பேச வாயற்று, பார்க்க கண்ணற்று, கேட்க காதற்றுப் போனவன் போல் அவன் அவர்களைப் பார்க்கும் தோரணையோடு எதையோ பார்த்தான். தொழிலாளர் தலைவர்கள், அவன் பதிலை எதிர்பார்த்துக் காத்து நின்றார்கள். அது கிடைக்காததால் ஒருவர், "எஸ். பி. ஆபிசும் எங்களுக்குத் தெரியும். மறியல், ஆர்ப்பாட்டமும் எங்களுக்குப் புதுசில்ல" என்றார்.

தாமோதரனும், தொழிலாளர் தலைவர்களும், எதிரும் புதிருமாய் விழித்துக் கொண்டிருந்த போது, திடீரென்று ஏட்டுப் பொன்னுச்சாமி, கையில் லத்திக்கம்போடு உள்ளே வந்து, தாமுவின் அருகே போய் நின்று கொண்டார். கையில் உருண்டைக்கம்பை உருட்டி, கண்களில் விழிகளையும் உருட்டி வாய்வழியாய் முரட்டுச் சொற்களை ஏவி விட்டார்.

"என்னடா ஒங்க மனசுல நினைச்சீங்க? பொறுக்கிப் பசங்களா! இது போலீஸ் ஸ்டேஷனா, ஒப்பன் வீடா? ஒரு போலீஸ் ஆபீசர் கிட்டே, இந்த அளவுக்கு மரியாதை இல்லாம பேசுற அளவுக்கு ஒங்களுக்குத் தைரியம் வந்துட்டா? பெண்டாட்டி கிட்டே சண்டை போட்டுட்டு, அவள் சோரம் போனாளோ, பேரம் போனாளோ யார் கண்டாங்க? அவள் கிட்ட வாழப் பிடிக்காமல் தூக்குப் போட்டு செத்த லூசுப் பயலுக்காக, ஏண்டா பைத்தியக் காரங்க மாதிரி வந்து எங்க பிராணனை எடுக்கிறீங்க? செத்துப் போனவன் பெண்டாட்டியே ஜாலியா இருக்கும் போது, ஒங்களுக்கு என்னடா வந்தது? ஒங்களை உள்ளே தள்ளினால்தான் புத்தி வரும். இந்தாப்பா பை நாட் செவன்..."

தொழிலாளர் பிரதிநிதி ஒருவர் ஏதோ சொல்லப் போன போது, தலைவர் போல் தோன்றிய ஒருவர், அவரை அடக்கினார். தாமோதரன், ஏட்டை அடக்குவார் என்று எதிர்பார்த்து, அவனையே பார்த்தார். அவனோ, அடங்கிப்

போய் கிடந்தான். வாய் செத்துப் பார்த்தான். அவனுக்கு எல்லோருமே கோடுகோடுகளாய்த் தெரிந்தன. மங்கிய நிஜங்களாக, கசங்கிய நிழல்களாகத் தெரிந்தன.

தொழிலாளர் தலைவர், தன் தோழர்களைப் பிடித்திழுத்தபடி, மவுனமாக வெளியேறினார். அவர்கள் போவதையே பார்த்த ஏட்டு பொன்னுச்சாமி, எகிறினார்:

"எல்லாம் நீங்கள் கொடுக்கிற இளக்காரம் சார். ஒரு வார்த்தை சொல்லியிருந்தீங்கன்னு, உள்ளே போட்டிருப்பேன். இதுக்குத்தான் அந்த ரைட்டர் கிட்டே அப்பவே சொன்னேன், வெட்டாம்பட்டி கொலை கேஸ்ல 'அடையாளம் தெரியாத—ஆனால் நேரில் காட்டக்கூடிய' என்கிற வரியை எழுதியே ஆகணும்; அப்போதுதான், இப்போ வந்துட்டுப் போன பசங்கள பிடிச்சிட்டு வந்து 'பாரேட்' பண்ணலாம்; பண்ணணும்."

தாமோதரன், பேசுபவர் தெரியாமல், பேசுவதும் புரியாமல் அப்படியே கிடந்தான். ஏட்டுப் பொன்னுச்சாமி, அவனை இளக்காரமாகப் பார்த்தபடியே, ரைட்டரை நோக்கிப் போனார்.

இருவருக்கும் இடையே பயங்கரமான சத்தம். 'நீ ஆயிரம் சொன்னாலும் நான் அப்படி எழுத மாட்டேன்' என்றும், 'ஒன்னை எழுத வைக்காமல் விடமாட்டேன்' என்றும் ஏட்டின் சவால்; ரைட்டரின் எதிர் சவால்.

தாமோதரனோ, சவலை மனிதனாகக் கிடந்தான்.

ஒரு மணி நேரம் ஓடியிருக்கும்.

பலத்த சத்தம் கேட்டு, ரைட்டரும், பொன்னுச்சாமியும் பதறியடித்து வெளியே ஓடினார்கள். ஏட்டு பொன்னுச்சாமி, ஓடிய வேகத்திலேயே திரும்பினார். நாற்காலியில் தொங்குவது போல் கிடந்த தாமோதரனை உலுக்கிய படியே கதறினார். முரடனுக்குப் பயம் வந்தால் எப்படி இருக்கும் என்பதைக் காட்டுவதுபோல் பேசினார்.

"சார், சார்! எஸ்டேட் தொழிலாளிங்க திரண்டு வாராங்க. முந்நூறு பேருக்கு மேல வாராங்க. துப்பாக்கிப் பிரயோகம் செய்யாமல், நாம் தப்பிக்க முடியாது."

# 21

மரித்தது போல் காட்சி தந்த அந்தப் பகுதி உயிர்த்தெழுந்தது போல் தோன்றியது. சுற்றுப்புறத் தென்னை மரங்களும், புன்னை மரங்களும் இவற்றின் இடையிடையே அப்பிக் கிடந்த ஆயிரமாயிரம் செடிகளையும் மீறி, தலை வாசல்களில் பல தலைகள் தென்பட்டன. ஒருவரை ஒருவர், வினுக்குறியோடு பார்த்தபடி, விடை தேடுபவர்கள்போல் பலர் ஆண்களும், பெண்களுமாய், காவல் நிலையம் அருகே வந்து சாலையைப் பார்த்தார்கள். பழையபடியும் அந்த 'மண்டைக் காடு'தான் வந்து விட்டதோ என்று சந்தேகப் பட்டு, பலர், சிலம்புக் கம்புகளையும், மீன் முள்களையும் எடுப்பதற்காகத் திரும்பப் போனுர்கள். அதற்குள் தூரத்தே கேட்ட இடிமுழக்கம், திரும்பியவர்களை திரும்ப வைத்தது. பிரிந்தவர்களைப் பிணைத்தது. அது புதியவகை ஒலி முழக்கம். வேறுவகை சத்தம்.

"ஒழிக... ஒழிக .. போலீஸ் பாரபட்சம் ஒழிக."

"வாழ்க... வாழ்க... தொழிலாளர் ஒற்றுமை வாழ்க."

"காவல் துறையே, காவல் துறையே, பட்டப் பகல் கொலை ஒன் பார்வையில் படவில்லையா?"

சுமார் முந்நூறு தொழிலாளர்கள், மேற்கு திசையில் இருந்து கிழக்கு நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். நீண்ட கொடி பிடித்து, நெடிதுயர்ந்த இரண்டு ஆண்கள், ராணுவ வீரர்கள் போல், காலெடுப்பும், கால் வைப்பும் பார்ப்பவர்கள் பார்வையில் துலக்கமாய் தெரியும்படி நடை போட, அவர்களுக்கு மத்தியில் முப்பது வயதுப்

பெண் ஒருத்தி, கால்களில் கண்ணீர்பட, நெஞ்சினில் சோகம்படிய, தரை பார்த்த கண்ணீராய், செயலற்ற பெண்ணீராய் வந்து கொண்டிருந்தாள். அவளின் இயலாமை நடைக்கு ஏற்றுற்போல், ஆடவர் இருவரும், பாத வேகத்தைக் குறைத்தபடியும், கூட்டியபடியும் நடந்தார்கள்.

இந்த மூவர் முகப்பிற்குப் பின்னல் ஆண்களென்றே பெண்களென்றே லேசில் அடையாளம் பிரிக்க முடியாத இரண்டறக் கலந்த மனிதக் கூட்டம் அலையலையாய் வந்தது. எஸ்டேட்களில் இருந்து அப்போதுதான் வேலை முடிந்தவர்களாய் தோன்றினர்கள். சில தலைகளில் தேயிலைகள்; சிலவற்றில் துடைத்தாலும் போகாத பிசின்கள். பழுப் பேறிய உடையோடு, முறுக்கேறிய நடையோடு, படபடத்த முகத்தோடு, கலவரக் கண்களோடு காலெடுத்து வைத் தார்கள். ஒவ்வொருவர் வீட்டிலும் ஏதோ ஒரு துக்கம் நடைபெற்று விட்டது போலவும், அதைத் துடைக்க நினைத் தவர்கள் போன்ற துயர நடை. ஒரே மாதிரி சிந்தித்து, ஒரே மாதிரி செயல் படுவது போன்ற தோரணை நடை.

அவர்களின் நிற்காத நடையும், நிறுத்தாத கோஷங் களும், அங்குள்ள தாவர வளாகத்திற்கு புதிய அர்த்தத் தைக் கொடுத்தன. ஒன்றேடொன்றுய் உரசிக் கொண் டிருந்த தெங்கும், பாக்கும் தோழமை பேசுவதுபோல் தோன்றின. கரையோர கருவேல மரங்கள், கொதித்த உள்ளங்களின் கரங்களாய்த் தோன்றின எங்கிருந்தோ வீசிய காற்றை, அங்குள்ள மரங்களும் புதர்களும் மற்று முள்ள தாவரங்கள் ஒன்றுபட்டு உட்புக முடியாதபடி செய்யப்போவது போன்ற தோற்றம். மரங்களில் கூடிக் குலாவி, இப்போது ஆகாயத்தை வட்டமடித்த பறவை யினக்குரல், புதிய பாசறையின் முரசொலி போல் ஒலித்தது.

எந்த போலீஸ் அதிகாரியும் இந்த மாதிரி சந்தர்ப் பத்தில் எப்படி ஆணையிடுவாரோ, அப்படித்தான் தாமோ

தரனும் ஆணையிடுவான் என்று எல்லாப் போலீஸ்காரர்களும் அனுமானித்து சப்-இன்ஸ்பெக்டரிடம் கேளாமலே அவர்களாகவே ஆயுதங்களை எடுத்துக் கொண்டு வீதிக்கு வந்தார்கள். தாமோதரன் கடைசியில் வந்து அவர்களுக்கு முதலாவதாக நின்றான். அவன் கையிலும் ஒரு துப்பாக்கி. எவர்களை 'பாரேட்' செய்ய வேண்டும் என்று நினைத்தாரோ, அவர்கள் தலைமையில் தொழிலாளர்கள் 'பாரேட்' செய்வதைப் பார்த்த ஏட்டு பொன்னுச்சாமி எகிற முடியாமல் நின்றார். தொழிலாளர் கூட்டத்தின் வருகையை சந்திக்கத் தயாரானவர்கள் போல் எல்லாப் போலீஸ்காரர்களும் சாலையின் குறுக்கே மனிதச் சுவராகவும், அந்த மனித வேலியின் முள்கம்பிகள் போல் உயர்ந்து நின்ற துப்பாக்கிகளுமாய் தரிசனம் தந்த போது—

தொழிலாளர் கூட்டம், சிறிது நின்றது. ஒருசிலர் ஓடத்தான் செய்தார்கள். ஆனாலும் பெரும்பாலான தொழிலாளர்கள், "பாட்டாளி வர்க்கம் ஜிந்தா பாத்...... ஜிந்தா பாத்" என்று முழக்க மிட்டார்கள். உத்வேகக் குரலோடு, போலீசாரை எதிர் நோக்கி, மார்புகளை நிமிர்த்திய படியே முன்னேறினார்கள்.

ஊர்வலத்தின் நடுவில் நின்ற பெண்களும், "பூமிநாதன் எங்கள் தோழனைக் கொன்னது மாதிரி, நீங்களும் வேணுமானால் எங்களை சுட்டுத்தள்ளி, ஒங்க ரத்த தாகத்தைத் தீர்த்துக் கொள்ளுங்கடா!" என்று சிதறி, முன்னேறப் போனார்கள். பலர், அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள்.

ஏதாவது ஒரு நிகழ்ச்சி நடைபெறுவதற்கு, நீண்ட காலக் காரணங்கள், உடனடிக் காரணங்கள் என்று இரண்டு வகைக் காரியக் காரணங்கள் உண்டு. ஏற்கனவே சூடுபட்ட கலாவதி தன் நெஞ்சிலும், ஆன்மாவிலும் ஆவிபறக்கும் அனல் கங்கை ஊதிக் கொண்டிருக்கும் சித்ரவதையில் கரிந்து கொண்டிருந்த தாமோதரன், ஊர்வலத்தின்

முகப்புத் திலகம் போல் வந்த அந்த பெண்ணைப் பார்த்தான். அவள் யாராய் இருக்கும் என்று அனுமானித்துக் கொண்டான். விழுந்த தலை போன்ற கவிழ்ந்த முகம்; வெட்டுண்டு துடிப்பது போன்ற கால் கைகள்; பூவரசம் பூ நிறம். பொங்கிய கண்ணீரை புறங் கையால் துடைக்கும் கோலம். அவளைப் பார்க்கப் பார்க்க தாமோதரனுக்குள், ஒரு புதிய உருவம் உருவாகிக் கொண்டிருந்தது.

திடீரென்று, அந்தப் பெண், போலீஸாருக்கு முதுகைக் காட்டி, கொந்தளித்த கூட்டத்திடம் முகத்தைக் காட்டி ''எனக்காக நீங்க ரத்தம் சிந்தப் படாது. செத்தவர் வரப் போறதில்ல. பூமிநாதனுக்கும், அவனுக்கு உடந்தையாய் இருந்த அத்தனை பேருக்கும் ஆண்டவன் கூலி கொடுப்பான். நீங்கள் ஓடுங்க. போலீஸ்காரன் சுடு முன்னால போயிடுங்க,'' என்று கத்தினாள்.

பிறகு, மீண்டும் உடம்பைத் திருப்பி, போலீஸை நோக்கி, பத்தடி வேகமாக நடந்து, ''போலீஸ் துரைமாரே, பிரிஞ்ச குடும்பத்தையும் நீங்க சேர்த்து வைக்கிறதாய் பேப்பர்ல படிச்சேன். அது உண்மைன்னால், என்னையும் என் புருஷனோட சேர்த்து வைங்க. என்னையும் அவர் போன இடத்துக்கு அனுப்பி வையுங்க. உம், சுடுங்கடா! என்னை சுடுங்கடா! சுட்டுத் தொலைங்கடா!'' என்று ஒப்பாரியிட்டாள்.

தாமோதரன், அவளைப் பார்த்தபடியே நின்றான். அவளுள் நியாயம் கேட்ட தமிழரசியையும், சூடுபட்ட கலாவதியையும் பார்த்தான். ஏற்கனவே இதயத்தைக் கனக்க வைத்த குற்றச் சுமை, கொடூரச் சுமையானது. அதை இறக்கி வைக்க இடந்தேடிப் பார்த்தான். ஐந்து நிமிடம் வரை, ஆடாது, அசையாது நின்றான். இறுதியில், இடங்கண்ட உறுதியில், தான் செய்ய வேண்டியதை இனங் கண்ட பெருமிதத்தில், போலீஸ்காரர்களைப் பார்த்து,

''உம்...எல்லாரும் ஸ்டேஷனுக்குப் போங்க. இது எனக்கும், இவங்களுக்கும் மட்டும் இடையே உள்ள பிரச்சனை. உம், போங்க'' என்றான்.

இதர போலீஸ்காரர்கள் தயங்கியபோது, ஏட்டு பொன்னுச்சாமி ஏதோ பேசப் போனார். உடனே தாமு ''கோ மேன் ஐ சே...ஒபேய் மை ஆர்டர்...'' என்று கூட்டத்தின் ஒட்டு மொத்தக் குரல் அளவிற்குக் கத்தினான். அவனால் பிரச்சனையை சமாளிக்க முடியும் என்று அவன் முகத்தைப் பார்த்த ரைட்டர் புரிந்து கொண்டார். அவர், கண்களால் சைகை செய்ய, பொன்னுச்சாமி உட்பட எல்லா போலீஸ்காரர்களும், காவல் நிலையத்திற்குள் போகவில்லை யானாலும், மேட்டோரம் போய் நின்றபடி, துப்பாக்கிகளை தொங்கப் போட்டார்கள்.

தாமோதரன், கூட்டத்தை நோக்கி நடந்தான். அவன் கண்கள் எவளைப் பார்க்கக் கூடாது என்று நினைத்ததோ, அவளையே வலம் வந்தது. காக்கி யூனிபாரம் போட்டிருந்த தாலோ என்னவோ அதட்டலோடு ஆணைக் குரலில் பேசினான்.

''மொதல்ல டிராபிற்கு இடைஞ்சல் இல்லாமல் ஒரு ஓரமாய் வாங்க. பெர்மிஷன் இல்லாமல் ஊர்வலமாய் வாரது, சட்டப்படி குற்றமின்னு தெரியாதா? அது கிடக்கட்டும். மொதல்ல ஓரமாய் நில்லுங்க.''

கூட்டம், அவனுள் ஒலித்த அந்தரங்க ஆத்மாவை புரிந்தது போல ஒதுங்கியது. இதனால் கூட்டத்தினரின் அகலம் பாதியாகக் குறைந்து, நீளத்தில் கால்வாசி கூடியது. தாமோதரன், அவர்களை நெருங்கிப் போய் நின்றபடி ''என்ன விஷயம்?'' என்றான் அதட்டலோடு.

தொழிலாளர் தலைவர்கள், அவன் முன்னால் வந்தார்கள். எத்தனையோ அடக்குமுறைகளைக் கண்ணால் கண்டதுடன், அனுபவித்தவர் போலவும் தோன்றிய•முன்பு

அவரிடம் வந்த அதே அந்தத் தலைவர் நிதானமாக, அழுத்தமாகப் பேசினார்.

"இந்தம்மா கொலை செய்யப்பட்ட எங்கள் தோழன் மார்த்தாண்டத்தின் மனைவி. எஸ்டேட் முதலாளி பூமிநாதன் மேற்பார்வையில்..."

"ஒன் மினிட். ரைட்டர் .. பிளீஸ்... கம்!"

ரைட்டர், வந்தார்.

"இவங்க சொல்றதுல கொலை சம்பந்தப்பட்ட தகவல்களை எழுதுங்க. ஒங்க பேரு?"

"வைத்திலிங்கம்!"

"உம், சொல்ல வேண்டியதைச் சொல்லுங்க."

"எங்கள் தோழன் மார்த்தாண்டன், பூமிநாதன் எஸ்டேட்ல கொத்தடிமைகளைவிட மோசமாய் நடத்தப்பட்ட சகோதர சகோதரிகளை ஒன்று திரட்டி சங்கம் அமைக்கப் போனன். பூமிநாதன் சொல்லிப் பார்த்தார். பதவி உயர்வாலும், பணத்தாலும் வலை விரித்தார். மார்த்தாண்டன் கேட்கல. சம்பவம் நடந்த நாளில், மத்தியான வேளையில், எஸ்டேட் பேக்டரில தன்னந்தனியாய் எதையோ கழுவிக் கொண்டிருந்த மார்த்தாண்டத்தை பூமிநாதன், தன் தனியறைக்குக் கூப்பிட்டார். அவன் போனன். உடனே வாக்குவாதம் ஏற்பட்டிருக்கு. இதையடுத்து பூமிநாதனோட மேற்பார்வையில், அவரோட கையாட்கள் உள்ளறையில் இருந்து வெளிப்பட்டிருக்காங்க. மார்த்தாண்டனைக் குப்புறத்தள்ளி, அவனோட முகத்துலயும், பிடறியிலயும் இரண்டு தலையணைகளை வைத்து மூச்சை அடக்கி, உயிரையும் அடக்கிட்டாங்க. பகல் முழுவதும் பிணத்தை அங்கேயே வச்சுட்டு, ராத்திரியில் மரத்துல கயிற்றைக் கட்டி தொங்கப் போட்டுட்டார்."

"மறுநாள், பூமிநாதன் அனுப்புன கார்லயே ஏட்டு பொன்னுச்சாமி விசாரிக்கப் போனர். அதுக்கு முன்னதாக,

நானே டெலிபோனில் விவரம் சொல்லிட்டு, அப்புறம் எழுத்து மூலம் புகாரும் கொடுத்தேன். என் புகார் மீது எப். ஐ. ஆர். ல எழுதுனதுக்கான ஸ்லிப் எனக்கு இன்னும் வர்ல. குற்ற விசாரணையில் என்குயரி... இன்குயரி... இன்வெஸ்டிகேஷன்... அதுதான் பெரிய விசாரணே, உள்விசாரணே, புலன் விசாரணேன்னு மூன்று உண்டு. எதுவுமே நடத்தப்படல. எவிடென்ஸ் கொடுக்கப் போன எங்களேயும்... அப்போ... பொன்னுச்சாமி ஒரு பொருட்டாய் நினேக்கல. உள் விசாரணேயை அவர் ஒழுங்காய் செய்திருந்தால், கொலேக்குப் பயன்படுத்தப்பட்ட தலேயணேகளேக் கைப்பற்றி இருக்கணும். மருத்துவ பரிசோதனேயில் ஓ. பி., அட்மிஷன், இன்குஸ்ட் மூன்றையும் கேட்டிருக்கணும். தடயங்களேயும், சாட்சிகளேயும் கலேக்காமல் இருக்க, பூமிநாதனேயும், அவருடைய அடியாட்களேயும் கைது செய்திருக்கணும். அதற்குமாருய் நீங்க—அதாவது சப்-இன்ஸ்பெக்டர் தாமோதரன்—பூமிநாதனுடன் கார்ல பறக்கார். அவருக்கு குட்டாம்பட்டியில பட்ட அடி, இந்த போலீஸ் நிலேயத்தில் நெறியாய் கட்டுது. எங்களே ஏட்டு பொன்னுச்சாமி ஆபாசமாய் திட்டுருர். எங்கள் தோழன் மனேவியை மாசுபடுத்துருர். ஆகையால் இன்று எங்களுக்கு துக்க நாள். இரண்டு பேரைப் பறிகொடுத்ததைத் அனுஷ்டிக்கிற நாள். எங்கள் தோழன் மார்த்தாண்டமும், நாங்கள் நேசித்த சப்-இன்ஸ்பெக்டர் தாமோதரனும் செத்துப் போனதையும், அவர்கள் செத்ததுக்கான காரணங்களேச் சொல்லவும். எஸ். பி. அலுவலகத்தைப் பார்த்துப் போருேம். இந்த போலீஸ் நிலேயத்தைத் தாக்குறதுக்காக வர்ல. எங்கள் கரங்களில் ஆயுதங்கள் இல்லாததே இதற்கு சாட்சி. தடுத்தால் மீறுவோம்.''

தாமோதரனும், தொழிலாளர் தலேவரும், நேருக்கு நேராய் பார்த்துக் கொண்டார்கள். பிறகு, தாமோதரன் கண்களேத் தாழ்த்தியபடி, ''நீங்க சொல்லுங்கம்மா''

என்று வேலம்மாவைப் பார்த்துக் கேட்டான். அதற்குள் அவன் வெல வெலத்தான்.

வேலம்மா, அவன் சொன்னது கேட்காததுபோல், தொலை நோக்காகப் பார்த்தாள். பின் வரிசையில் நின்ற பெண்கள் பலர், அவளைச் சூழ்ந்து கொண்டார்கள். தொழிலாளர் தலைவர், அவள் முன்னல் வந்து "சப்-இன்ஸ்பெக்டர் மேல, நமக்கு நம்பிக்கை இருக்கோ இல்லியோ, நடந்ததை சொல்லித்தான் ஆகணும். சொல்லும்மா" என்ருர்.

வேலம்மா, தலையை மெள்ள மெள்ள நகர்த்தினள். எல்லோரும் அவளையே கண்களால் ஈரம் மொய்க்கப் பார்த்தபோது, அவள் கூட்டத்தை ஏறெடுத்துப் பார்த்து விட்டு, அந்த வேகத்திலேயே, தலையை தாழ்த்திக் கொண்டு "அன்னிக்குக் காலையில, என் ராசா... என் மன்னவனே...என்னை இந்தக் கோலத்துல விட்டுட்டுப் போயிட்டியே... பாவிங்க ஒன்னை துள்ளத் துடிக்க கொன்னதும் இல்லாமல்... நீ என்னேட நடத்தையில சந்தேகப் பட்டு, தற்கொலை பண்ணுனதாய் சொல்ருங்களாமே. நான் அந்தப் பேச்சைக் கேட்டுட்டு, இன்னும் சாகாமல் இருக்கேனே..." என்று அழுதழுது அரற்றினள்.

தலையில் அடித்தடித்து, சொல்ல வந்தது தெரியாமல், ஏக்கமே ஒலியாக, இதயமே கண்ணனதுபோல் விம்மினள். பொங்கினள். புகைந்தாள். மார்பிலும், தலையிலும் மாறி மாறி அடித்தாள். சில பெண்கள் அவளைப் பிடித்துக் கொண்டார்கள்.

வேலம்மா கண்களைத் துடைத்தபடியே, "அன்றைக்கு வெள்ளிக்கிழமை. காலையில சாப்பிட்ட என் ராசா...'ஒன் கையில...என்ன மந்திரம் இருக்குடி ஒரு நாள்கூட சாப்பாடு அலுப்புத் தட்டலன்னு'... அய்யோ என் ராசா...என் மவராசா..." என்று சொன்னபடியே, கூட்டத்தை விட்டு, தனியாக ஓடி, ஒரு ஆலமரத்தருகே

நின்றபடி, அதன் மேல் தன் தலையை மோதிக் கொண்டாள். நான்கைந்து பெண்கள் போய், அவளைப் பிடித்துக் கொண்டு, அவளோடு சேர்ந்து அழுதார்கள்.

தாமோதரனுக்கு, துக்கம் தொண்டையையும், வெட்கம் கண்களையும் அடைத்தன. ரைட்டரைப் பார்த்து "இந்த அம்மாவோட ஸ்டேட்மெண்டையும், சம்பந்தப் பட்டவங்களோட ஸ்டேட்மெண்டையும் எழுதிட்டுவாங்க. இந்த அம்மாவை தொந்தரவு செய்யாண்டாம். அவங்க ளால எப்போ பேச முடியுமோ அப்போ பேசட்டும்" என்று ஆணையிட்டான்.

பிறகு கூட்டத்தைப் பார்த்து "நான் யோக்கியன்னு ஒங்ககிட்ட வாதாடல. ஒருவனுக்கு நேர்மை என்கிறது கற்பு மாதிரி. அது ஒரு தடவை போனாலும், பல தடவை போனாலும் ஒண்ணுதான். என்னோட தர்மம், தாயை கற்பிழக்கல—கற்பழிக்கப்பட்டது. ஒங்களுக்கு என்னால நியாயம் வழங்க முடியாட்டாலும், அநியாயம் வழங்க மாட்டேன். போகப்போகப் புரியும். ரைட்டர், குயிக்!" என்று சொல்லிவிட்டு, கண்களைப் புறங்கையால் துடைத்த படி, காவல் நிலயத்திற்குள் வந்தான்.

டெலிபோனும், கையுமாக இருந்த ஏட்டு பொன்னுச் சாமி, அவனை கண் சிவக்கப் பார்த்தார். அவர் அங்கே இருப்பதை அங்கீகரிக்காதவன்போல், தாமோதரன், தன் இருக்கைக்கு வந்தான். உலகத்துப் பாவங்கள் அனைத்தும் ஒன்றுதிரண்டு, ஒரு முனைப்பாகி, தலையைக் குத்திக் குடைவது போலிருந்தது. இதற்குள் ஏட்டுப் பொன்னுச் சாமி அங்கே வந்து, சலூட் அடிக்காமலே படபடப்பாய் பேசினார்.

"சார், பூமிநாதன் முதலாளி ஒங்களோட பேசணு மாம். லைன்ல இருக்கார்."

"யார், அக்கூஸ்டா?"

"பூமிநாதன் முதலாளி சார்!"

"ஆமாய்யா, அவரைத்தான் கேட்டேன். அந்த அக்கூஸ்டை நாளைக்குக் காலையில் பத்து மணிக்கு ஸ்டேஷன்ல வந்து மார்த்தாண்டன் கொலை விஷயமாய் ஆஜராகச் சொல்லு. இல்லன்னு, அரெஸ்ட் வருமுன்னு நான் சொன்னதாய், நானே சொன்னதாய் சொல்லுங்க. குயிக். அவரோட நான் பேச விரும்பல."

"சார்."

"போய்யா. நான் பெரிய அக்கூஸ்ட், நீ சின்ன அக்கூஸ்ட். போய்யா!"

"சார் உடம்புக்கு ஏதாவது? ஆஸ்பத்திரில..."

"என்னோட உடம்பு மிருக வகை... ஒன்னை மாதிரி. எனக்கு ஆஸ்பத்திரி இனிமேல் சுடுகாடுதான்... ஐ... ஸே... யு... கெட்அவுட்... ஒபேய் மை கமாண்ட்."

பொன்னுச்சாமி, விரைப்பாக வெளியேறினார். தாமோதரன், பேசியது தெரியாமல் பேசிவிட்டு, நாற்காலியில் கை பரப்பி, கால் பரப்பிக் கிடந்தான். அவன் கண் முன்னாலேயே, காது கேட்கும் தூரத்திலேயே, ஏட்டு பொன்னுச்சாமி, "வளர்த்த கிடா... நன்றி கெட்டவன்... கவலப்பட வேண்டாம் முதலாளி... ஆண்டிஸிபேட்டரி பெய்ல..." என்பன போன்ற வார்த்தைகள் கலக்க, டெலிபோனை நாக்கால் குத்திக் குடைவது கேட்காமலே, குற்றுயிராய் கிடப்பவன் போல் கிடந்தான். சும்மா கிடந்தான். சூன்யமாய் கிடந்தான்.

நீண்ட நெடிய நேரங்கழித்து, ரைட்டர், கையில் ஒரு கத்தைக் காகிதத்தோடு வந்தார். அவன் நாற்காலியை லேசாய் குலுக்கினார். அவனோ, கண்களை மட்டும் உருட்டினான். உடனே ரைட்டர் ஜனங்க"ளுக்கு ஒங்க மேல அந்தப் பழைய நம்பிக்கை வந்திருக்கு சார். அமைதியாய் போயிட்டாங்க. ஆனாலும் நாலு நாள் டைம் கொடுத்திருக்காங்க. எல்லா ஸ்டேட்மெண்டையும் ரிக்கார்ட் பண்ணிட்டேன் சார். எவிடென்ஸைப் பார்த்தால்

மார்த்தாண்டம் கொலே செய்யப்பட்டது மாதிரி தெரியுது சார்'' என்ருர்.

தாமோதரன், சுதாரித்தான்.

" நாளைக்கு அக்கூஸ்டை வரச் சொல்லியிருக்கேன். குயிக்காய் சார்ஜ்ஷீட் பைல் பண்ணுங்கோ.''

ரைட்டர், தனது தொழில் தர்மத்தின் பின்னணியில், அவனையே அதிர்ச்சியுடன் பார்த்தபோது, அவரைப் போகலாம் என்று கையாட்டி விட்டு தாமோதரன், மயக்கம் கலையாதவன்போல், பிரமை குலையாதவன்போல், உடம்பின் எந்த அங்கமும் ஆடாமல் அசையாமல் இருக்க, அப்படியே கிடந்தான். திடீரென்று, மேல் நோக்கி எழுந் தான். மேஜையில் இரண்டு காகிதங்களைப் பரப்பியபடி, மடமடவென்று எழுதினன். நீரற்ற வறட்சிக் கண் களுக்கு நிவாரணம் தேடுபவன் போல் எழுதினன். பிறகு ''மிஸ்டர் சபாஸ்டின்...'' என்ருன். ரைட்டர் வந்து, அவன் கண்களைத் திறக்காமல், உதடுகளைக் கடித்தபடி இருப் பதைப் பார்த்துவிட்டு "கூப்பிட்டீங்களா சார்'' என்ருர்.

''ஆமாம்...இந்தாங்க...இது என்னுடை லீவ்லெட்டர்... நாளையில இருந்து இரண்டு மாதத்துக்கு லீவ் போட்டிருக் கேன்...நீங்கதான்... நாளையில் இருந்து ஸ்டேஷனுக்கு இன்சார்ஜ்...மார்த்தாண்டம் கேஸ் ஒங்க பொறுப்பு. நீதி தவருமல் சார்ஜ்ஷீட் போடுவீங்க என்கிறதுல எனக்கு சந்தேகம் இல்ல... இந்த கேஸை மூடி மறைக்கிறதுக்கு நானும் ஒரு காரணமாயிட்டேன். நீங்க...என் மேலேயும் சார்ஜஸ் பிரேம் பண்ணலாம். ஏன்னு...நான் இனிமேல் ஒங்க 'பாஸ்' இல்ல. இந்தாங்க ... நாளைக்கே எஸ். பி கிட்ட பெர்சனலாய் கொடுங்க...''

ரைட்டர், அந்தக் காகிதத்தை வாங்கிப் படித்தார். பிறகு ''நோ...நோ...நத்திங் டூயிங்'' என்று கத்தியபடியே அதை கிழிக்கப் போனுர். தாமோதரன், ''ஐ ஸே . '' என்று அதிகார மிடுக்கோடு ஆணையிட்டான். அவர் ஒடுங்கிப்

போனவராய் நின்றபோது, தாமோதரன் எழுந்தான் அவரது கைகளை எடுத்து முத்தமிட்டான். பிறகு அமைதி யாகப் பேசினான்:

"ஒங்களை மாதிரி...ஒரே ஒரு சில நல்லவங்களாலதான் ஸார் இன்னும் நம் டிபார்ட்மெண்ட் பிழைக்குது... ஆனால் நான்...? என்னோட நிலைமை, பாரதத்துல வந்த கர்ண னோட நிலைமை... பலியான அரவானோட நிலைமை... ராமா யணத்தில் வார கும்பகர்ணன் நிலைமை. ஆனால் அவங்களை மாதிரி ஆகாமல், நான் விலகிக்கிறேன். ஒரு நேர்மை வான்கிட்ட பொறுப்பை ஒப்படைச்ச திருப்தியோடு போறேன்...

"நான் போகப்போற பாதை எனக்கே தெரியல... வழி இருந்தபோது தப்பாய் நடந்தேன்...இப்போ சரியாய் நடக்க நினைக்கிறேன், வழி தெரியல. திக்குத் தெரியாத காட்டுக்குள்ளே கெட்டுத்திருந்திய இந்த சின்ன வன் போறேன். என்னை ஆசீர்வதிங்க பிரதர்...என் பாவத்தை நீங்களாவது மன்னிச்சிடுங்க பிரதர்...ஏன்னா... நீங்கள் என்னை மன்னிக்கிறது... ஏசுநாதர் என்னையும் ஏற்றுக்கொண்டது மாதிரி ... கலாவதி, நீ மன்னிப்பாயா? மாடக்கண்ணு மாமா . மாமா..."

ரைட்டர், குலுங்கிக்குலுங்கி அழுதார். தாமோதரன் புறப்படத் தயாரானான், புரியாத ஊருக்கு தெரியாத வழியில்.

## 22

ஒலிபெருக்கிச் சத்தம்—அதுவும் 'கல்யாணமாம் கல்யாணம்' என்ற அசம்பாவித பாடல், ஊருக்கு வெளியேயும், மேளச் சத்தம் ஊருக்கு உள்ளேயும் ஒலித்துக் கொண்டிருந்தன. மேளச் சத்தமும், சினிமாப் பாட்டும்

இரண்டறக் கலக்கும் தொலைவிற்கு, நெருங்கிவிட்டான் தாமோதரன்.

சூரியன், இளஞ்சூட்டிலிருந்து, தலையை இளக வைக்கும் தூரத்திற்குப் போய்விட்ட நேரம். தலைமுடி, மனம்போல் சிதறிக் கிடக்க, கால்கள் பதறிப் பதறி நடந்து கொண்டிருந்தான். நாகர்கோவிலில் இருந்து, உறவுச் சத்தம் கேட்கமுடியாத, ரத்தத் தொடர்புகள் அறுபட்டுப் போகும் தொலைவிற்குப் போகத்தான் நினைத் தான். ஆனாலும், பாசம் அவனைப் பார்த்து விட்டது.

பதவியை ராஜினாமா செய்துவிட்டு, அறைக்குத் திரும் பியவன், அண்ணன், அவசர அவசரமாய் எழுதியிருந்த கடிதத்தைப் படித்தான். விஜயாவுக்கும், தமிழரசியின் அண்ணன் ராஜதுரைக்கும், அவசரக் கல்யாணம் நிச்ச யிக்கப்பட்டு விட்டது என்றும், நாளை மறுநாளே கல்யாணம் என்றும், உடனடியாக, கையில் முடியுமானால் கொஞ்சம் பணத்தோடு வரவேண்டும் என்றும் முத்துலிங்கம் தெரிவித் திருந்தார். விரைவில் அவனுக்கும், தமிழரசிக்கும் ஏற்பாடு செய்துவிடப் போவதாகவும் வாக்களித்திருந்தார்.

அவனுக்கு மனசு கேட்கவில்லை. வாங்கிப் போட்டிருந்த கட்டிலையும், இதரப் பொருட்களையும், ஆற அமர அனுப்பி வைக்கும்படி ரைட்டரிடம் கூறிவிட்டு, ஆறுமல், அமராமல் கையில் ஒரு சூட்கேஸோடு, அவன் புறப்பட்டு விட்டான். ஏட்டு பொன்னுச்சாமி தவிர, அத்தனை போலீஸ்காரர் களும், ற்றும் பல நண்பர்களும், அவனை கண்ணீர் மல்க வழியனுப்பி வைத்தார்கள்.

தாமோதரன், நடையை வேகப்படுத்தினன். கல்யாண நேரம் கழிந்து விட்டதோ என்னமோ... விஜயாவுக்கு, நானென்றல் உயிர்...

கல்யாண நாயகியான விஜயாவை, மணக்கோலத்தில் பார்க்க வேண்டும் என்ற பந்தத்தில் அவன் பந்து போல் எம்பி நடந்தான். திடீரென்று, வேலியோர கற்றுழை

புதருக்கு அருகே, ஊளையும் உருக்கும் சத்தம் ஒன்று கேட்டது.

"எய்யோ...ஓ...ஓ...ஓ.. எங்கேய்யா போயிட்டுரு?"

தாமோதரன், குதிகால்களை உயர்த்தி எட்டிப் பார்த்தான். இழவுக்கு நாயகியாகிப் போனவளை, அவனால் நேருக்கு நேராய் பார்க்க முடியவில்லை. அதே சமயம், அந்த இடத்தை விட்டு அவனால் அகலவும் இயலவில்லை. கண்ணடங்க, நாவடங்க, அவளை அவன் பார்த்தபோது—

சுண்ணும்புச் சாந்து திட்டுத் திட்டாய் கிடக்க, தூள் தூளான வெள்ளைக் கலசம் ஓடு ஓடாய் சிதறிக் கிடக்க, உறை கழண்ட அழுக்குத் தலையணை போன்ற மண் சமாதியில், கலாவதி, சம்மணம் போட்டு உட்கார்ந்து, தலையை சமாதியில் சாய்த்துச் சாய்த்து எடுத்தாள். பிறகு மல்லாந்து பார்த்து வானத்தைப் பார்த்தாள். "எம்மோ...எம்மோ" என்று சொல்லிக் கொண்டாள்.

அந்தப் பிண மகளுக்கு, ஆகாயத்தில் அம்மாவின் குரல் கேட்டதோ என்னவோ, அம்மாவைப் பிடித்து, அவள் மூலம் அப்பாவைப் பிடிக்க நினைத்தவள் போல், வெண் குஷ்டம் வந்தது போன்ற வெந்துபோன உடம்பை ஆட்டி ஆட்டி, தோலுரித்த வள்ளிக்கிழங்கு போன்ற வாயை அகல விரித்து, அதல பாதாளத்தையும், ஆகாய வெளியையும் புலம்பல் குரலால் புடம் போட்டுக் கொண்டிருந்தாள்.

அவளையே பார்த்தபடி நின்ற தாமோதரன் 'மணமகளே...மணமகளே...வா...வா' என்ற தன் வீட்டுப் பாட்டைக் கேட்டு, பல்லைக் கடித்தான். இதற்குள் எங்கிருந்தோ வந்ததுபோல் வந்த முத்துமாரிப் பாட்டி கலாவதியை தூக்கி நிறுத்தி, இடுப்போடு சேர்த்து இழுத்தபடி நடந்தாள்.

தாமோதரன், ஆறுதலுக்காக அங்கே நின்ற பனை மரத்தைப் பற்றிக் கொண்டு அதன்மேல் சாய்ந்தான். அந்த மரமே சுழல்வது போலிருந்தது. என்னிடம் வராதே வராதே என்று விலகுவது போலிருந்தது. சின்ன வயதில், வேண்டுமென்றே வட்ட வட்டமாய் பம்பரம் போல் உடம்பைச் சுற்றி, அப்புறம் பொத்தென்று தரையில் விழும் போது, பூமி சுற்றுவது போலிருக்குமே. அதுபோல் இருந்தது அவனுக்கு இப்போது. அவன் வட்ட வட்டமாய் சுற்றுமலே, பூமி சுற்றியது. பனைமரம் சுழன்றது. நினைவுகள் நெஞ்சில் சுற்றின. நெஞ்சமோ தலையில் சுற்றியது. தாமோதரன் வந்த வழியாய் திரும்பப்போனுன். முடிய வில்லை. கீழே விழாமல் இருக்க, எங்கேயாவது இளைப்பாற வேண்டும் போலிருந்தது. தள்ளாடி, அல்லாடி நடந்தான்.

அவனுக்கு முன்னுல், முத்துமாரிப் பாட்டி, கலாவதியை உடலோடு சேர்த்துத் தூக்கியபடி போய்க் கொண்டிருந்தாள். ஊர் முனையில், கும்பல் கும்பலாக நின்றவர்களிடம், கலாவதியைக் காட்டிக் காட்டி, எதையோ பேசிக் கொண்டிருந்தாள். தாமோதரன் அவர்களை நெருங்கியபோது, பாட்டிக்குக் காது கொடுத் தவர்கள், 'இன்ஸ்பெக்டரை'ப் பார்த்துவிட்டு, முகங்களைத் திருப்பிக் கொண்டார்கள். போலீஸ்காரனுக்கு—அதுவும் அதிகாரிக்கு உடம்பைக் காட்டலாம்.. முகத்தைக் காட்ட லாமோ? தங்களை அடையாளப் படுத்திக் கொண்டால், அப்புறம் அடையாளம் இல்லாமல் போக வேண்டியது வருமே.

பேச, முகம் கிடைக்காமல் நின்ற முத்துமாரிப் பாட்டி, உடம்பைத் திருப்பினுள். தாமோதரனைப் பார்த்து விட்டு, ஆச்சரியப்பட்டு மோவாயில் கை வைத்தாள். இதுவரை பேசாமல் வந்த கலாவதியோ, அவனைப் பார்த்ததும், "எய்யோ...எய்யோ..." என்று சொல்லியபடியே ஓடப் போனுள். பாட்டி, அவளை இழுத்துப் பிடித்தபடியே, தாமோதரனை வழிமறித்துக் கத்தினுள்.

"இவள நல்லா பாரு ராசா! இப்போ ஒனக்கு திருப்தி தானே? நீ துப்பாக்கியால சுட்டாக்கூட இப்டி சுட்டிருக்க முடியாது. ஆயிரந்தான் இருந்தாலும், ஒண்ணன் முத்து லிங்கம் ஒனக்குப் பெரியவன் பாரு; ஒன்னைப் பார்க்கும் போதெல்லாம் 'வாங்கத்தான்னு' வாய் நிறைய கேட்ட இவளோட வாயைப் பாரு ராசா! என் ராசா! என் சீமைத் துரையே! இவளுக்கு நீ ஒரு சின்ன ஒத்தாசை பண்ணனும். ஒய்யா இவள் பேர்ல கொடுத்த பணத்துக்கு, ஒன்னோட தங்கச்சிக்கு மாமனுராய் போன மனுஷன் தன்னோட வயலுக்குப் பக்கத்துல கிடந்த ரெண்டு மரக்கால் நிலத்தை வாங்கிப் போட்டுட்டாரு. இந்தக் கிழவிக்குப் பிறகு இவளைக் கவனிக்க நாதியில்ல. அதனால, நீ ஒரு உதவி செய்யணும். ஒன்னோட அண்ணன் இவளோட உடம்புக் குத்தான் சூடுபோட்டான். நீ இவள் உயிருக்கு சூடு போட்டுடு ராசா... சீக்கிரம் ராசா... துப்பாக்கி இல்லியோ?..."

தாமோதரன், துப்பாக்கி ரவைகளால் துளைக்கப் பட்டவன் போல் உள்ளூறத் துடிதுடித்து, வெளிப் படையாய் குன்றிப்போய் நின்றான். ஆங்காங்கே பீடிகளை உறிஞ்சியபடி, வெற்றிலைப் பாக்கைக் குதப்பியபடி நின்ற வர்களை, இருந்தவர்களை, நடந்தவர்களைப் பார்த்தான். எவரும் பாட்டியை அதட்டவில்லை. இறுதியில், கேட்கும் தூரத்தில் மண்டையனோடும், இதர வகையறுக்களுடனும் சீட்டாடிக் கொண்டிருந்த கில்லாடியார், பிடித்த சீட்டு களைப் போடாமலே, பாட்டியைப் பார்த்துக் கத்தினார்:

"ஏய் சித்தி, ஒனக்கு என்ன வந்துட்டு? ஒனக்கும் சூடு போட்டுட்டால், இந்தப் பைத்தியாரத் தர்மர் மகன யாருழா கவனிக்கது?"

முத்துமாரிப் பாட்டி, திருப்பிக் கொடுத்தாள்:

"நேரம் காலம் தெரியாமல் வேல பார்க்கவங்களுக்கு நேரம் சரியில்ல; வசதியும் இல்ல. வசதியும், நேரமும்

இருக்கிற ஒனக்கு சீட்டு விளையாட்டே பொழைப்பாய் போயிட்டு. ஒன்னை மாதிரி ஆம்புளைங்க சரியாய் இருந்தால், இந்த பைத்தியக்காரி முத்துமாரி எதுக்குப் புலம்பணும்?''

''நீ புலம்புனல், அது ஒன்னோடதான் முடியும். நான் புலம்புனல், என் பெண்டாட்டி பிள்ளைகுட்டி வரைக்கும் போகுமே, ஊமை கண்ட கனவு மாதிரி, போ சித்தி. டேய் மண்டையா, துருப்புச் சீட்டு ஆட்டியன் ரெண்டா, கிளாவர் ரெண்டா?''

கில்லாடியார் பேச்சை முடித்ததும், ஓரளவு தைரியமான ஒரு இளைஞன், இன்னும் அங்கேயே நின்று கொண்டிருந்த தாமோதரனை நோட்டம் விட்டபடியே ''கவலைப்படாத பாட்டி, நமக்கும் காலம் வரும்'' என்றான்.

முத்துமாரி, பயங்கரமாய் கத்தினாள்.

''நீங்கெல்லாம் எதுக்குடா இந்த உடம்பை வச்சிக்கிட்டு இருக்கணும்? அறுத்துப் போட்டாலும் அறுபது கிலோ தேறும். கடவுளே... கடவுளே... இந்தப் பங்காளிப் பயலுவ சும்மா இருக்கது மாதிரி, என்னால்இருக்க முடியலியே. போலீஸ்காரன் அடிச்ச அடியில பழைய படியும் பைத்தியமாய் போனவள் அப்படியே இருந்து ருக்கப் படாதா? நடம்மா கலா. ஒன்னத்தான் வா. கூழோ, கஞ்சோ காய்ச்சித் தாரேன்.''

முத்துமாரிப் பாட்டி, கீழே விழப்போன கலாவதியை, கைத்தாங்கலாய்ப் பிடித்தபடி நடந்து கொண்டிருந்தாள். தாமோதரனால், அவர்கள் பின்னால் நடக்க முடியவில்லை. அசட்டை செய்வதுபோல் பாவித்த ஊரார் முன்னால் நிற்கவும் முடியவில்லை. கால்களைத் தேய்த்தபடி ஆள் அரவம் இல்லாத ஒரு தெரு வழியாய் நடையை மாற்றினான். கையில் இருந்த சூட்கேஸ், கீழே விழுந்தது தெரியாமல் நடந்தான். யாரோ ஒரு பையன், அதை எடுத்துக் கொடுத்தான்.

வீட்டு வாசலுக்கு மகுடம் சூட்டப்பட்டதுபோல் வாழை மரங்கள், இரு பக்கமும் குலை தள்ளி நிற்க, வெண் பட்டுப் பரப்பும், சிவப்புக் கரையும் கொண்ட துணி கட்டிய பந்தலைத் தாண்டி, வீட்டுக்குள் நுழைந்தான். உடனே, ''இன்ஸ்பெக்டர் வந்துட்டார், இன்ஸ்பெக்டர் வந்துட்டார்'' என்ற சப்த அலைகள். ஜரிகை வேட்டியோடும், ஜிகிணுத்துண்டோடும் பளபளத்த முத்துலிங்கம் ஓடி வந்து அவன் சூட்கேசை வாங்கிக் கொண்டார். அவர் மனைவி வந்து ''சீக்கிரமாய் வரப்படாதா? தாலி கட்டியாச்சு. ஒங்களத்தான், இவங்க தன்னோட கல்யாணத்துக்காவது வருவாங்களா?'' என்று தமாஷ் செய்தாள். அப்பாக்காரரர் வந்து, அவனைப் பாசத்தோடு பார்த்தார்.

பந்தலிட்ட முற்றத்தில் நாற்காலிகளில் அமர்ந்திருந்த பிள்ளையார் கோவில் தர்மகர்த்தா, லோகல் அரசியல்வாதிகள், அதே அந்த பாதிரியார் உட்பட பல பெரிய தலைகள், அவனைப் பார்த்ததும் எழுந்து நின்றன. எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்த ஒரு சில பெருந் தலைகளின் விலாக்களை இடித்து, ''இன்ஸ்பெக்டரய்யா... இன்ஸ்பெக்டர்'' என்று எழுப்பினார்கள். தாமோதரன் தங்களுக்கு வேண்டியவன் என்பதைக் காட்டும் வகையில், கூட்டத்தை ஒரு தடவையும், அவனை மறு தடவையும் பார்த்தபடி, எல்லோரும் ஒரே சமயம் பேசினார்கள்.

முத்துலிங்கம், தம்பியைப் பெருமையோடு பார்த்தபடி ''சீக்கிரமாய் வரப்படாதுப்பா? ஒனக்காக எவ்வளவோ லேட் பண்ணிப் பார்த்தோம். சப்-இன்ஸ்பெக்டர் கூட, ஒனக்காகக் காத்திருந்திட்டு இப்போதான் போறாரு...'' என்றார். உடனே அவர் மனைவி ''வந்ததும் வராததுமாய் அவங்கள ஏன் நச்சரிக்கிறீய? ஒங்க தம்பியை சாப்பிட வரச் சொல்லுங்க...'' என்றாள்.

தாமோதரன், தன்னிடம் உபசரிப்பு வார்த்தைகளைப் பேசியவர்களைப் பார்த்து, புரிந்தும் புரியாமலும் தலையை

ஆட்டிக் கொண்டிருந்தபோது, உள்ளறையில், கழுத்தில் மாலைகளோடு, உணவருந்திக் கொண்டிருந்த விஜயாவும், ராஜதுரையும் அவசரமாய் சாப்பாட்டை முடித்துவிட்டு அவனருகே வந்தார்கள். விஜயா, தாமுவின் காலில் விழுந்தாள். ராஜதுரை, அவன் முட்டிகளைத் தொட்டு வணங்கினான். தங்கையை, தத்தளிக்கப் பார்த்தவனைப் பார்த்து "தாம்பாளத்தில் இருக்கிற விபூதியை எடுத்து அவங்க ரெண்டுபேருக்கும் பூசுப்பா" என்றார் முத்துலிங்கம். தாமோதரன், இருவர் நெற்றிகளிலும் விபூதியிட்டு விட்டு, தங்கையையே பார்த்தான். அவளோ, இன்ஸ்பெக்டர் அண்ணன் மோதிரம் போடப் போகிறான் என்று எண்ணி, தனது விரல்களை விரித்து விரித்து மடித்தாள். மடித்து மடித்து விரித்தாள். அவன் பேசாமல் இருப்பதைப் பார்த்து விட்டு, புதுக்கணவனை இடுப்பில் இடித்து, உள்ளறைக்குள் கூட்டிக்கொண்டு போய்விட்டாள்.

தாமோதரன், ஆண்களும், பெண்களுமாய் நிறைந்த கூட்டத்தைப் பார்த்தான். ஒரு வேளை தமிழரசி வந்திருப்பாளோ? எப்படி வருவாள்? அவள் என்னை மாதிரி மானங் கெட்டவள் இல்லியே?

பார்த்துக் கொண்டிருந்த தாமோதரன் கண்களில், கலாவதிக்கு தோட்டத்தில் சூடு போட்ட பஞ்சபாண்டவர்கள் தென்பட்டார்கள். புண்ணியத்தைத் தவிர, உலகில் வேறு எதையுமே செய்யாதவர்கள்போல, அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த கூட்டத்திற்கு பரிமாறிக் கொண்டிருந்தார்கள். தாமோதரன், எதேச்சையாய் கோபப்பட்டு, இடுப்பில் இல்லாத கைத்துப்பாக்கியைத் தேடினான். அண்ணனை ஆவேசமாகப் பார்த்தான்.

சாப்பாடு முடிந்ததும், கூட்டம்குறைந்து கொண்டும், தலைவர்கள் கூட்டம் கூடிக் கொண்டும் இருந்தன. இன்ஸ்பெக்டர் வந்துவிட்டதால், சின்னத் தலைவர்களும் வந்து விட்டார்கள். புதுமாப்பிள்ளை ராஜதுரையும்,

தாமுவைப் பெருமிதமாய் பார்த்தபடியே, அவனருகே வந்து உட்கார்ந்தான். முத்துலிங்கம் மனைவி, இலையும், செம்புமாக வாசல் கதவில் சாய்ந்தபடி, கொழுந்தன் தாமுவின் பார்வை படுவதற்காகத் தவமாய் நின்றாள்.

முத்துலிங்கம், பெரிய மனிதர்களைப் பார்த்தபடியே, தம்பியிடம் 'டா' போட்டுக் கேட்டார்:

"எத்தன நாளுடா லீவு போட்டிருக்கே?"

"லீவா? நாளு? ஆம்... ஆம்..."

"நான் எதுக்குச் சொல்றேன்னால், நீதான் தங்கச்சியையும், மாப்பிள்ளையையும் குற்றாலத்துக்குக் கூட்டிக்கிட்டுப் போகணும். லீவு நிறைய போடாட்டால், இப்பவே 'வந்த இடத்துல உடம்புக்கு சுகமில்ல'ன்னு ஒரு தந்தி அடிக்கணும். அதுக்காகத்தான் சொன்னேன்"

தாமோதரன், அண்ணனை ஏற இறங்கப் பார்த்தான். பொங்கிய சினத்தைத் தன்னிடமே தங்க வைத்தபடி "கவலப்படாதே! இனிமேல் நான் வேலைக்குப் போனாலும் சேர்த்துக்க மாட்டாங்க" என்றான்.

"என்ன சொல்ற?"

"வேலையை ராஜினமா செய்துட்டேன்."

"என்னப்பா சொல்ற? என்னடா சொல்றே? என்னல சொல்றே?"

"ஒரு தடவ சொன்னால் ஒனக்குக் கேட்காதா? ஒன்னோட பாவத்துக்குக் கூலியாய், என்னோட வேலையை விட்டுட்டு வந்துட்டேன்."

பெருந்தலைகள் மலைத்துப் போயின. ஒரு ஓரமாய் உட்கார்ந்திருந்த அப்பாக்காரர் எழுந்து வந்தார். முத்துலிங்கம், கண்கள் சிவக்க தம்பியையே பார்த்தார். அவர் உடம்பு ஆடியது. பற்கள் கடியுண்டன. மலைத்த தலைகளில் மலைக்காத தலைவரான லோகல் அரசியல்வாதி

மொய்தீன், முத்துலிங்கத்தைத் தொட்டபடி "கவலப் படாதே முத்து. இவர் ராஜினுமாதானே செய்திருக்கார். அதை ஏத்துக்கணுமுன்னு என்ன வந்திருக்கு. இன்னைக்கே நாகர்கோவில் எஸ். பி. க்கு டிரங்கால் போட்டு ராஜினுமாவ திருப்பி அனுப்பச் சொல்றேன். வேணு மின்னல் மினிஸ்டர்கிட்டே..." என்ருர்.

தாமோதரன், கோபத்தோடும், குமுறலோடும் பேசி ஞன்.

"நான் அரசியல்வாதியல்ல, ராஜினுமாவை வாபஸ் வாங்க."

முத்துலிங்கம், தம்பியின் பக்கம் கோபமாய் நெருங்கிக் கேட்டார்:

"யார்கிட்ட கேட்டு வேலையை விட்டே?"

"நீ யார் கிட்ட கேட்டு கலாவதிக்கு சூடு போட்டே? யார்கிட்ட கேட்டு மாடக்கண்ணு மாமாவை கிணத்துக் குள்ளே தள்ளினே?"

திடீரென்று யாரும் எதிர்பாராத வகையில், முத்துலிங்கம் தம்பிமேல் பாய்ந்தார். அவன் தலையைப் பிடித்து, தனது இரண்டு கால்களுக்கு இடையே வைத்துக் கொண்டு, அவன் முதுகில் மாறி மாறிக் குத்தினுர். "ஒன்னை இதுக்கா கஷ்டப்பட்டு படிக்க வச்சேன். அற்பப் பயலே?" என்று சொல்லுக்குச் சொல்லாய், திட்டுக்குத் திட்டாய் அடித்தார்.

தாமோதரன், சிலிர்த்தெழுந்த போது, முத்துலிங்கம் கீழே விழுந்து கிடந்தார். அவரை கொலைகாரனாய் நினைத்து அவர் கழுத்தில் இடறப்போன கால்களை, தமை யனாய் நினைத்து இருத்திக் கொண்டான். இதற்குள் அங்கு மிங்குமாய் நின்ற கூட்டம் அங்கே ஒன்ருய்த் திரண்டது. புதுப்பெண் விஜயா, அலறியடித்தபடி அண்ணன்களுக்கு இடையே நின்ருள். ராஜதுரை, பெரியமச்சானை அனுதாப

மாகவும், சின்ன மச்சானை அசிங்கமாகவும் பார்த்த படியே, குத்துக்கல்லாய் இருந்தான். வாசலில், இலையும் நீர்ச் சொம்புமாய் நின்ற முத்துலிங்கம் மனைவி, அவற்றை வீசியெறிந்து விட்டு, கூட்டத்துள் வந்து கூக்குரலிட்டாள். கணவனை அதட்டினாள்.

"ஒமக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும். தம்பி தம்பின்னு நீரு கழனில கஷ்டப்பட்டு, அவனை பல்லாக்குல வச்சீரு. நாயைக் குளிப்பாட்டி நடு வீட்ல வச்சாலும், அது காளு காளுன்னு கத்தாமல் இருக்குமா? நீரு நாகர் கோவிலுக்கு, தம்பின்னு, போலீசுக்கு தப்பிப் போன போது, ஒம்மை எந்த மாதிரில்லாம் கேட்டான்? நீரே சொல்லிச் சொல்லி என்கிட்ட அழலியா? அந்த நன்றி கெட்டத்தனத்துக்குத்தான் கடவுள் இவனுக்குக் கூலி கொடுத்திருக்காரு. எவனும் எப்படியும் போவட்டும். சொத்துல ஒம்மைதவிர எவனுக்கும் எதுவும் கிடையாதுன்னு மட்டும் சொல்லிடும்."

"நான் எதுக்குடி சொல்லணும்? சொத்துன்னு கேட்டான்னால் ஒரே வெட்டுத்தான்."

தாமோதரன், ஆறு வயதுக் குழந்தையாகி, அருகே நின்ற தந்தையைப் பார்த்தான். கண் பொங்கப் பார்த்தான். பொறுப்புக்களை மூத்த மகனிடம் விட்டு விட்டு, தானுண்டு, சாராயம் உண்டென்று இருக்கும் அந்த மனிதர், இப்போது தனக்குப் பேச அவகாசம் கிடைத்ததைப் பயன்படுத்திக் கத்தினார்.

"பத்தாயிரம் ரூபாய் லஞ்சமாய் கொடுத்து வாங்குன வேலையை விட்டுட்டியடா அயோக்கியப் பயலே! இனிமேல் எனக்கு ஒருவன்தான் மகன். நீ என் முகத்துல விழிக்கப் படாது. சொத்துல ஒனக்கு ஒரு துரும்பு கூடக் கிடையாது. மரியாதையாய் வீட்டை விட்டு வெளில போ. ஏல முத்துலிங்கம்! அந்த ஓடுகாலிப் பயலை கழுத்தைப் பிடிச்சு வெளில தள்ளு. நீ தள்ளுறியா, நான் தள்ளட்டுமா?"

தாமோதரன், தந்தையையே பார்த்தான். அவர் முகத்தில், பிரகலாதனைக் கொல்லப் போன இரணியன் முகம் தென்பட்டது. பெரிய மனிதர்களைப் பார்த்தான். அவர்களோ, ஒருவரை ஒருவர் பார்த்து இளக்காரமாய் கண்ணடித்துக் கொண்டார்கள். தங்கை விஜயாவை, பார்த்தான். அவள், அவன் கைகளை, தன் கைகளில் கோர்த்தபடி விம்மிக் கொண்டிருந்தாள். கூட்டம், ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டிருந்தது,

தாமோதரன், தங்கையின் கையை மெல்ல விலக்கி, சுவரோடு ஒட்டிக் கிடந்த சூட்கேசைத் தூக்கியபடி, மெல்ல நடந்தான். எவரும் அவனை, 'இரு' என்று சொல்லவில்லை. ஏனென்று கேட்கவில்லை. வீட்டுக்கு வெளியே வந்தவன் காதுகளில், ''அண்ணாச்சி அண்ணாச்சி... அய்யோ... என்னோட அண்ணாச்சியை கூப்பிடுங்க...'' என்று விஜயா கூப்பாடு போடுவது கேட்டது. தாமோதரன், தங்கைக்காக ஒரு கண்ணையும், தனக்காக இன்னொரு கண்ணையும் துடைத்துக் கொண்டான்.

ஊர் வழியாய் நடக்க மனம் கேட்காமல், காட்டுப் பாதையில் நடந்தான். தனி வழியாய் தனித்துப் போனான். தந்தை என்பதும், தமையன் என்பதும் என்ன? தங்களால், இனிமேல் சுயேச்சையாக வாழ முடியாது என்ற சுயநலத்தால் துரத்துகிறார்கள். பாசம் என்பது உறவின் கைதி. இந்த சிறைபட்ட—சிறை பிடித்த மனிதர்களுக்காக, நான் ஏன், என் இதயத்தை வீங்க வைக்க வேண்டும்? போலீஸ் அதிகாரிகளிடம் போய், இதுவரை நடந்த கொலை நிகழ்ச்சிகளுக்கு, ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தால் என்ன? அவர்களிடம் சரணடைந்தால் என்ன?

தாமோதரன், கால்போன போக்கில் நடந்தான். மனம் போன போக்கில் நினைத்தான்.

# 23

அந்தக் கல்லூரி வளாகத்திற்குள் மாணவிகளும், ஆசிரியைகளும் கும்பல் கும்பலாய் கூடிக் கூடி நின்றனர். வயதுக்கேற்ற சேட்டைகளோ, பருவத்திற்கேற்ற 'கலாட்டாக்களோ' இல்லாமல், மவுன கழிவிரக்கத்தில் கரைந்து கொண்டிருப்பதுபோல் தோன்றினார்கள். பல பெண்கள், கரங்களில் அட்டைகள் ஏந்தி முகங்களில் சோகம் கப்பி நின்றார்கள்.

தமிழரசியும், பத்மாவும், இன்னும் ஒருசில ஆசிரியைகளும், தனித்தனியாய் தத்தம் குழுக்களுடன் பேசிக் கொள்ளாமல், பிரிந்து செல்லாமல் நின்ற பெண்களை, கல்லூரி கொடிக் கம்பத்திற்கு முன்னால் வந்து நிற்கும்படி சைகை செய்தார்கள். இதைப் பாராமுகமாய் நின்ற பல பெண்களை, பார்த்த முகமாய் நின்ற பெண்கள் விலாவில் இடித்து, எல்லோரும் கொடிக் கம்பத்தின் முன்னால் குவிந்தார்கள்.

தமிழரசியும், சமூகஇயல் உதவிப் பேராசிரியை பத்மாவும் அவர்களை மூன்று மூன்று பேராய் பிரித்து, வரிசைப் படுத்தினார்கள். மூன்று அணிகளுக்கு ஒரு அணி வீதம், மாணவிகள் அட்டைகளை ஏந்தி நின்றார்கள். அத்தனைப் பெண்களின் தோள்களில் துவண்ட முந்தானைகளில், கருப்புத்துணிகள் குத்தப்பட்டு, அவைகளும் துக்கித்து நின்றன. ஊர்வல வரிசையின் முன்னாலும், பின்னாலும், பக்கவாட்டிலும், மத்தியிலும்—பலப்பல விதமான அட்டைகள் கம்பீரமாய், தலைகளுக்கு மேல் தாவி நின்றன. அவற்றில் எழுதப்பட்டிருந்த முழக்கங்கள், மவுனமாய் நின்ற மாணவிகளை சீறும் பெண் புலிகளாகக் காட்டின. கரங்கொண்ட அட்டைகள்,

"எங்களவர்களைக் கொல்லும் சிங்களவர்களே!—உங்களை என்ன ஆனாலும் விடோம்."

"குட்டிமணியின் கொலை மரணம் ஈழத் தமிழகத்தின் எல்லை விரிப்புக்கள்."

"இப்போதைய தேவை—எப்படியும் எம்மவரைக் காத்தல்."—என்று ஆர்ப்பரித்தன.

அணி திரண்ட மாணவிகள், கொடிக்கம்ப மேடைக்கு முன்னால் கம்பீரமாய் நின்றார்கள். தமிழரசி ஒரு அறைக்குள் போய் இரண்டு பக்கமும் கொம்புகளை எல்லைகளாய்க் கொண்ட துணி பேனரைக் கொண்டு வந்தாள். அதில் "இலங்கை அரசே! இனக் கொலையை நிறுத்து!" என்ற சிவந்த வாசகம், வெண்மை நிறப் பின்னணியில் ரத்தம் போல் ஒளிர்ந்தது.

ஊர்வலத்தின் முகப்பில், இந்தப் பேனரை, யார் பிடிக்கவேண்டும் என்று, தமிழரசி, இதர ஆசிரியைகளுடன் விவாதித்தாள். பிறகு கூட்டத்தை ஒட்டுமொத்தமாய் பார்த்துவிட்டு, பின் வரிசையில் நின்ற இரண்டு பெண்களை கையாட்டிக் கூப்பிட்டாள். அவர்கள் ஒன்றும் புரியாமல் அவளை நெருங்கியபோது, தமிழரசி பேனரைக் கொடுத்தாள்.

அவர்களில் ஒருத்தி என். ஸி. ஸி.; இன்னொருத்தி இந்தக் கல்லூரியில் படிக்கும் இலங்கைத் தமிழ் மாணவி. தமிழர்கள் பெரும்பான்மையாய் வாழும் யாழ்ப் பாணத்துக்காரியல்ல. தமிழினம் கொன்று குவிக்கப்பட்ட கொழும்பு நகரில் குடிகொண்ட குடும்பத்தினள். இலங்கையில் கொலைக் கொடுங்கோன்மை துவங்கியதிலிருந்து, குடும்பத்திடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை. பெற்றோருடன், தமையன்கள் இருவரும், தம்பியும், தங்கையும் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. கொழும்பு நகரமே, அங்குள்ள தமிழர்களுக்கு, உயிரோடு கூடிய சமாதியாய் மாறிய பிறகு, தனது குடும்பமும் உடலற்றுப் போய் விட்டதா அல்லது அகதி முகாம்களில் உணர்வற்றுக் கிடக்

கிறதா என்பதை, எவ்வளவு முயன்றும் இன்னும் அவளால் அறிய முடியவில்லை.

தமிழரசி, பேனாவின் ஒரு முனையை என். ஸி. ஸி. மாணவியிடம் கொடுத்துவிட்டு, இன்னொரு முனையை அந்த இலங்கைத் தமிழ்க்காரியிடம் நீட்டினாள். ஆனால் அந்த மாணவியால் அதை வாங்க முடியவில்லை. அப்படியே குனிந்து உட்கார்ந்து விம்மினாள். அவளுக்கு ஆறுதல் சொல்வதற்காக தமிழரசியும், ஒரு சில மாணவிகளும் அவளிடம் ஓடியபோது, அவளும் ஓடி, கூட்டத்திற்கு முன்னால் வந்தாள். கூட்டத்தைப் பார்த்து, கரங்கூப்பித் தொழுதாள். இலங்கையில் தனது குடும்பத்தைத் தொலைத்து விட்டாலும், தமிழகத்தில் தான், தன்னைப் போன்றவர்களுக்கான மிகப் பெரிய குடும்பத்தைக் கண்ட பாச பந்தத்தில், கட்டுண்டு கண்ணீர் விட்டாள்.

இங்கிருக்கும் தமிழர் ரத்தம், இந்து மகா சமுத்திரத்தையும் ஊடுருவி, அங்கிருக்கும் தமிழ்க் குருதியுடன் இணைந்து துடிக்கும் அன்பின் ஈர்ப்பில், அவள் ஆடிப் போனாள். அத்தனை பேரும், அவளுக்கு உடன் பிறவா சகோதரிகளாக—அவளைப் போன்றவர்களுக்காக, எந்தத் தியாகத்தையும் செய்யலாம் என்ற எண்ண முனைப்புடன் வந்திருக்கும் தமிழ்க் குடும்பமாக — அவளுக்குத் தோன்றியது.

மின்னும் கறுப்பில் நிறமெடுத்து, எண்ணமும், செயலும் ஒன்றாகவே உடலெடுத்ததுபோல், விகற்பம் இல்லாத பளிங்குப் பார்வையும், வஞ்சமற்ற வளர்ச்சியும், எழிலும் கொண்ட அந்த இலங்கை மாணவியின் தோளை, தமிழரசி தட்டிக் கொடுத்தாள். "கவலைப்படாதே! இன்னிக்கு இலங்கை அஸிஸ்டெண்ட் ஹைகமிஷனர் கிட்டே, ஒன்னோட குடும்பத்தின் விவரத்தைக் கண்டு பிடிச்சு சொல்லச் சொல்லுவோம். அவங்க தராட்டால், நானே சாகும் வரைக்கும் உண்ணாவிரதம் இருப்பேன்," என்றாள்

உடனே அந்த மாணவி, தமிழரசியின் தோளில் சாய்ந்து விம்மினாள். அதைப் பார்த்து விட்டு ஊர்வலத்தில் சங்கிலித் தொடராய் நின்ற அத்தனை பெண்களும் அழுதார்கள். தோளிலே புரண்ட அந்த மாணவியை, குழந்தை மாதிரி அணைத்துக்கொண்ட தமிழரசிக்கு, இலங்கைத் தமிழர்கள் பட்ட— படுகின்ற— ஒரு வேளை படப்போகின்ற துன்பங்களும், துயரங்களும், துக்கப் பெருங்கடலாய் உருவமெடுத்து, மூழ்க வைத்துக் கொண்டிருந்தது. இதற்கெல்லாம் யார், யார், எவை யெவை காரணங்கள்?

அவளுக்கு தான் இதுவரை கலந்து கொண்ட பட்டி மண்டபங்களும், கவியரங்கங்களும் வெத்து வேட்டுக் களாய் தெரிந்தன. இலங்கைத் தமிழர்களின் இன்றைய நிலைக்குத் தானும், தன்னைப் போன்றவர்களும், ஏதோ ஒரு வகையில் காரணம் என்பதை அறிந்து நிமிரமுடியாமல் நின்றாள். கண்களை மூடியபடியே நின்ற தமிழரசியை, பத்மா உலுக்கினாள். இதற்குள் நான்கைந்து மாணவிகள் வந்து இலங்கை மாணவியை ஆற்றுப்படுத்தி அழைத்துச் சென்றார்கள்.

கண் விழித்த தமிழரசியால், ஆவேசத்தைக் கட்டுப் படுத்த முடியவில்லை. கொடிக்கம்ப மேடையில் ஏறினாள். பிறகு "இலங்கையில் விதவையாக்கப்பட்டவர்களுக்கும், அனாதைகளான சிறுவர் சிறுமிகளுக்கும், கற்பழிக்கப்பட்ட பத்தினிகளுக்கும், கொலையுண்ட தமிழர்களுக்கும், இரண்டு நிமிட மவுன அஞ்சலி செலுத்துவோம்" என்றாள்! அத்தனை கண்களும் மூடின. அத்தனை தலைகளும் முன்புற மாய்ச் சாய்ந்தன. இரண்டு நிமிடமாகியும் எழாமலே கிடந்தன. எப்படியோ அவை நிமிர்ந்தபோது, தமிழரசி மேடைப் பேச்சாளியானாள்.

"என் அன்புச் சகோதரிகளே!

இலங்கையில் இனப்படுகொலையை, நான் உங்களுக்கு விளக்க வேண்டியதில்லை. சுருக்கமாகச் சொல்வ

தென்றல், உலக வரலாற்றில் இதுவரை இடம் பெறாத நரமாமிசவேட்டை. மற்ற நாடுகளில் நடந்ததுண்டு. எப்படி? இரு தரப்பார் மோதுவார்கள். ஆனால் ஒரு தரப்பு குறைவாயும், இன்னொரு தரப்பு மோசமாகவும் பாதிக்கப் படும். ஆனால் இலங்கையில் நடப்பதோ ஒருதலைக் கொலைகள். நிராயுதபாணிகளான நம்மவர்களை நிர்மூல மாக்கும், சிங்களவ கோர தாண்டவம். கடலுக்கும், பூமிக்கும், சூரியனுக்கும், ஆகாயத்திற்கும், காற்றிற்கும் அவையே உதாரணங்கள் என்பதுபோல், இலங்கை இனப் படுகொலைக்கு, அதுவே உதாரணம். வேறு எடுத்துக்காட் டால் அதை விளக்கமுடியாது. வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிலேயே இலங்கைத்தமிழர்கள், நமக்கு பூகோளப் படியும், பண்பாட்டுப்படியும் நெருக்கமானவர்கள்.

தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்து, சைவ சித்தாந்த இலக்கிய வளர்ச்சிக்குப் பாடுபட்ட ஆறுமுக நாவலர், யாழ் ஆராய்ச்சி செய்த வித்தகர் விபுலானந்த அடிகள், இப்போது மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய இலக்கியப் பேராசிரியராகப் பணியாற்றும் டாக்டர் உவைஸ், 'கள்ளத்தோணி' நாடகம் எழுதிய எம். ஏ. அப்பாஸ், திறனாய்வுத் துறைக்கு புதிய வடிவம் கொடுத்த டாக்டர் கைலாசபதி, டாக்டர் கா சு. சிவத் தம்பி, தமிழகத் தமிழ் எழுத்தர்களை விடச் சிறப்பாக எழுதும் டொமினிக் ஜீவா, யோகநாதன், டேனியல் ஆகியோர் தமிழை செழிக்க வைத்த இலங்கைச் செல்வங்கள். உலகத் தமிழ் இலக்கியத்தில் இன்று வழி காட்டிக் கொண்டிருப்பது யாழப்பாணத் தமிழ் இலக்கியமே. இந்த யாழ்ப்பாணத்தில் ராணுவ அடக்கு முறையும், தமிழர்கள் சிறுபான்மையாய் வாழும் இதர பகுதிகளில் இனக்கொலையும், அன்றாடச் செய்தியாகி விட்டது.

ஆனாலும், நாமும், நம் தலைவர்களும், இப்போது கண்ணீர் வடிப்பதைப்பார்க்கும்போதும், கேட்கும்போதும்,

எனக்கு ஒரு கதைதான் நினைவுக்கு வருகிறது. குழந்தை நோயில் கிடக்கும்போது ஒருத்தி சினிமாவுக்குப் புறப் பட்டாளாம். பெற்ற பிள்ளைக்கு மருந்து கொடுத்தால், சினிமா துவங்கிவிடும் என்று நினைத்து, வந்து பார்த்துக் கொள்ளலாம் என்று வேக வேகமாய் போனாளாம். சினிமா முடிந்து திரும்பும்போது, குழந்தை செத்துக் கிடந்ததாம். கதறிக் கதறி அழுதாளாம். இவள் கதைக்கும், நாம், இலங்கைத் தமிழர்களுக்காய் கண்ணீர் விடுவதற்கும் என்ன வித்தியாசம்? அந்த நாட்டில், கடந்த ஐந்தாண்டு களாக சிங்களவர்கள், தமிழர்கள்மீது கொலை, கொள்ளை, கற்பழிப்பு தீச் செயல்களில் ஈடுபட்டது, நம் தலைவர் களுக்கும், பத்திரிகைகளுக்கும் தெரியும். தெரிந்தது, மக்களிடம் தெரிவிக்கப் பட்டதா? இல்லை. தலைவர்கள், பிறந்த நாளில் ஒரு போஸ்டரும், பிறக்காத நாட்களில் பல போஸ்டர்களும் போட்டு, விழாமயமானார்கள். பத்திரிகைகளோ, சினிமாக்காரர்களின் அந்தரங்க வாழ்க்கையை தோண்டிக் கொண்டு இருந்தன. இதனால், இலங்கைத் தமிழர்களுக்கு, ஆதரவு தெரிவிக்கும் தகுதி கூட நமக்கில்லை. ஐந்தாண்டுகளுக்கு முன்பே, நாம் தமிழகத்தில் ஒரு வலுவான இயக்கத்தைத் தோற்று வித்திருந்தால், இலங்கையில் இனப்படுகொலை, ஒருவேளை நடந்திருக்காது. காரணம், சக்திகளிலேயே பெரியது மனோசக்தி. இது சிங்களவர்களை ஆட்கொண்டிருக்கும். ஒரு வகையில், இலங்கைக் கொலைகளுக்கு, நாமும் பங்கு தாரர்களே. ஆகையால் இப்போது நாம் மேற்கொள்ளும் ஊர்வலம், ஒரு பிராயச்சித்தம்; நம்மை நாமே கேட்டுக் கொள்ளும் ஒரு சுய-மறுவாய்வு நடவடிக்கை. "ஏசுநாதர் இலங்கைத் தெருக்களில் மரித்துவிட்டார்" என்ற வாசக அட்டைகளுடன், கிறிஸ்தவப் பெருமக்கள் எப்படி மௌனமாக நடந்தார்களோ, அப்படி நடப்போம்."

தமிழரசி, கொடிமேடையில் இருந்து கீழே இறங் கினாள். அவள் பேச்சுக்குக் கைதட்டாமல் மாணவிகள்,

தங்கள் முதிர்ச்சியைக் காட்டினார்கள். ஒரே ஒரு மாணவி மட்டும், "மேடம், டி. வி. வர்லியா?" என்றாள். தமிழரசியும் இங்கிதம் தெரியாமல் சீறினாள்.

"ஒனக்கு அறிவிருக்காடா? டி. வி. க்காரங்க வராததைப் பற்றி நாம ஏன் கவலைப்படணும்? விடிய விடிய ராமாயணம் கேட்ட மூடன் கதைதான் ஒன் பேச்சு. டி. வி. க்குத்தான் இந்த மாதிரி ஊர்வலங்கள் தேவையே தவிர நமக்கு டி. வி. தேவையில்ல. நாம நம் உணர்வுகளை வெளிப்படுத்தத்தான் போகிறோம். வெளிச்சம் போட இல்ல. இப்பெல்லாம் சில சங்கங்களும், தனி நபர்களும், டி. வி. வருமுன்னு உறுதிப்படுத்தின பிறகுதான் உண்ணாவிரதத்தையே துவக்குறாங்களாம். இது பிணங்களைக் கொத்துற கழுகுத்தனத்தை விட மோசமானத்தனம். நாமெல்லாம் பப்ளிஸிட்டி மோகிகள் என்கிறதாலதான், சினிமா நடிகர், நடிகைகள் போன ஊர்வலத்தை எல்லாப் பத்திரிகைகளும் 'நடந்தே போனார்கள்' என்று பெரிசாய் போட்டாங்க. இலங்கையில தமிழன் ரத்தம் பெருக்கெடுக்கு. 'தமிழர் மாமிசம்' கிடைக்குமுன்னு போர்டு போடுறாங்க. அதுக்கான ஊர்வலத்தில நடிகர் நடிகைகள் நடந்து போனது, நம்ம பத்திரிகைக்காரங்களுக்கு பெரிய நியூஸ். ஒன்னை மாதிரி... என்னை மாதிரி... எல்லாரும் எதைப் போட்டாலும் சிந்திக்காமல் படிப்போமுன்னு அவங்களுக்குத் தெரியும். சினிமாக்காரனுக்கும்... சினிமாக்காரிக்காகவும் ..இலங்கைத் தமிழரை மட்டுமில்ல, எல்லாரையும் விட்டுக் கொடுப்போமுன்னு அவங்களுக்குத் தெரியும்."

கேட்ட மாணவி தலைகுனிந்தபோது, மற்ற மாணவிகள் "ஏய்... ஏய்... முந்திரிக் கொட்டை..." என்று உஷ்ணமாய் கேட்டார்கள். உடனே தமிழரசிக்கு தன் தவறு புரிந்தது, தான் படித்த பிரஷ்நேவின் 'கன்னிநிலம்' புத்தகம் நினைவுக்கு வந்தது.

அந்த மாணவியின் அருகே போய் அவள் கையைப் பிடித்தபடி "என்னை மன்னிச்சிடுடா. உன்னிடம் தனியாய் பேச வேண்டியதை, பகிரங்கமாய் கேட்டது தப்புத்தான். வேகமாய் பேசுறதாலயே, ஒருத்தர் வீரமுள்ளவர்னே விவேகம் உள்ளவர்னே ஆயிடாது. நான்தான் அப்படி ஆயிட்டேன்" என்று எல்லோருக்கும் கேட்கும்படியாய் சத்தம் போட்டு மன்னிப்புக் கேட்டாள்.

மாணவிகள் முன்புறமாய் திரும்பினார்கள். பானர் பிடித்த மாணவிகள் முன்னால் நடக்க, ஊர்வலம் கல்லூரி வாசலைத் தாண்டி சாலையோரமாய் நடந்தது. கை பிடித்த அட்டைகள் மேலோங்க, கழுத்துப் பிடித்த தலைகள் கீழோங்க மவுன ரதமாய் ஊர்வலம் நடந்தது. தமிழர்கள் சிதறிய குருதிபோல் சிவப்புப் புடவைகளும், கற்பழிக்கப்பட்ட தமிழ் மாந்தர் கண்கள்போல் வெளுத்த தாவணிகளும், நம்மவர்கள் எரிந்து கரியாய் போனதைப் போன்ற கறுப்புத் துணிகளுமாய் ஊர்வலம் இலங்கைத் தூதரகம் உள்ள இடத்திற்கு வந்தது.

விடுதிக்குச் செல்வதற்காக, பஸ் நிலையத்தில் காத்து நின்ற தமிழரசிக்கு ஒரே அலுப்பு. பத்மா கல்லூரிக்கு பேனர்களை வைக்கப் போய் விட்டாள். கடந்த பத்து நாட்களாக கல்லூரி ஆசிரியர்கள் சார்பாக உண்ணாவிரதம் என்றும், உழைக்கும் பெண்கள் சார்பாக ஊர்வலம் என்றும், விடுதிப் பெண்கள் சார்பாக நன்கொடை வசூலிப்பு என்றும், இரவு பகல் பாராமல் செயல்பட்ட தமிழரசி, தன்னையும் தன் பிரச்சனைகளையும் பின்னுக்குத் தள்ளினாள்.

ஏதோ ஒன்றைத் தன்னளவில் செய்த திருப்தி இருந்தாலும், அவளால் நிற்கமுடியவில்லை. ஒரு ஆட்டோவைப் பிடித்துக் கொண்டு விடுதிக்கு வந்தாள். விடுதியின் வரவேற்பறைக்குள் அவள் வந்தபோது—

உட்கார்ந்திருந்த தாமோதரன், எழுந்து நின்றான்.

# 24

**தா**மோதரனைப் பார்த்தபடியே நின்ற தமிழரசிக்கு பத்து நாட்களாக ஒழிந்து விட்டதாக அவளே நினைத்த பழைய நினைவுகள் பிடித்துக் கொண்டன. அவள் நின்ற இடம் ஊர் போலவும், காதல் கிணறு போலவும், கட்ட விழ்த்து விடப்பட்ட கொடுமைகள் நிலவிய சித்தப்பாவின் வீடு போலவும், மாறி மாறித் தோற்றம் காட்டின. ஒருவரை ஒருவர் கண்களால் பார்த்தபடி கால்களை நகர்த்திக்கொண்டார்கள். இறுதியில் மூன்றடி இடைவெளியில் இருவரும் நின்றார்கள். தமிழரசி பேசப்போனாள். வார்த்தைகளை வாங்கிக் கொள்ளும் முன்னாலேயே வாய்க்குள் விம்மல் வந்தது. லாவகமாக புறங்கையால் கண்களைத் தேய்த்தபடி அவனைப் பார்த்து சோகமாய் புன்னகைத்தாள். பிறகுதான் கண்கள் வெளுக்க,மோவாயின் முன்பகுதி துக்கத்தை அனுசரிப்பது போல தளிர்விட்ட ரோமக் கணைகளாக அவன் தவித்து நிற்பதைப் பார்த்தாள். அவனும் ஏதோ பேசப் போனான். முடியவில்லை. மோவாயில் கை வைத்து விரல்களை வாயில் பரப்பிக் கொண்டாள்.

இதற்குள் அங்குமிங்குமாய் நின்ற பெண்கள் அவர்கள் இருவரையும் விநோதமாகப் பார்த்தார்கள். 'தமிழரசியா' என்று வினாவோடு பார்த்து, நல்ல ஜோடிதான் என்ற விடையோடு தலையை ஆட்டிக் கொண்டார்கள். அவர்கள் காதலர்கள்தான் என்பதை அந்த "அனுபவசாலிப்" பெண்கள் அடையாளம் கண்டு கொண்டார்கள். கண்களைச் சுற்ற விட்ட தமிழரசி சுதாரித்தாள். "எப்போ வந்தீங்க" என்றாள். அவன் "இப்போதான்" என்று சொல்வதற்கு முன்பாகவே "வாங்க, வெளில போய் பேசலாம்" என்றாள்.

இருவரும் அந்த விடுதிக்கு வெளியே வந்து சாலையோரமாய் நடந்தார்கள். தாமுவிற்கு முன்னால் நடந்த தமிழ்,

அவனுக்காக நின்றாள். அவன் வந்ததும் அவனுக்கு இணை யாக நடந்தாள். நடந்தவர்கள் நடையை நிறுத்தி ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அதற்குள் சாரி சாரியாய் வந்த மனித நெரிசலுக்கு வழிவிட்டு அவன் முன்னாலும், அவள் பின்னாலுமாய் நடந்தார்கள். தாமு அவளுக்காக நடையைத் தளர்த்த, அவள் ஓடி வந்தாள். சிறிது நின்று ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பிறகு இணையாய் நடந்தார்கள். தமிழரசி அவனிடம் "ஆளே அடையாளம் தெரியாமல் போயிட்டீங்களே" என்றாள். அவன் சிறிது யோசித்து விட்டு, "உயிரோட யாவது இருக்கேனே" என்றான். அவனையே பார்த்த தமிழரசி, மீண்டும் மனித நெரிசலுக்கு வழிவிட்டு, ஜோடி பிரிந்து, பின்னால் தனியாய் நடந்தாள். பிறகு அவன் நடையைக் குறைக்க, இவள் கூட்ட மீண்டும் இணையான போது "ஒரு லட்டர் போடக் கூடாதா" என்றாள். முகத்தைத் திருப்பி, கண்களைத் துடைத்துக் கொண்டாள். பின்னர் கண்ணை மூடிக்கொண்டு நடப்பவள்போல், அவனை முந்தி நடந்து, சிறிது தூரத்திற்குப் பிறகு திரும்பிப் பார்த்தாள். அவன் வருவது வரைக்கும் காத்திருக்கப் பொறுக்காதவள்போல், வந்த வழியிலேயே திரும்பி நடந்து, அவனுக்கு ஜோடியாகி "என் மேல கோபந் தானே?" என்றாள் அவன், "நான் கேட்க வேண்டியது..." என்றான்.

இருவரும் மவுனமாகி, நீண்ட நடை நடந்து கடல் மண்ணில் நடந்தார்கள். அங்கே ஜோடி ஜோடியாக, தொட்டும், தொடாமலும், பேசியும், பேசாமலும் இன்பப் பூரிப்பில் இருந்த இளசுகளை, தமிழரசி அங்கீகரிப்போடு பார்த்தாள். முன்பு தோழிகளோடு இந்தப் பக்கம் வந்த போது 'சீ, விவஸ்தை கெட்டதுகள்' என்று காதல் வயப் பட்டவர்களின் காது வயப்படப் பேசியவள், இப்போது அவர்களை, 'இன்னும் நெருக்கமாய் உட்காரலாமே,' என்று கேட்பதுபோல் பார்த்தாள். குறிப்பிட்ட ஒரு

இடத்தில் தமிழரசி உட்கார்ந்தாள். ஆனந்தமாயும், அழுகையாயும் மனம் போட்ட கூச்சல், கால்களை நடக்க விடவில்லை. கீழே உட்கார்ந்த தமிழு, அவனை குழந்தை போலவும், குழந்தையைப் போலவும், பார்த்தாள். அவளருகே உட்கார தனக்குத் தகுதியில்லை என்று தாமோதரன், தன்னைத்தானே கேட்டபடி தனித்து நின்றான். தமிழரசி, அவன் கையைப் பிடித்திழுத்து உட்கார வைத்தாள். உட்கார்ந்தபடியே அவன் பக்கமாக தன்னை நகர்த்திக் கொண்டாள்,

"ஒங்க தங்கை விஜயா கல்யாணம் நல்லா நடந்துதா?"

"ஒனக்கு அது அண்ணன் கல்யாணமாய் தெரியலியா?"

"அண்ணனாய் இருந்தால் லட்டர் போட்டிருப்பானே. நான் போகக் கூடாதுன்னே .. என்னவோ கல்யாணத் துக்குப் பிறகுதான் வெறும் அழைப்பு வந்தது. அப்புறம் என் மனசு கேட்கல. அண்ணன் கல்யாணத்துக்குப் போக முடியலியேன்னு துடிச்சுது. என் மனசு என்ன மனசோ? நீங்க போனீங்களா?"

"உம், போய்த் தொலைச்சேன்!"

"ஊர் எப்படி இருக்குது?"

"ஊரா? ஏதோ இருக்குது."

"சித்தப்பாவும், கலாவதியும் எப்படி இருக்காங்க? கல்யாணத்துக்கு வந்தாங்களா? எங்கம்மா நான் வர்லன்னு துடிச்சிருப்பாளே? ஊர்ல நடந்ததை ஒன்றுகூடப் பாக்கி இல்லாமல் சொல்லுங்க. உம், ஒங்களத்தான்.

தாமோதரன், அந்த இளயிருட்டில், அவளைப் பயத் தோடு பார்த்தான். அனிச்சையாக, சிறிது விலகி உட் கார்ந்தான். அப்படியும் தன்னை அடக்க முடியாமல் எழுந் தான். அங்குமிங்குமாய் தலையைச் சுற்றினான். அவளுக்கு இன்னும் ஊரில் நடந்த விவரங்கள் தெரியாமல் இருப் பதில், ஏதோ ஒருவகையில் அவனுக்குத் திருப்தி. உண்மை

தெரிந்தால், இவள் என்னைப்பற்றி என்ன நினைப்பாள்? நான் போகட்டும், இவள் மனம் என்னபாடு படும்? நான், கெட்டவைகளை மூடி மறைத்ததுபோல், இவள் கிட்டேயும் மூடி மறைக்கலாமா? கூடாது. கூடவே கூடாது! இவளிடம் சொல்லித்தான் ஆக வேண்டும். இந்தத் தாயின் மடியில் புரண்டு, சொல்லிச் சொல்லி அழத்தான் வேண்டும். ஆனால் இன்றைக்கு அல்ல, நாளைக்கு. நாளைக்கே. இந்த இனிமையான நேரத்தை, நிதர்சனத்தில் சூடாக்க மாட்டேன். வாழ்க்கையில் வாராதது போல் வந்த இந்தப் பொழுது, ஒரு பொய்ப் பொருளாய் போனாலும், அழு பொழுதாய்...அழுகும் பொழுதாய் ஆகலாகாது.

தமிழரசி கீழே உட்கார்ந்து அவன் விரல்களைப் பற்றியபடியே "ஏன் எழுந்திட்டீங்க? என் பக்கத்துல உட்கார ஒங்களுக்குப் பிடிக்கலியா?" என்றாள். அவன் உட்காராமலே "பிடிக்காமல்தான் ஒன்னைப் பார்க்கணுமுன்னு வந்தேனா?" என்றான். அந்தப் பதிலில் மெய் சிலிர்த்த தமிழரசி, "சாரி! கலாவதி எப்படி இருக்காள்? போலீஸ் அடி கொடுத்த அதிர்ச்சியில் இருந்து மீண்டுட்டாளா?" என்றாள்.

"உம், மீண்டுட்டாள்."

"சித்தப்பா?"

"ஒரேயடியாய் மீண்டுட்டார்!"

தாமோதரன், தன்னை இழிவாகப் பார்த்துக் கொண்டான். தர்மர் 'அஸ்வத்தாமா' என்று சொன்னதுபோல், பொய்க்கு மெய்வடிவம் கொடுத்தாச்சு. மாடக்கண்ணு மாமா மரணத்தாலும், கலாவதி மூளைபிசகியும், மீண்டுவிட்டதாக அனுமானித்தது ஒரு வகையில் சரிதான். அடேடே! இப்பகூட உண்மையைத்தான் பேசியிருக்கேன்.

தமிழரசி, மீண்டும் எதையோ கேட்கப் போனாள். தாமோதரன், பேச்சை மாற்ற நினைத்தான். பொன்மணியோ, வினைதீர்த்தானோ அவனுக்கு இப்போது ஒரு

பிரச்சனை இல்லையானாலும், தன் பிரச்சனையை மறைப்பதற்காக, அவர்களைப் பிரச்சனையாக்கினான்.

"வினைதீர்த்தான்—பொன்மணி ஊர்ப்பக்கம் வரவே இல்ல. ஒனக்காவது ஏதாவது தகவல் தெரிஞ்சுதா?"

தாமோதரன் தனக்கு மீண்டும் கிடைத்து விட்ட காதல் பெருமிதத்தில் கடல் மண்ணை அள்ளி அள்ளி தூரத்தே எறிந்த தமிழரசியின் கரங்கள், மல்லாந்து மண்ணோடு நின்றன. அவனை அவனுக்குத் தெரியாமலே பார்த்தாள். அவன் பார்வை தன் மீது பட்டபோது தலையைத் தாழ்த்தினாள். நாணத்தால் கவிழ்ந்த தலை அவமானத்தால் அதிகம் தாழ்ந்தது. எப்படிச் சொல்ல முடியும்? வினைதீர்த்தானிடமிருந்து பொன்மணியைப் பிரிக்க நினைத்து— பின்னர் அதை செயல்படுத்தினால் அது தனது காதலுக்கே சாபமாகி விடும் என்ற காதல் பயத்தாலும், அவர்களைப் பிரிப்பது முறையில்லை என்ற தார் மீகப் பயத்தாலும், அடுத்துக் கெடுப்பது அநியாயம் என்ற தர்ம பயத்தாலும், தானே முயன்று, சட்ட ரீதியாக அவர்கள் திருமணத்தை முன்நின்று நடத்தி வைத்ததை எப்படிச் சொல்வது? நேற்று கூட பொன்மணி போட்ட கடிதம் வந்ததை எப்படிச் சொல்வது? அப்படிச் சொன்னால் அவர்கள் ஊரில் இருந்து வெளியேறியதற்கும் தனக்கும் சம்பந்தம் என்று ஆகிவிடுமே. காதலி என்று ஆசையோடு பார்க்க வந்தவர் துரோகி என்று விலகக் கூடாதே. அதற்காகச் சொல்லாமல் இருப்பதா? அது துரோகங்களிலேயே மிகப் பெரிய துரோகம். சொல்வேன்! இந்த இனிமையான நேரத்தில் அல்ல, நாளைக்கு. நிதானமாக—பீடிகையாக சுற்றி வளைத்துச் சொல்ல வேண்டும். இப்போது என் தாமுவின் சிந்தனையும் செயலும் எனக்கே... எனக்கே...

தமிழரசியும் எழுந்தாள். இருவரும் கடலை நோக்கி தத்தம் குற்றவுணர்வுச் சுமையோடு நடந்தார்கள். விடமாட்டேன் என்பதுபோல் ஒருவர் கரத்தை இன்னொருவர்

மவுனமாகப் பற்றியபடி இலக்குத் தெரியாமல் சுற்றிச் சிரேணி அரங்கின் அருகே உட்கார்ந்தார்கள். தமிழரசி அவன் விரல்களுக்கு சொடுக்கு விட்டபடியே கேட்டாள்.

''டூட்டிக்கு எப்போ போகணும்?''

''வீட்டுக்கா?''

''டூட்டிக்கு?''

''போகணும் ஒரே வழியாய் ...ஸாரி... ஒரு வழியாய் போகணும்.''

''நீங்க டூட்டிக்கு போவீங்களோ...மாட்டீங்களோ, நமக்குத் தெரியாதுப்பா. இன்னும் நாலு நாளைக்கு என்னை விட்டுப் போகப்படாது. போக விடமாட்டேன். வேணுமுன்னால் 'சிக்' லீவு கேட்டு தந்தியடிங்க.''

தாமோதரன் முகம் உறைந்தது. அண்ணனும், கல்யாண வீட்டில் இப்படித்தான் சொன்னான். அப்புறம் வேலையை விட்டது தெரிந்ததும் அடித்தான். இவளும், தன் வேலையை காட்டியது தெரிந்ததும், அடிக்கப் போகிறாள். அது நோயடி... இது மரணடி...

தாமோதரன் புலம்பலாய் கேட்டான்.

''ஒரு வேளை...நான் இங்கேயே இருந்து, அதனால் என் வேலை போய்விட்டால் என்ன செய்வே?''

''சந்தோஷப்படுவேன்! என் தாமு ஏழை பாழைகளை இனிமேல் அடிக்க மாட்டார்னு ஆனந்தப்படுவேன். நீங்க சப்-இன்ஸ்பெக்டர்னு காதலிக்கல. அந்தப் பதவிக்குப் போறதுக்கு முன்னாலேயே காதலிச்சவள். சப்-இன்ஸ்பெக்டராய் ஆன பிறகும் தொடர்ந்து காதலிச்சேனே, அதுவே என் அசைக்க முடியாத அன்பை காட்டலியா? ஏன் கன்னா பின்னான்னு உளறுறீங்க?''

''என்னமோ தெரியல... இப்போல்லாம் என்ன பேசுறோமுன்னு எனக்கே தெரிய மாட்டங்குது.''

"இந்தா பாருங்க தாமு, எப்படியோ ஒங்க அண்ணும் வாலயும், போதாக்குறைக்கு பொன்மணி விளை தீர்த் தாளுலயும், நாம் எல்லோருமே கஷ்டப்பட்டுட்டோம். தெரிஞ்சும் தெரியாமலும் நாம் ரெண்டு பேருமே தப்பு செய்திருக்கலாம். போனது போகட்டும். முன்பு, பார்க் கிறதுக்கு டிப்டாப்பாய் இருக்கும் உங்களை இந்தக் கோலத்தில பார்க்கையில இப்போகூட எனக்கு அழுகை வருது. நாளைக்கு நீங்க பழைய தாமோதரனாய் வரணும்."

"பழைய தாமோதரனைப் பார்க்கத்தான் போறே."

"குட்... நல்லது."

"குட்டோ... பேடோ... நல்லதோ... கெட்டதோ..."

ஒரு பூக்காரச் சிறுமி தட்டோடு வந்தாள். தமிழரசி, தாமுவை செல்லச் சிணுங்கலில் அதட்டினாள்.

"பூக்காரப் பொண்ணைப் பாருங்க."

தாமோதரன் பார்த்தான். கேட்டான்.

"ஏய்...போ...போ...பூ வாங்குற நிலைமையில இல்ல... சமய சந்தர்ப்பம் தெரியாமல்..."

"அய்யோ... அய்யோ... அவளை நான் விரட்டச் சொல்லல. ஒங்க கையால என் தலையில..."

தமிழரசியால் பேச்சைத் தொடர முடியவில்லை. நாணத்தோடும், பொய்க் கோபத்தோடும் அவனைப் பார்த்தாள். 'ஒன் தலையிலதான் ஒரேயடியாய் கை வச்சுட்டேனே...' என்று உள்ளூறப் புலம்பிய தாமோதரன், மனிதச் செடிபோல் ஒதுங்கி நின்ற பூக்காரச் சிறுமியிடம், மூன்று முழம் பூ வாங்கினான். தமிழரசி, நாணத்தால் சிரித்து அவன் கரத்திற்குக் கீழே, தன் தலையைக் குனிந்த போது, தாமோதரன், உள்ளத்துப் புலம்பலில் ஒடுங்கிப் போய், கதம்பப் பூவை, அவள் தலையில் சூடினான். அதையே கழுத்தில் விழுந்த தாலியாகப் பாவித்து தமிழரசி, தன்பாட்டிற்குப் பேசிக் கொண்டிருந்தாள்.

"என் மூச்சை எப்படி என்னுல கணக்கெடுக்க முடியாதோ, அப்படி ஒங்களை நான் நினைத்ததை கணக்கெடுக்க இயலாது. உண்ணும்போதும், உறங்கும்போதும் ஒங்களைத்தான் நினைச்சேன்னு சொன்னுல், அதுக்கு இடைப்பட்ட நேரத்துல நினைக்கலன்னு அர்த்தமாயிடும். வாழ்க்கை தற்காலிகம் என்ருலும் வாழ்கின்ற ஜீவராசிகள் நிரந்தரம் என்று எல்லா மதங்களும் சொல்லுது. இப்படி ஒரு நிரந்தரத்துவம் கண்டு ஏனே நான் என்னுள்ளே பயந்திருக்கேன். ஆன்மா நிரந்தரம் என்ருல், முடிவு இல்லாத எதுவும் போரடிக்கிறது மாதிரி இதுவும் போரடிக்குமேன்னு பயப்படுறேன். ஆனுல் ஒங்களோட நிரந்தரமாய் இருக்க முடியும் என்கிற நினைப்பு வரும்போது, ஆன்மா மட்டுமில்ல... இந்த வாழ்க்கையும் நிரந்தரமாய் இருக்கணுமுன்னு நினைக்கிறேன். ஊர்ல நடந்த சம்பவங்களுக்குப் பிறகு நான் பட்ட பாடு... படுற பாடு... சில சமயம் என் தாமு அயோக்கியனுய் மாறி, அதனுலயே நான் அவரை வெறுக்கணுமுன்னுகூட நினைக்கிறேன். அப்படி ஆனுல் கூட, என்னுல ஒங்களை மறக்க முடியாது போலத் தோணுது. என்னை எப்போவாவது நினைச்சீங்களா? நினைக்காட்டாலும், நினைச்சேன்னுவது சொல்லுங்க. சினிமாவுல நடிப்புன்னு தெரிஞ்சாலும் நாம் லயிப்போமே அது மாதிரி, நீங்க பொய் பேசுனுக்கூட சுகம் கிடைக்கும். ஏன்னு, இனிப்புச் சுவை திகட்டும்; இது மாதிரி இனிய சுவை எப்பவுமே திகட்டாது. சொல்லுங்க என்னை எப்போ நாகர்கோவிலுக்குக் கூட்டிட்டுப் போவீங்க? நான் வேலையை விட்டுட்டு, இப்பகூட ஒங்களோட வரத் தயார். ஒங்களை விடமாட்டேன். என் தாமுவை இனி மேல் விடவே மாட்டேன். பேசுங்கத்தான்..."

தாமோதரனுல், தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவள் அன்பு ஜோதியில் தான் கருகுவது போலிருந்தது. அப்புறம் புடம்போட்ட பொன்னுய் மாறியது போலிருந்தது. அத்தனை கருமை உணர்வுகளும் எரிந்து, அவனும்,

அவனுள் அவள் வயப்பட்ட காதலும் மட்டும் தங்கியிருப்பது போலிருந்தது. உயிர், காதலாகி தனித் தன்மையை இழந்தது மாதிரியான பிரமை; அவன், உணர்ச்சிப் பிழம்பாகி, அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். இதை எதிர்பாராததால், அவனைப் பொய்க் கோபமாய், நாணத்தில் தேய்ந்த வார்த்தைகளால் பேசி, சிறிது தன்னை நகர்த்தப் போனவள் அவன் பக்கம் நகர்ந்து, அவனைக் கட்டிப் பிடித்து, பதறிப் பேசினாள்.

''எத்தான், என்னத்தான் இது, ஏன் அழுகிறீங்க? அட எதுக்குத்தான் அழுகிறீங்க?''

தாமோதரன், மீண்டும் தன் வசமானான். அவனையே பார்த்திருந்த தமிழரசி, அவன் கண்களைத் துடைத்த படியே, தன் கண்களைப் பொழிய விட்டாள். தாமு, அவள் கண்களைத் துடைத்து விட்டான். நடந்தவைகளுக்காக, தாமு வருத்தப்படுகிறான் என்பதைப் புரிந்து கொண்ட தமிழரசி, பழைய ரணத்தைக் கிளற விரும்பவில்லை. ஒருவரை ஒருவர் அணைத்தபடி, இருவரும் காலத்தை மறந்து, காலங்காலமாய், அந்த கடற்கரையிலேயே காதல் நினைவுச் சின்னங்களாய் நிரந்தரமாய் இருக்கப் போவதுபோல் இருந்தார்கள். கடற்கரைக் காதலர்கள் போய்விட்டார்கள். சுண்டல் பையன்கள் போய் விட்டார்கள். கிராக்கிகளும், கிராக்கர்களும் போய் விட்டார்கள். கடற்கரை ரவுடிகள்கூட, காலிழைத்து நின்று போனார்கள். தமிழரசி சுதாரித்தாள்.

''போகலாமா?''

''இதுக்குள்ளேயா?''

''நாளை வரத்தானே போகுது!''

''அதனாலதான் போக மனம் வர்ல''

தமிழரசி எழுந்து, இன்னும் எழாமல் இருந்த தாமோதரனைத் தூக்கினாள். ''எப்போ... என்ன கனம்...''

என்று சொன்னபடியே அவனை நிறுத்த முயற்சித்தாள். அவன் விருப்பமில்லாமல் எழ, இருவரும் வேகமில்லாமல் எழுந்தார்கள். கடற்கரைச் சாலையில் வந்த ஆட்டோவில் ஏறி, அண்ணாசாலையில், நவீன ஓட்டல் ஒன்றிற்குச் சென்றார்கள். "என்ன சாப்புடுறே?" என்று தாமு கேட்டபோது, "மனசு நிறைவாய் இருக்கையில் சாப்பிடத் தோணுதோ" என்றாள் தமிழரசி.

சர்வர் 'போங்கள்' என்று கதவைத் தட்டித்தட்டி, தந்தி மொழியில் சொன்ன பிறகு, இருவரும் ஒரு டாக்சியில் ஏறினார்கள். விடுதியில் டாக்சி வந்ததும் தமிழரசி வெறுப்போடு இறங்கினாள். உள்ளே இருந்தவனைப் பார்த்து "உங்களோட லாட்ஜ் அட்ரஸை சொல்லலியே?" என்றாள்.

"எழுதிக்கிறீயா?"

"வாயால சொல்லுங்க. அதுகூட மனசில நிற் காட்டால் அப்புறம் இந்த உயிர் உடம்புல நிற்காதுன்னு அர்த்தம்."

"சீமா லாட்ஜ் ... ரூம் நம்பர் 15; தெற்கு கிராஸ் தெரு... நாலாவது அவென்யூ... அண்ணா நகர்."

"நாளைக்குக் காலையிலேயே சீக்கிரமாய் வந்துடுங்க. இந்த ராத்திரிப் பொழுதை எப்படித்தான் தாங்கிக்கப் போறேனோ? என்ன பேசாமல்... சீ... ரொம்ப மோசம்..."

"கவலப்படாதே. நாளைக்குச் சீக்கிரமாய் முடிஞ் சிடும்."

"என்ன உளறுறீங்க?"

"நாளைப் பொழுது சீக்கிரமாய் வந்துடுமுன்னு சொல்ல வந்தேன். விடிஞ்சிடும் என்கிறதுக்கும், முடிஞ் சிடும் என்கிறதுக்கும் வித்யாசமில்ல."

தமிழரசி, ஏதோ பேசப்போக, முதலில் இருமிப் பார்த்த டிரைவரும், விடுதி வாட்ச்மேனும் எரிச்சல்

பட்டதுபோல், முன்னவர் வண்டியை ஸ்டார்ட் செய்தார்' பின்னவர் கம்பிக் கேட்டை, 'கிரீச் கிரீச்' என்று ஸ்டார்ட் செய்தார்.

பிரிய மனமில்லாமல் பிரிந்து அறைக்குள் வந்த தமிழரசியை, பத்மா கோபமாகப் பார்த்தாள். "என்னடி இது, ஒரு நாளும் இல்லாத திருநாள்?'' என்று அவள் கேள்வி கேட்கப் போன போது, தமிழரசி, மேஜையில் கிடந்த கடித உறையைப் பிரித்தாள். நிதானமாக முதல் வரியைப் படித்தவள், கடிதத்தின் உடல் பகுதிக்கு வந்ததும் துடித்தாள். பின்னர் முகத்தைக் கடிதத்தின் முன்பகுதியிலும், பின்பகுதியிலும் நகர்த்திக் கொண்டாள். இறுதியில் நிலையிழந்து, நிர்க்கதியானவள் போல் பத்மாவின் தோளில் சாய்ந்தாள். சாய்ந்தபடியே புலம்பினாள்; புரண்டாள்.

"சித்தப்பாவை சாகடிச்சிட்டாங்களாமே? கலாவதியை பைத்தியமாக்கிட்டாங்களாமே? இந்த தாமோதரன் இவ்வளவு பெரிய அயோக்கியனா? மோசம் போயிட்டேனடி பத்மா!''

# 25

பத்மா துடிதுடித்தாள். என்னவெல்லாமோ சொல்லிவிட்டு, இறுதியில் தன் தோளில் பேச்சு மூச்சு இல்லாதவள் போல் கிடந்த தமிழரசியை "என்னடி... என்னடி'' என்று சொல்லியபடியே அவளைக் கட்டிலில் கிடத்தினாள். படபடப்பாகி தமிழரசியின் மூக்கில் கை வைத்தாள். பிறகு கண்ணாடிக் குவளையில் இருந்து கையில் நீர் மொண்டு அவள் முகத்தில் அடித்தாள். வெளியே வார்டனிடம் சொல்லி டாக்டரை வரவழைக்கலாம் என்று வெளியேறப் போனாள்.

அதற்குள் தமிழரசி, உடம்பை அசைவற்றுப் போட்டபடி முகத்தை மட்டும் ஆட்டினாள். 'சித்தப்பா...கலா...

சித்தப்பா...அடேய் முத்துலிங்கம், அடேய் தாமு...' என்று முணங்கி முணங்கி அரற்றினாள். பத்மா கட்டிலில் உட்கார்ந்து தமிழரசியின் தலையை தன் மடியில் போட்ட படி "என்னடி எழுதியிருக்கு? 'இடுக்கண் வந்தால் நகுக' என்று வள்ளுவர் சொன்னதை எனக்குச் சொல்லிட்டு. இப்படிப் புலம்பலாமாடி?" என்றாள்.

தமிழரசி அவள் மடியில் தலைபுரட்டி, கண்ணில் நீர் புரட்டிக் கத்தினாள்.

"வள்ளுவர்...பெண்ணாகவோ, இல்ல ஏழையாயோ... இருந்தால் இப்படி எழுதியிருக்க மாட்டாரு. இந்தாடி லட்டரு. கடவுளே! மோசமானவங்களால மோசமாய் போயிட்டோமே. பத்மா, இந்த லட்டரைப் படிச்சுக் காட்டுடி. என் உயிர் போறதுக்கு முன்னால ஒரு தடவை படிச்சுக் காட்டுடி. படிடி. ஒருவேளை நான்தான் தப்பாய் புரிஞ்சுட்டேனோ என்னவோ, படிப்பா!"

பத்மா, தமிழரசியின் கையில் துவண்ட கடிதத்தை வாங்கினாள். கோணல் கோணலான எழுத்துக்கள். தமிழரசி, அவள் விலாவை இடித்தாள். பத்மா படிக்கத் துவங்கினாள்.

"தமிழரசிக்கு,

நீ, நல்லவளோ... கெட்டவளோ... ஒனக்கு ஒன்றை எழுத வேண்டியது என்னோட கடமை! இவ்வளவு நாளும், யோசித்து யோசித்து இன்னைக்குத்தான் எழுதுறேன். 'தான் ஆடாட்டாலும் சதை ஆடும்' என்பார்கள். நீ ஊருக்கு வராததில் இருந்து உனக்கு நம்பலூர் அசிங்கங்கள் தெரியாதுன்னு நினைக்கிறேன். ஒருவேளை தெரிஞ்சதால தான் வராமல் இருக்கியோ என்னமோ?"

"நீ மெட்ராஸ் போன ராத்திரியிலேயே, முத்துலிங்கம் ஒன்னோட சித்தப்பா பைத்தியாரத் தர்மரையும், அவரோட மகளையும் ஆட்களை வச்சு அவன் தோட்டத்துக்கு ராத்திரியோட ராத்திரியாய் தூக்கிட்டுப் போனான்.

மாடக்கண்ணுவை, கையைக் காலைக் கட்டி, கிணத்துக்குள்ள தள்ளி கொன்னுட்டான். ஒரு பாவமும் அறியாத கலாவதியின் உடம்புல, கண்ட கண்ட இடத்துலயும், காணக் கூடாத இடங்கள்லயும் சூடுபோட்டு அவளைப் பைத்தியமாக்கிட்டான்.''

''போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் போன விவகாரத்தை, ஒன்னோட 'இவன்' சப்-இன்ஸ்பெக்டர் தாமோதரன் சரிக்கட்டிட்டான். நாகர்கோவிலுல ஒரு எஸ்டேட் முதலாளியோட ஊருக்கு வந்து, ஊரையே அநியாயத்துக்கு சமாதியாக்கிட்டான். போலீசை வச்சு ஊரை மிரட்ட வச்சான்.''

''ஒங்க அய்யா ஏழாயிரம் ரூபாய் கலாவதியோட பிழைப்புக்குன்னு வாங்கிட்டு, பக்கத்து வயல வாங்கிட்டார். கலாவதி, குடிக்கக் கஞ்சி இல்லாமல், பைத்தியமாய் (பைத்தியம் மாதிரியில்ல... பைத்தியமாயே) திரியுறாள். அதே சமயம், இந்த அக்ரமங்களைச் செய்த முத்துலிங்கமும், அவனோட கையாட்கள் பேச்சிமுத்து, எல்லாரும், சாராயமும் கோழியுமாய், சிரிப்பும் கும்மாளமுமாய் ஊர்ல கூத்தடிக்காங்க. ஒருவேளை நீ ஏதாவது வம்பு பண்ணுவியோன்னு பயப்படுறாங்க. அதனாலதான் ஒங்க அண்ணனுக்கு விஜயாவை அவசர அவசரமாய் கொடுக்குறாங்க. ஆனாலும் ஒன்கிட்ட பயம்.''

''தாமோதரனை வச்சு ஒன்னை சரிக்கட்டப்போறதாய்... அதாவது அவன் மெட்ராஸ் வந்து... உள்ளத்தால மயக்குன ஒன்னை, உடம்பாலயும் மயக்கப் போறதாய் ஒரு பேச்சு அடிபடுது. ஒன்னோட கல்யாணம் ஒன் சொந்த விவகாரம். ஆனாலும் ஒன்று சொல்லியாகணும். அதுல, மாடக்கண்ணோட இழவு விவகாரத்தை மறக்கப் போறியா, இல்ல மறுபடியும் எடுக்கப் போறியா? நீ எப்படிப் பட்டவள்னு இனிமேல்தான் எனக்குத் தெரியணும். என்ன செய்வியோ, ஏது செய்வியோ, கலாவதிக்கு ஒரு

வழி செய்துட்டாவது போ. நீ சுயநலக்காரியா, பொது நலக்காரியா தெரியணும்!

இப்படிக்கு
உண்மை விளம்பி.''

தமிழரசி, ஓவென்று கூச்சலிட்டாள்.

ஆமாம். நான் சுயநலக்காரிதான். சித்தப்பாவையும், கலாவதியையும் போலீஸ் அடிச்ச பிறகும், அவங்களை நிர்க்கதியாய் விட்ட பாவி நான். தாமோதரன் மேல இருந்த காதலால, அவருக்கு ஏதாவது தீமை வரப் படாதுன்னு, ஊர்ல நடந்ததை சென்னையில பெரிய போலீஸ் அதிகாரிங்ககிட்ட புகார் செய்யாத பாவி நான். அல்லும் பகலும் அற்பத்தனமான தாமோதரன் மேல் இருந்த மயக்கத்தால, ஊர்ல நடந்ததை கேட்கக்கூட நேர மில்லாமல்போன வில்லி நான். அய்யோ... சித்தப்பா... கலா...

தமிழரசி, சொல்ல மாட்டாது அழுதாள். பிறகு அசைவற்றுக் கிடந்தாள். ஒருவருக்கு என்றால் ஒரேயடி யாய் அழலாம். ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்கு எப்படி அழுவது? சித்தப்பாவுக்கா... கலாவுக்கா... கனவாய் போன தன் காதலுக்கா?

தமிழரசியையே கண்களில் நீர் சொட்டக் கவனித்த பத்மாவிற்கு மனதில் ஒரு பொறி கிளம்பியது. அதில் அவளுக்கே நம்பிக்கை இல்லையானாலும் ஆறுதலைக் கருதி, அதட்டிச் சொன்னாள்.

''என்னடி நீ, சின்னப்பிள்ளை மாதிரி? எவனோ ஒரு ஸ்கௌண்டிரல் பொறுக்கி நடந்ததையும், நடக்காத தையும் சேர்த்து எழுதியிருக்கான்; அவன் ஆசைப்படுறதை செய்தி யாக்கிட்டான். எனக்கென்னமோ, அவன் சொன்னபடி எதுவுமே நடந்திருக்காதுன்னு நினைக்கேன்.''

அசைவற்றுக் கிடந்த தமிழரசியின் கையாடியது, காலாடியது. எழுந்து உட்கார்ந்து பத்மாவின் கைகளைப் பிடித்தபடி கெஞ்சினாள்.

"பத்மா! என்னைப் பார்த்து இன்னொரு தடவை சொல்லுடி. என் சித்தப்பா உயிரோடதான் இருப்பாரா? என் கலா சுயபுத்தியிலதான் இருக்காளா? என் தாமு நல்லவன்தானா?"

"அந்த மடையனைப் பற்றி இப்போ ஏண்டி பேசுறே? மனசுல சந்தேகமும், பயமும் வந்துட்டால் அதுவே பீதி யாகும். என்றைக்குமே மொட்டை லட்டர்களை பெரிசாய் எடுக்கப் படாது. அப்டி எடுத்தால் நாமதான் மொட்டை யாவோம். நீ அழுகிறது மாதிரி எதுவும் நடந்திருக்காது. வேணுமுன்னால் பாரேன்."

"அப்படியா சொல்றே! ஒண்ணு செய்வோமா?... அடையார்ல, எங்க ஊருக்குப் பக்கத்து ஊர்க்காரர் இருக்கார். ஒரு ஆட்டோவுலயோ, டாக்சியிலயோ ரெண்டு பேரும் போய் கேட்டுட்டு வருவோமா?"

"இப்பவே மணி பன்னிரண்டு. இந்த மெட்ராஸ்ல பெண்கள் பகல் நேரத்துலயே தனியாய் போக முடியாது. காலையில் போவோம்."

"அதுவரைக்கும் என் உயிர் தாங்காதடி."

"என்னடி நீ குழந்தை மாதிரி..."

"பத்மா...என் கூட எவளும் பிறக்கல...தங்கை மாதிரி நினைச்சவள் பைத்தியமாய் போயிட்டாலும் எனக்கு இன்னும் பைத்தியம் பிடிக்கல. ஏன் தெரியுமா? ஒரு தங்கை உருப்படாமல் போயிட்டாலும், இன்னொரு தங்கை—என் கூடப்பிறக்காத சகோதரி—இந்த அறை யிலயே இருக்கிறதுனாலதான் நான் கோப்பெருந்தேவி மாதிரி சட்டுன்னு சாகாமல் இருக்கேன்டி."

“பத்மாவிற்கு அந்த நேரத்திலும் அவள் பேச்சு இதயத்தைப் பூரிக்கச் செய்தது. உறவற்ற தனக்கு உறவு கொடுப்பவளை—இன்று அந்த உறவை வெளிப்படையாய் சொல்பவளை—கட்டியணைத்தாள். உள்ளத்தால் பூரித்து உணர்வால் அழுதாள்.

தமிழரசி பத்மாவை நச்சரித்தாள்.

“டெலிபோன்ல பேசலாமாடி?”

தமிழரசியை கைத்தாங்கலாய் பிடித்தபடி, பத்மா, மாடியில் இருந்து கீழே இறங்கினாள். அவர்களைப் பார்த்து, தூக்கம் கலைந்த ‘வாட்ச்மேன்’ எழுந்தான். அவனிடம், டெலிபோன் சாவியைக் கேட்டார்கள். அவன், வார்டன் அறையை கை நீட்டிக் காட்டிவிட்டு, கொட்டாவி விட்டான்.

வார்டன் அம்மாவின் அறைக்கு வந்து, பத்மா காலிங் பெல்லை அழுத்தினாள். தமிழரசி கதவைத் தட்டினாள். விட்டுவிட்டு காலிங்பெல் ஓசையும், விடாமல் கதவோசையும் ஒலித்தன. பத்து நிமிடமாகியும் பதில் இல்லை. பத்மா, குனிந்து பார்த்தாள். அறையில் பூட்டுத் தொங்கியது. வார்டன் அம்மா, ஒருவேளை செகண்ட் ஷோ போய்விட்டார்களோ என்னமோ?

தமிழரசி, தலைவிரி கோலமாக, பத்மாவின் கையைப் பிடித்தபடி, டெலிபோன் பக்கம் வந்தாள். கீழே, அவளுக்கென்றே போட்டதுபோல் கிடந்த கம்பியை எடுத்தாள். தடுக்கப்போன பத்மாவை, வெறிபிடித்தவள் போல் தள்ளி விட்டு விட்டு, கம்பியால் ‘டைகர்’ பூட்டை துழாவினாள். அது வேடனின் அம்பு பட்ட புலியாகி, டெலிபோன் ரிஸீவர் குமிழை லேசாய் உடைத்தபடி விழுந்தது. தூங்கிக் கொண்டிருந்த தோட்டக்கார— காவல்கார இளைஞன்மேல் உராய்ந்தது.

தமிழரசி, டெலிபோன் எண்களைச் சுழற்றினாள். நல்ல வேளையாக மணியடித்தது. ‘அடையார்’ ராஜ

கோபால், தூக்கம் கலைவதற்கு ஐந்து நிமிடமும், ஐந்து நிமிடம் துள்ளி எழுவதற்கும் நேரம் கொடுத்து நின்றாள். பிறகு, பத்மாவைப் பார்த்து "பதிலே இல்லியே?" என்றாள்.

"இந்தா பாரு தமிழு. ஏதாவது நடந்திருந்தாலும் அதை இனிமேல் மாற்ற முடியாது!"

"என்னடி நீ, கொஞ்ச நேரத்துக்கு முன்னால எதுவும் நடந்திருக்காது என்று எனக்கு உயிர் கொடுத்தே. இப்போ..."

"எதுவும் நடந்திருக்காதுன்னு இப்பவும் நினைக்கேன். அதனால காலையில..."

"முடியாதுடீ... நீ வந்தாலும் வராட்டாலும் அண்ணா நகர் சீமா லாட்ஜ்ல, அவரைப் போய் கேட்கப் போறேன்."

"எவனை டி?"

"அதுதாண்டி தாமோதரன். இன்னைக்கு வந்திருந் தார்டி... வந்திருந்தாண்டி.... அவர்... அவன் கூடத்தான் கடற்கரைக்குப் போனேன். அப்புறம் ஓட்டலுக்குப் போனேன். அண்ணா நகர்ல தங்கியிருக்கார். இப்பவே போய், ஊர்ல நடந்ததை கேட்டுட்டு வரணும். இந்தாப்பா வாட்ச்மேன்! ஒரு ஆட்டோ..."

"ஒனக்கு மூளை இருக்காடி! ஒருவேளை ஊர்ல, லட்டர்ல சொன்னது மாதிரி நடந்திருந்தால்... நீ அடிக்கடி சொல்ற அந்த தாமோதரன் ஒரு ஜென்டில்மேன்—அயோக்கியன். லேடி-கில்லர். இப்போ நீ அங்கே போய், உண்மை தெரியாமல் இருக்க ஒன்னையும் அவன் ஏதாவது செய்திட் டால்? ஏதோ திட்டம் போட்டுத்தான் ஒன்னைப் பார்க்க வந்திருக்கான். டர்ட்டி பெல்லோ... டாங்கி..."

"என்ன பத்மா, எதுவும் நடந்திருக்காதுன்னு நீதான் சான்னே. உண்மை தெரியுமுன்னாலே பிறத்தியாரை திட்டப்படாதுடி."

"ஓ சாரி. அவன் எனக்கு மட்டுந்தான் பிறத்தியான் என்பதை மறந்துட்டேன். சரி... வா... அறைக்குப் போவோம்."

தமிழரசி, மீண்டும் டெலிபோனைச் சுழற்றினாள். மணியடிக்க மறுக்கவில்லை. வெறுப்போடு ரிஸீவரை வைத்து விட்டு பத்மாவுடன் படியேறினாள். அறைக்கு வந்ததும் தனது தனிக்கட்டிலில் படுக்காமல், பத்மாவுடன் சேர்ந்து படுத்தாள். "பத்மா, என் கையை பிடிச்சுக் கோடி" என்று பதறியடித்துச் சொன்னாள். பத்மா அவளை அணைத்துக் கொண்டாள். "டீ பத்து... நீ சொல்றது மாதிரி எவனோ ஒரு அயோக்கியனோட வேலையாய்த்தான் இருக்கும். இல்லியா?" என்றாள். பத்மா, "ஆமாடி... பேசாமல் படுடி... நான் அதைத்தான் யோசித்துக் கொண்டிருக்கேன்" என்றாள்.

பத்மா, எப்படியோ தூங்கிப் போனாள். தமிழரசி, அவள் பிடியை விலக்கி மல்லாந்து படுத்தாள் கண்கள் திறந்து கிடந்தன. மனம் மூடிக்கிடந்தது. பத்மாவை எழுப்பி, மீண்டும் அவள் வாயால் "அப்படில்லாம் நடந் திருக்காது" என்று கேட்கப் போனாள். ஏனோ எழும்ப வில்லை. ரேடியத்தில் மின்னிய, அவளது கைக் கடிகாரத் தையே உற்றுப் பார்த்தாள். வினாடிகள் அவளுக்கு நிமிடக் கணக்கிலும் நிமிடங்கள் மணிக்கணக்கிலும் நகர்ந்து கொண் டிருக்கின்றன. "கடவுளே... அடேய் .. கடவுளே... இந்த லட்டரில் வந்ததெல்லாம் பொய்யாக இருக்கணும். என் சித்தப்பா உயிரோடு இருக்கணும். என் தங்கை நான் பார்த்தது போலவே இருக்கணும்!"

கடிகார முள்போல், விழியுருட்டி, தமிழரசி புரண்டு புரண்டு படுத்தாள். எழுந்து உட்கார்ந்தாள். நின்றபடி சுவரில் சாய்ந்தாள். அப்படியே தரையில் விழுந்தாள். கடி காரம் மூன்று முறை கூவியதும், எழுந்தாள். ஒருவேளை செகண்ட்ஷோ சினிமாவிற்குப் போய் விட்டு ராஜகோபால் வந்திருக்கலாம் என்று நினைத்து, படியிறங்கினாள். டெலி

போன் சுழற்றினாள். பதிலில்லை. மீண்டும் மேலே வந்தாள். சித்தப்பா, ஆவியுருவில் 'நீ பாதுகாப்பு கொடுக்கலே' என்று முறையிட்டார். கலாவதி ஆள்காட்டிவிரலை அவளை நோக்கிக் காட்டினாள்.

தமிழரசி தூக்கத்திற்கும், சுயபிரக்ஞைக்கும் இடைப்பட்ட நிலையில் கிடந்தாள். ஆறுமணியடித்தபோது அவளால் எழுந்திருக்க முடியவில்லை. தாமோதரனை அவன் அறையில் சந்திக்க விரும்பவில்லை. மனம் பயங்காட்டியது. எப்படியும் வருவான் . வரட்டும்

வாட்ச்மேன் வந்து 'காப்பிக்கு' தட்டினான்.

தமிழரசி, தூங்கிக் கொண்டிருந்த பத்மாவின் ஆடைகளைச் சரிசெய்துவிட்டு, கீழே இறங்கினாள். இன்னொரு தடவை ராஜகோபாலுக்கு போன் செய்யலாமா?... தாமோதரன் லாட்ஜுக்கு டெலிபோனில் தொடர்பு கொள்ளலாமா? மனம் ஒப்பவில்லை. கடிதம் காட்டியவை உண்மைதான் என்பது தெரிந்து விடுமோ என்ற பயம். தாமோதரன் முழு உண்மையைச் சொல்லாமல், நழுவி விடக்கூடாதே என்ற அச்சம். தாமோதரன் வருவதற்கு முன்புள்ள இந்த இடைவேளைதான், இனிமேல் வாழ்க்கையிலேயே வரும் துக்கம் குறைந்த நேரம் என்று நினைத்தாள். காபியை, தானும் குடிக்காமல், பத்மாவை எழுப்பி குடிக்க வைக்காமலும், கட்டிலில் மீண்டும் சாய்ந்தாள்.

அப்புறம், பத்மாதான் அவளை எழுப்பினாள். தமிழரசி, வாரிச் சுருட்டி எழுந்தாள். முகத்தைக் கழுவிவிட்டு, முந்தானையால் துடைத்தபடி, வெளியே வந்தாள். விடுதியின் கேட்டிற்கு வந்து, தாமோதரன் வருகிறானா என்று எட்டி எட்டிப் பார்த்தாள். இறுதியில் சோர்வுற்று, வரவேற்பறையில் சோபாவில் சாய்ந்தாள். முன் கைகளில் முகம் கவிழ்ந்து, எவ்வளவு நேரம் இருந்தாளோ... அவளுக்கே தெரியாது. 'தமிழு' என்ற சத்தங் கேட்டு, கண் விழித்தாள்; தாமோதரன்!

தமிழரசி, துள்ளி எழுந்தாள். தாமோதரனைக் கொட்டக் கொட்டப் பார்த்தாள். பிறகு இடுப்பில் செருகப்பட்ட மொட்டைக் கடிதத்தை எடுத்து அவனிடம் நீட்டினாள். அவன் வாங்கிக் கொண்டபோது, வாட்ச்மேன் வந்து "மேடம், வார்டன் ஒங்களை உடனே கூப்பிடுறாங்க" என்றான். அவன் சொன்னதைக் கவனிக்காமலே, தமிழரசி, கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்த தாமோதரனின் முகபாவத்தையே பல் தெறிக்கப் பார்த்தாள்.

கடிதத்தைப் படித்து முடித்த தாமோதரன், அவளைப் பார்க்க முடியாமல், எதிர்ப்புறத்துக் கண்ணாடியைப் பார்த்தான். அங்கேயும் தமிழரசியின் முகத்தைப் பார்த்துவிட்டு, முன் வரிசைப் பற்கள், பின்னுதட்டை அழுத்த, நிலையற்று நின்றான்.

தமிழரசி, அவன் முன்னாலும் பின்னாலும் நகர்ந்து கத்தினாள்.

"மிஸ்டர் தாமு, சொல்லுங்க. இந்த லட்டர்ல எழுதியிருக்கதெல்லாம் உண்மையா? சொல்லுங்க சார்! ஒங்களத்தான்...இதோ என் துடிப்பைப் பாருங்க மிஸ்டர். நான் படுற பாட்டைப் பாருங்க மிஸ்டர்...'நம்மைப் போய் இவள் சந்தேகப் பட்டுட்டாளேன்'னு நீங்க அரிச்சந்திரத் தனமாய்—நேர்மையில் ரோஷப்பட்டுப் பேசாமல் நிற்கிறதாய் நான் இப்போகூட நினைக்கேன். சொல்லுங்க மிஸ்டர்... சொல்லுய்யா... ஒன்னைத்தான்... சொல்லித் தொலைங்க."

தாமோதரன் கழுத்தைப் பின் பக்கமாய் சாய்த்தான். அவளை விட்டு விலகி நின்றான். தமிழரசிக்கு முதுகைக் காட்டியபடி "பொய்யுன்னால் நான் மறுத்திருப்பேனே" என்று சொல்லியபடியே, கைகளால் முகத்தை மூடிக் கொண்டான்.

தமிழரசி ஆவேசியானாள்.

"நீங்க மனுஷஞ? இல்ல...இல்ல...மிருகம், மிருகத்துலயும் கேடுகெட்ட மிருகம். சீ! ஏய்யா என் வாழ்க்கையில குறுக்கிட்டே? கடவுளே...கடவுளே!"

கூப்பிட்டும் வராத கோபத்தில், அதிலும் இரவு லேட்டாக வந்தும், டெலிபோன் பூட்டை உடைத்தும் 'டிஸ்ஸிபிளினை' மீறிய தமிழரசியை, நேரடியாகத் திட்டுவதற்காக ஓடிவந்த வார்டனம்மா, அவள், ஒரு இளைஞனிடம் பல்லைக் கடித்துப் பேசுவதையும் அவன் தலை கவிழ்ந்து தல்ல—அதை இழந்தவன் போல் நிற்பதையும் பார்த்துவிட்டுக் கோபத்தை அதே விகிதாச்சாரத்தில் அனுதாபமாக மாற்றிக்கொண்டாள். பரிதாபமாக நோக்கியபடி பறிகொடுத்தவன் போல் கண் செருக, அதற்கு விழியால் சமாதி கட்டி, வேர்த்து விறுவிறுத்து நின்ற தாமோதரனை நோக்கி தமிழரசி, சில சொல்லம்புகளை எய்யப்போனுள்.

அதற்குள் வார்டன், தமிழரசியின் தோளில் கை போட்டு, தன்னேடு சேர்த்து இழுத்தபடி நடந்தாள். நிலைமையின் நிலை புரியவில்லையானுலும், அதன் வேகத்தைப் புரிந்து அதைக் குறைக்க நினைத்தவள் போல், தாமோதரனைப் பார்த்து "பீ ஹியர்...ஷி வில் கம்" என்று சொல்லிவிட்டு, தமிழரசியிடம் "பீகாம்...பீகாம்" என்று அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தபடியே, தன் அறைக்குள் அழைத்துச் சென்ருள்.

வார்டன் அம்மாவிடம், ஐந்து நிமிட நேரம் அழுதுவிட்டு, அதற்குப் பிறகு நடந்ததைச் சொல்லிவிட்டு, நான்கு பேர் பரிகசிக்கும்படி நடந்துகொள்ளப் போவதில்லை என்று அந்த அம்மாவிடம் வாக்குக் கொடுத்துவிட்டு பதினைந்து நிமிட நேரம் கழித்து, தமிழரசி எழுந்தாள்.

அவளுடன் எழுந்த வார்டன், பிறகு இருக்கையில் அமர்ந்தபடி, "நீ இண்டலிஜெண்ட் கேர்ல். அந்தப் பையனும் என் அனுபவத்தில் பார்க்கும்போது கெட்ட

வனைத் தெரியல. அவன், நடந்ததுக்குப் பொறுப்பில்ல. நடந்ததுக்குப் பிறகு நடந்ததுக்குத்தான் பொறுப்பு. நாம நேர் கோட்ல போறதாய் நினைச்சுத்தான் வாழ்க்கையில் நடப்போம். ஆனால் வாழ்க்கை வட்டக்கோடு. நடக்கிறவனுக்கு அந்த வட்டம் நேர் கோடாய் தெரியும். பார்க்கிறவனுக்குத்தான் அது வட்டமுன்னு புரியும். இதுக்கு சுய நலம் சொத்து சுகம் என்கிற மையத்துல, இந்த சமூக அமைப்பு உழல்வதே காரணம். இந்தக் காலக் கட்டத்துல, தனி மனித பிரயத்தனங்கள் இந்த சமூகச் சாக்கடையில பன்னீரைத் தெளித்தது மாதிரி. எந்த முடிவு வேணுமுன்னாலும் எடு ஆனால் பாவம். அவனுக்கு முடிவு கட்டுறதாய் இருக்க வேண்டாம். விஷ் யூ பெஸ்ட்'' என்றாள்.

தமிழரசி, ஆவேசம் குறையாமலே வெளியே வந்தாள். வரவேற்பறைக்கு வந்து, அங்குமிங்குமாய் பார்த்தாள். விழியருகே, ஒரு நெருப்புக் குச்சியை வைத்திருந்தால், அது தீப்பிடித்து எரிந்திருக்கும். எரிந்த கண்களோடு, எல்லா இடங்களையும் பார்த்தாள். ஆனால்—

தாமோதரனைக் காணவில்லை.

# 26

நேர்மையானவர் என்று ஒருவரை நாம் நம்பும் போது அவர் சாதாரணமாகப் பேசும் பேச்சுக்கூட தர்மத்தின் உரைபோல தோன்றும். அதே போல், அயோக்கியன் என்று நாம் நம்பும் ஒருவர், தரும நெறிகளைப் பற்றிப் பேசினால் நமக்கு அந்த தர்மத்தின் மீதே அதர்மமான கோபம் வரும். நேர்மையானவர்களை, நியாயம் தேடுபவர்களை, சூதுவாதில்லாத சுத்தர்களை ஆட்டுவிக்கும் உளவியல் விதி இது.

இதனால் ஆட்கொள்ளப்பட்ட தமிழரசி, கடற்கரையில் தாமோதரன் அழுததை, கை தேர்ந்த அயோக்கியனின் கண் நடிப்பாகக் கருதி, அவன் அடிக்கடி கடைப்பிடிக்கும் மவுனத்தை வஞ்சகமாகக் கருதி, நேற்று அவன் தன்னிடம் வந்ததையே வலை விரிப்பாகக் கருதி, புழுவைத் தேடுவது போல் அவனைத் தேடிப் பார்த்தாள். கிடைக்கவில்லை.

இதற்குள் விடுதி வாட்ச்மேன் வந்து, அவளிடம் நான்காக மடிக்கப்பட்ட காகிதம் ஒன்றை நீட்டியபடி "இதை அந்த ஆளு ஒங்ககிட்டே கொடுக்கச் சொல்லிட்டு ஓடிட்டாருமா" என்றான்.

தமிழரசி, காகித மடிப்புக்களைக் கலைத்தாள். அதை வரி வரியாய், வார்த்தை வார்த்தையாய் ஒரேயடியாய் பார்த்து விட்டு, சோபாவில் சாய்ந்தாள். நடுங்கிய கரங்களில் கசங்கிய காகித வரிகள் கண்வழியாய் நெஞ்சுக் குள் போய் நிலையிழந்து தவித்தன.

"தகுதியில்லாத இந்தப் பாவிக்குத் தற்காலிகமாய் கிடைத்த தமிழரசியே!

உன் முன்னால் நிற்கக்கூட தகுதியில்லாமல் ஓடு கிறேன். உன்னைப் பற்றிய இனிய எண்ணங்களையும், என்னைப் பற்றிய கொடிய நினைவுகளையும் சுமந்தபடியே ஓடுகிறேன். நீ சொன்னதுபோல் நான் மிருகம். மிருகம், மனிதர்கள் மத்தியில் நடமாடலாமா? கூடாது. ஆகையால், கூனிக் குறுகி மிருகமாகவே என்னைப் பாவித்து மீள்வது தெரியாமல், மீட்பவர் கிடைக்காமல் ஓடுகிறேன்.

நீ காட்டிய கடிதத்தில் குறிப்பிட்டது போல் மாடக் கண்ணு மாமாவை என் அண்ணன் என்று சொல்லப் படுபவனே சாகடித்தான். கலாவதிக்கு சூடு போட்டான். இப்படி நடக்கும் என்றோ, நடத்திக் காட்டுவான் என்றோ நான் நினைக்கவில்லை. என்றாலும், அவன் நடத்திய கொடுமைகளை மூடி மறைத்த கொடியவன் நான். என்

தமையனை போலீசில் ஒப்படைக்க நினைத்தபோது, கடமை முன்னிழுக்க, பாசம் பின்னிழுக்க, நான் பாசத்தை விழுங்காமல், பாசத்தால் விழுங்கப்பட்டேன்.

ஆனால், அதற்குப் பிறகு நான் பட்ட வேதனை—பட்ட என்பது தவறு. அது படும் வேதனை—படப்போகிற வேதனை—ஆயுட்கால சித்ரவதை—உடல் வாதையைவிட கொடிய மனவாதனை—குற்றச்சுமை தாங்கமாட்டாது, சப்-இன்ஸ்பெக்டர் பதவியை ராஜினாமா செய்தேன். ஊருக்கு ஓடினேன். கல்யாண வீட்டில், விஷயத்தைக் கேள்விப்பட்டதும், அங்கேயே அண்ணன் என்னை அடித்தான். அவன் மனைவி மானபங்கமாய் பேசினாள். அப்பா வெளியேறச் சொன்னார். வழிகாட்ட வேண்டிய தந்தையே, வீட்டுக்கு வெளியே வழிகாட்டினார். ஒருவரும், தட்டிக் கேட்கவில்லை.

வெளியேறிய நான், நெல்லைக்குப் போய் பெரிய போலீஸ் அதிகாரியிடம் நடந்ததைச் சொல்லி, சரணடையத்தான் நினைத்தேன். பழையபடியும் பாசம் என்னைத் தாளிட்டது. ஒன் அண்ணன், ஒனக்கு கல்யாணம் பற்றி கடிதம் எழுதவில்லையானாலும், ஒனக்கு ஒன் அண்ணனை வெறுக்க முடியுதா? அதே நிலைதான் என் நிலை.

நடந்ததையெல்லாம், உன்னிடம் சொல்லிவிட்டு, எங்கோ தலைமறைவாகப் போகத்தான் வந்தேன். நேற்று, அந்த இனிமையை கெடுக்க மனமில்லாமல், இன்று சொல்ல நினைத்தேன். அதற்குள், எவனோ ஒரு நியாயவான் முந்திக் கொண்டான். குடும்பத்தின் கொடுமைகளுக்கு உடன்பட்டு, ஊருக்குப் பகையாகி, நீ கொண்ட காதலுக்கும் துரோகியாகி, இனந் தெரியா திசைக்குள் போகிறேன். நீ இதுவரை, நல்லதுக்காக எப்படி அல்லதைச் சாடினாயோ அப்படியே இறுதிவரை சாட வேண்டும். நான் எங்கிருந்தாலும், நீதான் என் நினைவு.

அந்தத் தகுதியில் நான் செய்த பாவங்களுக்குப் பரிகாரம் தேடுவேன். இதை ஒப்புதல் வாக்குமூலமாகவும், நீ போலீசில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

எங்கேயாவது, வடநாட்டில் ஒரு அனாதைப் பிணம் கிடந்ததாகச் செய்தி வந்தால், அது ஒரு வேளை நானாக இருக்கலாம். அப்போது நீ அழக்கூட வேண்டாம். அயோக்கியனாய்ப் போன ஒருவன் மீண்டும் யோக்கியனா வதற்கு, அவனுக்குத் தெரிந்த ஒரே வழி இதுதான் என்று நீ, இரு சொட்டுக் கண்ணீர் விட்டால், அதுவே எனக்கு பால் வார்ப்பு; அதுவே ஈமக்கடன்.

உன் காதல் பூஜையில் வைக்க முடியாத தாழம்பூ நான். தாழம்பூ பொய்ச் சாட்சி சொன்னதாய் புராணம் சொல்கிறது. ஆனால் நானோ, சாட்சிகளையே பொய்யாக்கி விட்டேன். என் .. தங்க நிலாவே! என்னை மன்னிச் சுடும்மா. தாயே, என்னை மன்னிச்சுடும்மா.

போகிறேன். உன்னை... மன்னிக்கவும்... உங்களை ஒருமையில் அழைக்கும் யோக்கியதை எனக்கேது?

இருந்த அன்பை எங்கேயோ விட்ட, தாமு.''

தமிழரசி, தாமுவின் கடிதத்தையும் அத்துடன் அவன் இணைத்திருந்த மொட்டைக் கடிதத்தையும், ஙகக் கொன்றாய் வைத்தபடி சுவரில் தலை சாய்ந்தாள். இதற்குள் பத்மாவும் குளித்து முடித்துவிட்டு, கோதி முடிந்த முடியோடு வந்தாள். தமிழரசியின் கோலத்தைப் பார்த்து, அவள் நிலைமையை யூகித்துக் கொண்டாள்.

அவள் கையில் இருந்த கடிதத்தை, பலவந்தமாகப் பிடுங்கிப் படித்தாள். படித்து முடித்துவிட்டு, தமிழரசி யின் அருகேஅமர்ந்து அவள் தோளில் தட்டினாள். ''பாவம், இந்த தாமோதரனும் என்னசெய்வார்? அவரோட கதையும் ஒன் சித்தப்பா, தங்கை கதை மாதிரிதான் முடியும்போலத் தோணுது. பூவர் மேன். தற்கொலை

பண்ணிக்கப் படாது,'' என்று சொன்னபடியே தமிழரசிக்கு ஆறுதல் அளிக்க வழிதெரியாது விழியாட்டினாள்.

தமிழரசி நிமிர்ந்து உட்கார்ந்தாள். தாமு, ஒருவேளை தற்கொலை பண்ணிக்குவாரோ? இனிமேல் அவரைப் பார்க்க முடியாதோ? என்னாலயே இந்த வினைதீர்த்தான்— பொன்மணி திருமணத்தைச் சொல்ல முடியல. என்னால கூட சித்தப்பா உயிருக்கு விலை வாங்கிய தந்தை மீது நட வடிக்கை எடுக்கணும் என்று தோணல. அப்படித்தானே அவருக்கும் இருந்திருக்கும். நானே அவரை துரத்திட் டேனே. என் மன்னவனை நானே ஆண்டியாய் அனுப் பிட்டேனே. தாமு... தாமு... எங்கே போனீங்க தாமு?

அருகே வந்த வாட்ச்மேனிடம், அவள் குலைநடுங்கக் கேட்டாள் :

''அவரு எந்தப் பக்கமாய் போனாரு?''

''நான் சரியாய் கவனிக்கலம்மா...''

''அவரு போய் எவ்வளவு நேரம் இருக்கும்?''

''பத்து நிமிஷத்திற்கு மேலவே இருக்கும்.''

தமிழரசி எழுந்தாள். பத்மாவும் எழுந்து, ''எங்கே போறே'' என்றாள். தமிழரசியால் பேச முடியவில்லை. பேதலித்து நின்றாள். பிறகு, ''தாமு இந்தப்பக்கம் எங்கே யாவது தென்படுறரான்னு பார்த்துட்டு வாறேன்'' என்று சொல்லிவிட்டு, பத்மாவின் பதிலுக்குக் காத்திராமல், விடுதியின் வாசலுக்கு வந்தாள். அந்தச் சமயம் பார்த்து வந்த ஆட்டோ ரிக்ஷாவில் ஏறிக் கொண்டாள். மேற்குப் பக்கமாக வண்டியை விடச் சொன்னாள். ஒரு கிலோ மீட்டர் தூரம்வரைக்கும், கண்களை அங்குமிங்குமாகச் சுழற்றினாள். பிறகு டிரைவரிடம், ஆட்டோவை கிழக்குப் பக்கமாக விடச் சொன்னாள். டிரைவர், அவளை ஒரு மாதிரி பார்த்தபோது, தமிழரசி கையெடுத்துக் கும்பிட்டு, கண்ணீரும், கம்பலையுமாய் மன்றாடினாள்.

"டிரைவர் அண்ணு! என்னைப் பைத்தியமுன்னு நினைக்காதீங்க. ஒருத்தரைப் பறிகொடுத்துட்டுத் தேடுறேன். இப்போ அவரைக் கண்டுபிடிக்க முடியாட்டால், அப்புறம் அவரை எப்பவுமே கண்டுபிடிக்க முடியாது. இந்த ஒவ்வொரு நிமிஷமும், எனக்கு விலமதிப்பில்லாதது; எவ்வளவு பணம் வேணுமுன்ஞலும் தாரேன்... நான் சொல்ற இடத்துக்கெல்லாம் ஓட்டணும். கூடப்பிறந்த அண்ணன் மாதிரி ஒங்ககிட்டே கேட்கிறேன்... தயவு செய்து..."

அவளையே விநோதமாகப் பார்த்த டிரைவருக்கு, அவளின் சோகம் தொத்திக் கொண்டது. "எந்தப் பக்கம் போகணும்மா? ஸீட்ல நல்லா உட்காருங்க" என்ருர். ஆட்டோரிக்ஷா வந்த வழியாய் வந்து, கிழக்குப் பக்கமாய் ஒரு கிலோ மீட்டர் தூரம் போனது. மீண்டும் திருப்பி ஓடியது. தெற்குப் பக்கம் அவன் தென்படவில்லை. வடக்குப் பக்கம் முட்டிச்சந்து. "அண்ணுநகர்" என்ருள். நகர்கிறது. வழியில் ஒரு பெட்ரோல்பங்கில் நின்றது. காலையிலேயே பெட்ரோல்போட்டு ரெடியாய் இருக்கக் கூடாது? நீங்க மட்டுமில்ல, எல்லா டிரைவர்களுக்குமே இப்படித்தான். அவசரமாய் போகும்போதுதான் பெட்ரோல் இருக்காது" என்ருள். டிரைவர், அதை காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

வண்டி அண்ணுநகருக்கு வந்து அந்த லாட்ஜை கண்டுபிடிக்க அரைமணி நேரம் ஆகியது. விடுதிக்குள் சென்று விசாரித்தாள். தாமோதரன், பத்துப் பதினைந்து நிமிடத்திற்கு முன்புதான் அறையைக் காலிசெய்துவிட்டு ஒரு ஆட்டோவில் ஓடி விட்டாரும். அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தவர்களைப் பார்க்காமலே அவள் ஆட்டோவிற்குத் திரும்பினுள். "சென்ட்ரல் ஸ்டேஷன்" என்ருள்.

தமிழரசி, ரயில்நிலையத்திற்குள் முட்டிமோதி ஓடினுள். டிக்கட் கவுண்டர்களைப் பார்த்தாள். தாமுவின் சாயல்

கொண்ட ஒரு சிலரைப் பார்த்து சந்தோஷமாய் முன்னேறி சலிப்போடு பின்னேறினாள். ரயில்வே பிளாட்பாரங்களில் டில்லி ரயிலை, பம்பாய் மெயிலை, கல்கத்தா வண்டியை பெட்டி பெட்டியாக சல்லடை போட்டாள். ஒவ்வொரு முகத்தையும் உற்று உற்றுப் பார்த்தாள். ஓடிப் பார்த்தாள். தேடிப் பார்த்தாள். இறுதியில் ஓய்ந்து போனாள்.

ஆட்டோவிடம் மீண்டும் வந்தவள், எங்கேபோவது என்று தெரியாமல் விழித்தாள். டிரைவர் ''இம்மா பெரிய சிட்டில எப்படிம்மா கண்டுபிடிக்க முடியும்? இனிமேல் அவராய் வந்தால்தான் உண்டு'' என்று சொல்லி விட்டு, அவளையே பரிதாபமாய் பார்த்தான். அவளோ எதுவும் சொல்லாமல், இருக்கையில் விழுந்தாள். ஆட்டோ அவள் மனம்போல் அலறியது. உடல் போல் ஆடியது.

அவள் விடுதிக்குத் திரும்பும்போது நண்பகல்; டிரை வரை அங்கேயே இருக்கும்படி சைகை செய்துவிட்டு, அறைக்குள் வந்தாள். அவளுக்காகவே கல்லூரிக்கு விடுப்புப் போட்டுவிட்டுக் காத்திருந்த பத்மா, பதறி எழுந்தாள்.

''எங்கேடி போனே? சொல்லியிருந்தால் நானும் வந்திருப்பேனே.''

''அப்புறமாய் சொல்றேன். ஆட்டோ வெளில நிக்குது. என் பெட்டில பணம் இருக்கு. ஆட்டோவை அனுப்பிட்டு வா. இந்த இடத்தை விட்டு என்னால நகர முடியாது.''

பத்மா பணத்தோடு போனாள். தமிழரசி, கட்டிலில் சாய்ந்தாள். தாமுவின் கடிதத்தை மேலும் கீழுமாய் பார்த்தாள். முகத்தோடு சேர்த்து அணைத்தாள். பய பக்தியோடு பார்த்தாள். பதற்றத்தோடு மடித்தாள்.

பத்மா திரும்பி வந்ததும், தமிழரசி, குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

"விரட்டிட்டேனே...என் தாமுவை நானே விரட்டிட்டேனே...எவ்வளவு கஷ்டத்தோடு வந்தாரோ? எவ்வளவு ஆசையோடு வந்தாரோ? ஆறுதலுக்காக வந்த மனிதரை அவமானமாய் பேசி அனுப்பிட்டேனே! தாமு... தாமு.. என்னை மன்னிச்சிடுங்க தாமு. நீங்க பதவியைத்தான் பறிகொடுத்தீங்க, நான்... ஒங்களையே பறிகொடுத்துட்டேனே. பாவி நான்! சண்டாளி நான்... நான்... இனிமேல் உலகத்துல இருக்கப்படாது. நீங்க இந்நேரம் எங்கே இருக்கீங்களோ? எப்டி தவிக்கீங்களோ? என்னைப் பற்றி என்ன நினைக்கீங்களோ? தாமு! என் தாமு..."

தமிழரசி, என்னவெல்லாமோ பேசிக் கொண்டிருந்தாள். சிறிது நேரம் அவளை அவள் போக்கில் விட்ட பத்மா, இறுதியில், அவளுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்யத் தீர்மானித்து தமிழரசியின் முன்னால் போய் நின்று அவளைச் சாடினாள்.

"என்னடி இது? உலகத்துல நீ ஒருத்திதான் கஷ்டப்படுறது மாதிரி அங்கலாய்க்கிறே. ஒன்னை என்னமோன்னு நினைச்சேன், கடைசில நீ இவ்வளவுதானா? நேற்று இலங்கை இனப்படுகொலையை கண்டிச்சுப் பேச ஒனக்கு என்னடி தகுதியிருக்கு? கொழும்புல தீயில எரிந்த தமிழ்க் குழந்தைகளை நினைச்சுப் பாருடி. கர்ப்பிணிப் பெண்களோட வயிறுகளைக் கிழித்த பேடித்தனக் கொடுமைகளைக் கற்பனை செய்து பார். 'இங்கே தமிழர் மாமிசம் கிடைக்கும்' என்று அங்கே போர்டு போட்ட அரக்கத்தனத்தை எண்ணிப் பாருடி.

அவ்வளவு ஏன்? நம் காலேஜில படிக்கிற அந்த இலங்கை மாணவி என்னமா புலம்பினாள்? அவளோட குடும்பத்தின் நிலைமையைக் கண்டு பிடிச்சுக் கொடுக்கிறதாய் வாக்குக் கொடுத்தே. சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாய் அலட்டிக்கிட்டே. சொந்தத் துன்பத்தைத் தாங்கிக்க முடியாதவங்களுக்கு,

பிறத்தியார் துன்பத்தைத் தீர்க்கிற யோக்கியதை கிடையாது. இவங்களோட துன்பங்களைவிட ஒன் துன்பம் பெரிசாடி? இப்போ கலாவதி எந்தத் தெருவுல பைத்தியமாய் சுத்துருளோ? அவளைவிட இந்த தாமு ஒனக்குப் பெரிசாப் போயிட்டான் என்ன? ஊருக்கு உபதேசம் ஒனக்கில்லே என்கிறது உண்மைதான்.''

தமிழரசி, எழுந்து உட்கார்ந்தாள். பத்மாவின் வார்த்தைகள் ஒவ்வொன்றிற்கும் ஏற்றபடி உடம்பை அசைத்தாள். பத்மாவை, கூச்சத்தோடு பார்த்தாள். அவள் இப்போது குரலை இறக்கி, கோபத்தைக் குறைத்து, அனுதாபத்தைக் கூட்டிப் பேசினுள்.

''கஸ்தூரிபாய் இறந்ததுனுல, காந்தி போராட்டத்தை நிறுத்தல. கமலாநேரு இறந்ததாலே, நேரு செயல் படாமல் இருக்கல. வறுமை வாட்டியபோதும் கார்ல் மார்க்ஸ் ஏழை மக்களின் ஆயுதத்தை கூர்மைப்படுத்தாமல் இருக்கல. இந்த சமூக அமைப்புல, நியாயம் கேட்கத் துவங்குறது புலிமேல் ஏறி சவாரி செய்யுறது மாதிரி. பாதில இறங்கினுல், பாதிக் கிணறு தாண்டின கதை தான்.

இப்போ ஒருத்தனுக்காக ஓய்ஞ்சு போறது சுயநலம். அதையும் மீறி செயல்படுவதுதான் மனிதாபிமானம். ஒன்னேட துயரம் எனக்குத் தெரியாமல் இல்ல. அதே சமயம் தாமுவோட வாழ முடியாட்டாலும், நாம் மனித குலத்தோடத்தான் வாழ்றேமுன்னு நினைச்சுப்பாரு. பெரிசாய் முடங்கி, சிறிசாய் போயிடப்படாது. கண் முன்னுலயே சிங்களவர் கையில் கணவனேட தலையைப் பார்த்த இலங்கை தமிழ்த் தாய் ஒருத்தியின் நிலைமையை விடவா ஒன் நிலைமை துயரமானது?

ஒனக்கு எவ்வளவோ வேலை காத்திருக்கது தெரியுமா. ஊருக்குப் போய் கலாவதிக்கு ஒரு ஏற்பாடு செய்யணும்.

நம்மோட இலங்கை மாணவிக்கு ஒரு வழி செய்யணும். ஒருத்தரோட வாழ்க்கையில் துயரங்கள், அரைப்புள்ளி களாய் இருக்கணும். முற்றுப்புள்ளியாய் ஆயிடப்படாது. தாமோதரனோ, இன்னும் மூளை குழம்பாத ஆண் மகன். ஆனால் கலாவதி? இதுக்கு மேலேயும் நீ புலம்பிக்கொண்டி ருந்தால், கலாவதியையும், அவளை மாதிரி அபலைகளையும் நீ இழிவு செய்ததாய் ஆகிடும். அப்புறம் ஒன் இஷ்டம்.''

பத்மா, தமிழரசியைப் பார்க்காமல், பேச்சில் லயித்தாள். அவளே இப்போது தன்னுள் ஒளிந்து கிடந்த சக்தியின் ஒளிப் பிரணயாமத்தை அறிந்தவள் போல் வீரிய மானாள்.

தமிழரசியின் வெளுந்த கண்கள் சிவக்கத் துவங்கின. உறைந்த நெஞ்சம் கொதிக்கப்போனது. கண்களில் நிறைந்த நீராலேயே முகத்தைக் கழுவிக் கொண்டாள். அதை முந்தானையாலும் துடைத்துக் கொண்டாள். பதற்றமற்ற குரலில் – பற்றறுத்த தோரணையில் முகம் இறுக, இடுப்புச் சேலையை இறுக்கிக் கொண்டே பதிலளித் தாள்.

''தப்பு என்மேலதான் பத்மா! மனிதர்கள், குழந்தைத் தனமாய் இருக்கலாம். ஆனால் சிறுபிள்ளைத்தனமாய் இருக்கப்படாது. நானோ, இரண்டாவதில் சிக்கிய—ரெண் டாந்தரப் பெண்ணாய் மாறிட்டேன். நல்ல வேளையாய் நீ என்னை மீட்டிட்டே. இனிமேல் நான் ஒரேயடியாய் செத்தாலும் சாவேனே தவிர, செத்துச் செத்துப் பிழைக்க மாட்டேன். குட்டையை கடலாக நினைத்து மூழ்கிய நான், இனிமேல் கடலையே குளம்போல் கலக்கப் போறேன். அந்த சக்தியை ஊட்டிய ஒனக்கு நன்றி. புறப்படுடி, ஒரு இடத்துக்குப் போகலாம்.''

# 27

இயற்கை, கலாவதிக்கு சிதறிப்போன மூளையை ஒன்றாகச் சேர்க்கவில்லையானாலும், அவள் மொட்டைத் தலையில் முடி விதைகளை வளர வைத்திருந்தது. கூர்மையான முட்கம்பிகள் மாதிரி, தலையெங்கும் குத்தகப்பட்ட கூந்தலை, இடது கையால் குட்டிக் கொண்டோ, தட்டிக் கொண்டோ வலது கையால், 'கும்பாவிற்குள்' கிடந்த சோளக் கஞ்சியையும், அகத்திக் கீரையையும் துழாவிக் கொண்டிருந்தாள். முடிபட்ட கரத்தை, முள் பட்டவள் போல் எடுத்தபடியே, 'எய்யோ... எய்யோ...' என்று கவளத்திற்குக் கவளம் சொன்னபடியே வாயில் கஞ்சியை போட்டுக் கொண்டிருந்தாள்.

திடீரென்று, மனிதக் கதவுகளாய் வாசலை மறைத்த கூட்டத்தைப் பார்த்து மருண்டாள். 'எய்யோ...' என்று கூவிக கொண்டே நார்க் கட்டிலுக்குக் கீழே, தவழ்ந்து தவழ்ந்து பதுங்கப் போனாள். பயந்தோடு பார்த்தவள் கண்களில், பழகிய முகங்கள் தென்பட்டன. விழிகள் பரபரக்க முட்டிகளில் காலூன்றி, எழுந்தாள்.

வெளியே பலத்த கூட்டம். ஆண், பெண் அத்தனை பேரும், வாசலுக்குள்ளும், வாசலுக்கு அப்பால் உள்ள முற்றப் பகுதியையும் வியாபித்திருந்தார்கள். அவர்களுக்கு முன்னால் வாசலின் இருபுறக் கதவுகள் போல் நின்ற தமிழரசியும், வினைதீர்த்தானும் கலாவதி மேல் அப்படியே சாயப் போனார்கள். சுருள் சுருளாய் முடியோடு, வட்ட முகத்தோடு, வகிடெடுத்த கூந்தலோடு, புதுப்பானைப் பொங்கல் போல், மங்கலமாய் தோன்றிய கலாவதிக்குப் பதிலாய், மொட்டைத் தலையோடு, தலையிலும், உடம்பிலும், திட்டுத் திட்டாய், பொசுக்கலாய், வெந்த தோலாய், கறுப்புத் துளைகளாய், சிவப்புக் காயங்களாய்

சிந்தையிலும் சூடுபட்டு நின்ற கலாவதி, அங்கே இருந்த தால்தான், அவளே இவள் என்று நம்புவது போல் நம்ப முடியாமல் பார்த்தார்கள். பொன்மணி கணவனுக்கும், அண்ணிக்கும் இடையே அல்லாடிக் கொண்டிருந்தாள்.

கலாவதி, தன்னை நோக்கி வந்த அண்ணனுக்கு தோள் கொடுக்காமல், லாவகமாய் ஒதுங்கி தமிழரசியை, மலங்க மலங்கப் பார்த்தாள். 'எய்யோ... எய்யோ...' என்று, முன்னிலும் பலமாய் கத்தியபடியே தனது தந்தை மாடக் கண்ணு படுக்கும் காலியான நார்க் கட்டிலையும், தமிழரசியையும் மாறி மாறிப் பார்த்தாள். நம்ப முடியாமல், நகர முடியாமல், பார்க்க முடியாமல், பகர முடியாமல் கண் தீரப் போவது போல் கலாவதியையே பார்த்தபடி நின்ற தமிழரசி, அவளை ராட்சதத்தனமாய் தன்னிடம் இழுத்து, மார்போடு சாய்த்து, அவளின் சூடுபட்ட தலையிலேயே தனது வெம்பிக் கொதித்த தலையை மாறி, மாறி மோதினாள். கலாவதியும், அவள் கழுத்தைச் சுற்றி கரங்களைக் கோர்த்துக் கொண்டு 'எய்யோ... எய்யோ'... என்றாள். மீண்டும், அய்யா படுத்த கட்டிலைக் காட்டுவதற்காக தமிழரசியின் மார்பில் இருந்து மீளப்போனாள்.

தமிழரசியே, கலாவதியையும் சேர்த்துப் பிடித்தபடி சுவரருகே பாய்ந்தாள். தலையை சுவரில் மாறி மாறி மோதினாள். ''கலா...அய்யோ...கலா...'' என்ற வார்த்தை களல்லாது அவளால் வேறு வார்த்தை பேச இயலவில்லை. யாரோ அவள் தலையைப் பிடித்தார்கள். உடனே, வீடு கொள்ளாச் சத்தத்துடன் தாங்க முடியா வேகத்தோடு, கரங்களால் முகத்தில் மாறி மாறி அடித்துக் கொண்டாள்.

இதற்குள், பொன்மணி பிடிதாரம் இல்லாமலே தரையில் விழுந்தாள். விழுந்தவள் எழாமல் வினைதீர்த் தானின் காலை கட்டிக் கொண்டு ''எல்லாம் என்னால வந்தது. என்னாலதான் வந்தது. ஒங்க குடும்பத்தையே கருவறுத்த பாவியோட தங்கச்சி நான். என்னைக்

கொன்னுடும். இப்படி வருமுன்னு தெரிஞ்சிருந்தால், நான் அப்பவே விஷத்த சாப்பிட்டு இறந்திருப்பேன். நானே எல்லாருக்கும் விஷமாயிட்டேனே...'' என்று அரற்றினாள். பிறகு கண்ணீரும் கம்பலையுமாய் கணவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் நின்ற நிலையையும், பார்த்த பார்வையையும் பார்த்தபடியே அவள் கத்தினாள்.

''ஒமக்கு என்ன வந்தது? அய்யோ அவரைப் பாருங்க தமிழண்ணி. ஒங்க அண்ணனைப் பாருங்க. என்னமோ ஆகப் போகுது. எனக்கு பயமாய் இருக்கே. அய்யோ, அவரைப் பாருங்க.''

எல்லோரும் வினைதீர்த்தானையே பார்க்கத் துவங்கினார்கள்.அவனோ, திறந்த வாய் திறந்தபடி இருக்க, விழித்த கண் வெறித்தபடி விழிக்க, நின்றபடியே செத்தவன்போல் அசைவற்று நின்றான். பொன்மணியின் ஒப்பாரி, கூட்ட அமளியையும் ஊடுருவிக் கொண்டிருந்தது. வெளியே இருந்து நெருக்கியடித்த கூட்டமும், வினைதீர்த்தானை மொய்த்தது; அவனோ அத்தனை பேரும் பார்ப்பது தெரியாமல் அய்யாவின் வெறுமைக் கட்டிலைப் பார்ப்பது போலிருந்தது. உள்ளூற தன்னைத்தானே பார்ப்பது போலவும் இருந்தது. கூட்டப் பிரளயத்தில் தானாய் மிதந்து வந்த முத்துமாரிப்பாட்டி, எப்படியோ வினைதீர்த்தானின் அருகே போய் ''எய்யா... ஏய் ராசா'' என்று அவன் கையைப் பிடித்தாள். அந்தக் கை, சுரணையற்றே கிடந்தது.

பொன்மணியின் ஒப்பாரியோ அல்லது கூட்டம் நெருக்கியடித்ததற்கான காரணமோ புரியாமல், நரக லோகத்தில் கலாவதியோடு கூட்டு சேர்ந்து உலவிய தமிழரசி, அங்கிருந்து விடுபட முடியாமல் தத்தளித்தாள். பிறகு எப்படியோ கூட்டத்தின் கூப்பாட்டில் சுயநினைவுக்கு வந்து கூட்டத்தைப் பார்த்தாள். கூட்டம், கூட்டாகப் பார்த்த வினைதீர்த்தானைப் பார்த்தாள்.

தமிழரசிக்கு பிரக்ஞை வந்தது. தன்னோடு தானாய், மார்பில் கவசம்போல், கட்டிப்பிடித்த கலாவதியின் மோவாயை நிமிர்த்தி, ''கலா... அதோ... நம் அண்ணன் நிற்கான் பாரு! ஒன்னோட நிலைமையைப் பார்த்துட்டு அவன் எந்த நிலையில நிற்கான்னு இதோ பாருடி பாவிப் பொண்ணே!'' என்று சொல்லியபடியே, அவளை, வினை தீர்த்தான் மேல் தள்ளி விட்டாள். அண்ணனையே ஏறிட்டுப் பார்த்த கலாவதி, அவனைப்போல் அசைவற்று நின்றாள். பிறகு, அவன் கழுத்தில் கை போட்டு, அவனைச் சுற்றி வளைத்துக் கொண்டாள். அவன் கழுத்தில் உதடுகளை அழுத்தி ''எய்யோ...எய்யோ'' என்றவள், ''எண்ணே ...எண்ணே...'' என்று கூவியபடியே, அவன் மார்பில் புரண்டாள்...எல்லோரும் பேச்சற்று நின்றபோது—

கலாவதி ஆட்டுவித்ததால், வினைதீர்த்தானின் உடலாடியது. தானாய் ஆடியது. பிறகு, ஒவ்வொரு அவயமும், துண்டித்து விழப்போவது போல் துடித்தன. படபடப்பாய் ஆடின. பம்பரமாய்ச் சுழன்றன. பின்னர் கரிசல் காடாய் தோன்றிய அவன் கண்கள், ரத்தத்தையே நீராக் மாற்றி 'விஷவாதம்' செய்வது போல், சுழன்றன. சொட்டுச்சொட்டாய்கண்ணீர், கலாவதியின் மொட்டைத் தலையில் தெறித்தது. ஒரு நிமிட கண்ணீர் வெள்ளம், உறைந்து போன அவன் உள்ளத்தைக் கரைத்ததோ என்னமோ, வினைதீர்த்தான் ஊரே அதிரும்படி கத்தினான். அவன் போட்ட சத்தத்தில், சில பெண்களின் இடுப்புகளில் இருந்த குழந்தைகள் பயந்துபோய், தாய்மார்களை அழுத்திப் பிடித்து, அவர்களின் தலைகளில் சாய்ந்து கொண்டன. கலாவதியை சாருய்ப் பிழிவதுபோல் பிடித்து, அவளையும், தன்னையும் இல்லாமல் செய்யப் போகிறவன்போல், வினைதீர்த்தான், அங்குமிங்குமாய் புரண்டான். அவர்கள் இருவரையும், வைத்த கண் வைத்தபடி, பேச வாயில்லை—சிந்திக்க மனமில்லை என்பதுபோல் பார்த்த தமிழரசி,

திடீரென்று அவர்கள் இருவரையும் பற்றிக்கொண்டு ஓலமே ஒலியாக, அழுகையே அவலமாகக் கத்தினாள்.

"இதுக்கெல்லாம் நானே காரணம். சித்தப்பாவையும், கலாவையும் ஓநாய்க்கு காவு கொடுக்கது மாதிரி விட்டுட்டு ஓடிப்போன படித்த முட்டாள் நான். வினைதீர்த்தான், இந்தப் பாவியை அரிவாளால ஒரே வெட்டாய் வெட்டிப் போட்டுடு."

தமிழரசியின் அழுகை, அனைவரையும் உலுக்கியது. முத்துமாரிப்பாட்டி, கூப்பாடு போட்டாள். தாய்மார்கள், தாங்க முடியாமல் அழுதார்கள். கில்லாடியார், தன் கண்களைத் துடைத்துக் கொண்டார். மண்டையன் துண்டால் தன் வாயை அடைத்துக் கொண்டான். வினைதீர்த்தானின் ஏழை பாழை பங்காளிகள் தலை கவிழ்ந்து, நீர் சொறிய நின்றார்கள். தமிழரசி, மீண்டும் "என்னை அரிவாளால வெட்டிப் போட்டுடு" என்று கத்தினாள்.

வினைதீர்த்தான், தமிழரசியை விழுங்கப் போகிறவன் போல் பார்த்தான். 'அரிவாள்' அவனுள் ஒரு ஆவேசத்தை ஏற்படுத்தியது. கூட்டத்தை நெருக்கியடித்து, நார்க் கட்டிலுக்குள் குனிந்தான். பளிச்சிட்ட பாளை அரிவாளை எடுத்தபடி நிமிர்ந்தான். பெண்கள் பயந்துபோய் ஒதுங்கினார்கள். அவன் கர்ஜித்தான்:

"இதுக்கெல்லாம் காரணமானவங்களோட தலைகளை வெட்டி, என் கலா காலுல கொண்டு வந்து போடாமல் நான் திரும்ப மாட்டேன். உம்... வழி விடுங்க..."

பெண்கள், வழி விட்டார்கள். தமிழரசி, அவனைத் தடுப்பாள் என்ற எதிர்பார்ப்போடும், தடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடும் பார்த்தார்கள். அவளோ, அவன் செய்யப் போவது நியாயம் என்பதுபோல் பேசாமல் நின்றாள். லேசாக அவனுக்கு வழிகூட விட்டாள்.

வெளியே வந்து ஆவேசமாக ஓடப்போன வினைதீர்த்தானை சிலர் பிடித்தார்கள். அவனோடு சேர்ந்து செல்வதற்குத் தயாராகி பங்காளிகள் சிலர் உலக்கைகளையும், அம்மிக் கல்லையும் எடுக்கப் போனார்கள். கில்லாடியார் வினைதீர்த்தானின் இடையைப் பிடித்து எகிறியபடியே பேசினார்.

"ஏய் வினை, ஒன்னால இவ்வளவு நடந்தது போதாதா? இன்னுமா நடக்கணும்? நீ ஜெயிலுக்குப் போயிட்டால் ஒன் பைத்தியார தங்கச்சியையும், ஒன்னையே நம்புற பொன்மணியையும் யார்டா காப்பாத்துறது? மடையா... மடையா... நில்லுடா. சொன்னால் கேளுடா..."

வினைதீர்த்தான், கில்லாடியாரையும் தூக்கிக் கொண்டு, பாளை அரிவாளோடு பாயப்போனான். அவன் அரிவாள் முனை, அவர் விலாவை இடித்ததால், அவர் இப்போது தற்காப்பை முன்னிட்டும், பலமாகக் கத்தினார்.

"தமிழரசி, இங்கே ஓடிவாம்மா. ஓடிவா! இது கொலையில முடியப் படாது. கொலைகாரங்க ஜெயிலுல முடியும் படியாய் முடியணும். வாம்மா, வந்து இந்தப் பயலுக்குச் சொல்லும்மா."

தமிழரசி நிதானமாக வந்தாள். கில்லாடியாரை கீழே தூக்கிப் போட்டுவிட்டு, அனுமான்போல் அரிவாளுடன் பாயப்போன வினைதீர்த்தான் முன்னால் வந்து நின்றாள். அவன் ஓங்கிய அரிவாளை பிடித்தாள். உடனே, வினைதீர்த்தான், கையடங்கி மெய்யடங்கி அரிவாளை தூரே எறிந்து விட்டு அவளைக் கட்டிப் பிடித்தபடி "நான் இப்படி நடக்குமுன்னு நினைக்கலியே தமிழு" என்று குழந்தை போல் கேவினான்.

கில்லாடியாரை யாரோ தூக்கிவிட்டார்கள். தூசிகளைத் தட்டிவிட்டபடியே, தமிழரசியின் முன்னால் வந்து தழுதழுத்த குரலில் பேசினார்.

"இந்த ஊர்ல படித்தவங்களிலேயே, நீ ஒருத்திதான் ஆம்பிளேம்மா. நீ எப்படிப்பட்டவள்னு நல்லா புரிஞ்சுக் கிட்டேம்மா. ஒன் சின்னய்யாவையும் கொலை செய்துட்டு, இவளையும் இந்தப் பாடு படுத்துன பயலுவளை சும்மா விடப் படாது இதை விட்டால், நாளைக்கு என் பொண்ணுக்கே இந்த நிலைமை வரத்தான் செய்யும். குற்றாலத்துக்கு கலெக்டர் வந்திருக்காராம். ஜமாபந்தியோ, சாப் பாட்டுப் பந்தியோ நடக்குதாம். நாம் எல்லாரும் ஒன்று திரண்டு போய் அவருக்கிட்ட முறையிடலாம். ஏதாவது செய்துட்டு பலன் இல்லாட்டால் பரவாயில்ல. பலன் இருக்காதுன்னு எதையுமே செய்யாமே இருக்கது தப்பு பாரு. என்னம்மா சொல்ற?"

தமிழரசி, சேலையை இறுக்கிக் கட்டினாள். கன்னத்தில் வழிந்த கண்ணீரைச் சுண்டி விட்டாள். எதிர் வீட்டில்—தனது சொந்த வீட்டில்—அம்மா அவளை ஜன்னல் வழியாகப் பார்ப்பது தெரிந்தது. தமிழரசியை, வாரி யணைக்கப் போவதுபோல், அவள் கைகளை வளைய வளைய வலிப்பது தெரிந்தது. அம்மாவின் முகம் போனதும், விஜயாவின் முகம், அப்புறம் அண்ணன் ராஜ துரை முகம்; மீண்டும் அம்மாவின் கலங்கிய முகம்... கண்ணீர் முகம்... ஒவ்வொருவரும், அந்த சின்ன ஜன்னலில் தன்னை முறை வைத்துப் பார்ப்பதைப் பார்த்தாள்... அப்பா முகம் தெரியவில்லை. ஒரு வேளை, அவர்தான் 'தமிழ் எப்படி இருக்கான்னு பாருங்க' என்று பார்க்கச் சொல்லியிருக்கலாம்... அம்மா பார்க்கிறாள்... என் அம்மா...

தமிழரசிக்கு அடிவயிற்றில், மெல்லியதாய் ஒரு உணர்வு உருவாகி, இதயத்தை விட பெரிதாய் வளர்ந்து, தொண்டையையே ராக்கெட்டாக்கி, வாய் வரை வந்து 'அம்மா' என்று சொல்லப் போனது. அவள் அதை அடக்கிக் கொண்டாள். கண்ணீரைச் சுண்டிவிட்டதுபோல், பாசத்தையும் சுண்டி விட்டாள். இதுவும் ஒரு வகையில்

பார்தப் போர். அது மன்னர்கள் மக்களை வைத்து நடத்திய போர். இது அதிகாரத்தை அறிந்து வைத்திருக்கும் பதவி மன்னர்களுக்கும், தாங்கள்தான் இந்நாட்டு மன்னர்... போகட்டும்... மக்கள் என்று கூட அறியாதவர் களுக்கும் இடையே நடக்கும் போர்.

தமிழரசி, தன்னையே பார்த்த கூட்டத்தைப் பார்த்துப் பேசினாள்.

"குற்றாலத்துக்குப் போவோம். கலெக்டர் கிட்டேயே நியாயம் கேட்போம். இந்த மாதிரி எந்த வீட்லயும் நடக்கக் கூடாதுன்னு நினைக்கிறவங்க எல்லோரும் வரலாம். வினைதீர்த்தான், கலாவதியோட கையைப் பிடிச்சுக்கோ."

தமிழரசி முன்னால் நடக்க, முத்துமாரிப் பாட்டியும், பொன்மணியும் தோளுக்கொருவராய் அவளைப் பிடித்த படி நடக்க, அடக்கிய உணர்வுகளுக்கு வடிகால் தேடுவது போல் அத்தனை ஏழைகளும், பின்னால் நடந்தார்கள்.

ஒரு சிலர் "என்னய்யா... கலெக்டர்...அவரு மட்டும் என்னத்த கிழிப்பாரு? முத்துலிங்கம் வீட்டை இடிச்சு நொறுக்காம அன்ன நடை போடுறீயளாக்கும்" என்று பொது வழியில், கிளை வழியை அமைக்கப் போனார்கள். உடனே கில்லாடியார் "ஏல... மூள கெட்டப் பயலு வளா! கூட்டம் தீப் பிடிக்காத மூங்கில் காடு மாதி. எசகு பிசகான ஒரு வார்த்தையை விட்டுட்டால் கூட போதும், காட்டுத் தீ மாதிரி பிடிச்சுடும். பொறுப்போட வாங்கடா" என்றார்.

அந்த ஊரில் அம்மன் கொடைகளில் கூட கூடாத கூட்டம்; சாமியாடிகளுக்குக் கூட வராத துள்ளல்; அனை வரும் அடியடியாய், எதையோ அடிக்கப் போவதுபோல் நடந்தார்கள்.

தர்மகர்த்தா உட்பட, அந்த ஊர் பெரிய மனிதர்கள் கூட்டம் தங்களையும் உதைத்துவிடக் கூடாதே என்று உள்ளூறப் பயந்து, "அவன்... முத்துலிங்கப்பயல் ஆடுன ஆட்டம், கடவுளுக்கே தாங்காது" என்றார்கள். தமிழரசியைப் பார்த்து, சிநேகிதப் புன்னகையை, முகத்தில் பவுடர் பூசுவதுபோல் பூசிக் கொண்டார்கள்.

கூட்டம் ஊரின் பிரதான வீதியில்—தேநீர்க்கடைகள் மலிந்த தெரு வழியாக நடந்தது. ஒரு கடையில் உட்கார்ந்து வம்பு பேசிக்கொண்டிருந்த முத்துலிங்கத்தின் கையாட்களான தோட்டத்துப் பஞ்சபாண்டவர்கள், பெஞ்சுகளுக்குக் கீழேயும் மிருகங்களாய்—அற்பப் பூனைகளாய்—பதுங்கிக் கொண்டார்கள். தேநீர்க் கடைக்காரன், அவர்களால் தனக்கும் கடைக்கும் ஆபத்து வந்துவிடக் கூடாதே என்று அஞ்சினன். அவர்களை காட்டிக் கொடுக்கவும் அவனுக்கு மனம் வரவில்லை. இறுதியில் தற்செயலாய் கடையை மூடுவதுபோல் அவர்களை உள்ளே வைத்தே வெளியே பலகைகளைச் சாத்தினன். பின்னர் கூட்டத்தின் ஆவேசத்தால் உந்தப்பட்டு அவனும் கூட்டத்தில் கூடிக்கொண்டான்.

கூட்டத்தினர் எட்டி நடந்தார்கள். எதிரே கிடந்த பொருட்களை எத்தியபடியே நடந்தார்கள். மாடக்கண்ணுவின் சமாதியருகே போனபோது கலாவதி, அந்த மண் புதையலையே பார்த்தபடியும் தன் கையைப் பிடித்து நடந்த அண்ணனை நோக்கியபடியும் "எய்யோ...எய்யோ" என்றாள். எவரோ ஒருவர் "இதுதான் மாடக்கண்ணு மாமா சமாதி" என்றார். தமிழரசியும், வினைதீர்த்தானும் போட்டி போட்டு ஓடுவதுபோல் ஓடினார்கள். வினைதீர்த்தான் அந்த மண்குழியில் பொத்தென்று விழுந்தான்.

"எய்யோ! என்னைப் பெத்த அய்யாவே! என்னை விட்டுட்டு எங்கேய்யா போயிட்டீரு? நான் ஒம்மை விட்டுட்டுப் போயிடுவேன்னு என்னை விட்டுட்டு எங்கேய்யா போயிட்டீரு? இதோ பாருமய்யா, ஒம்ம

செல்ல மகளை பாருமய்யா. பாவிப்பயலுவ என்ன பாடு படுத்திருக்காங்கன்னு பாருமய்யா.''

தமிழரசி, வினைதீர்த்தானைத் தூக்கி நிறுத்தினுள். அவனே, தந்தையின் சமாதியில் இருந்து மண் துகள்களை எடுத்து தனது நெற்றியில் பூசிக்கொண்டான். தமிழரசிக்கும் பூசிவிட்டான். உடனே எல்லோரும் அவனைப் போலவே பூசிக்கொண்டார்கள். கில்லாடியாரின் அதட்டலில், தமிழரசியின் பார்வையில், கூட்டம் ஒழுங்குபட்டு சாலைக்கு வந்தது. ''எய்யோ...எய்யோ...'' என்று புலம்பிய கலாவதியை, வினைதீர்த்தான், தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு, அவளின் சுமை தெரியாமலே நடந்தான். முன்பின் நினைக்காமல் புறப்பட்ட ஒரு சில தாய்மார்கள் திரும்பிப் போனுர்கள். ஆனுல் கூட்டத்தின் எண்ணிக்கை முந்நூறுக்குக் குறையவில்லை.

மரம் வெட்டுபவர் ள், கிணறு தோண்டுபவர்கள், விவசாயக்கூலிகள் உட்பட ஏழை எளியவர்கள் நடந்த கூட்டத்தில், ஒதுங்கியிருந்த சேரிமக்களில் பலரும் சேர்ந்து கொண்டார்கள். வாலிபப் பையன்கள், வயதுப் பெண்கள், விடலைப்பயல்கள், முதியவர்கள் என்று சமூகத்தின் எல்லா வயதுகளுக்கும் பிரதிநிதித்துவம் காட்டும் கூட்டம் நிராயுதபாணியாய்த் தோன்றினுலும், போர்ப்பரணிப் பார்வையோடு போய்க் கொண்டிருந்தது.

'போலீஸ்காரர்களையும், பணக்காரர்களையும் எதிர்க்க முடியும் போலுக்கே' என்று பலர் வியந்து கொண்டார்கள். ''எட்டி நடங்க'' என்ற உசுப்பல்கள் ''மெள்ள நடங்கடா முட்டாப்பய மவனுவளா, இந்தக் கிழவியால எப்டி நடக்க முடியுமுன்னு நினைச்சுப் பார்த்தியளா?'' என்று கூட்டத்தை தன்னைப்பற்றி நினைக்க வைத்த முத்துமாரிப்பாட்டியின் செல்லச் சிணுங்கல்கள்.

கூட்டம், கூட்டணியாய், இரண்டு கிலோ மீட்டர் தொலைவிற்குப் போய்விட்டது. காவல் நிலையம் கண்ணில் பட்டது. தமிழரசி அந்தக் கட்டிடத்தை எரிக்கப் போவது

போல் பார்த்தாள். திடீரென்று காக்கிச் சட்டைக்காரர் ஒருவரை அவள் பார்த்தாள். உடனே அவளுக்குத் தாமோ தரனின் நினைவு வந்தது. 'பதவியையே தூசாக நினைத்தவர்... இப்போ எங்கே இருக்காரோ? என்ன பாடு படுறாரோ? தாமு... என் தாமு... இதோ இந்த விதி நொந்த எளியவர்களுக்கு இடையே நடக்கும்போதும், உங்களை என்னால் மறக்க முடியலியே. ஒங்களை இனிமேல் பார்ப்பேனா? பார்க்கக்கூட வேண்டாம்; ஒங்களை நல்லபடியாய் பார்த்ததாய் யாரோ சொல்லி, நான் எவளோ மாதிரியாவது கேட்க முடியுமா? தாமு, என்னோட தாமு, நீங்களா சமூகமா என்று வரும்போது, நான் சமூகத்தின் பக்கம். நீங்களா நானா என்றால் எனக்கு நான் பெரிசில்ல; நீங்களே! ஒங்க பக்கமே! இப்போ எந்தப் பக்கமும் பார்க்க முடியாமல் போனேனே. தாமு, போயிட்டிங்களே தாமு! பார்க்க முடியாததெல்லாம் அழிந்தவை அல்ல. ஒங்க நினைவு, நான் அழிவது வரைக்கும், அழியாமல் இருக்கும் தாமு... என் தாமு ..'

காவல் நிலையத்தை, அடிவயிற்று நெருப்பாய்ப் பார்த்த தமிழரசி, சிறிது நேரத்தில் நிதானமாக மூச்சு விட்டாள். படுகளத்தில் ஒப்பாரி கூடாது. ஒப்பாரிக் காரர்கள் களத்திற்கு வரக்கூடாது... அவள், தனக்குத் தானே வெட்கிக் கொண்டாள். கலாவதியை சென்னைக்குக் கையோடு கூட்டிக் கொண்டு போய், தமிழக அரசின் தலைமைச் செயலகத்திற்கு முன்னால், பெண்கள் இயக்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவெடுத்திருப்பதும், பத்மா, இந்நேரம் அதற்காக இயக்க உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டிருப்பாள் என்பதும் நினைவுக்கு வந்தது. மனதில் ஆர்ப்பாட்டம் ஒழியவில்லை யானாலும், அது, மனதிற்குள் கண்டு பிடிக்க முடியாத ஏதோ ஒரு மூலைக்குள் ஒளிந்து கொண்டது. இதயத்தை நிமிர்த்த முடியாமல் போன தமிழரசி, தலையை நிமிர்த்திக் கொண்டாள்.

பாதயாத்திரையோ— நியாயப் பசியாத்திரையோ' அந்த கிராமத்துக் கூட்டம் நீதி உபாசகர்களாய், தர்ம யாத்ரீகர்களாய் காவல் நிலையம் அருகேயுள்ள சாலை வழியாகக் கடந்தது. கூட்டத்தில், கால்வாசிப்பேர் அந்த நிலையத்தைப் பார்த்துவிட்டு அப்படியே நின்றார்கள். நின்றபடி பார்த்தார்கள். காவல் நிலையத்தின் முன்னால் ஒரு மோட்டார் பைக். அதன் முன்னிருக்கையில் ஒரு கையைப் போட்டபடி, இன்னொரு கையில் சிகரெட் புகைக்க, முத்துலிங்கம், ஆத்திரமாகவோ, அச்சமாகவோ, அலட்சியமாகவோ கூட்டத்தைப் பார்க்கிறார். பைக்கின் பின்னிருக்கையில் ஒரு கையையும், முத்துலிங்கத்தின் தோளில் ஒரு கையையும் போட்டபடி, ஒரு போலீஸ்காரர் நிற்கிறார். நான்கைந்து போலீஸ்காரர்கள் படிக்கட்டுகளில் நின்றபடி கூட்டத்தை ஆச்சரியமாய் பார்க்கிறார்கள். எப்படி பெர்மிஷன் இல்லாமல் ஊர்வலமாய் வரலாம்? அவர்கள் கூட்டத்தை வழிமறிக்கப் புறப்படுகிறார்கள்.

கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டபோது, வினைதீர்த் தானும், முத்துலிங்கத்தைப் பார்த்து விடுகிறான். அவன் உடம்பில் மின்சாரம் பாய்கிறது. எவரும் எதிர்பாராத வகையில் முத்துலிங்கத்தை நோக்கி ஓடினான். ''அடே செறுக்கி மவனே! செய்யுறதையும் செய்துட்டு திமிரோடேயா நிக்கே?'' என்று கூவியபடி பாய்ந்தான். எதிரே வந்த ஒரு பனையேறித் தொழிலாளியின் கையில், மின்னிய அரிவாளைப் பிடுங்கிக் கொண்டு குதித்தபடி ஓடினான். தோளில் கிடந்த கலாவதியை பாதி வழியில் கீழே இறக்கி விட்டு விட்டு, பாய்ந்து பாய்ந்து ஓடினான்.

அவ்வளவுதான்.

கூட்டம் கலைந்து ஆளுக்கொரு கல்லை யெடுத்தபடியே அவன் பின்னால் ஓடியது. குடைகளைப் பழுது பார்த்தவரின் குடைக் கம்புகளைக் காணவில்லை. சாலையோரம் குவிக்கப் பட்ட கற்களைக் காணவில்லை. சாலையில் மலையாளம் சந்தைக்கு மாடுகளைப் பற்றிக் கொண்டு செல்பவர்களின்

சாட்டைக் கம்புகளும், ஒரு வீட்டின் முன்னால் நல்லதுக்கோ கெட்டதுக்கோ போடப்பட்டிருந்த பந்தல் கம்புகளும் கூட்டத்தினரின் கரங்களுக்கு வந்து விட்டன. கண் திறந்து கண் மூடுவதற்குள் கூட்டம் கண் மண் தெரியாமல் ஓடி காவல் நிலையத்தை சுற்றி வளைத்துக் கொண்டது. கையில் இருந்த கல்லாயுதங்களையும், கம்பாயுதங்களையும் நீட்டி நீட்டி, தூக்கித் தூக்கி, 'ஏய்...ஏய்...' என்ற குரல்கள். 'முத்துலிங்கத்தை கைது செய்யாமல்...கொஞ்சுறதா' என்ற அதட்டல்கள்.

இதை சற்றும் எதிர்பாராத போலீசார், உள்ளே ஓடினார்கள். முத்துலிங்கமும், அவர்களோடு ஒட்டிக் கொண்டு, உள்ளே ஓடினார். வழி மறிக்கப்போன போலீசாரும், பாதி வழியில், திரும்பிப் பார்க்காமலே ஓடி, காவல் நிலையத்திற்குள் ஓடினார்கள். திடீரென்று, காவல் நிலையக் கதவுகள் சாத்தப்படுகின்றன. ஜன்னல்கள் ஒடுக்கப்பட்டு, துப்பாக்கி முனைகள் தெரிகின்றன.

வழியில் இதர பெண்களோடு திகைத்து நின்ற தமிழரசியின் காதில் 'எப்பதம் வாய்த்திடும் போதும்— அதை யாவர்க்கும் பொதுவில் வைப்போம்' என்று பாரதி கொக்கரிக்கிறான். உடனே அவள் பெண்களை கை காட்டி அழைத்தபடியே, காவல் நிலையம் நோக்கி ஓடுகிறாள். பாதி வழியில் மீளத் தெரியாமல் நின்ற கலாவதியை இழுத்துக் கொண்டே ஓடி கூட்டத்தில் சேர்கிறாள். திடீரென்று பயங்கரமான சத்தம்...

'டுமீல்...டுமீல்...டுடுடு.. டுமீல் டுமீல்!'

எறியப்பட்ட கற்களுக்குப் பதிலாக, இரும்பு புல்லாங்குழல் போல் தோன்றிய, ஜன்னலோர துப்பாக்கி முனைகளின் பேய் வாய் வழியாய், உருண்டை உருண்டையாய், வட்ட வட்டமாய் ஈயப்பொருட்கள், ராக்கெட் வேகத்தில் வெளிப்படுகின்றன. மூன்று பேர், அடியற்றுக் கீழே விழுகிறார்கள். தலையில் சிறு துவாரத்தின் வழியால் ரத்தம் பீறிட, பிடரியில் பெருச்சாளிப் பொந்துபோல் மூளை

சிதற, அவர்கள் முனங்கக் கூட நேரமின்றிச் சாய்கிறார்கள். இந்த மூவரின் முதல்வியாய், தலையில் ரத்தம் நீரூற்றாய் மேலோங்க, கலாவதி 'எய்யோ... எய்...' என்றபடி மல்லாந்து கிடக்கிறாள். தமிழரசிக்கு எதுவுமே நினைவில்லை. யார் விழுந்தார் என்ற பிரக்ஞை இல்லை. கீழே கிடந்த காலாவதியான கலாவதியின் ஒரு கையைத்தூக்கியபடியே, அவள் கலாவதி என்பதை உணராமலே தூக்கித் தோளில் போட்டபடி அரிவாளை வீசப்போன வினைதீர்த்தானின் ஒரு கையையும் பற்றியபடி செத்தவளுக்கும், இன்னும் சாகாமல் நிற்பவனுக்கும் இடையே அவள் இழுபட்டாள். பிறகு கலாவதியை விட்டுவிட்டு, வினைதீர்த்தானைப் பின்னுக்குத் தள்ளி காவல் நிலையத்தின் முன்னால் துப்பாக்கிக் காலனின் நேரடிப் பார்வையில் மேனியைக் காட்டியபடி அடங்கிப்போக முடியாத—அடக்க முடியாத—ஆவேசியாகிறாள். அவள் கழுத்து துப்பாக்கிபோல் நிற்கிறது. வாய் அக்கினிக்குழம்பை கக்குகிறது.

''சுடுங்கடா! என்னோடு சேர்த்து எத்தனைபேரை வேண்டுமானாலும் சுடுங்கடா! சுட்டுத் தொலைங்கடா! தன் மானத்தை விட்டுக் கொடுத்து, நாங்க சுதந்திரத்தை அனுபவிக்கத் தயாராய் இல்லை. உம்... சுடுங்கடா! காலம் ஒங்களை சுடுமுன்னால எங்களை காலனிடம் அனுப்புங்கடா!''

சிதறிய கூட்டம் மீண்டும் அணிவகுத்து, காவல் நிலயத்தை நெருங்குகிறது. அதோடு வேடிக்கை பார்ப்பது போல் நின்ற கூட்டம் தோள் கொடுக்கிறது. மூட்டை தூக்கிகள், வாடகை வண்டி ஓட்டிகள், சைக்கிள் ரிக்ஷாக் காரர்கள் கூட்டத்தை கும்பலாக்குகிறார்கள். குற்றாலத்திற்கு, ஜமாபந்திக்குப் போய்க்கொண்டிருந்த அதிகாரிகளின் கார்கள், காவல் நிலயத்தை நோக்கி நகர்கின்றன.

ஆட்சித் தலைவரும், மாவட்ட காவல்துறைத் தலைவரும் வந்தாலும் வரலாம் என்று அனுமானித்து அவர்களுக்கு துப்பாக்கிகள் சகிதமாய் அணிவகுப்பு வரவேற்புக் கொடுக்கத் தயாராய் இருந்த போலீஸ்காரர்களும்,

சப்இன்ஸ்பெக்டரும், செய்வதறியாது திகைக்கிறார்கள். துப்பாக்கிகள் ஆடாமல் கிடக்கின்றன. கூட்டம் மீண்டும் சூழ்கிறது.

தமிழரசியோ, கலாவதியின் சடலத்தை தோளில் போட்டபடி ஆயிரம் கால்கள் கொண்ட ஆதிபரா சக்தியாய் அங்குமிங்கும் நடமாடுகிறாள். ஆயிரம் வாய் கொண்ட அபூர்வ சிந்தாமணியாய் கத்துகிறாள், பதைக்கிறாள்.

‘‘சுடுங்கடா... சுட்டுப் பாருங்கடா...’’

துப்பாக்கி ரவைகள் துளைத்தெடுக்கும் என்ற எச்சரிக்கை உணர்வோடு பலரும், என்ன ஆனாலும் சரி இனிப் பொறுப்பதில்லை என்று உள்ளத்தால் வேகப்பட்டு, உடம்பால் யந்திரப் பட்ட ஒருசிலரும், விலகியும், நெருக்கமாயும் நின்றபடி, சரமாரியாகக் கற்களை வீசுகிறார்கள். ஈனமுனங்கலாய் முனங்கி, கைகால்களை அறுபட்ட ஆடு போல் உதறிவிட்டு ஓய்ந்துபோன இரண்டு சடலங்களை கூட்டம் சூழ்கிறது. ரத்தம், கட்டி கட்டியாய் உறைந்து கிடக்கிறது. பீறிட்ட ரத்தத் துளிகள் நியாயம் தேடிகளின் கண்களிலும், வாய்களிலும் செம்புள்ளிகளாய் தோற்றம் காட்டுகின்றன. போலீஸாரை ஏசிய தமிழரசி, கலாவதியை கீழே வைத்துவிட்டு, இன்னொரு சடலத்தை இழுத்தபடி, காவல் படியில் கால் வைக்கிறாள். இதற்குள் கார்கள் வந்து நிற்கின்றன. அதிகாரிகள், அவற்றிலிருந்து குதிக்கிறார்கள் அவர்களுள் ஒருவர், தலைக்குமேல் கையெடுத்துக் கும்பிடுகிறார். தமிழரசி, இன்னும் ‘‘சுடுங்கடா! ஏண்டா ஒஞ்சிட்டிங்க. சுடுங்கடா’’ என்று கத்தியபடியே படிகளில் ஏறுகிறாள்.

குட்டாம்பட்டியில் நடந்த கொலையும், ஒரு அப்பாவிப் பெண்ணிற்கு சூடுபோடப்பட்ட சமூக விவகாரமும், இனிமேல் செய்தியாகாமல் இருக்கமுடியாது. அந்தச் செய்தி, செய்தியாளருக்கும்—காவல் நிலையத்திற்கும் இடையே

நிலவும் உறவின் அடிப்படையில், விமர்சன செய்தியாக அனுப்பப்படலாம். அரசியல் பத்திரிகைகள் அதற்கு வர்ணம் பூசலாம். சட்டசபையில், அரசு இதைக் குறைத்துக் காட்டலாம். எதிர்க்கட்சிகளைக் கூட்டிப் பேசலாம். நாளைக்கே, ஆயுதப் போலீசார் குட்டாம் பட்டிக்குள் சென்று, தங்களது தீராத தீரத்தைக் காட்ட 'பிளாக் மார்ச்' செய்யலாம். விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படலாம். வயிறு காய்ந்தவர்கள், கோர்ட் கோர்ட்டாய், வாய்தா வாய்தாவாய் அலையலாம். ஆனாலும் ..

இந்தச் செய்திக்குள் இருக்கும் சேதி எப்போதும் ஜோதி வடிவாய் சுற்றும். பூசி மழுப்பி பொங்கலிடப்பட்ட விவகாரம், செய்தியாவதற்கு இதுவரை மூன்று உயிர்கள் விலையாயின.

அந்தச் செய்தி மீது நடவடிக்கை எடுக்க எத்தனை உயிர்கள் தேவையோ? தர்ம நடவடிக்கை எடுக்கப்படுமா? 'தர்மத்திற்கு' என்று எடுக்கப்படுவதுபோல் எடுக்கப் படுமா...?

காலத்திற்கே வெளிச்சம். காலத்திற்கு வெளிச்சம் இருக்கிறதா?

காலத்திற்கு வெளிச்சம் மட்டுமல்ல, கஷ்டப்படுத்தியவர்களை கஷ்டப்படுத்தும் சக்தியும் உண்டு என்று வரலாறு கூறுகிறது. ஒரு தடவை சொன்னால், முரட்டு மூடர்களுக்குப் புரியாது என்று, பல தடவை, பல நாடுகளில் பாடம் சொல்லிக் கொடுத்திருக்கிறது.

———

## பரிசு பெற்ற நூல்கள்

கம்பர் — டாக்டர் வ. சுப. மாணிக்கம்

வீரர் உலகம் — கி. வா. ஜகந்நாதன்

மணிக்கொடி காலம் — பி. எஸ். ராமையா

திருக்குறள் கூறும் உறுதிப் பொருள் —
டாக்டர் சோ. ந. கந்தசாமி

பரிபாடல் திறன் — டாக்டர் இரா. சாரங்கபாணி

உரையாசிரியர்கள் — மு. வை. அரவிந்தன்

ஊருக்குள் ஒரு புரட்சி — சு. சமுத்திரம்

தாகூர் — ச. மெய்யப்பன்

★ ★ ★

## சு. சமுத்திரம் எழுதிய நூல்கள்

காகித உறவு

உறவுக்கு அப்பால்

ஒரு சத்தியத்தின் அழுகை

வளர்ப்பு மகள்

ஊருக்குள் ஒரு புரட்சி

உயரத்தின் தாழ்வுகள்

இல்லந்தோறும் இதயங்கள்

சமுத்திரம் கதைகள்

---

Wrapper Printed by Karpakam Achakam, Madras-600 002.